EISSN 2456-5571

An Online, Peer-reviewed, Refereed and Quarterly Journal

# BODHI

## INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

VOLUME 9 | SPECIAL ISSUE 1

FEBRUARY 2025 | E-ISSN: 2456-5571

திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி

தெ. கள்ளிகுளம்

தேசியதர மதிப்பீட்டில் "A" அங்கீகாரம் பெற்றது

தமிழ்த்துறை (S.F) & அகத்தர மதிப்பீட்டுக் குழுவும் வெளியிடும் பன்னாட்டுக் கருத்தரங்கச் சிறப்பிதழ்

# இலக்கியமும் இயற்கையும்

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் அ. சவரிராயம்மாள் | முனைவர் சு. பால்மோகன்

# BODHI

# International Journal of Research in Humanities, Arts and Science

**An Online, Peer Reviewed, Refereed and Quarterly Journal**

Vol.9 Special Issue 1 February 2025 E-ISSN: 2456-5571

**CENTRE FOR RESOURCE, RESEARCH & PUBLICATION SERVICES** (CRRPS)

www.crrps.in | www.bodhijournals.com

**BIJRHAS**

The **BODHI International Journal of Research in Humanities, Arts and Science** (E-ISSN: 2456-5571) is online, peer reviewed, Refereed and Quarterly Journal, which is powered & published by **Center for Resource, Research and Publication Services, (CRRPS)** India. It is committed to bring together academicians, research scholars and students from all over the world who work professionally to upgrade status of academic career and society by their ideas and aims to promote interdisciplinary studies in the fields of humanities, arts and science.

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, bioscience, entrepreneurship, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

Research should be at the core and must be instrumental in generating a major interface with the academic world. It must provide a new theoretical frame work that enable reassessment and refinement of current practices and thinking. This may result in a fundamental discovery and an extension of the knowledge acquired. Research is meant to establish or confirm facts, reaffirm the results of previous works, solve new or existing problems, support theorems; or develop new theorems. It empowers the faculty and students for an in-depth approach in research. It has the potential to enhance the consultancy capabilities of the researcher. In short, conceptually and thematically an active attempt to provide these types of common platforms on educational reformations through research has become the main objective of this Journal.

**Dr. S. Balakrishnan**
Publisher and Managing Editor
bodhijournal@gmail.com
www.bodhijournals.com
09944212131

# BODHI INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

*An Online, peer reviewed, refereed and quarterly Journal with Impact Factor*

www.bodhijournals.com, bodhijournal@gmail.com, 7540077733

4/27, Achampathu, Madurai-625019, Tamil Nadu, India


## SPECIAL ISSUE EDITORIAL BOARD


**முனைவர் அ. சவரிராயம்மாள்**

(ஒருங்கிணைப்பாளர்)

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)*

*திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி, தெ.கள்ளிகுளம்*

**முனைவர் சு. பால்மோகன்**

*(ஒருங்கிணைப்பாளர்)*

*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)*

*திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி, தெ.கள்ளிகுளம்*

TIRUNELVELI DAKSHINA MARA NADAR SANGAM COLLEGE
(Re-Accredited by **NAAC** at an **'A'** Grade with a CGPA of **3.09** (II Cycle )
T. KALLIKULAM - 627 113, Tamil Nadu.
E-mail : tdmnsoffice@gmail.com
Office : 04637 - 220250

V.P. RAMANATHAN NADAR M.Com., M.B.A.,
Secretary & Correspondent

Dr. (Major) D. RAJAN M.Sc., M.Phil., Ph.D.,
Principal

Ref.No. : .......................                                                                 Date : 11/01/2025

## வாழ்த்துரை

நாம் நம் வாழ்நாள் முழுவதையும் இயற்கையோடு இயைந்து தான் வாழ்கிறோம். ஆனால் அதன் அழகைப் பற்றி உணர்வது அரிது தான். நம் முன்னோர்கள் இயற்கையைத் தெய்வமாக போற்றினார்கள். ஆனால், இன்று நம்மவர்கள் இயற்கையைச் சீரழித்து வருகின்றனர். அதனால் பருவ நிலை மாறுபாடுகள் ஏற்பட்டு மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்றது. இதனால் நாம் இயற்கையைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வது அவசியமாகிறது. இன்றைய இளைஞர்களிடம் இயற்கையைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக "இலக்கியமும் இயற்கையும்" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இயற்கை ஒரு சமுதாயத்தை உருவாக்கும் காரணிகளுள் முதன்மையானது. இயற்கை நம் பாரத நாட்டின் பிரதான வளம் என்பதை எல்லா விதமான மக்களும் உணரும் விதம் தொகுக்கப்பட்டுள்ள 'இலக்கியமும் இயற்கையும்' என்ற இந்த ஆய்வு நூல் சிறக்க வாழ்த்துகிறேன்.

SECRETARY
Tirunelveli Dakshina Mara Nadar Sangam College
T.KALLIKULAM.

TIRUNELVELI DAKSHINA MARA NADAR SANGAM COLLEGE
(Re-Accredited by **NAAC** at an '**A**' Grade with a CGPA of **3.09** (II Cycle )
(Affiliated to Manonmaniam Sundaranar University)
**T. KALLIKULAM - 627 113**
Tirunelveli District, Tamil Nadu.

**Dr.** (Major) **D. RAJAN, M.Sc., M.Phil., Ph.D.,**
Principal

Off : 04637-220250
E-mail : tdmnscollege@rediffmail.com
tdmnscollege@gmail.com


Date : ........................

## வாழ்த்துரை

இலக்கியமும் இயற்கையும் என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகள் மக்களிடையே இயற்கையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. எண்ணங்களைச் சிந்திக்க வைக்கும் புதிய அறிவுகளை எடுத்துக் கொடுக்கின்றது. படிக்கத் தொடங்கியவுடன் ஒரு புதிய உலகிற்கு நம்மை இட்டுச் செல்கின்றது. இலக்கியமும் இயற்கையும் மனிதன் உள்ளத்தின் ஆழங்களை வெளிப்படுத்துகின்றன. தொகுக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் இயற்கையின் அழகும் அதன் வெற்றிடங்களிலும் இலக்கியத்தின் நுணுக்கங்களை நாம் அறிந்ததைத் தாண்டி ஒரு புதிய பார்வையை நமக்கு அளிக்கின்றன. மனிதனின் உள்ளார்ந்த சிந்தனைகளை எழுப்ப ஒரு மாற்றியமைந்த உலகைக் காண்பிக்கின்றன. சூரிய மண்டலத்தில் புதிய ஒரு ஒளியைக் காட்டி ஒவ்வொருவரின் உள்ளத்திற்கும் எளிதாக அணுகும் அழகான ஒரு பயணத்தைத் தருகிறதென நம்புகிறேன். இயற்கையின் புதுமையை இலக்கியத்தின் வளமையை நாடும் அனைவருக்கும் இந்த ஆய்வுக் கட்டுரைகள் ஓர் அர்ப்பணிப்பு மக்களிடையே இயற்கையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும். ஆய்வுக்கட்டுரைகள் சிறக்க வாழ்த்துக்கள்.

11.1.2025

PRINCIPAL
Tirunelveli Dakshina Mara Nadar Sangam College
T. KALLIKULAM.

# வாழ்த்துரை

''வள்ளுவன் தன்னை உலகினிற்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு…..'' அந்தத் தமிழ்நாட்டின் கல்விக் கடவுளாகப் போற்றப்படுபவர் நமது முன்னாள் தமிழக முதல்வராகிய காமராஜர் ஐயா அவர்கள். அவரின் கல்விக் கொள்கைகளை நினைவு கூறும் வகையாக தென் தமிழகத்தின் சிறப்புமிக்க திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள திருநெல்வேலி தெக்ஷண மாறநாடார் சங்கம் கல்லூரியின் தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு) மற்றும் அகத்தர மதிப்பீட்டுக் குழுவும் இணைந்து நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கிற்கு வாழ்த்துச் செய்தி தருவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். 'இலக்கியமும் இயற்கையும்' என்ற பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு 14.02.2025 இன்று நடைபெறுகின்ற இந்த கருத்தரங்கு வரலாற்றில் பதிக்கப்பட வேண்டிய ஒன்றாக திகழ்கின்றது. ஏனெனில் இக்கருத்தரங்கினை நடத்துவதற்கு இவர்கள் கடந்து வந்த பாதை மிகக் கடினமானது. அந்த வகையில் இவர்களின் வரலாற்றில் 2018ஆம் ஆண்டு ''கோயிற்கலை பன்முகப் பார்வை'' மற்றும் 2019 ஆம் ஆண்டு ''தென் தமிழகத்தின் அகழாய்வுப் பணிகள்'' என்ற இரு பயிற்சிப் பட்டறைகளையும் மேலும் 2020இல் ''புறநானூற்றுப் பொருண்மை'' மற்றும் ''சங்க இலக்கியமே அறிவியலாக'' என்ற இரண்டு நாள் இணைய வழி கருத்தரங்கினையும் நடத்தியுள்ளது. தமிழ்த்துறை சுயநிதிப் பிரிவானது கிராமியக்கலை இலக்கிய மன்றத்துடன் இணைந்து 2022இல் ''நாட்டுப்புற இயலில் பண்பாட்டுப் பதிவுகள்'' என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்தியுள்ளனர். அக்கருத்தரங்கில் நானும் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு திறவுசொல் பேச்சாளராக கலந்ததையிட்டு மனம் பேருவகை கொள்கின்றது. அதனைத் தொடர்ந்து ''வனைதலும் முடைதலும்'' என்ற தலைப்பில் மாநில அளவிலான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையும் நடைபெற்றுள்ளது. 2023ஆம் ஆண்டு ''இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்'' என்ற தலைப்பில் ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. 2024ஆம் ஆண்டு கிருஷ்ணாபுரம், ஆதிச்சநல்லூர், சிவகளை ஆகிய இடங்களில் ஒருநாள் தொல்லியல் பயிற்சிப் பட்டறையையும் நடத்தியது. இவ்வாறு ஏராளமான கருத்தரங்குகளையும், பயிற்சிப் பட்டறைகளையும் சிறந்த கருப்பொருள்களைக் கொண்டு நடத்திய தன் பயனாகத் தற்போது 2025 ஆம் கல்வியாண்டில் ''இலக்கியமும் இயற்கையும்'' என்ற பொருன்மையில் ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்படவுள்ளது. இந்த கருத்தரங்கிலும் நான் திறவுச்சொல் பேச்சாளராகக் கலந்து கொள்வதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கருத்தரங்க குழுவாகக் கூட்டு முயற்சியில் பன்னாட்டுக் கருத்தரங்கை திறம்பட நடத்திக் கொண்டிருக்கின்ற கொடைவள்ளல்களாகிய திருநெல்வேலி தெட்ஷண மாறநாடார் சங்கம் கல்லூரியின் தலைவர் திரு.ஆர்.கே.காளிதாசன் நாடார் அவர்களுக்கும், செயலாளர் மற்றும் தாளாளர் திரு.வி.பி.ராமநாதன் நாடார் அவர்களுக்கும், பொருளாளர் திரு.ஏ.செல்வராஜ் நாடார் அவர்களுக்கும், கல்விக்குழு உறுப்பினர் திரு.எஸ்.கே.டி.பி.காமராஜ் நாடார் அவர்களுக்கும், முதல்வர் முனைவர் மேஜர் டி.ராஜன் அவர்களுக்கும், அகத்தர மதிப்பீட்டுக் குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஏ.புஷ்பராஜ் அவர்களுக்கும், தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிபிரிவு)திருமதி சு.கிரிஜா அவர்களுக்கும் இந்த வேளையில் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எல்லாவற்றிற்கும் மேலாக கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்களாகச் செயற்பட்டு ஆய்வுக்கட்டுரைகளைப் பெற்று அவற்றினைச் சிறந்த முறையில் சரிபார்த்து சிறப்பாகக் கருத்தரங்கை ஒழுங்கு செய்திருக்கின்ற தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்களான முனைவர் அ. சவரிராயம்மாள் மற்றும் அன்பு நண்பர் முனைவர் சு. பால் மோகன் அவர்களுக்கும் கருத்தரங்க

ஆலோசனைக் குழுவைச் சார்ந்த முனைவர் செ. சோனாகிருஷ்டி, முனைவர் சு. முருகவேல் மற்றும் திருமதி.டே.கிரேஸ் புஸ்பா ஜுலியட் ஆகியோருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வளவு அறிஞர்களின் கூட்டுமுயற்சியால் உருவான இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் மிகவும் சிறப்பாக நடைபெறும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இவ்வாறே தொடர்ந்தும் திருநெல்வேலி தெட்ஷண மாறநாடார் சங்கம் கல்லூரியின் கல்விப்பணி தொடர வேண்டும் அதன் மூலம் தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு) மென்மேலும் ஏராளமான பன்னாட்டுக் கருத்தரங்குகளை நடத்தி தமிழுக்கும் ஆய்வுத்தளத்திற்கும் தங்கள் சேவை தொடர வேண்டும்.

வாழ்க தமிழ், வளர்க தமிழ்ப்பணி.

**முனைவர் சி. சூரியகுமார்.**
முதுநிலை விரிவுரையாளர்,
இசைத்துறை (வாய்ப்பாட்டு),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

**Dr.A. PUSHPARAJ Ph.D.,**
Associate Professor & IQAC Coordinator,
Department of Zoology,
T.D.M.N.S.College,
T. Kallikulam - 627 113, Tamil Nadu.

Phone : 04637-220250 (Off)
Mobile : +91-9994097004
E-mail : tdmnspushparaj@gmail.com

## வாழ்த்துரை

"தமிழுக்கு அமுதென்று பேர்
அந்தத் தமிழ் இன்பத்
தமிழெங்கள் உயிருக்கு நேர்"

என்று உயிரினும் மேலான தமிழ்த்தாயை வணங்கி இலக்கியமும் இயற்கையும் என்றத் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ள ஆய்வுக்கட்டுரைகள் தலைமுறை தலைமுறையாக நிலைத்து நிற்கும் தகுதியுடையன. இவ்வுலகில் உள்ள இயற்கை வளங்களை பாதுகாக்கும் நோக்கிலும் சமூகத்தில் உள்ள அனைவரும் **'இயற்கை இறைவனின் இணையில்லா ஓவியம்'** என்பதை உணரும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இயற்கை வளங்களின் சரியான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு அவசியம் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். அதற்கு இலக்கியமும் இயற்கையும் என்றத் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகள் தலைமுறைகளுக்கான பொக்கிஷம்.

முனைவர் அ. புஷ்பராஜ்
(அகத்தர மதிப்பீட்டுக் குழு ஒருங்கிணைப்பாளர்)

Residence: No: 7, Jeyam Cottage, Karunya Nagar, Vallioor - 627 117, Tirunelveli (Dt.), Tamil Nadu, India.

# வாழ்த்துரை

பயிற்றிப் பல கல்வி தந்து -இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

என்றான் முண்டாசுக்கவி பாரதி. கல்வி மூலமே சமூகம் உயர்வு காண முடியும் என்பதை அழுத்தமாக பதிவு செய்தவர்.அவர்.அந்த வகையில் எமது திருநெல்வேலி தெ‘ண மாற நாடார்சங்கமானது ஏழை மாணவர்களின் கல்வி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இந்த கல்விகூடத்தை களிகையில் ஆரம்பித்தனர். சான்றோர் பெருமக்களால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி. இன்று 53 ஆண்டுகளைக் கடந்து பொன்விழா கண்டு பொலிவுபெற்று திகழ்ந்து வருகின்றது. 2014 - 2015 ஆம் கல்வி ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இளங்கலைத் தமிழ் பாடப்பிரிவானது நிர்வாகம், முதல்வர், அலுவலர்கள், மாணவர்களின் தனித்தன்மையாலும் திறமையாலும் பல்கலைக்கழகமே திரும்பிப் பார்க்கும் வகையில் பல சாதனைகளையும் பாராட்டுகளையும் பெற்று வருகிறது. வருடம் தோறும் பன்னாட்டுக் கருத்தரங்குகள் தேசிய, மாநிலக் கருத்தரங்குகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் கலை இலக்கிய நிகழ்வுகளையும், போட்டிகளையும் நிகழ்த்தி அசத்தி வருகின்றது. பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் வருடம் தோறும் எமது துறை மாணவர்கள் இடம் பெற்று அலங்கரித்து வருகின்றனர். இதுவரை இரண்டு தங்கப்பதக்கங்களும் இருபத்து இரண்டிற்கும் மேற்பட்ட சிறந்த இடங்களையும் தரவரிசைப் பட்டியலில் இடம் பெற்று கல்லூரிக்கும் துறைக்கும் பெருமை சேர்த்துள்ளனர். கலை இலக்கியப் போட்டிகளிலும் சாதனைகளை பெற்று செம்மாந்து நிற்கிறது, எமது தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் முனைவர் அ.சவரிராயம்மாள் முனைவர் சு. பால் மோகன் ஆகியோர் இலக்கியமும் இயற்கையும் என்ற பொருண்மையில் தலைப்பினை தேர்ந்தெடுத்து கருத்தரங்கினை நடத்த எண்ணம் உதயமாகியது வியப்பிற்குரியது. பாராட்டிற்குரியது. இயற்கை பற்றிய சிந்தனைகள் கட்டுரைகளை எழுதியுள்ளவர்களின் எண்ணங்களில் விதைத்ததே இக்கருத்தரங்கிற்கு கிடைத்த வெற்றியாகும். சங்க இலக்கியங்கள் முதல் இக்காலம் வரை உள்ள இலக்கியங்கள் வரை கருத்துக்களை ஆய்ந்து எடுத்து கட்டுரைகளை எழுதியுள்ளனர். அனைத்துக் கட்டுரைகளும் அருமை. கதம்ப மாலையாகத் தொடுக்கப்பட்டுள்ள இக்கட்டுரைப் பூக்கள் தமிழ்த்தாயினை அலங்கரிக்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை

நன்றி!

**திருமதி சு.கிரிஜா**
தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப் பிரிவு)
திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரி, தெ.கள்ளிகுளம்

# தொகுப்புரை

தமிழகத்தின் தெற்கே திருநெல்வேலி மாவட்டத்தில் இராதாபுரம் தாலுகாவில் உள்ள தெ.கள்ளிகுளத்தில், திருநெல்வேலி தெக்ஷண மாற நாடார் சங்கம் கல்லூரியானது 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு இன்று பொன்விழாவை கடந்து பவள விழாவை நோக்கி பொலிவுடன் நடைபயில்கிறது. 54 ஆண்டுகள் கிராமப்புற மாணவர்களின் மேம்பாடு ஒன்றினையே முதன்மை நோக்கமாகக் கொண்டு கல்விப்பணியை செய்து தேசிய தரமதிப்பீட்டில் ‘A’ பெற்று திகழ்கின்ற எமது கல்லூரியில் 2014-2015 ஆம் கல்வியாண்டில் இளங்கலைத்தமிழ் பாடப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது.

2018 ஆம் ஆண்டு ‘கோயிற்கலை- பன்முகப்பார்வை’ மற்றும் 2019 ஆம் ஆண்டு ‘தென்தமிழகத்தின் அகழாய்வுப் பணிகள்’ என்ற பயிற்சி பட்டறையும் மேலும் 2020 இல் ‘புறநானூற்றுப் பொருண்மை’, ‘சங்க இலக்கியமே அறிவியலாக’ என்ற இரண்டு நாள் இணையவழி பன்னாட்டுக் கருத்தரங்கத்தினையும் நடத்தியுள்ளது. மேலும் 2022 ஆம் ஆண்டு மே மாதம் ‘நாட்டுப்புற இயலில் பண்பாட்டுப் பதிவுகள்’ என்ற தலைப்பிலும் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ‘இலக்கியமும் ஆன்மீக அறிவியலும்’ என்ற தலைப்பிலும் இரண்டு பன்னாட்டுக் கருத்தரங்கினை போதி பன்னாட்டு ஆய்விதழுடன் இணைந்து வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

‘இலக்கியமும் இயற்கையும்’ என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கம் 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற இருக்கிறது. பண்டையத் தமிழ்கள் இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தனர் என்பதை உலக மக்கள் அறியும் நோக்கில் இக்கருத்தரங்கம் நடத்தப்பட உள்ளது. தமிழ்த்துறையோடு கல்லூரி அகத்தர மதிப்பீட்டுக்குழுவும் இணைந்து நடத்தும் பன்னாட்டுக் கருத்தரங்கில் தமிழ்ச் சான்றோர்கள், பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் என பல்வேறு தரப்பினரையும் பங்கு பெறச் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

‘இலக்கியமும் இயற்கையும்’ என்ற பொருண்மையில் அமைந்த இந்த பன்னாட்டுக் கருத்தரங்கில் சங்க இலக்கியத்தில் இயற்கை, தொல்காப்பியத்தில் இயற்கை, காப்பியங்களில் இயற்கை, சிற்றிலக்கியங்களில் இயற்கை, பக்தி இலக்கியங்களில் இயற்கை, நீதி இலக்கியங்களில் இயற்கை,நாட்டுப்புற இலக்கியத்தில் இயற்கை, இக்கால இலக்கியங்க ளில் இயற்கை இது போன்ற பல பொருண்மைகளில் ஆய்வுகளை அமைத்துக் கொள்ள நினைத்தோம். அதனடிப்படையில் தமிழ் ஆர்வலர்கள், பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள் ஆய்வை மேற்கொண்டு தரமான 100 ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ளனர். இவ்வாய்வுக் கட்டுரைகளை நான்கு தொகுதியாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

தமிழ் இலக்கியக் களங்களான இலக்கியம், இலக்கணம், நாட்டுப்புற இலக்கியம், நீதி இலக்கியம், நவீன இலக்கியம் என பல்துறையில் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன. கருத்தரங்கை நடத்தத் திட்டமிட்ட எங்களுக்கு இது மனநிறைவைத் தந்தது. எங்களின் இந்த முயற்சிக்கு ஆதரவு தந்த பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் எண் திசையிலிருந்தும் கட்டுரைகளை அனுப்பித் தந்தனர். தமிழ் ஆய்வுலகில் நாங்கள் மேற்கொள்ளும் முயற்சிக்கு தொய்வு இல்லை என்று நம்பிக்கையூட்டிய அத்தனை நல் நெஞ்சங்களையும் மனதார வாழ்த்துகிறோம் வணங்குகின்றோம்.

‘இலக்கியமும் இயற்கையும்’ என்ற பன்னாட்டுக் கருத்தரங்கு நடத்துவதற்கு அனுமதித் தந்த கல்லூரி மற்றும் சங்கத் தலைவர் திரு.R.K.காளிதாசன் நாடார், சங்க செயலாளர் திரு.T.ராஜகுமார் நாடார், பொருளாளர் திரு.A.செல்வராஜ் நாடார் மற்றும் கல்லூரி செயலர் & தாளாளர் திரு.V.P.இராமநாதன் நாடார், கல்லூரிக்குழு உறுப்பினர் S.K.T.B.காமராஜ் நாடார், கல்லூரி முதல்வர் முனைவர் மேஜர்.D.ராஜன் ஆகியோருக்கு நன்றியை உரித்தாக்குகிறோம். மேலும் இக்கருத்தரங்கு நடத்த தீர்மானித்தது முதல் விழா நடைபெறுவதற்கு உரிய நாள் வரை பல ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் கூறிய கல்லூரியின் அகத்தர மதிப்பீட்டுக்குழு ஒருங்கிணைப்பாளர் முனைவர் A.புஷ்பராஜ் அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம்.

இந்த பன்னாட்டுக் கருத்தரங்கம் சிறப்புற அமைய உதவிப் புரிந்த தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப்பிரிவு) திருமதி.சு.கிரிஜா மற்றும் எமது துறை பேராசிரியர்களுக்கும் நூலாக வடிவமைத்த போதி பன்னாட்டு ஆய்விதழ் நிறுவனர் முனைவர் S.பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகின்றோம். மேலும் கருத்தரங்கிற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கிய கல்லூரி நிர்வாகத்தினர், பேராசிரியர்கள், அலுவலக உதவியாளர்கள் ஆகியோருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

மகிழ்வுடன்

**முனைவர் அ.சவரிராயம்மாள்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)

**முனைவர் சு.பால்மோகன்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)

**BODHI**

**INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE**

An Online, Peer-reviewed, Refereed and Quarterly Journal

**Vol. 9** **Special Issue 1** **February 2022** **E-ISSN: 2456-5571**

## Aim & Objectives

Academic Excellence in research is continued promoting in research support for young Scholars. Humanities, Arts and Science of research is motivating all aspects of encounters across disciplines and research fields in an multidisciplinary views, by assembling research groups and consequently projects, supporting publications with this inclination and organizing programmes. Internationalization of research work is the unit seeks to develop its scholarly profile in research through quality of publications. And visibility of research is creating sustainable platforms for research and publication, such as series of Books; motivating dissemination of research results for people and society.

## Disclaimer

Contributors are advised to be strict in academic ethics with respect to acknowledgment of the original ideas borrowed from others. The Publisher & editors will not be held responsible for any such lapse of the contributor regarding plagiarism and unwarranted quotations in their manuscripts. All submissions should be original and must be accompanied by a declaration stating your research paper as an original work and has not been published anywhere else. It will be the sole responsibility of the authors for such lapses, if any on legal bindings and ethical code of publication.

## Communication

Papers should be mailed to bodhijournal@gmail.com

## CONTENTS


| S. No. | Title | Page No. |
|---|---|---|
| 1 | தமிழ்விடுதூது நூலில் பஞ்சபூதங்கள் **பொன். கனகா** | 1 |
| 2 | குறுந்தொகையில் இயற்கையும், நம்பிக்கைகளும் **கம்பம் புதியவன்** | 5 |
| 3 | நளவெண்பா காட்டும் இயற்கை அழகியல் **முனைவர். அ. கல்பனாதேவி** | 9 |
| 4 | மணல் புதினத்தில் சூழலியல் சிந்தனைகள் **முனைவர் கு. ஜெயசித்ரா** | 13 |
| 5 | குறுந்தொகை காட்டும் இயற்கை **முனைவர் வெ. ஜெயந்தி** | 18 |
| 6 | வள்ளுவம் பேசும் உழவும் வேளாண்மையும் **முனைவர் சி. சிலுவை சாந்தா பிரின்ஸி** | 23 |
| 7 | சங்க இலக்கியத்தில் சூழலியல் **திருமதி. கு. சசிகலா** | 28 |
| 8 | புறநானூறும் சூழலியலும் **செல்வி. பா. தங்கம்** | 32 |
| 9 | இலக்கியங்கள் உரைக்கும் இயற்கை நன்னெறிகள் **முனைவர் பி. சுமித்திரா தேவி** | 37 |
| 10 | நாட்டுப்புற இலக்கியங்களில் வேளாண்மை **முனைவர் மு. மணிமேகலா** | 41 |
| 11 | சிலப்பதிகாரத்தில் இயற்கை வருணனை **முனைவர். கோ. விஜயலெட்சுமி** | 46 |
| 12 | நா.முத்துக்குமாரின் குழந்தைகள் நிறைந்த வீட்டில் இயற்கை **திரு. ச.அருணாச்சலேஸ்வரன்** | 50 |
| 13 | நெய்தல் திணைப் பாடல்களில் பயிரினம் **முனைவர் கு.மேனகா** | 55 |
| 14 | கயமனார் பாக்களில் - திணையும் துறையும் **முனைவர் சா. கணேசன்** | 61 |
| 15 | ஜெயமோகனின் யானை டாக்டர் சிறுகதையில் இயற்கைப் பதிவு **முனைவர் பா. நேருஜி** | 68 |
| 16 | கலித்தொகையில் இயற்கை வளம் **முனைவர் ம. ஜெப மேரி** | 75 |
| 17 | “திருக்குறளில் வளி” **முனைவர் அ. பாரதிராணி** | 78 |

| | | |
|---|---|---|
| 18 | புறநானூற்றில் இயற்கை<br>**முனைவர் செ. ரேணுகா** | 82 |
| 19 | சங்க இலக்கியத்தில் அன்பின் வெளிப்பாடுகள் (பெற்றோர்-மக்கள்)<br>**க. கவிதா** | 85 |
| 20 | பாரதியார் கவிதைகளில் இயற்கை<br>**முனைவர் இல.பூர்ணிமா ஜோதி** | 90 |
| 21 | ஒப்பியல் நோக்கில் இயற்கை<br>**முனைவர் பா. சிங்காரவேலன்** | 96 |
| 22 | காப்பியம் இலக்கியம் இயற்கை<br>**பா. நந்திதா** | 101 |
| 23 | ஐந்திணை நிலங்களின் உணவு முறையில் இயற்கை<br>**சு. பிரியா** | 105 |
| 24 | சிறுவர் இலக்கியத்தில் இயற்கை<br>**முனைவர் கீ. வே. சுபாஷினி** | 108 |
| 25 | சங்க இலக்கியத்தில் மலர்கள்<br>**ந. ஹெவான்சி** | 111 |

# தமிழ்விடுதூது நூலில் பஞ்சபூதங்கள்

**பொன். கனகா**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*வ.உ.சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி*

**ஆய்வுச்சுருக்கம்**
*இயற்கை இல்லையேல் மனிதவாழ்வு இல்லை. இவ்வுலகமும் உலகத்தில் உள்ள ஒவ்வொரு உயிர்களும் பஞ்சபூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று மற்றும் ஆகாயம் ஆகியவற்றோடு இணைந்தது. இலக்கியங்கள் மனித வாழ்வினைப் பிரதிபலிக்கும் பிம்பங்கள் எனலாம். அதன் அடிப்படையில் முத்தமிழாம் தமிழ் மொழியைத் தூதாக அனுப்புவதாக அமையப்பெற்ற தமிழ்விடு தூது நூலில், இயற்கையின் அடிப்படையாகிய ஐம்பூதங்கள் சார்ந்த குறிப்புகள் இடம் பெற்றிருப்பது அறிய முடிகின்றது*

## முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காப்பிய இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் என்று பல வகைமைகளைக் கொண்டது. அறம், பொருள், இன்பம், வீடு என்று சொல்லப்படும் நான்கு பாடு பொருள்களுள் ஏதேனும் ஒன்று குறைந்து காணப்படுவது சிற்றிலக்கியங்கள் எனப்பட்டன. கி.பி. 15 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.19ஆம் நூற்றாண்டு வரையிலான நாயக்கர் காலகட்டத்தில் சிற்றிலக்கியங்கள் வளர்ந்தன. 96 வகைகளாகக் கூறப்படும் சிற்றிலக்கியங்களில் தூது ஒருவகை ஆகும். பல்வகை தூது நூல்களுள் சிறப்பு பெற்றதாகிய தமிழ்விடுதூது நூல் உணர்த்தும் ஐம்பூதங்கள் சார்ந்த கருத்துக்களை ஆராய்ந்து வெளிக்கொணர்வது இவ்வாய்வின் நோக்கமாகும்

## தூது

உயர்திணை அல்லது அஃறிணைப் பொருட்களைத் தூதாக அனுப்புவதாகப் பாடப்படும் நூல்கள் தூது எனப்படும். இது அகத்தூது, புறத்தூது என்று இரு வகைப்படும். தலைவன் தலைவிக்கான தூது என்பது அகத்தூதாகவும், அரசர்களுக்கு இடையிலான தூது புறத்தூதாகவும் குறிக்கப்படுகின்றது.

**“ஓதல் பகையே தூது இவை பிரிவே”**[1]

என்று தொல்காப்பியம் தலைவன் தலைவி பிரிவைச் சுட்டும்போது தூதுப்பிரிவினை கூறுகின்றது. பெருங்காப்பிய இலக்கணம் கூறும் தண்டியலங்காரம் தூதினையும் காப்பிய முறையில் ஒன்றாக குறிப்பிட்டு சொல்கின்றது. தூதிற்கு உரிய பொருள்களை இலக்கண விளக்கம் பட்டியலிடுகின்றது.

## தமிழ்விடு தூது

தமிழ்விடுதூது நூல் அகத்தூது வகையைச் சார்ந்தது. இந்நூல் மதுரைசொக்கநாதர் மீதுகாதல் கொண்ட பெண் ஒருத்தி தமிழையே தூது அனுப்புவதாக உருவகிக்கப்பட்டு அமைந்துள்ளது. இதன் பாடல்கள் கலிவெண்பாவால் ஆனது. 268 கண்ணிகளைக் கொண்டது. இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.

## நிலம்

நிலையாக நிற்பது என்னும் பொருளில் “நில்” என்னும் அடியில் இருந்து “நிலம்” என்னும் சொல் உருவானது. இவ்வுலகில் தோன்றிய அனைத்து உயிரினங்களுக்கும் நிலமே ஆதாரம். வரலாறு முழுவதும் பெரும்பாலான மனிதச்செயற்பாடுகள், வேளாண்மை, வாழிடம், பல்வேறு இயற்கை வளங்கள் ஆகியவை அடிப்படையான நிலத்திலேயே நடந்துள்ளன. அதுபோல் தாவர உயிரினங்களுக்கும் நிலம் ஆதாரமாக அமைகின்றது.

சிவன் தாழம் பூவை சூடிக் கொள்ள மாட்டார் என்பதை,

**“மட்டோலைப் பூவனையார்”**[2]

என்று குறிப்பிடுகின்றது. இதில் மட்டை என்ற சொல் தாழம் பூவினைக் குறிக்கின்றது.

**“பூம்படலையாத்திப் புனைமலரைப் பூணாமல்**

**வேம்பலரைபூண்ட வியன்புயமும்”[3]**

என்று சிவன் தனக்கு உரித்தான ஆத்தி மாலையைச் சூடாமல், மதுரையில் சொக்கநாதராக வீற்றிருப்பதால் வேம்பு மாலையை அணிந்திருப்பதாக உணர்த்துகின்றது.

**“தேங்கமலத் தேசுதெரிசனஜ் செய்தவர்கே**

**பூங்கமலகண் கொடுத்த புத்தேளும்”[4]**

என்ற வரிகளில் தாமரைப் பூவினை போன்ற கண்களை உடையவர் திருமால் என்று குறிப்பிடப்படுகின்றது

**“நிலத்து இயல்பால் நீர் திரிந்தற்று ஆகும்”[5]**

எனும் திருக்குறள் நிலத்தில் சேரும் நீர் அந்த நிலத்தின் தன்மைக்கேற்ப மாறுபடும் என்று என்கிறது.

தாழம்பூ, தாமரை, ஆத்திமலர், வேம்பு மலர் என்று குறிப்பிடப்படும் மலர்கள் அனைத்தும் நிலத்தை ஆதாரமாகக் கொண்டு மலர்ந்தவைகள் என்பது உணரத்தக்கது. அவ்வகையில் பஞ்ச பூதங்களில் ஒன்றான நிலம் மலர்களின் வழி இடம்பெற்றிருப்பது உணரமுடிகின்றது

### நீர்

நீர் என்பது H2O என்ற வாய்ப்பாட்டல் விவரிக்கப்படும் ஒரு வேதியியல் சேர்மமாகும். உலகில் காணப்படும் உயிரினங்கள் அனைத்திலும் நீரானது நீர்ம வடிவில் காணப்படுகின்றது. அவ்வுயிரினங்கள் உயிர் வாழ்வதற்கு நீர் அத்திசியவசியமாகும். ஒருநீர் மூலக்கூற்றில் ஓர் ஆக்சிசன் அணுவுடன் இரண்டு ஐதரசன் அணுக்கள் சகப்பிணைப்பு மூலம் பிணைக்கப்பட்டுள்ளன. இவ்வுலகம் மூன்றில் ஒரு பங்கு நீரால் சூழப்பட்டுள்ளது. முனித வாழ்விலும் நீர் அத்தகைய முக்கிய இடத்தை பெற்றிருக்கின்றது.

மேற்கே கடலும், கிழக்கே வங்காளக் கடலும், தெற்கேகுமரி ஆறும், வடக்கே வடவேங்கட மலையையும் எல்லையாகக் கொண்டு இந்தியப் பெருந்தேசம் சூழப்பட்டிருந்ததை,

**“குடகடலுங் கீழ்கடலுங் கோக்குமரியாறும்**

**வடவரையும் எல்லை வகுத்தாய்”[6]**

என்றஎன்றவரிகள் குறிப்பிடுகின்றது

**“வையை கருவை மருதாறு மருவூர் நடுவே**

**ஐயநீ வாழுமரண் மனையே”[7]**

என்று வைகை ஆற்றை ஆதாரமாகக் கொண்ட மருதாறு மருவூரில் இருப்பதாகவும், அந்த ஊரின் அரசன் அரண்மனையில் இருப்பதாகவும் கூறுகின்றது.

**“கங்காநதிக் கிறையே கன்னித் துறைக்கரசே**

**சிங்காதனத் துரையே செல்வமே”[8]**

என்னும் வரிகள் கங்கை ஆற்றின் தலைவனாகவும், குமரியின் நீர்த்துறைக்கு அரசனாகவும், சிங்க ஆசனத்தின் மேல் வீற்றிருப்பவனாகவும் பாண்டிய மன்னனைக் குறிப்பிடுகின்றது.

**“வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்**

**தமிழ் கூறும் நல்லுலகம்”[9]**

என்று தொல்காப்பியப் பாயிரம், வடவேங்கட மலை மற்றும் குமரிக்கடலை பாரதத்தின் எல்லைகளாகக் குறிப்பிடுகின்றது.

மேலைக்கடல், வங்கக்கடல், குமரிக்கடல், வையை, கங்கை என்று நம் நாட்டின் செழிப்பினை வளமையை உருவாக்கக்கூடிய நீர்நிலைகளை தமிழ்விடுதூது நூல் குறிப்பிட்டுருப்பதை அறிய முடிகின்றது.

### காற்று

காற்று என்பது வளிமங்கள் பெருமளவில் ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத்துக்கு நகரும் நிலையைக் குறிப்பதாகும். புவியைப் பொறுத்தவரை, வளிமண்டலத்தில் வளிமம் பெருமளவில் நகரும்போது காற்று எனப்படுகிறது.

முன்னொரு காலத்தில் கடலின் வெண்மையான அலைகள் சிவபெருமானின் மாமியான காஞ்சன மாலைக்காக அழைத்தவுடன் அவருக்காக வெண்சாமரைகள் வீசியதை,

**“முந்துகடல் வெண்டிரை கண் முன்னே மாமிக்காக**

**வந்தனபோல் வெண் சாமரையிட்ட”[10]**

என்ற வரிகள் குறிப்பிடுகின்றது.

இவ்வாறு சாமரைகள் வீசும் காற்று மூன்றாவது விதமான காற்றுக்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றது. கடலின் மீது அலைகளாக எழக்கூடிய நீரோடு கூடிய காற்றினை தமிழ்விடு தூது முன்னிறுத்துவதை உணரமுடிகின்றது.

## ஆகாயம்

ஆகாயம் என்பது வெற்றிடம் ஆகும். எனவே ஆகாயம் எனும் பூதம் எதனாலும் கரைபடாதது. ஆகாயத்தை யாராலும் தொடமுடியாது பார்க்கவும் முடியாது. ஆகாயம் குளிர், வெப்பம், உலர்தல், மணம் போன்ற குணங்கள் அற்றது.

**“கோமேவு கோபுரமுங் கூடலின ˙மேன் முன்னொருநாள்**

**மாமேகஞ் சேர்ந்ததுபோன் மண்டபமும்”[11]**

என்னும் வரிகள் மதுரைநகரில் இருக்கும் உயர்ந்த கோபுரங்கள், மேகக்கூட்டங்கள் நான்கும் ஒன்று சேர்ந்தது போல் காட்சியளிப்பதாகக் குறிப்பிடுகின்றது.

திருவாலவாய் எனப்படும் மதுரையில் இருக்கின்ற பாண்டிய அரசன், வானுலகை விட மேலான சிறப்புகளைப் பெற்றவன் என்பதை,

**“அந்தர லோகத்தின் மேலான திருவாலவாய்ச்**

**சுந்தர மீனவனின் சொற்படியே”[12]**

என்ற வரிகள் உணர்த்துகின்றது.

**“மழையாடு மலையினி வந்த மாடமொடு**

**வையை அன்னவழக்குடை வாயில்”[13]**

என்று மதுரைக்காஞ்சி நூல் முகில் உலவும் மலை போன்ற உயர்ந்த மாடங்களையும், வையை போன்ற அகன்ற வாயில்களையும் உடையதாக மதுரை விளங்கியதாகக் குறிப்பிடுகின்றது.

இவ்வாறு மதுரையின் கோபுரங்கள் மேகக் கூட்டங்களுக்கும், பாண்டிய அரசன் வானுலகத்தின் சிறப்பிற்கும் உவமைகளாக தமிழ்விடு தூது குறிப்பிட்டுள்ளது அறிய முடிகின்றது.

## நெருப்பு

நெருப்பு என்பது வெப்பத்தை உமிழும் செயலாகும். நெருப்பு எரிவதற்கு பிராணவாயு எனப்படும் ஆக்சிசன் தேவைப்படுகிறது. ஆதிகாலத்தில் இரு கூழாங்கற்களை உரசி அதன் மூலம் காய்ந்த இலைச் சருகுகளையும் குச்சிகளையும் கொண்டு நெருப்பை உண்டாக்கினர். பின்னர் அறிவியல் வளர்ச்சியினால் கந்தகம் கொண்டு தீக்குச்சிகள் தயாரிக்கப்பட்டு, தீப்பெட்டியைப் பயன்படுத்தி நெருப்பு உண்டாக்கப்பட்டது. “அக்னி” என்னும் பெயரினால் கடவுளாகவும் வணங்கினர்.

சூரியன், நிலவு, நெருப்பு இம்மூன்றும் அடர்ந்த இருளைப் போக்கும். ஆனால் மதுரை சொக்கநாதரைப் போல் தன்னுடைய மனதில் உள்ள இருளை அகற்ற வேறுயாரும் உலகில் இல்லைஎன்பதை,

**“முந்தியொளியால் விலக்கு முச்சுடரென் பாருனைப்போல்**

**வந்தென் மனத்தருளை மாற்றுமோ”[14]**

என்ற வரிகளில் தமிழ்விடுதூரின் தலைவி குறிப்பிடுகின்றாள்.

இப்பாடலில் முச்சுடர் என்பது சூரியன் நிலவு நெருப்பு என்ற மூன்றையும் குறிக்கின்றது. இந்த மூன்று பொருள்களும் நெருப்புக்கு ஆதாரமாக அமைந்தவை என்பது அறியலாகின்றது.

## முடிவுரை

தமிழ்விடுதூது நூல் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு என்னும் இயற்கையின் அடிநாதமகிய ஐந்து பூதங்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. உவமை உருவகங்களாகவும், குறிப்புகளாகவும் ஐம்பூதங்கள் சார்ந்த செய்திகள் வெளிப்பட்டுள்ளது அறியப் படுகின்றது. மலர்களைத் தாங்கி இருக்கும் இடத்தின் வழியாக நிலம் பற்றியும், நீர் நிலைகளின் வழியாக நீரினைப் பற்றியும், அலைகளின் வழியாக காற்று பற்றியும், மேகம் வானம் என்று ஆகாயம் பற்றியும், முச்சுடர் என்று நெருப்பு பற்றியும் குறிப்பிட்டுள்ளது புலப்படுகின்றது. சித்தர்கள்

ஐம்பூதங்களையும் அடக்கி தன்னகத்தே கொண்டமையாலே சித்துக்கள் பெற்று சித்தர்கள் ஆயினர். இந்த உலகத்தையே கட்டி ஆளும் தன்மை ஐம்பூதங்களுக்கு உண்டு. தமிழையும் அது கட்டி ஆண்டுள்ளதற்கு தமிழ்விடு தூது சான்றாக விளங்குகின்றது.

## அடிக்குறிப்புப் பட்டியல்


1. தொல்காப்பியம் பொருளதிகாரம்., இளம்பூரணார் (உ.ஆ), அகத்திணையியல். நூற்பா.27 முதற்பதிப்பு - 1952., திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 02.
2. தமிழ்விடு தூது மூலமும் உரையும், கண்ணி.8, ப.எ. 3, முதல் பதிப்பு - ஜூலை 2008, கதிர்முருகு, சாரதாபதிப்பகம், சென்னை -14.
3. மேலது, கண்ணி. 225, ப.எ. 90
4. மேலது, கண்ணி. 209, ப.எ. 84
5. திருக்குறள் நயவுரை, தங்க.பழமலை, குறள் எண். 452, ஆறாம் பதிப்பு 2009, அருண்மொழி வெளியீடு, திருக்கோவிலூர் – 605-757.
6. தமிழ்விடு தூது மூலமும் உரையும், கண்ணி. 38, ப.எ.16, முதல் பதிப்பு - ஜூலை 2008, கதிர்முருகு, சாரதா பதிப்பகம், சென்னை -14.
7. மேலது, கண்ணி.. 40, ப.எ.16
8. மேலது, கண்ணி. 251, ப.எ.100
9. தொல்காப்பியம் பொருளதிகாரம்., இளம்பூரணார் (உ.ஆ), பாயிரம். 1-2 முதற்பதிப்பு–1952., திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-02.
10. தமிழ்விடு தூது மூலமும் உரையும், கண்ணி.241, ப.எ. 96, முதல் பதிப்பு - ஜூலை 2008, கதிர்முருகு, சாரதா பதிப்பகம், சென்னை -14.
11. மேலது, கண்ணி.. 206, ப.எ.83
12. மேலது, கண்ணி..267, ப.எ.106
13. பத்துப்பாட்டு மூலமும் உரையும்,. ந.சி.கந்தையா, மறை மலையடிகள், இராகவையங்கார் புலியூர்க்கேசிகன், வ.. 354-355, பதிப்பாண்டு - 2023. ஸ்ரீ செண்பகாபதிப்பகம், சென்னை-17.
14. தமிழ்விடு தூது மூலமும் உரையும், கண்ணி. 84, ப.எ.37, முதல் பதிப்பு- ஜூலை 2008, கதிர்முருகு, சாரதா பதிப்பகம், சென்னை -14.

# குறுந்தொகையில் இயற்கையும், நம்பிக்கைகளும்

**கம்பம் புதியவன்**
*உதவிப் பேராசிரியர்*
*செந்தமிழ்க் கல்லூரி, மதுரை*

**முன்னுரை**

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகை சங்ககாலத் தமிழகத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாகும்.

**“நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**
**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**
**கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று**
**இத்திறத்த எட்டுத் தொகை”**

என்னும் எட்டுத்தொகை குறித்த நூற்பாவில் ‘‘நல்ல குறுந்தொகை’’ எனக் குறிப்பிடுவதன் மூலம் குறுந்தொகையின் பெருமை விளங்கும்.

இக்கட்டுரை குறுந்தொகையில் காணலாகும் நம்பிக்கைகளை பின்வரும் தலைப்புக்களில் அடையாளப்படுத்துகிறது.

1. தலைவி தோழிக்குச் சொல்லும் நம்பிக்கைகள்
2. தலைவன் தோழிக்குச் சொல்லும் நம்பிக்கைகள்
3. தோழி தலைவிக்குச் சொல்லும் நம்பிக்கைகள்

**தலைவி தோழிக்குச் சொல்லும் நம்பிக்கைகள்**

**பாடியவர்:** தேவ குலத்தார். திணை: குறிஞ்சி

**துறை:** களவிலேயே ஒழுகி வருபவனாகிய தலைவன் வேலிப்புறத்தே வந்து நின்றதைத் தோழி அறிந்தாள். அவன் தலைவியை விரைந்து திருமணம் செய்ய வேண்டுமென்பதை அவனுக்கு அறிவுறுத்த நினைக்கின்றாள். அவன் செவியிற் படுமாறு, அவனது நட்பைப் பழித்துப் பேசத் தலைவி, அந்நட்பே சிறப்புடையதென்று இப்படி உரைக்கின்றாள்.

**நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;**
**நீரினும் ஆர்ஆள வின்றே சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே! (3)**

தோழி! “மலைப் பக்கத்திலேயுள்ள கரிய கொம்புகளையுடைய குறிஞ்சி மரத்தின் மலர்களைக் கொண்டு பெரிய தேனை வண்டுகள் செய்தற்கு இடமாகிய நாட்டினனான நம் தலைவனோடு யான் செய்த இந்நட்பானது, நிலத்தைக் காட்டினும் அகலத்தாற் பெரியதாகும்; வானைக் காட்டினும் உயர்ந்ததாகும்; உள்ளே புகுந்து எல்லை காணப் புகுந்தால் கடல் நீரைக் காட்டினும் ஆழத்தால் அரிய அளவினதாகும்.”

தலைவனின் நாட்டு வளங்களைக் கூறும்போது எல்லை காணமுடியாத கடல் வளத்தையும், குறிஞ்சி மலர்கள், வண்டுகள் போன்ற சுற்றுச்சூழலைக் குறிப்பிட்டு தலைவன் மீது தலைவி கொண்டுள்ள அளவற்ற நம்பிக்கையை குறுந்தொகை வெளிப்படுத்துகிறது.

**பாடியவர்:** கருவூர்க்கிழார். திணை: குறிஞ்சி

**துறை:** வரைவிடை ‘‘ஆற்றாள்’’ எனக் கூறிய தோழிக்குத் தலைமகள் கூறியது.

**பலரும் கூறுகஅ.்.து அறியா தோரே-**
**அருவி தந்த நாட்குரல் எருவை**
**கயம்நாடு யானை கவளம் மாந்தும்**
**மலைகெழு நாடன் கேண்மை**
**தலைபோ காமைநற்கு அறிந்தனென், யானே.(170)**

அருவியானது, கொணர்ந்து தந்ததும் காலத்தால் விளைந்ததுமான, கொத்தான கொறுக்காந்தட்டையினை ஆழமான நீர்நிலைகளை ஆய்ந்து சென்று நீராடுகின்ற யானையானது, கவளமாக எடுத்து உண்ணுகின்ற, மலைகள் பொருந்திய நாட்டையுடையவன் தலைவன். அவனது

நட்பினை நான் நன்றாக அறிந்துள்ளேன். அந்த நட்பு நிலையினை அறியாதவராகிய பலரும், அறிந்தவரும் அதனைக் குறித்து எடுத்துச்சொன்னால் ஆறுதலடைவேன். தனக்குத் தானே நம்பிக்கை கொண்டு தோழிக்கு எடுத்துச் சொல்கிறாள் தலைவி. நீர்நிலைகளும் மரங்களும் செழித்த இடத்தில்தான் வன விலங்குகள் குறிப்பாக யானைகள் இருக்கும் என்பதை பாடல் எடுத்தியம்புகிறது.

**பாடியவர்:** உறையூர் முதுகண்ணன் சாத்தன். **திணை:** குறிஞ்சி

**துறை:** பொருளீட்டச் சென்ற தலைவன் குறித்த காலத்தில் வராததால் தலைமகள் வருந்திச் சொல்லியது.

**புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை**
**கிளிகுறைத்து உண்ட கூழை இருவி**
**பெரும்பெயல் உண்மையின் இலைஒலித் தாங்கு, என்**
**உரம்செத்தும் உளெனே தோழி! - என்**
**நலம்புதிது உண்ட புலம்பி னானே.** (133)

தோழி! புனமுடையானின் தோட்டக் காலிலே விளைந்து, பொன்னைப் போன்று ஒளிரும் சிறுதினைக் கதிரினைக் கிளியானது ஒடித்து உண்டது. அதனால் குறைந்த தினைத்தாளில், பெருமழையும் பெய்தது. அப்படிப் பெய்ததால் அதனிடத்தும் இலை தழைத்தது. அதனைப் போல, என் பெண்மை நலத்தைப் புதிதாகத் தலைவன் உண்டனன்; உண்டபின் என்னை விட்டுப் பிரிந்து சென்றனன்; அதனால் எனது வலிமை அழிந்த பின்னரும், யான் உயிரோடு இருக்கின்றேன். திணை காத்த மழைபோல் மீண்டும் தலைவன் வருவான், இன்பம் தருவான்.

"பெருமழை" எனக் குறிக்கப்படுவதால் நீர்வளத்திற்கு குறைவில்லை என்பதனை அறியமுடிகிறது. தலைவனைப் பிரிந்த தலைவியின் வேதனையும், நம்பிக்கையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**தலைவன் தலைவிக்குச் சொல்லும் நம்பிக்கை**

**பாடியவர்:** செம்புலப் பெயனீரார். திணை: குறிஞ்சி.

**துறை:** இயற்கைப் புணர்ந்த பின்னர், ''பிரிவர்'' எனக்கருதி அஞ்சிய தலைமகள் குறிப்பு வேறுபாடு கண்டு, தலைமகன் கூறியது.

**யாயும் ஞாயும் யாரா கியரோ?**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்?**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்?**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே.**

என் தாயும் நின் தாயும் எம்முறையில் உறவினர்? என் தந்தையும் நின் தந்தையும் எவ்வகையில் உறவினர்? யானும் நீயும் எவ்வழியில் ஒருவரையொருவர் அறிந்தோம்? செந்நிலத்துப் பெய்யும் மழைநீரானது தானும் அம்மண்ணுடன் கலப்புற்றுச் செந்நிறமாவது போல, முந்தைப் பழக்கமற்ற நம்முடைய அன்பு கொண்ட நெஞ்சங்கள், தாமே தம்மிற் கலந்து ஒன்றுபட்டன.

மழை எந்நிலத்தில் வீழுமோ அந்நிலத்தின் நிறம் பெற்றபின் பிரிக்க இயலாததைப் போன்று நம் அன்பினைப் பிரிக்க முடியாதென தலைவிக்கு நம்பிக்கை யளிக்கிறான் தலைவன். நீர் வளம் குறியீடாகச் சொல்லப்படுகிறது.

**தோழி தலைவிக்குச் சொல்லும் நம்பிக்கைகள்**

**பாடியவர்:** மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார். திணை: பாலை.

**துறை:** தலைமகனின் பிரிவை நினைத்து மிகவும் வருத்தமுற்றிருந்த தலைவிக்கு, ''நீ வருந்தாதே; நின் தலைவர் விரைவில் மீள்வார்'' எனத் தோழி நம்பிக்கை யூட்டுகிறாள்.

**படரும் பைபயப் பெயரும்; சுடரும்**
**என்றூழ் மாமலை மறையும்; இன்று.அவர்**
**வருவார்கொல், வாழி தோழி! - நீர்இல்**
**வறுங்கயம் துழைஇய இலங்குமருப்பு யானை**

**குறும்பொறை மருங்கின் அமர்துணை தழீஇக்**
**கொடுவரி இரும்புலி காக்கும்**
**நெடுவரை மருங்கின் சுரன் இறந் தோரே.**

தோழி! நின் துன்பம் மெல்லமெல்ல உன்னை விட்டு நீங்கும். ஒளி செய்கின்ற கதிரவனும் மேற்கு மலையின்கண் சென்று மறைவான். கொம்புகளையுடைய யானையானது, நீரற்ற வறுமை கொண்ட குளத்தினைத் துழாவிய பின்னர், தான் விரும்புகின்ற பிடியினைத் தழுவியதாய், அதனை, வளைந்த கோடுகளையுடைய பெரும்புலி தாக்குதலின்றும் பாதுகாத்தபடி நிற்கும். உயர்ந்த மலைப்பக்கத்திலுள்ள அத்தகைய பாலை நிலத்தைக் கடந்து சென்றவர் தலைவர்.

யானையின் அன்பினைக் கண்ட தலைவர் உன்னை நினைப்பார். இன்று வருவார். நம்பிக்கையோடு இருப்பாயாக எனத் தோழி பேசுகிறாள். நீரற்ற நிலத்தின் தன்மை எடுத்தாளப்பட்டுள்ளது.

**பாடியவர்:** ஊண்பித்தை. திணை: பாலை
**துறை:** தலைவன் பிரிவை நினைத்து தலைவி கவலையுற்றிருக்கின்றாள். "தலைவன் வருவான்" எனக் கூறி நம்பிக்கையூட்டுகிறாள் தோழி.

**உள்ளார் கொல்லோ? - தோழி - உள்ளியும்**
**வாய்ப்புணர்வு இன்மையின் வாரார் கொல்லோ?**
**மரற்புகா அருந்திய மாஎருத்து இரலை,**
**உரற்கால் யானை ஒடித்துஉண்டு எஞ்சிய**
**யாஅ வரிநிழல், துஞ்சும்**
**மாஇருஞ் சோலை மலைஇறந் தோரே.**

தோழி! மலராகிய உணவை உண்டதான, பெரிய பிடரையுடைய ஆண் மானானது, உரலைப் போன்ற காலையுடைய யானை ஒடித்து உண்ட பின்னர், எஞ்சியிருக்கும் யாமரத்தினது வரிப்பட்ட நிழலில் கிடந்து, தூங்கும். அத் தன்மையினையுடைய மிகப் பெரிய சோலைகளையுடைய மலைகளைக் கடந்து, நம்மைப் பிரிந்து சென்றார் தலைவர். அவர் நம்மை மறக்கமாட்டார். வினை முடித்து விரைந்து வருவார் எனத் தலைவிக்கு நம்பிக்கையளிக்கிறாள்.

**பாடியவர்:** உலோச்சன். திணை: நெய்தல்
**துறை:** பொருளீட்டுவதற்காக தலைவன் தலைவியைப் பிரிந்து சென்றுள்ளான். அவன் வருவதாகக் குறித்துச் சென்ற காலம் நீடித்ததால், அவள் பெரிதும் துயரமுற்றாள். அவளைத் தோழி இவ்வாறு கூறி நம்பிக்கையளிக்க முயலுகின்றாள்.

**அதுவரல் அன்மையோ அரிதே; அவன்மார்பு**
**உறுக என்ற நாளே குறுகி,**
**ஈங்குஆ கின்றே-தோழி-கானல்**
**ஆடுஅரை புதையக் கோடைஇட்ட**
**அடும்புஇவர் மணற்கோடு ஊர, நெடும்பனை**
**குறிய ஆகும் துறைவனைப்**
**பெரிய கூறி, யாய்அறிந் தனளே. (248)**

தோழி மேல்காற்றானது. கடற்கரைச் சோலையிடத்திலுள்ள, மணற்குவியலைப் பரவச் செய்ய, அதனால் நெடிய பனைமரங்களும் குறுகித் தோன்றும். அத்தகைய கடற்கரையை உடையவன் தலைவன். வேலன் வெறியாடி தாயும், தலைவனை அறிந்தாளாயினள். அதனால், வரைவுக்குரித்தான நாள் வராமற்போவ தென்பது அரிதாகும். "அவன் மார்பை அடைக" என்று கூட்டுவிக்கும் நாள் விரைவில் வரும் கலங்காதேயென்று எடுத்துரைக்கின்றாள். கடற்கரை, சோலைகள், பனைமரங்கள் போன்ற இயற்கைக் காட்சிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

**பாடியவர்:** இடைக்காடன். திணை: முல்லை
**துறை**: தலைவன் மீண்டு வருவதாகக் குறித்துச் சென்ற கார் காலத்தின் வரவைக் கண்டதும்,

**அதுவரை ஆற்றியிருந்த தலைவி வாட்டமுற்று நலிகின்றாள். அவளது நலிவைக் காணும்**
**தோழி, "அது கார்காலம் அன்று: காலமல்லாக் காலத்துப் பெய்யும் மழை" என்று கூறித்**
**தலைவியை ஆற்றுவிக்க முயலுகின்றாள்.**
**மடவ வாழி - மஞ்ஞை மாஇனம்**
**கால மாரி பெய்தென, அதன்எதிர்**

**ஆவலும் ஆலின; பிடவும் பூத்தன;**
**கார்அன்று இகுளை! - தீர்கநின் படரே!**
**கழிந்த மாரிக்கு ஒழிந்த பழநீர்,**
**புதுநீர் கொளீஇய, உகுத்தரும்**
**நொதுமல் வானத்து முழங்குகுரல்**
**கேட்டே. (251)**

தோழி! தாம் புதுநீரைக் கொள்ளும் பொருட்டாகச் சென்ற கார்காலத்துப் பெய்யாது எஞ்சிநின்ற பழைய நீரினை மேகங்கள் கொட்டுகின்றன. மேகங்களது முழங்கும் இடிகுரலைக் கேட்டு, மயில்களாகிய பெருங்கூட்டங்கள், பருவகால மழை பெய்ததெனத் தவறாக எண்ணி ஆடின. பிடாவும் மலர்ந்தன. அவை அறியாமை உடையன. இது கார்காலம் அன்று. உண்மையான கார்காலத்தில் தலைவன் நிச்சயம் வருவான். துன்பத்தைக் கைவிடுவாயாக! என்று நம்பிக்கை யளிக்கிறாள். மேகக்கூட்டங்கள், மழைத்துளிகள், மேகங்களின் முழக்கம், மயில்கள், மலர்கள் போன்றன காட்சிப்படுத்தப்படுகின்றன.

## தொகுப்புரை

- தலைவி தோழிக்குச் சொல்லும் நம்பிக்கைகளில் மலைவளத்தையும், நீர்வளங்களையும் தவறாமல் எடுத்துரைக்கிறாள்.
- தலைவன் தோழிக்குச் சொல்லும் நம்பிக்கைகளில் உறவு முறைகளையும், செம்மண்ணில் பெய்த மழை நீரையும் உவமையாக எடுத்துரைக்கிறான்.
- தோழி தலைவிக்குச் சொல்லும் நம்பிக்கைகளில் தலைவியின் துன்பம் தீர கதிரவனின் புதிய கீற்றினையும், யானைக் கூட்டங்களையும் எடுத்துக்காட்டி விளக்குகிறாள்.

## முடிவுரை

சங்ககால இலக்கியங்களுள் குறிப்பிடத் தகுந்த குறுந்தொகை பண்டைய தமிழ் நிலங்களின் வளமைகளையும், தமிழ் மக்களின் பண்பாட்டினையும் இயற்கைக் காட்சிகளோடும் உவமைகளோடும் எடுத்துரைப்பது சிறப்பாகும்.

## மூலநூல்

1. குறுந்தொகை: மூலமும் உரையும் - மு.சண்முகம்பிள்ளை, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு. ஆண்டு - 1985.

# நளவெண்பா காட்டும் இயற்கை அழகியல்

**முனைவர் அ. கல்பனாதேவி**
*தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர்*
*வாவு வஜீஹா வனிதையர் கல்லூரி, காயல்பட்டணம்*

**ஆய்வுச்சுருக்கம்**
*மக்களின் வாழ்வு இயற்கையோடு இயைந்த வாழ்வு என்பதை விவரிக்கும் பாங்கிலேயே நளவெண்பா கதைப்போக்கு அமைகிறது. நளனின் நாடாகிய நிடத நாட்டு வளமும் வீமராசனின் நாடான விதர்ப்ப நாட்டு வளமும் இந்நூலில் எடுத்தியம்பப்பட்டுள்ளது. நளனுக்கும் தமயந்திக்கும் காதல் ஏற்படக் காரணமான அன்னப் பறவையின் அழகும் கவினுற வருணிக்கப்படுகிறது. தமயந்தியின் சுயம்வர நிகழ்வில் பங்கு பெறும் பல நாட்டு மன்னர்களின் நாட்டு வளமும் சிறப்பிக்கப்படுகிறது. நிலவின் வருணனையும் அந்நிலவின் ஒளி தமயந்தியின் மனதில் ஏற்படுத்திய காதல் துன்பமும் எடுத்துரைக்கப்படுகிறது. நள தமயந்தியின் காதல் வாழ்வில் நிகழ்ந்த நீர் விளையாட்டு பற்றிய செய்திகள் அழகியலை எடுத்தியம்புவதாக அமைந்துள்ளன.*

## முன்னுரை

இயற்கை மனித வாழ்க்கைக்குக் கடவுள் கொடுத்த வரம் எனலாம். இயற்கையின் அழகினைக்கண்டு லயிக்காதவர்கள் உலகில் எவரும் இல்லை. அழகினை ரசித்தது மட்டுமின்றி கவிதை புனைந்தும் வழிபாடு நிகழ்த்தியும் மக்கள் வாழ்ந்து வந்தனர். அவ்வகையில் இலக்கியங்கள் மக்களின் வாழ்வியலை மட்டும் எடுத்தியம்பாமல் அவ்வாழ்வியலுடன் இணைந்து கலந்து அழகியல் உணர்வை வெளிப்படுத்தும் இயற்கையின் வனப்பையும் கற்பனை கவினுடன் எடுத்தியம்புகிறது. அதனால் இலக்கியங்களில் இயற்கை முக்கியமான பங்கு வகிக்கிறது. நளவெண்பா காட்டும் இயற்கை அழகியலை இக்கட்டுரையில் காண்போம்.

## நளவெண்பா – நூல் சிறப்பு

**'வெண்பாவிற்கொரு புகழேந்தி'** என்று தமிழுலகில் போற்றப்படுபவர் புகழேந்திப் புலவர் ஆவார். அவரால் இயற்றப்பட்ட நூலே நளவெண்பா. மள்ளுவ நாட்டுச் சிற்றரசன் சந்திரன் சுவர்க்கி வேண்டுகோளுக்கு இணங்க இவர் இந்நூலை எழுதினார்.

இந்நூலானது சுயம்வர காண்டம், கலி தொடர் காண்டம், கலி நீங்கு காண்டம் எனும் மூன்று பகுதிகளை உடையது. நளன் தமயந்தியின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் இந்நூல் சூதாட்டத்தால் விளைந்த தீமையை எடுத்துரைக்கிறது.

## இயற்கை அழகியல்

இயற்கையைப் பற்றிக் கூறாத இலக்கியங்களே இல்லை எனலாம். மனித வாழ்வின் எல்லா நிகழ்வுகளிலும் இயற்கை இரண்டறக் கலந்து விட்டது. தண்டியலங்காரம் எனும் நூல் காப்பிய இலக்கணம் பற்றி விவரிக்குமிடத்து இயற்கைக்கும் முக்கியத்துவம் அளிக்கிறது.

> **"மலைகடல் நாடு வளநகர் பருவம்**
> **இருசுடர்த் தோற்றம் என்றினையன**
> **புனைந்து"[1] (தண்டி.7:7-8)**

எனும் வரிகளில் ஒரு காப்பியத்திற்கு இயற்கை வருணனை அவசியம் என்பதை வலியுறுத்துகிறது.

இயற்கை என்ற சொல் நம்மைச் சுற்றியுள்ள மனிதனால் உண்டாக்கப்பட்டு பாதுகாக்கப்படும் ஒன்றாகும். இதனைத் தொல்காப்பியர்,

> **"நிலம்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்**
> **கலந்த மயக்கம் உலகம்"[2]**
> **(தொல்.மரபு.641)**

என்று கூறுகிறார்.

நளன் தமயந்தியின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் நூலாயினும் இருவரைப் பற்றி வருணிக்கும் நிகழ்வுகளிலும் இருவரும்

சந்திக்கும் நிகழ்வுகளிலும் இயற்கை எழிலை புகழேந்திப் புலவர் அழகுற விவரித்துச் செல்கிறார்.

**நாட்டு வருணனை**

நளன் ஆட்சி செய்யும் நிடத நாட்டு வளமும் தமயந்தியின் தந்தை வீமராசனின் விதர்ப்ப நாட்டு வளமும் புலவர் வருணிக்ககுமிடத்து இயற்கை அழகியலை கண் முன் நிறுத்துகிறார். நிடத நாட்டின் அழகை நிலமகளின் கண்களுடன் ஒப்பிடுகிறார்.

> **"காமர் கயல் புரளக் காவிமுகைநெகிழ**
> **தாமரையின் செந்தேன் தளைஅவிழப் - பூமந்தை**
> **தன் நாட்டம் போலும் தகைமைத்தே சாகரம்சூழ்**
> **நன் நாட்டின் முன்"**

**(பா.எண்.19)**

எனும் வரிகளில் கெண்டை மீன்களின் பிறழ்ச்சி, குவளை, தாமரை அரும்புகளின் மலர்ச்சி ஆகியவை நிறைந்த நிடத நாடு நிலமகளின் கண்களை ஒத்திருக்கிறது என்று கூறுகிறார். மேலும் எருமைகள் கரும்பைத் தின்று முத்துகளை உதிர்க்கும் நாடு(31), தேனைக் குடித்த வண்டுகள் சிறகுகளை உலர்த்தும் வளமான நாடு(27) என்றும் வருணிக்கிறார்.

நளனிடம் அன்னப் பறவை தமயந்தி யார் என விவரிக்குமிடத்து விதர்ப்ப நாட்டின் அழகு வெளிப்படுகிறது. மாம்பழங்கள் நிறைந்த மாந்தோப்பில் வண்டுகள் மாம்பூக்களை விரியச்செய்யும் சோலைகளும் நீர் நிலைகளும் நிறைந்த வளநாடு. உழவர்கள் ஏரினைப் பூட்டி உழும்போது குவளை மலர்கள் சாய்ந்து அவர்கள் மடையை மிதிக்கும் போது தேன் வடியவும் நீர் பாயும் ஒலி கேட்கும் வயல்கள் நிறைந்த நாடு என்று புகழ்ந்துரைக்கப்படுகிறது.

> **"-------- ----- ---------- - உழுநர்**
> **மடைமிதிப்பத் தேன்பாயும் மா(டு)ஒலிநீர் நாடன்"**

**(பா.எண்.38:2-3)**

எனும் வரிகளில் புலவர் எடுத்துரைக்கிறார். மேலும் தமயந்தியின் சுயம்வர நிகழ்வில் பங்கு பெறும் சேரன், சோழன், பாண்டியன், மச்சநாடு, பாஞ்சாலநாடு, கோசலநாடு, அங்கதம், கலிங்கம், கேகயம், காந்தாரம், சிந்து, மந்திரநாடு, அவந்திநாடு போன்ற மன்னர்களின் நாட்டு வளமும் சிறப்பாக வருணிக்கப்படுகிறது.

**சோலையின் வனப்பு**

நளன் தன்னுடைய பணிப் பெண்களுடன் சோலைக்குச் செல்கிறான். அங்கு அவன் கண்டு ரசிக்கும் சோலையின் அழகைப் புலவர் விவரிக்கிறார். இருட்டுக் கதிரோனுக்கு அஞ்சி இருந்தது போல கருநிற வண்டுகள் ஒலித்துக் கொண்டு சுழலும் சோலை என்கிறார். இதனை,

> **" ---------- ------------- ----------- கார்வண்டு**
> **தொக்கிருந்தா லித்துழந் தூங்கிருள் வெய்யோற்கொதுங்கிப்**
> **புக்கிருந்தால் அன்ன பொழில்"**

**(பா.எண்.29: 2-4)**

எனும் பாடல் விவரிக்கிறது.

**அன்னத்தின் அழகு**

நளன் கோலையில் கண்டு ரசிக்கும் அன்னப் பறவையின் அழகைப் புலவர் கவினுற விவரிக்கிறார்.

> **"நீள்நிறத்தால் சோலை நிறம்பெயர நீடியதன்**
> **தாள்நிறத்தால் பொய்கைத்தலம் சிவப்ப – மாண்நிறத்தான்**
> **முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்**
> **அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு"**

**(பா.எண்.30)**

எனும் வரிகளில் அன்னப் பறவையானது தனது வெண்மை நிறத்தால் சோலையை வெண்மை அடையச் செய்யவும் கால்களின் சிவப்பு நிறத்தால் குளம் செம்மை நிறம் அடையச் செய்யும் படியும் தோன்றியது என்று புலவர் வருணிக்கிறார்.

நளன் பணிப்பெண்களிடம் அன்னத்தைப் பிடித்து வருமாறு கட்டளையிடுகிறான். பணிப்பெண்கள் அன்னத்தைப் பிடித்து வர, நளனோ அன்னத்திடம்,

**"அஞ்சல் மடஅனமே உன்றன் அணிநடையும்**
**வஞ்சி அனையார் மணிநடையும் - விஞ்சியது**
**காணப் பிடித்ததுகாண் என்றான் ----"**
**(பா.எண்.34: 1-3)**

அன்னமே அஞ்சாதே, உன் அழகிய நடை, மங்கையரின் சிறந்த நடை இவ்விரண்டனுள் எது தலைசிறந்த நடை எனக் காணவே உன்னைப் பிடித்தோம் என்ற கூறுகிறான். சிலப்பதிகாரத்தில்.

**"சேரல் மடல்அன்னம் சேரல் நடைஒவ்வாய்**
**சேரல் மடல்அன்னம் சேரல் நடைஒவ்வாய்**
**ஊர்திரைவேல் உழக்கித் திரிவாள்பின்**
**சேரல் மடல்அன்னம் சேரல் நடைஒவ்வாய்"[3]**
**(கானல்வரி.23)**

எனும் கானல்வரிப் பாடல் ஒன்றும் இதே கருத்தை எடுத்தியம்புகிறது.

**காதல் மயக்கம்**

சோலையில் அன்னப் பறவை நளனிடம் தமயந்தியின் அழகைப் பற்றிக் கூற, நளனோ தமயந்தியின் மீது காதல் வயப்படுகிறான். நளனுடைய காதல் உணர்வை வெளிப்படுத்தும்போது ஆண் குயில் பெண் குயிலோடு பேசுவதைக் கேட்டு மனம் தளர்தல், மயில் ஆடுவதைக் கண்டு மனம் கலங்குதல் போன்ற நிகழ்வுகளைக் கூறுகிறார் புலவர். மேலும் நளன் சோலையில் உள்ள கொடிகளைப் பார்த்து தமயந்தியின் இடையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பேன் என்று கூறி அழைக்கிறான். இந்நிகழ்வை,

**"வார்அணியும் கொங்கை மடவாள் நுடங்(கு) இடைக்குப்**
**பேருவமை ஆகப் பிறந்(து) உடையீர் - வாரீர்**
**கொடியார் எனச் செங்கை கூப்பினான்"**
**(பா.எண்.50:1-3)**

எனும் பாடல் வரிகளில் அறியலாம். தமயந்தி தன்னுடைய துன்ப நிலையை இரவுடன் ஒப்பிடுகிறாள்.

**'இரையோ இரவுக்கு யான்'**
**(பா.எண்.125:4)**

எனும் வரியில் இரவால் உண்ணப்படும் இரையாக தான் இருப்பதாகப் புலம்புகிறாள்.

**மாலை நேர வருணனை**

இந்நூலில் மாலை நேரத்தின் வருகையை இயற்கையோடு இணைத்து புலவர் வருணிக்கும் பாங்கு சிறப்புடையது.

**"மல்லிகையே வெண்சங்கா வண்(டு)ஊத வான்கருப்பு**
**வில்லி கணைதெரிந்து மெய்காப்ப – முல்லையெனும்**
**பொன்மாலை தோள்அசைய மெல்ல நடந்ததே**
**புன்மாலை அந்திப்பொழுது"**
**(பா.எண்.106)**

எனும் வரிகளில் மல்லிகையைச் சங்காக்கி வண்டுகள் ஊதவும் மன்மதன் மலரம்புகளால் உடலைப் பாதுகாத்து வரவும் முல்லை மலர் மாலை தோள்களில் அசையவும் மாலை நேரமாகிய அந்தியெனும் அரசு மெல்ல நடந்தது என்று கூறுகிறார்.

**நிலவு வருணனை**

அந்திப் பொழுதில் தோன்றும் நிலவும் அந்நிலவொளியால் காதலர்களில் மனதில் ஏற்படும் துன்பமும் பல இலக்கியங்களில் சேப்பட்டுள்ளன. அவ்வகையில் நளவெண்பாவில் தமயந்தி நளன் மீது கொண்ட காதலால் புலம்புகின்ற நிகழ்வை நிலவுடன் இணைத்துப் பேசுகிறார் புலவர்.

**"பைந்தொடியாள் ஆவிபருகுவான் நிற்கின்ற**
**அந்தி முறுவலித்தா தாமென்ன – வந்ததால்**

**மையார்வேல் கண்ணாள் வனமுலைமேல் ஆர்அழலைப்**
**பெய்வான் அமைந்த பிறை"**
**(பா.எண்.108)**

எனும் வரிகளில் தமயந்தியின் மார்பகத்தில் நெருப்பைச் சொரிகின்ற நிலவு அவளது உயிரை எடுக்க நிற்கின்ற அந்திப் பொழுது நகைத்ததுபோல வானில் தோன்றியது என்று கூறுகிறார். மேலும் கருமையாகிய இருளைத் தன் கொம்பினால் பெயர்த்து எடுத்த மண்போல் நுனியில் ஒட்ட வைத்துக் கொண்டுள்ள நிலவு என்றும், அந்நிலவு தமயந்தியின் முலைகள் மேல் தீய வேண்டும் எனச் சொரிந்ததாகவும் கூறுகிறார்.

வானில் தோன்றும் நட்சத்திரங்களை, நிலா எனும் வெப்பம் தாக்கியதால் வானத்தில் ஏற்பட்டுள்ள கொப்புளங்கள்(111) என்று கூறுகிறார்.

### நீர் விளையாட்டு

நளன் தமயந்தி இருவரும் திருமணத்திற்குப் பின் நிர் விளையாட்டு விளையாடிய செய்திகள் கலிதொடர் காண்டம் எனும் பகுதியில் இடம் பெற்றுள்ளது. தாமரை மலர்கள் நிறைந்த குளத்தில் தமயந்தி தாமரை மலர்கள் கலங்கும்படி மூழ்கி எழுந்ததை நளன் பார்த்து ரசிக்கிறான்.

**"கொழுநன் கொழுந்தாரை நீர்வீசக் கூசிச்**
**செழுமுகத்தைத் தாமரைக்கே சேர்த்தாள் ---------"**
**(பா.எண்.191:1-2)**

எனும் பாடல் வரிகளில் நளன் தமயந்தியின் மீது நீர்த்திவலைகளைப் பீச்சியடிக்க அவள் நாணம் கொண்டு முகத்தைத் தாமரை மலருடன் சேர்த்துக் கொண்டதாகப் புலவர் கூறுகிறார்.

### முடிவுரை

சூதாட்டத்தால் விளைந்த துன்பத்தை எடுத்துக்கூறும் இக்காப்பியம் இயற்கை விவரிக்கும் பாங்கு அழகுடன் அமைந்துள்ளது. அன்னப்பறவையின் அழகு, நள தமயந்தியின் காதல் வெளிப்பாடு, பிரிவுத் துன்பம் இவற்றை வெளிப்படுத்தும் விதத்தில் இயற்கையை இணைத்துப் பேசிய திறம் புலவரின் கற்பனை ஆற்றலை எடுத்தியம்புகிறது. பல நாட்டு மன்னர்களின் இயற்கை வளமும் சிறப்பாகப் பேசப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரை மூலம் அறிய முடிகிறது.

### தொகுப்புரை

நளன் தமயந்தியின் காதல் வாழ்வை எடுத்துக் கூறும் இக்காப்பியம் இயற்கை வளம் நிறைந்தாக அமைந்துள்ளது. நிடத நாடு, விதர்ப்ப நாட்டு வருணனையில் இயற்கை எழில் வழிந்தோடுவதை உணர முடிகிறது.

நளன் தமயந்திக்கு இடையே காதல் உணர்வை மலரச் செய்யும் அன்னப் பறவையின் அழகும் நடையும் எழிலுற வருணிக்கப்பட்டுள்ளது.

மாலை நேரத்தில் தோன்றும் நிலவின் வருணனையும், அந்நிலவு ஒளியானது பிரிந்து இருக்கும் காதலரின் மனதில் ஏற்படுத்தும் துன்பத்தையும் அறிய முடிகியது.

தாமரை மலர்கள் நிறைந்த பொய்கையில் நளனும் தமயந்தியும் திருமணத்திற்குப் பின் நிர் விளையாட்டு விளையாடிய விதம் பற்றி அறிய முடிகிறது.

### அடிக்குறிப்புகள்


1. தண்டியலங்காரம், ச.சுபாஷ் சந்திரபோஸ் (உ.ஆ) ஐந்தாம் பதிப்பு 2019, இயல் வெளியீடு, தஞ்சாவூர்.
2. தொல்காப்பியம் மூலமும் உரையும், கு.வெ.பாலசுப்பிரமணியன்(உ.ஆ), மூன்றாம் பதிப்பு பிப்பிரவரி 2022, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட், சென்னை.
3. சிலப்பதிகாரம், ஞா.மாணிக்கவாசகன் (உ.ஆ), டிசம்பர் 2010, உமா பதிப்பகம், சென்னை.

# மணல் புதினத்தில் சூழலியல் சிந்தனைகள்

**முனைவர் கு. ஜெயசித்ரா**
*உதவிப் பேராசிரியர், கல்வித் தந்தை*
*ஏகேஆர் சௌராஷ்டிரா ஆசிரியர் கல்லூரி, சிவகங்கை*

**ஆய்வுச்சுருக்கம்**
*இயற்கை வாழ்வியல் என்பது தொடக்ககால மனிதர்களின் இயல்பாக இருந்தது. தொழில் நுட்பங்களும், நாகரிகமும் நகர மயமாக்கமும் உருவான பின்னணியில் மனிதர்கள் இயற்கை வளங்களைத் தம் விருப்பத்திற்கு சூறையாடத் தொடங்கினர். இதனால் இயற்கைச் சமன் குலையும் நிலை உருவானது. இயற்கை மீது மனிதர்கள் நிகழ்த்தும் தாக்குதல்களால் இயற்கைச் சீற்றங்களும் பேரிடர்களும், வறட்சி, பஞ்சம் போன்றவை ஏற்படுகின்றன. தமிழில் இயற்கையைத் தம் கடவுளாக வழிபட்ட மரபு இருந்தது. இன்றைக்கும் தாவரங்கள், நீர்நிலைகளை வழிபாட்டுத் தலங்களில் புனிதத்துடன் பின்பற்றி வரும் நிலையினைக் காணலாம். ஆனால் தற்காலத்தில் ஆறுகள் மீதும் நிலத்தின் மீதும் அரசுகளும் முதலாளிகளும் நிகழ்த்தும் தாக்குதல்கள் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து மரங்கள் சாகின்றன. இதனால் அதனோடு கொண்ட வாழ்வியல் முற்றாக அழிக்கப்படுகிறது. ஆறுகளைக் காப்பாற்றும் வகையில் மக்கள் தன்னெழுச்சியாகப் போராடும் மனநிலையை உருவாக்கும் மணல் புதினத்தில் மணல் கொள்ளை தவிர்த்த வேறு பல இயற்கை நாசம் பற்றியும் ஆசிரியர் எடுத்துரைக்கிறார் இக்கட்டுரை அவற்றைப் பற்றி எடுத்துரைக்கிறது.*

***குறிப்புச்சொற்கள்:*** *சூழல், இயற்கை, புனிதம், வழிபாடு, மணல் கொள்ளை, சீமைக்கருவேலம்*

**முன்னுரை**

மனிதர்களின் வாழ்வியல் என்பது அவர்கள் வாழும் சூழலை மையமிட்டே அமைந்துள்ளது. ஒவ்வொரு நிலம் சார்ந்த இயற்கை வளங்களை பயன்படுத்தித் தம் வாழ்வாதாரத்தை உருவாக்கிக் கொள்கின்றனர். வேளாண்மை, மேய்ச்சல் தொழில்களை மேற்கொள்பவர்கள் இயற்கையை பெரிதும் சார்ந்து வாழ்கின்றனர் என்பதில் ஐயமில்லை. நகரமயமாக்கமும் தொழிற்சாலைகளின் பெருக்கமும், கட்டிடங்களின் வானளாவிய பெருக்கமும் ஒரு வகையில் இயற்கை வளங்கள் மீதான தாக்குதல்களாக அமைகின்றன. அதாவது தொழிற்சாலைக் கழிவுகள் ஆறுகளில் கலப்பதால் ஆறுகள் மாசடைகின்றன. கட்டிடங்களின் தேவைக்கு மணல் ஆற்றுப்படுகைகளில் அள்ளப்படுகின்றன. இதனால் ஆறுகள் வறட்சியாகி வறண்டு விடுகின்றன. வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதற்கு ஆற்றுமணலை சுரண்டுவதும் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது. தமிழ் இலக்கியங்களில் சூழலியல் சார்ந்த சிந்தனைகள் பழங்காலம் தொட்டே இருந்து வந்திருக்கின்றன. இயற்கையை வழிபட்டு வந்த மனிதர்கள் அவற்றின் பயன்பாடு கருதியே அதன் மீது புனிதத் தன்மையை ஊட்டினர் என்றால் அது மிகையாகாது. உதாரணமாக மரங்களை தெய்வமாக வழிபடுதல், ஆறுகளை வழிபடுதல், நீர்நிலைகளை வழிபடுதல் என்பன அவற்றைக் காப்பதற்காகவே எனக் கொள்ளலாம். ஆனால் இன்றைய நகர நாகரிக வாழ்வியலானது மரங்களை வெட்டி வீழ்த்துவதையும், மணலைச் சுரண்டி ஆறுகளை வறண்டு போகச் செய்வதையும் நீர்நிலைகளை கபளீகரம் செய்து கட்டிடங்கள் கட்டுவதையும் காணும் போது அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி சிந்திக்காத நிலையினையே காணமுடிகிறது. தமிழ்ப் புதினங்களில் சுப்ரபாரதிமணியன், நக்கீரன், வறீதையா கான்ஸ்தந்தின் ஆகியோரின் படைப்புகளில் சூழலியல் சார்ந்த சிந்தனைகள் கூறப்படுகின்றன. அதே போல சிறிது காலத்திற்கு முன்னர் மறைந்த முற்போக்கு எழுத்தாளரான பா.செயப்பிரகாசத்தின் சிந்தனைகளிலும் சூழலியல் சார்ந்த

கருத்துக்கள் காணக்கிடைக்கின்றன. அவருடைய மணல் புதினம் மணல் கொள்ளையினால் வாதிரிகள் எனப்படும் பனையேற்றுத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதும் அதனால் அவர்கள் இடம் பெயர்ந்து வாழ நேர்வதும், மணல் கொள்ளையை எதிர்த்து போராடுவதுமான நிலைகள் சுட்டப்படுகின்றன. மணல் சுரண்டலுக்கு முந்தைய ஆறுகளின் நிலைமையைப் பற்றியும் ஆறுகளில் அள்ளியெடுக்கப்பட்ட மணலால் அவை வறண்டுபோன நிலை பற்றியும் சித்திரிக்கிறார். இக்கட்டுரையில் மணல் கொள்ளை அதனால் நேரும் சூழல் கேடு ஆகியன பற்றிக் கூறப்படுகின்றன.

### சூழலியல் சிந்தனைகள்

மனிதர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்த காலம் வரை எந்தப் பிரச்சினையும் சூழலுக்கு நேரவில்லை. இயற்கையைத் தம்வயப்படுத்த அதன் மீது முரண்பட்ட நிலையில்தான் பிரச்சினைகள் பல தோன்றின. இயற்கையோடு மனிதர்கள் முரண்பட்டதால் ஏற்பட்ட பிரச்சினைகள் இன்று சூழலியல் கேட்டிற்கு வழிகோலும் நிலைக்கு வந்துள்ளன. ‘‘Oikos (வீடு அல்லது வாழ்வதற்கான இடம்) Logos (கற்றல) என்னும் கிரேக்க சொற்களிலிருந்து தோன்றியது Ecology என்னும் சூழலியல். இதிலிருந்து சூழலியல் எனப்படுவது உயிரினங்களை அவற்றின் வாழிடங்களில் கற்றல் எனலாம். அதாவது சுற்றுச் சூழலிருக்கும் உயிரற்ற, உயிருள்ள கூறுகளையும் கற்கும் கற்கையாகும்”[1] சூழலியல் என்னும் சொல்லுக்குப் பொருள் கூறப்படுகிறது.

நிலத்தையும் வளங்களையும் சுரண்டும் நுகர்வு வெறியானது கட்;டற்ற உற்பத்திக்கு வழிவகுக்கிறது. இதனால் சூழல் பெரிதும் மாசுபாட்டினை அடைகிறது. ‘‘நிலத்தின் துரிதமான அரிப்பிற்கும் படிதலுக்கும் மனிதனது செயற்பாடுகளே காரணமாகவுள்ளன. கனிப்பொருட்களுக்காக நிலத்தை அகழ்தல், காடழித்தல், ஒரு பிரதேசத்திற்கு அந்நியமான தாவரங்களையும் விலங்குகளையும் அறிமுகப்படுத்தல், நவீனப் பயிர்ச் செய்கை யந்திரங்களின் உபயோகம், கட்டிடங்கள், வீதிகள், பாதைகள் புல்வெளிகளில் மேலதிக மேய்ச்சல் முதலான நிலவகைக் காரணிகள் மண்ணரிப்பினைத் துரிதப்படுத்தியுள்ளன”[2] என்ற கூற்றின் மூலம் நிலத்தின் வளங்கள் பலவும் மனிதனது தேவையின் பொருட்டு சுரண்டப்படுவது பற்றி அறியமுடிகிறது.

நவீன அறிவியல் கொண்டு வந்த வேளாண்முறையானது மரபான வேளாண்மைக்கும் சூழலுக்கும் கேடுறுவதாகவே அமைந்தது. ‘‘பறவைகள், பூச்சிகள், நுண்ணுயிரிகள் உட்பட்;ட பல உயிரினங்கள் அழிந்ததோடு மட்டுமல்லாமல் ரசாயன உபயோகத்தால் மேலும் பல சூழலியல் பாதிப்புகள் ஏற்பட்டன. மண் மலடானது, ரசாயன உரங்கள் நீரோடைகளைச் சென்றடைய வளர்ந்து வந்த பாசிகள் அதிகமாகி நீரினங்களும் பிராண வாயு கிடைக்காமல் செய்து அவை மாண்டு போகக் காரணமாயின”[3] என்று நிலத்தின் விளைச்சலுக்குப் பயன்படுத்தப்பட்ட ரசாயன உரங்களும் நீர்நிலைகளைப் பாதிப்புறச் செய்தமையை எடுத்துரைக்கிறார் சங்கீதா ஸ்ரீராம். நிலத்தின் தன்மையும், நீர் நிலமும் அழிவுறுவதற்கு மனிதனின் பேராசையும் பொறுப்பற்ற போக்குமே காரணமாயின. இது போன்ற சூழலியல் சிந்தனைகளைத் தம் புதினத்தில் பா.செயப்பிரகாசம் வெளிப்படுத்தியுள்ளார்.

### ஆறு பற்றிய சிந்தனை

மக்கள் நீர்நிலைகளை கடந்த காலங்களில் வணங்கி வழிபட்டமைக்கு அதன் உபயோகமும் உயிர் கொடுக்கும் அதன் ஆற்றலும் காரணமாக இருந்தன. இன்றைக்கும் தண்ணீர் முக்கியமான ஆதாரமாகக் கருதப்படுவதற்கு அதைக்கொண்டுதான் உழவு செய்ய முடியும் உயிர்கள் வாழ முடியும் என்பதாகும். ஆனால் லாப வேட்கை கொண்ட முதலாளிகள் மற்றும் அரசு சார்ந்த அதிகாரிகள் ஆற்றினை பணமாக்க முயல்கிறார்கள். ‘‘ஆத்தை வெறும் மணலாக அவர்கள் காணவில்லை. இன்னைக்கு

வேணும். நாளைக்கு வேணும் என்று நம்ம மனுச மக்களுக்குத் தாகம் தணிக்கும் தாயாகக் கண்டனர்" (மணல்,ப.30) என்று ஆற்றிற்கும் மனிதருக்கும் இடையிலான இடையறாத உறவினைப் பற்றிக் கூறுகிறார் ஆசிரியர். மேலும் ஆற்றின் இயல்பையும் அதன் மீது மனிதர்கள் பொறுப்பற்று நடந்து கொள்வதால் நேரும் சிக்கல்களையும் பற்றி "இப்பவா நேத்தா இயற்கை ஈராயிரம் வருடங்களுக்கு மேலாய் கொண்டிருக்கும் ஈரவாகை ஆற்றுக்கு நல்கியிருக்கிறது. ஈரமும் நீரும் பசுமையுமான குணவாகு, இயற்கை மனித குலத்துக்கு வாரி வழங்கிய பெருங்கொடை. இயற்கைக்கு இருக்கிற அந்தக் குணம் கூட மனு சென்மங்களுக்கு வள்ளசாய் இல்லை. இயற்கையின் கொடையைக் குட்டிச் சுவராக்கி நாசம் பண்ணும் கூட்டம் பெருகிவிட்டதை வாதிரிகள் கண்டார்கள். மணல் அள்ளப்படுவதால் பாசனத்தை நம்பியிருந்த மண்வறண்டு பொட்டல்காடாகியது. நீரில்லாப் அரை வாணாளில் முடிந்தன. காய்ந்த ஓலைகள் மாரிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு கதறுகிற ஓலம் வாதிரிகளுக்கு வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு தாம் பெத்த பிள்ளைகளின் கதறல் போல காது சவ்வுகளைக் கிழித்தது" (மணல்,ப.30) என்று வாதிரிகளின் பனையேற்றுத் தொழில் நசிந்து போனதற்கு மணல் சுரண்டப்பட்ட ஆற்றுப் படுகைகளில்இருந்த பனை மரங்கள் வற்றிப் போன பொட்டல் நிலத்திலிருந்து நீரைப் பெறமுடியாமல் போனதே ஆகும் என்றும் அதனால் வாதிரிகளின் வாழ்வியல் பாதிக்கப்பட்டது என்றும் அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் தம் வளங்களைக் காப்பதற்காக போராட்டத்தில் ஈடுபட வேண்டிய தேவை ஏற்பட்டது என்றும் குறிப்பிடுகிறார்.

### பருவநிலை மாற்றம்

இயற்கை இடர்களில் ஒன்றாக பருவநிலை மாற்றமும் காணப்படுகிறது. பூமி சூடேறுவதால் ஏற்படும் பிரச்சினைகளில் ஒன்றாக பருவகாலச் சூழல் மாற்றம் உருவாக்கம் பெறுகிறது. படிப்படியாக பூமியில் இயற்கை வளங்கள் அழிக்கப்படுவதாலும் தொழிற்சாலைக் கழிவுகள் மிகுதியாவதாலும் பருவகால மாற்றம் ஏற்படுகிறது. இதனை தன்னுடைய புதினத்தில் பா.செயப்பிரகாசம் சுட்டிச் செல்கிறார். முந்தைய காலங்களில் உரிய பருவத்தில் மழை பெய்யும், விதைப்பதற்கும், அறுப்பதற்குமான காலத்தை நிர்ணயித்துக் கொண்டிருந்தனர். ஆனால் இப்போது அப்படி எதையும் முன் கணித்து விட முடியவில்லை என்பதே அவருடைய கூற்றாகக் காணப்படுகிறது. "பருநிலை மாற்றமல்ல. பருவநிலை தானே மாறாது. சுற்றுச் சூழல் சிதைப்பு. எங்கோ, யாரோ செய்கிற சீரழிப்பால் பருவங்கள் காலம் தப்புகின்றன. மாதவிடாய் தப்பிய பெண்ணுடலுக்கு உண்டாகும் வேதனைகள் போல் பருவ காலங்களின் ஒழுங்கான வருகை அத்துப் போனதால் செல்வராசு மாதிரி பனையேறிகள் துயரம் தூக்கிகளாக அலைகின்றனர்." (மணல், ப.44) என்று குறிப்பிடுகிறார். உரிய நேரத்தில் மழை பெய்தால் விதைப்பதற்கும் அறுப்பதற்கும் எவ்வித பிரச்சினையுமின்றி இருக்கலாம். ஆனால் அதில் ஏற்படும் சிக்கலால்தான் என்று குறிப்பிடுகிறார். மேலும் உரிய பருவத்தில் நெல் விளையும் நிலையும் மாறிப்போனது என்று கூறுகிறார் "தைப் பிறந்தா வழி பிறக்கும் தங்கச் சம்பா நெல் விளையும் விவசாய மொழி. காலத்தில் பெய்யும் மழையுமில்லை. இரண்டு மழை வசமாக இறங்கினால்தான் மண் தன் மடியில் பிடித்துக் கொள்ளும் நீர் வசமே இல்லாத போதில் தங்கச் சம்பா எங்கே விளைவது." (மணல், ப.44) என்ற குறிப்பிலிருந்து உரிய பருவத்தில் மழை இல்லாத நிலையும் அதனால் ஏற்படும் வேளாண்மைச் சிக்கலும் விவசாயிகளின் நிலையும் பற்றிக் கூறுவதைக் காணமுடிகிறது.

### ஆற்றுப் படுகையின் பஞ்சம்

மணல் கொள்ளையின் கொடூர விளைவுகளில் ஒன்றாகவே பஞ்சத்தைப் பார்க்கிறார் புதின

ஆசிரியர். காலந்தோறும் நதிகள் பிரவாகமெடுத்து ஓடிய பூமியில் வறண்டு போன காட்சிகள் தோன்றுவதற்குக் காரணமாக தண்ணீர் பஞ்சமும் ஆற்றுமணல் கொள்ளையும் அமைகின்றன என்பதாக இதனைக் கருத முடியும். "வெள்ளாமை சுமந்த காடுகளால் அவர்கள் வாழ்க்கை பொங்கு கொழித்துக் கொண்டிருந்தது. செழுமையாய்க் கொழுத்த புஞ்சைகள் அடி நீரும் இல்லாமல், மேமழையும் இல்லாமல் அத்து பறட்டையாய் ஆகி விட்டன. ஒன்னுக்குள் ஒன்னு செல்லம் பொழிந்து கொண்டிருந்த உறவுகள் சுண்டிச் சுருங்கிப்போயின. கொடும்பஞ்சத்தை மட்டுமல்ல உறவிலும் பஞ்சத்தை அறிவிக்கின்றன. காலடி வைக்கட்டுமா என்று இரண்டு வருசமாய்க் கேட்டுக் கொண்டிருக்கிறது பஞ்சம். வீட்டில் காலியாயிருக்கும் தானியக் குலுக்கைகள் பயமுறுத்துகின்றன." (மணல், ப.87) என்று குறிப்பிடுவதன் மூலம் ஆறு வெள்ளமாக ஓடியநிலை மாறி வறண்டு பஞ்சத்தை ஏற்படுத்தும் விதமாக ஆகி விட்டதைப் பற்றிக் கூறுவதாக அமைகிறது.

### வேலிக் கருவையின் தீமை

மண்ணில் நீரை உறிஞ்சிக் கொண்டு வீணாய் மண்ணை வளமிழக்கச் செய்கிறது என்கிற பார்வையைத் தன் புதினத்தில் முதன்முதலாக பதிவு செய்தவர் இவராகத்தான் இருக்க வேண்டும். அரசுகள் மக்களின் நலன் கருதி கொண்டு வரப்படும் சில திட்டங்கள் அவர்களுக்குத் தீமையைத் தரக் கூடியதாகமாறி விடும் அவலம் இந்த சீமைக் கருவேலம் என்று கருத இடம் தருகிறது. சீமைக் கருவேலத்தின் பண்புகளைப் பற்றிக் கூறும் "சீமைக்கருவேல மரங்களின் வேர்கள் நிலத்தினுள் 100 அடிக்குக் கீழ் சென்று நிலத்தடி நீரை உறிஞ்சுகிறது. இதனால் நிலத்தடிநீர் குறைகிறது; காற்றிலுள்ள ஈரப்பதத்தைக்கூட இது விட்டுவைப்பதில்லை; அளவுக்கதிகமான கார்பன்-டை-ஆக்ஸைடை வெளியிட்டு, காற்று மாசுபாட்டை ஏற்படுத்துகிறது; இதன் அருகில் வேறு எந்தச் செடி, கொடி, மரங்களும் வளராது; குருவிகள்கூட இந்த மரத்தில் கூடு கட்டுவதில்லை; கால்நடைகள் இந்த மரங்களின் அருகில்கூட செல்வதில்லை; இத்தகைய சீமைக்கருவேல மரங்களை அழிக்காவிட்டால், தமிழகமே பாலைவனமாக மாறிவிடும்"[4] என்பதற்கிணங்க தன் புதினத்தில் "காங்கிரஸ் காலத்தில் கொண்டுவ்நத நீங்க சொன்ன சீமைக்கருவேலம் சன்ன அநியாயமா பண்ணீருக்கு. நேரே நா பாக்குறேனந். அறுபது அடி ஆழத்துக்கு வேர் போகுது. குழாய் பதிச்சித் தண்ணீர் உறிஞ்சிறோமில்லையா? அது போல சீமைக் கருவை ஆணிவேர் மட்டுமல்ல துணைவேர் சில்லுவேர்களும் அடிவரைப் போய்த் தண்ணி உறிஞ்சிரும். குழாயின் அடியில் பால் போட்டிருப்போமில்லையா, அதிலயும் போய் இந்த வேர்கள் பஞ்சு பஞ்சாய் அடைச்சிக்கிருது. தண்ணீரில் ஊறிய வேர்கள் பஞ்சு பஞ்சாய் அலையும். இந்தப் பஞ்சுகள் குழாயின் நீர் வழியை அடைத்துக் கொள்வது மட்டுமல்ல, நீரைக் குடித்துக் கொண்டே இருக்கும். ஏன் இந்தத் தாவரத்தோட சாதி மட்டும் அப்படி. மேல்நாட்டுச் சாதி இல்லையா அதனால கெடுதலும் ரொம்ப. உண்டான நிலங்களையெல்லாம் வேலிக் கருவைத் திண்ணக் கொடுத்தாச்சு. இப்ப எல்லாத்தையும் தரிசாப் போட்டுட்டுட்டான்" (மணல், ப.66) என்று கருவேல மரங்களினால் விளைந்த தீமைகளைப் பற்றி நிலம் வறண்டு போவதற்குக் காரணமாக இருப்பதைப் பற்றியும் கருவேல மரங்கள் வேறு எந்த பயிரையும் வளர விடாமல் செய்கின்றன என்று குறிப்பிடுகிறார்.

### முடிவுரை

ஆற்றுமணல் சார்ந்தும் இயற்கை வளங்கள் சார்ந்தும் மணல் புதினத்தில் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைக்கும் ஆசிரியர் முதன்மையான ஆறுகள் பாழாவதைக் குறித்த அக்கறை கொண்டவராக அதன் மேல் போர் தொடுப்பதைப் போல சுரண்டலில் ஈடுபடும் மணல் கொள்ளையர்களுக்கு எதிரான சிந்தனையை மக்கள் கொண்டிருக்க

வேண்டும் என்பதை காங்கேயன், மாறன் போன்ற பாத்திரங்கள் மூலம் விளக்குகிறார். வாதிரிகளின் வாழ்வியல் பாதிப்படைவது மணல் திருட்டினால்தான் என்பதையும் அதனால் அவர்கள் பனைத் தொழில் நசிவதையும் குறிப்பிடுகிறார். மண்வளமற்றுப் போவதற்கும் வறட்.சி ஏற்படுவதற்கும் இயற்கை சூழலை சீர்குலைப்பதே காரணம் என்றும் அயல்நாட்டுத் தாவரமான கருவேலம் இழைக்கும் தீமைகளையும் பற்றி எடுத்துரைக்கிறார்.

**அடிக்குறிப்புகள்**

1. ஏ.எம்.றியாஸ் அகமட், சூழலும் சுரண்டலும் ஏகாதி பத்தியமும், புதுப்புனைவு வெளியீட்டகம், மருதமுனை, இலங்கை, 2015. ப.26
2. ச.குணராசா, சூழலியல், கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம், 1997, ப.24
3. சங்கீதா ஸ்ரீராம், பசுமைப்புரட்சியின் கதை, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2012, ப.176
4. https://www.vikatan.com/government-and-politics/seemai-karuvelam-tree-is-dangerous-for-land

# குறுந்தொகை காட்டும் இயற்கை

**முனைவர் வெ. ஜெயந்தி**
உதவிப் பேராசிரியர்
*MMES Women's Arts & Science College, Melvisharam, Ranipet District*

**ஆய்வுச்சுருக்கம்**
சங்க காலத்தில் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறை இயற்கைப் புனைவுடன் குறுந்தொகைப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. சங்க காலத்தில் திணை நிலை சமூகம் நிலைப்பெற்றிருந்தது. காடுகள், மலைகள், கழனிகள், கடற்கரைப் பகுதிகள் மக்கள் வாழ்விடங்களாக இருந்தன. குறுந்தொகையில் திணை நிலை பாடல்கள் அவ்வத்திணையின் இயற்கையோடு பொருந்துமாறு படைப்பாக்கம் செய்யப்பட்டுள்ளன. தமிழரின் இயற்கை ஓவியங்களைப் பாடல் வடிவில் வடித்துத் தந்திருப்பது குறுந்தொகைப் பாடல்களே ஆகும். அதை நாம் இக்கட்டுரையில் காண்போம்.

## முன்னுரை

சங்க இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகைப் பாடல்கள் மனிதன் இயற்கையோடு இணைந்த வாழ்வை அழகாக எடுத்துரைக்கின்றது. எந்த ஒரு பாடலும் இயற்கையை விட்டு விலகி நிற்கவே இல்லை. குறுந்தொகையில் உள்ள மாந்தர்கள் பேசுகின்ற போது அவர்களுடைய பின்னணியை இயக்குவது இயற்கை தான். அவற்றிலும் முதற் பொருளை நிலம் பொழுது எனவும் பின்னணியை விளக்குகின்றபோது கருப்பொருட்களான விலங்குகள், பறவைகள், மரங்கள், செடி, கொடிகள், தொழில், இசை அனைத்தும் அந்த பாடலுக்கு உயிரைத் தருகின்றது. நாம் குறுந்தொகைப் பாடலின் வழி இயற்கையைக் காண்போம்.

## குறிஞ்சி நிலம் சொல்லும் இயற்கை

குறிஞ்சி நிலத்தின் கடவுளாகிய முருகப்பெருமானைப்பற்றி கூறும்போது அவன் செந்நிறம் உடையவன் என்பதை போர்க்களம், அம்பு, யானையின் தந்தம், காந்தள் மலர் அனைத்துமே செந்நிறம் என்று இயற்கையை வைத்து விளக்கும் விதம் சிறப்பானது.

தலைவன் தன் மீது கொண்ட அன்பை தலைவி கூறும் போது நிலம், வான், நீர் ஆகியவற்றை விட மிக உயர்ந்தது என்று இயற்கையைத் தான் எடுத்துக்காட்டுகிறார்.

**நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;**
**நீரினும் ஆர் அளவின்றே – சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே. - தேவகுலத்தார்**

**பக்க எண்: 13 பாடல் எண்: 3**

தோழி தலைவனைச் சந்தித்து தலைவியை மணம் செய்து கொள்ளக் கேட்கும் போது பலா மரங்கள் நிறைந்த மலைப் பக்கத்துக்கு நாடனே என்றும் சிறிய கொம்பில் பெரிய பழம் பழுது தொங்குவது போல தலைவி உன் மீது மிக பெரியதாக அன்பு வைத்துள்ளார் என்பதை இயற்கையை எடுத்துக்காட்டி விளக்குகிறார். அவர்கள்

இயற்கையோடு இணைந்த வாழ்வை நடத்தியதால் இயற்கையைப் படம் பிடித்து காட்டுகின்றனர்.

**வேரல் வேலி வேர்க் கோட் பலவின்**
**சாரல் நாட! செவ்வியை ஆகுமதி!**
**யார் அஃது அறிந்திசினோரே – சாரல்**
**சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு, இவள்**
**உயிர்தவச் சிறிது; காமமோ பெரிதே!**

**- கபிலர்**

**பக்க எண்: 58, பாடல் எண்: 18**

வருடை மானின் குட்டி தன் தாயிடம் பாலைக் குடித்து பெரிய மலையின் அருகில் உள்ள நிழலில் துள்ளி விளையாடும் நாட்டினுடைய தலைவன் என்று தன்னுடைய தலைவனைப் பற்றி தோழியிடம் கூறும் போது அவன் நாட்டில் உள்ள விலங்குகள் கூட நிம்மதியாக வாழ்கிறது. அவன் எப்படி என்னை நினையாமல் இருப்பான் என்று இயற்கையை எடுத்துக்காட்டி தன் நிலையை எடுத்துரைக்கின்றார்.

**செவ் வரைச் சேக்கை வருடைமான் மறி**
**கரை பொழி தீம்பால் ஆர மாந்தி,**
**பெருவரை நீழல் உகளும் நாடன்**
**கல்லினும் வலியன் - தோழி!**
**வலியன் என்னாது மெலியும் என் நெஞ்சே.**

**- கபிலர்**

**பக்க எண்: 431, பாடல் எண்: 187**

தலைவி தோழிக்கு கூறும் போது வேங்கை மரங்கள் பூக்களை உடையதாக இருக்கின்றது. அந்த பூக்கள் காற்று வீசுவதன் மூலமாக உதிருகின்றது. உதிருகின்ற பூக்கள் அருவிகளில் விழுந்து நிலத்தினிடையே ஓடும் போது பாம்பு போல காட்சி அளிக்கின்றது என்று தலைவி தலைவனுடைய நாட்டை நாட்டின் இயற்கையை நம் கண் முன்னே படம் பிடித்து காட்டுகிறார்.

குறிஞ்சி நிலத்தினுடைய இயற்கை காட்சியை தலைவி தலைவனைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் இயற்கை சூழலை விளக்கி தன்னிலையை எடுத்துரைப்பதும் தன்னுடைய உறவாக விலங்குகளையும், மரங்களையும், செடி கொடிகளையும், மலைகளையும், அருவிகளையும் சாட்சியாகக் கொண்டு வாழ்ந்தனர் என்பதை குறுந்தொகைப் பாடல் அழகாக படம் பிடித்து காட்டுகிறது.

**முல்லை நிலம் சொல்லும் இயற்கை**

தலைவி தான் தலைவன் இல்லாமல் வருந்தும் நிலையை தோழியிடம் கூறும் போது கார்காலக் காட்சியைத் தான் விவரித்து கூறுகின்றார். கார்க்கால காட்சியை குறுந்தொகையில் பல்வேறு பாடல்களில் நம்மால் காண முடிகிறது.

**என் எனப் படுங்கொல் – தோழி! மின்னுவர**
**வான் ஏர்பு இறங்கும் ஒன்றோ! அதன் எதிர்**
**காண மஞ்ஞை கடிய ஏங்கும்;**
**ஏதில கலந்த இரண்டற்கு என்**
**பேதை நெஞ்சம் பெருமலக் குறுமே?.**

**- கோவர்த்தனார்**

**பக்க எண்: 448, பாடல் எண்: 194**

கார்ப் பருவத்தில் மயில் தன் தோகையை விரித்து ஆடுகிறது. இந்த கார்ப் பருவத்தில் வருவேன் என்று கூறிய தலைவன் வரவில்லை என்று தலைவி வருந்துகின்றாள். கார்ப் பருவத்தின் வருகையில் கொன்றை மரம் மகளிர் கூந்தலைப் போல் தோன்றுகிறது.

கானம் முழுவதும் கொன்றை மலர்ந்து கார்ப்பருவமும் தலைவனுக்குத் தெரியும் என்று தலைவி தோழியிடம் கூறுவதாக ஓதலாந்தையார் எடுத்துரைக்கின்றார்.

**கருங்கால் வேம்பின் ஒண் பூ யாணர்**
**என்னை இன்றியும் கழிவது கொல்லோ?**
**ஆற்றுஅயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து**
**எழு குளிறு மிதித்த ஒரு பழம் போலக்**
**குழைய, கொடியோர் நாவே,**
**காதலர் அகல கல்லென்றவ்வே.**

**- பரணர்**

**பக்க எண்: 72, பாடல் எண்: 24**

மேலுள்ள பாடலில் வேப்பம்பூ பூக்கும் இளவேனில் பருவம் தலைவன் வினை முடிந்து வருவதாக கூறிச் சென்ற பருவம் ஆகும். பாண்டியரும், அவர் படையும் சூடும் சிறப்பால் ஒண்பூ எனப்பட்டது. இதில் கூட தலைவி இயற்கையை பார்த்து தான் தலைவன் வரவை கூட அறிகிறாள். அந்த அளவுக்கு இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை நடத்தி இருக்கின்றனர்.

அடுத்து தலைவி கன்றுகளைப் பார்க்கிறாள். கன்றுகள் மன்றினை நோக்கி ஓடி வருகின்றன. இதனை பார்த்தவுடன் தலைவனும் இவ்வாறு தம் இல்லத்திற்கு வரமாட்டானா என்று இயற்கையின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் தன்னையும், தலைவனையும் தன்னைச் சார்ந்தவர்களையும் ஒப்பிட்டு பார்க்கும் திறன் சிறப்பானது.

## மருத நிலம் சொல்லும் இயற்கை

வயல் அருகிலுள்ள மா மரத்தின் முற்றிய இனிய பழத்தை பொய்கையில் உள்ள வாளை மீன்கள் கவ்வி உண்பதற்கு இடமாகிய மருத நிலத் தலைவன் என்று தன்னுடைய மருத நிலத்தினுடைய சிறப்பு கூறப்படுகிறது.

**கழனி மாஅத்து விளைந்துஉகு தீம்பழம்**
**பழன வாளை கதூஉம் ஊரன்**
**எம்இல் பெருமொழி கூறி, தம் இல்,**
**கையும் காலும் தூக்கத் தூக்கும்**
**ஆடிப் பாவை போல,**
**மேவன செய்யும், தன்புதல்வன் தாய்க்கே.**

**- ஆலங்குடி வங்கனார்**

**பக்க எண்: 28, பாடல் எண்: 8**

தலைவனைப் பற்றி கூறும்போது இயற்கை பின்னணியோடு கூறுவது தான் இப்பாடலின் சிறப்பு.

பச்சைப்பாம்பின் முட்டைகளின் முதிர்ச்சியை போன்ற திரண்ட கரும்பினது குவிந்த அரும்புகள் மலரும்படி நுண்ணிய மழைப் பொழிந்து பின்னர் சிறு சிறு துளியாக பெய்கின்ற குளிர்ச்சியாக வீசும் வாடைக் காற்றினுடைய கூதிர் காலத்திலும் தலைவன் வராததால் வருந்தும் தலைவியின் கண்கள் தலைவன் வரவை எதிர்பார்க்கும் என்று மருத நிலத்தினுடைய சிறப்பு இங்கு வர்ணிக்கப்படுகிறது.

**வேம்பின் பைங்காய் என்தோழி தரினே**
**'தேம் பூங் கட்டி' என்றனிர்; இனியே,**
**பாரிபறம்பில் பனிச் சுனைத் தெண்ணீர்**
**தை இத் திங்கள் தண்ணிய தரினும்**
**'வெய்ய உவர்க்கும்' என்றனிர்**
**ஐய! – அற்றால் அன்பின் பாலே.**

**- மிளைக் கந்தன்**

**பக்க எண்: 452, பாடல் எண்: 196**

தலைவன் தன்னிடம் கொண்ட அன்பு குறைந்துவிட்டது என்பதை கூட தலைவி கூறும்போது பாரி வள்ளலுடைய பரம்பு மலையில் இருக்கின்ற குளிர்ச்சியான

சுனையில் உள்ள தெளிந்த நீரைத் தந்தாலும் வெம்மையாக இருக்கும் என்று தலைவன் கூறியதாக கூறும்போது கூட இயற்கையில் உள்ள சுனை நீரைக் காட்டித்தான் விளக்குகின்றார்.

குறுந்தொகைப் பாடல்கள் மருத நிலக் காட்சிகளையும் தலைவன், தலைவி, தோழியின் கூற்றின் வழியாக இயற்கையை நமக்கு நம் கண்முன்னே நிறுத்துகின்றனர்.

**நெய்தல் நிலம் சொல்லும் இயற்கை**

தோழி தலைமகனுடைய சிறப்புகளைக் கூறும் போது நெய்தல் நிலக் காட்சிகளை நம் கண் முன்னே விரித்துக் காட்டுகிறார்.

**மாக் கழி மணிப்பூக் கூம்ப, தூத்திரைப்**
**பொங்கு பிதிர்த் துவலையொடு மங்குல் தைஇ,**
**கையறவந்த தைவரல் ஊதையொடு**
**இன்னா உறையுட்டு ஆகும்**
**சில்நாட்டு அம்ம – இச்சிறுநல் ஊரே.**

**- நெய்தல்கார்க்கியார்**

**பக்க எண்: 143, பாடல் எண்: 55**

பெரிய உப்பங்கழிகளில் உள்ள நீல மணி போன்ற நிறத்தை உடைய நெய்தல் மலர்கள் கூம்பவும், தூய அலைகள் உடைந்து சிதறும் நீர்த்திவளைகளோடு மேகங்கள் வீசவும் தலைவனைப் பிரிந்தாருக்கு செயல் அறவினை தோற்று விக்கும் அவர்கள் உடல் முழுவதும் தழுவும் வாடைக் காற்றோடு உள்ளத்திற்கு இன்னாமை தருகின்ற இச்சிறிய நல்ல ஊரில் உயிரோடு கூடி வாழும் வாழ்க்கை சில நாட்களே ஆகும் என்று தன் நிலையை எடுத்துரைக்கின்றார்.

நீரில் வாழ்கின்ற 'அன்றில்' பறவைகள் போல ஓர் உயிர் இரண்டு உடல்களுடன் வாழ்வது போல நாங்கள் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்று தலைவி தோழிக்கு கூறுகின்றார்.

**ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து**
**அளியதாமே – கொடுஞ்சிறைப் பறவை,**
**இறைஉற ஓங்கிய நெறிஅயல் மராஅத்த**
**பிள்ளை உள்வாய்ச் செரீஇய**
**இறை கொண்டமையின் விரையுமால் செலவே.**

**- தாமோதரன்**

**பக்க எண்: 227, பாடல் எண்: 92**

இப்பாடலில் தலைவி தலைவனுடன் தான் வாழப்போகும் இல்வாழ்க்கையை இயற்கை நிகழ்வு மூலம் எடுத்துரைப்பதை நம்மால் காண முடிகிறது.

கதிரவன் மறைந்தது, ஆகாயத்தில் வளைந்த சிறகுகள் உடைய பறவைகள் தான் தங்குவதற்கு ஏற்ற இடமாகிய கடம்ப மரத்தில் அமைக்கப்பட்டு இருக்கின்ற கூட்டினில் இருக்கும் தன குஞ்சுகளின் வாயின் உட்பகுதியில் இரையை தன் அலகினால் ஊட்டுகின்றன. இந்த இயற்கை காட்சி நெய்தல் நிலத்தின் வர்ணனையை நம் கண் முன்னே காட்டுகிறது.

**பாலை நிலம் காட்டும் இயற்கை**

தலைவனுடன் தலைவி உடன்போக்கின் செல்லும் போது இடை சுரத்தின் கண் கண்டோர் வருந்தி கூறுவதாக அமையும் பாடல்

**வில்லோன் காலன கழலே; தொடியோள்**
**மெல்லடி மேலவும் சிலம்பே; நல்லோர்**

**யார் கொல்? அளியர் தாமே – ஆரியர்**
**கயிறு ஆடு பறையின் கால்பொரக் கலங்கி,**
**வாகை வெண்நெற்று ஒலிக்கும்**
**வேய்பயில் அழுவம் முன்னியோரே.**

**- பெரும்பதுமனார்**

**பக்க எண்: 25, பாடல் எண்: 7**

மூங்கிலின் மேல் கட்டிய கயிற்றின் மேல் ஏறி நின்று ஆடும் போது அடிக்கப்படும் பறை ஒலியைப் போல மேல் காற்று வீசும் போது வாகை மரத்தின் வெண்ணிற நெற்றுகள் ஒழி எழுப்பும். அத்தகைய மூங்கில் நிறைந்த பாலை நிலப்பரப்பு என்று பாலை நிலமானது வர்ணிக்கப்படுகின்றது.

வளைந்த வில்லினை ஏந்திய வேட்டுவர் பாறை மேல் ஏறி தங்கள் அம்புகளைத் தேய்த்து கூர்மையாக்குவர். இத்தகைய பாலை நிலம் என்று பாலை நிலத்தைப் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது.

**அம்மவாழி, தோழி ! யாவதும்**
**தவறு எனின் தவறோ இலவே – வெஞ்சுரத்து**
**உலந்த வம்பலர் உவல்இடு பதுக்கை**
**நெடுநல் யானைக்கு இடுநிழல் ஆகும்**
**அரிய கானம் சென்றோர்க்கு**
**எளிய ஆகிய தடமென் தோளே.**

**- மதுரை மருதன் இளநாகனார்**

**பக்க எண்: 190, பாடல் எண்: 77**

தலைவன் பிரிந்து சென்றதால் தலைவி வருந்தி தோழிக்கு சொல்லும் போது தலைவன் செல்லுகின்ற பாலை நிலத்தில் நிழல்களே கிடையாது என்றும் அப்படியே இருந்தும் கொடிய யானைகள் தன் துணையுடன் தங்கும் என்றும் தலைவி பாலை நிலக் காட்சியை நம் கண் முன்னே விரிக்கின்றார்.

பாலை நிலத்தில் உணவும், நீரும் இல்லாததால் வருந்துகின்ற யானைகள் ஓமை மரத்தின் பட்டைகளை உரித்துத் திண்கின்றன. ஆண் புறாக்கள் பெண் புறாவை அழைக்கும். இது தலைவனுக்கு தலைவியின் நினைவை ஊட்டும் என்று பொருளுக்காகப் பிரிந்த தலைவனை நினைத்து தலைவி கூறியது.

## முடிவுரை

குறுந்தொகைப் பாடல்கள் அக்கால மாந்தரின் இயற்கையோடு இணைந்த வாழ்வு விளக்கப்பட்டுள்ளது. மனிதர்களைப் போல பிற உயிர்களுக்கும் வாழ இந்த உலகில் உரிமை உண்டு என்னும் அறிவியல் உண்மையை உள் வாங்கிக்கொண்டு அதற்கும் மேலாக மரங்களைத் தோழர்களாகவும் பறவைகளை உறவினராகவும் தாவரங்களைத் தன் உடன்பிறந்தவர்களாகவும் விலங்குகளைத் தன் நண்பர்களாகவும் ஒப்பு நோக்கிய தன்மையை உயிரற்ற பொருட்களையும், உயிருள்ள பொருட்களாக உணர்ச்சிகள் வழங்கியமையை குறுந்தொகைப் பாடல்கள் இயற்கையைப் போற்றும் பாடல்களாக திகழ்கின்றன.

## துணைநூற் பட்டியல்

1. சங்க இலக்கியம் குறுந்தொகை – 1: முனைவர் வி நாகராசன் முதற்பதிப்பு: ஏப்ரல் 2004: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் 41 – பி, சிட்கோ, அம்பத்தூர், சென்னை – 600098

# வள்ளுவம் பேசும் உழவும் வேளாண்மையும்

**முனைவர் சி. சிலுவை சாந்தா பிரின்ஸி**
*துறைத்தலைவர் & உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை*
*மரியா கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி*
*வள்ளியூர், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா*

## முன்னுரை

உலக மொழிகளில் முதன்மையாக மொழி தமிழ் மொழியாகும். தமிழ்மொழி மிகத் தொன்மையான மொழி என்பர். இத்தொன்மையான மொழி இலக்கணம், இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு சிறப்புடன் பெற்றுள்ளது. இவற்றுள் பல்வேறு அறிஞர்கள் பன்முக நோக்கில் ஆராயப்படும் திருக்குறளும் ஒன்றாகும். மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று உணவு. உணவிற்கு அடிப்படையானது உழவுத்தொழில். உலகில் உள்ள உயிரினங்களில் மிகவும் இன்றியமையாதது மனிதப் படைப்பாகும். இம்மனிதன் உயிர் வாழ்வதற்கு அடிப்படைத் தேவையாக அமைவது உணவு, உடை, உறைவிடம் ஆகும். இவற்றில் உணவே முதன்மையானது. இவ்வுணவு தான் மனிதனுக்குத் தேவையான அனைத்து வகையான ஊட்டச்சத்துக்களையும், ஆற்றல்களையும் வழங்கி நோயின்றி வாழ வழிவகுக்கின்றது. இந்த உணவை உற்பத்தி செய்வதில் இன்றியமையாததாகத் திகழ்வது வேளாண்மைத் தொழிலாகும். இவ்வேளாண்மைத் தொழிலின் தோற்றம், இன்றியமையாமை, திருக்குறளில் இடம்பெற்றுள்ள இயற்கை வேளாண்மைச் செய்திகள் மற்றும் உழவு குறித்த செய்திகள் பற்றிக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வேளாண்மைத் தோற்றம்

நாம் எந்த ஒரு துறையின் தோற்றத்தைப் பற்றித் தெளிவுற அறிய வேண்டின் அத்துறையின் வரலாற்றுப் பின்புலம் இன்றியமையாததாகின்றது. இதனடிப்படையில் வேளாண்மையின் தோற்றத்தைப் பழைய கற்காலம், புதிய கற்காலம் என்னும் வரலாற்றுப் பின்புலத்தில் பின்வருமாறு காண்போம்.

மனிதன் ஆரம்பக் காலக்கட்டத்தில் இயற்கையில் கிடைத்த காய்கள், கனிகள், கிழங்குகள், மிருகங்கள் போன்றவற்றை உணவாக உண்டு நாடோடியாக வாழ்ந்து வந்தான். இதன்பின் சிக்கிமுக்கிக் கற்களை உரசி நெருப்பைக் கண்டுபிடித்து காய்கள், கிழங்குகள் மற்றும் வேட்டையாடும் விலங்குகள் போன்றவற்றைச் சமைத்துண்டான். பின் ஆண், பெண் வேறுபாட்டை அறிந்து இலைகள், மரப்பட்டைகள், விலங்குகளின் தோல் போன்றவற்றால் தனது உடலைப் பாதுகாத்துக் கொண்டான். இவ்வாறு வாழ்ந்தக் காலமே வரலாற்றில் பழைய கற்காலம் அல்லது பேலியோலிதிக் காலம் (Palaeolithic Age) ஆகும். இலைகள், மரப்பட்டைகள், விலங்குகளின் தோல் போன்றவற்றால் தனது உடலைப் பாதுகாத்துக் கொண்ட மனிதன் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டான். நிலையான வாழ்க்கையை மேற்கொண்ட தன் விளைவாகத் தனக்குத் தேவையான உணவுகளைத் தானே உற்பத்தி செய்து கொண்டான். இவ்வாறு உற்பத்தி செய்ததின் தொடக்கமே வேளாண்மையின் தோற்றம் ஆகும். மனிதன் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டு உணவுப் பொருட்களை உற்பத்தி செய்த காலமே வரலாற்றில் புதிய கற்காலம் அல்லது நியோலிதிக் காலம் (Neolithic Age) ஆகும். இவற்றைப் ‘‘பழைய கற்காலத்தில் மனிதன் உணவைத்தேடி நாடோடியாக அலைந்தான். பழங்கள், காய்கள், கிழங்குகள் மற்றும் கொட்டைகளைச் சேகரித்து உண்டான். பின் மிருகங்களை

வேட்டையாடினான். சிக்கி முக்கிக் கற்களை உரசி நெருப்பைக் கண்டு பிடித்தான். இலைகளாலும், மரப்பட்டைகளாலும், மிருகங்களின் தோலினாலும் தன் உடலைப் பாதுகாத்துக் கொண்டான். புதிய கற்காலத்தில் மனிதன் வேளாண்மையில் ஈடுபட ஆரம்பித்தான்''1 என்பதின் மூலம் தெளியலாம்.

இந்தப் பழைய, புதிய கற்காலத்தை வரலாற்று ஆசிரியர்கள் வரலாற்றுக்கு முந்திய காலம் என்பர். வரலாற்றுக்கு முந்திய காலம் என்பது கி.மு.4000 முதல் கி.மு.3500 வரையிலான காலம் ஆகும். ஆகவே, வேளாண்மை தோற்றம் பெற்றது வரலாற்றுக்கும் முந்திய காலம் அல்லது கற்காலம் என்பதனை நாம் ஐயமுறத் தெளியலாம்.

**வேளாண்மையின் இன்றியமையாமை**

வரலாற்றுக்கும் முந்திய காலத்தில் தோற்றம் பெற்ற வேளாண்மையே ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாதக் காரணமாகும். நாம் ஒரு நாட்டின் இயற்கை வளங்களைச் சரியாகவும், சிறப்பாகவும் பயன்படுத்துவதன் மூலமே தனிமனித வருமானத்தையும், நாட்டின் பொருளாதாரத்தையும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்ல முடியும். இவ்வியற்கை வளங்களை நாம் அதிகம் பயன்படுத்திசெய்யும் தொழிலே வேளாண்மைத் தொழிலாகும். இவ்வேளாண்மைத் தொழிலே நாட்டின் இன்றியமையாதத் தொழிலாகக் கருதப்படுகிறது. ஏனெனில், சுழன்று கொண்டிருக்கும் இவ்வறிவியல் யுகத்தில் எத்தனையோ தொழில்களும் துறைகளும் உருப்பெற்றாலும் அனைத்து மக்களுக்கும் பசியின்றி உணவளிப்பது வேளாண்மைத் துறையேயாகும். இதனையே வள்ளுவர்,

**"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை"**

**(குறள்.1031)**

என்கிறார். இவ்வேளாண்மை செய்யும் உழவர்களே புறத்தொழில் செய்து பசியாறும் அனைவருக்கும் முதன்மையானவர், அச்சாணிப் போன்றவர். இவற்றை வள்ளுவர்,

**"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅ∴து ஆற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து"**

**(குறள்.1032)**

என்னும் குறள் மூலம் கூறுகிறார்.

இந்தியநாட்டின் மொத்த மக்கள் தொகை 130 கோடியாகிவிட்ட இந்த நிலையிலும் 60 விழுக்காடு மக்களுக்கு வேலை வழங்கும் துறை வேளாண்மைத் துறையாகும். நாட்டில் நிலவும் பசி, பட்டினி, பஞ்சம், வறுமை போன்றவற்றை வேளாண்மை மூலமே போக்க முடியும். **"1990-இல் ரஷ்யாவில் கடும் உணவுப் பஞ்சமும், சட்ட ஒழுங்கு சீர்குலைவும் நேரிட்டன. இதற்கு முக்கியக்காரணம் அங்கு நிழவிய விவசாய வீழ்ச்சியேயாகும்."**2 ஆகவே ஒரு நாட்டில் பஞ்சம், பசி, பட்டினி, வறுமை போன்றவை ஒழிந்து, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வேளாண்மையே இன்றியமையாததாய் காணப்படுகின்றது.

**உழவர்**

உலகிலேயே மிகச் சிறந்ததாக மரம் கருதப்படுகிறது அறத்தை முதன்மையாக வைத்து அவ்வையார் ஆத்திசூடி அறம் செய்ய விரும்பு என்ற பாடல் வரிகள் மூலம் மனிதனின் அரசியலை செய்ய விரும்ப வேண்டும் என்று கூறியுள்ளனர். இதனை.

**"கணவாய் இரப்பார்க்கொன்று அவர் கரவாதும்**
**கைசெய்தூண் மாலை யவர்"**

என்ற குறட்பா மூலம் உழவுத் தொழில் செய்யும் உழவர்கள் தம் கையால் உழுது அதன் மூலம் கிடைக்கும் உணவுப் பொருட்களை மற்றவர்களுக்கு உதவுவார்கள். மற்றவர்களிடமிருந்து பொருள் எதுவும் கேட்கவா கேட்டு வாங்க மாட்டார்கள். அவர்கள் தங்களுடைய தொழிலை நேர்மையாகவும் அறத்தோடு உழைப்பார்கள். இவர்கள் தாமாகவே உணவை உற்பத்தி செய்வதால் யாரிடமும் கையேந்தி நிலை ஏற்படாது என நம்பிக்கையாக இருப்பார்கள்.

**உழுவும் பயிரின் செழிப்பும்**

உழவு என்பது மாட்டின் மீது கலப்பையை வைத்து மண்ணை ஒரே சீராக தோண்டிவிட வேண்டும். பயிர் வளர்வதற்கு உரத்தை பயன்படுத்துவார்கள். உரம் என்பது ஆடு, மாடு கழிவுகள் மற்றும் பின் இலைகள், செடிகள், தட்டைகள் போன்றவற்றை அடிப்படையாக நிலத்தின் மீது போட்டு உழுவுவர்கள். பின் சில நாட்களுக்கு காய விட வேண்டும் அப்படியே காய விட்டு நிலத்தில் விளையும் பயிர்கள் செழித்து வளரும் என்பதை,

> **"தொடிப்புழுதி க.்.சா உரத்தின் பிடிதோரும்**
> **வேண்டாது சாலச் படும்"**

என்று குறட்பா மூலம் அறியப்படுகிறது.

**விதையும் வளர்ச்சி நிலையும்**

உழவுத் தொழிலில் அதிக விளைச்சலை அடைவதற்கு விதை முக்கிய காரணமாகும். விதை தரமானதாக இருந்தால் மட்டுமே பயிர்கள் நன்கு விளையும். அதுபோல பருவ காலத்தில் விதைத்தால் மட்டுமே பயிர்கள் செழிப்பாக வளர்ச்சி அடையும் **'பருவத்தே பயிர் செய்', 'ஆடிப்பட்டம் தேடி விதை'** என்ற பழமொழிக்கு ஏற்ற வாறு புலவர்களும் இயற்கை சூழலோடு வாழ்கின்றனர் இதனை வள்ளுவர்,

> **"பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்**
> **தீராமை ஆர்க்கும் கயிறு"**

என்ற குறட்பா மூலம் அறிய முடிகிறது. காலத்திற்கு ஏற்றவாறு விதைப்பதால் செல்லும் அதிகரிக்கும் என்றும கூறுகின்றன.

**உழவின் சிறப்பு**

உழவுத் தொழிலில் இருக்கும் ஒவ்வொரு வேலையும் மிகக் கடினமாக இருக்கும். வேளாண்மைத் தொழிலில் உழவர்கள் கடுமையான மழையாக இருந்தாலும், வெப்பமாக இருந்தாலும் அதனை எதிர்கொண்டு கடுமையாக உழைப்பார்கள் உள்ளவர்கள். உடல் வலியை போக்குவதற்கு நாட்டுப்புறப் பாடல்களைப் பாடி தான் தன் உடல் வலியைப் போக்கிக் கொள்வார்கள். உழவுத் தொழிலில் உள்ளவர்களுக்கு கடினமாக இருந்தாலும் உழவுத் தொழிலே முதன்மையாக வைத்து சிறப்பிப்பர். இதனை,

> **"சுழன்றும் ஏர் பின்னது உலகம் அதனால்**
> **உழந்தும் உழவே தலை"**

**உழுவும் நாட்டு வளர்ச்சியும்**

உழவர்களின் உற்பத்தியால் மட்டுமே நாடு நல்லதொரு வளர்ச்சியை அடைய முடியும் என்பர். உணவு, வாழ்க்கைக்கு தேவையான அடிப்படை ஆகும். உணவு உற்பத்தி செய்யவில்லை என்றால் நாட்டின் வளர்ச்சி குன்றிவிடும். உணவு உற்பத்தி பெருகினால் சிறப்பான உழவர் பெருமக்களை கொண்ட நாடு பல சிறப்பு ஆளுகையின் கீழ் உள்ள நாடுகளிலும் தம்முடைய மன்னரின் ஆட்சியின் கீழ் காண்பார் என்பதை வள்ளுவர்,

> **"பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்**
> **அலகுடை நீழ லவர்"**

என்ற குறட்பா மூலம் அறிய முடிகிறது.

**உழவின் மகிமை**

உழவுத்தொழில் புரியும் உழுவர்கள் தன்னுடைய தொழிலை விட்டு விட்டால் நாடும் மனிதர்களும் மிகப்பெரிய வேதனையும் இழப்பையும் எதிர்கொள்வார்கள். உழவுத் தொழில் செய்யாமல் இருப்பதால் பந்த பாசங்களையும் எல்லாம் விட்டுவிட்டு வாழ்கின்ற துறவிகளுக்கு கூட இல்லாமல் போய்விடும் என்பதை,

> **"உழவினர் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்**
> **விட்டேன் என பார்க்கும் நிலை"**

என்ற குறட்பாவின் மூலம் அறியமுடிகிறது. தொழிலில் மிக சிறப்பான தொழில் உழவு தொழில் ஆகும். உழவுத் தொழிலல் செய்யவில்லை என்றால் மிகவும் துன்பம் நேரிடலாம். உழவுத் தொழிலே மகிமையான தொழிலாகும்.

**நிலம் கவனிக்கப்படாததால் வரும் விளைவு**

உழவர்கள் நிலத்தைக் கவனிக்காவிட்டாலும் பராமரிக்காவிட்டாலும் அந்நிலத்தின் பயிர்கள் விளையாது. கவனிக்கப்படாத மனைவி போல அவனை வெறுத்து கோபம் கொள்ளும் அவனது அதாவது பயிறு விளையாது. இதனை,

> **"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து**
> **இல்லாளின் ஊடி விடும்"**

என்ற குறட்பா மூலம் நிலத்தை கவனிக்கப்படாமல் விட்டால் ஏற்படும் செய்தியினை பற்றி அறிய முடிகிறது.

**திருக்குறளில் இயற்கை வேளாண்மை**

நாட்டின் வளர்ச்சியில் இன்றியமையாமையாகக் கருதப்படும் வேளாண்மையை இரண்டாகப் பகுக்கலாம். அவை, 1. இயற்கை வேளாண்மை, 2. வேதி வேளாண்மை ஆகியனவாகும். இவற்றில் இயற்கை வேளாண்மை என்பது இயற்கையில் கிடைக்கக்கூடியவற்றை வைத்து மண்வளம், மனிதவளம் மற்றும் சுற்றுச்சூழல் போன்றவைகளுக்கு எவ்வித பாதிப்பும் இன்றி இயற்கை உரங்களைப் பயன்படுத்தி வேளாண்மை செய்தலாகும். வேதி வேளாண்மை என்பது அதிக விளைச்சலுக்காக மண்வளம், மனிதவளம் மற்றும் சுற்றுச்சூழல் போன்றவற்றைக் கருத்தில் கொள்ளாது இவற்றிற்கு ஊறுவிளைவிக்கும் வேதி உரங்களைப் பயன்படுத்தி வேளாண்மை செய்தலாகும்.

வேளாண்மையில் பயன்படுத்தப்படும் இயற்கை உரமே வேளாண்மை உற்பத்திக்கு அடிப்படையானது. உயிரிய உரங்கள், பசுந்தாள் உரங்கள், இயற்கைக் கழிவுகள், மக்கியக் குப்பைகள், மக்கிப்போன இலைதழைகள், கதிர் அறுக்கப்பட்ட தானியங்களின் எச்சங்கள், பிராணிகள், பறவைகளின் எலும்புகள், வைக்கோல், கொளிஞ்சிச்செடி, எருக்கு முதலானவைகள் இயற்கை உரங்களாகும். இவைகளே மண்வளம், மனிதவளம் மற்றும் சுற்றுச்சூழல் போன்றவைகளுக்கு ஊறு விளைவிக்காத உரங்களாகும். இவ்வியற்கை வேளாண்மைப் பற்றி திருவள்ளுவர்,

> **"தொடிப்புழுதி க.்.சா உணக்கின் பிடித்துஎருவும்**
> **வேண்டாது சாலப் படும்"**

**(குறள்.1037)**

என்று கூறுகிறார்.

உழவனானவன், **"ஒரு பலம் புழுதி கால் பலம் ஆகும்படி தன் நிலத்தை உழுது காயவிட்டால் அதில் ஒருபிடி எருவும் இட வேண்டாமல் அந்நிலத்தில் பயிர் செழித்து விளையும்"**3 என்பதாம். இதில் **'எரு'** என்பது **"பயிர்களுக்கு ஊட்டச்சத்து அளிக்கும் சாணம், மக்கியத் தாவரக்கழிவு போன்ற இயற்கை உரம்"**4 ஆகும். மேற்கண்ட உயிரிய உரங்கள் முதல் எருக்கு வரையிலான இயற்கை உரங்களைத் திருவள்ளுவர் 2046 ஆண்டுகளுக்கு முன்னமே 'எரு' என்ற சொல்லின் மூலம் சுட்டிச் சென்றமை அவரின் ஆழ்ந்தப் புலமையை விளக்குகிறது. ஆகவே, ஒரு உழவன் தன் நிலத்தில் (இயற்கை) உரம் இடாமலேயே நன்கு உழுது பக்குவப்படுத்தினால் அந்நிலத்தில் நல்ல விளைச்சல் உண்டாகும் என்பது தெளிவாகின்றது. மேலும்,

> **"ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்**
> **நீரினும் நன்றுஅதன் காப்பு"**

**(குறள்.1038)**

என்ற குறளில், வேளாண்மை செய்யும் முறையினையும் சுட்டுகிறார். உழவன் தன் நிலத்தை நன்கு ஏர் விட்டு உழுது, பின் எரு இடுதல் வேண்டும். இந்த இரண்டும் செய்தபின் களை நீக்கல் வேண்டும். களை நீக்கியப் பிறகு நீர்ப்பாய்ச்சுதலைவிட அதனைக் காவல் காக்க வேண்டும் என்று இயற்கை வேளாண்மை செய்யும் முறையைத் திருவள்ளுவர் விளக்குகிறார். இருபது ஆண்டுகளுக்கு முன்பு வரை நம் சொந்த நிலங்களில் நாம் இவ்வியற்கை முறையிலேயே வேளாண்மை செய்தமை குறிப்பிடத்தக்கது.

### முடிவுரை

ஒரு நாட்டின் **'முதுகெலும்பு'** எனக் கருதப்படும் வேளாண்மை, வரலாற்றுக்கும் முந்திய காலத்தில் தோற்றம் பெற்று, நாட்டின் வளர்ச்சியில் இன்றியமையாத பங்கினை வகிக்கின்றது. இவ்வியற்கை வேளாண்மை மக்கள், அஃறிணைகள் மற்றும் சுற்றுச் சூழலிற்குச் சிறந்ததென்பதையும், இவ்வேளாண்மை திருக்குறளில் மேற்கண்டவாறு இடம்பெற்றுள்ளமையையும் இக்கட்டுரை விளக்கி நிற்கின்றது மேலும், யற்கை அளிக்கக்கூடிய கோடையை பயன்படுத்தி இயற்கையோடு இணைந்து செயல்படுவது வேளாண்மை. வேளாண்மை செய்யக்கூடியவர்கள் கடுமையான உழைப்பு மனஉறுதியோடு வேளாண்மை மேற்கொள்வர். உழவர்கள் தன்னம்பிக்கையோடு தங்களுடைய உழைப்பு நல்லவர்கள். பல்வேறு சூழல்களில் பல்வேறு மாற்றங்களையும் கொண்டு சமுதாயத்தை மேம்பாடு அடையச் செய்வதில் முதன்மையானவர்கள். இவர்களில் திறமையால் தன் நாடு அடையும் வளர்ச்சியும், வீழ்ச்சியும் அடங்கியுள்ளதைத் திருவள்ளுவர் தம் குறளில் கூறியுள்ளதை இக்கட்டுரை எடுத்தியம்பியுள்ளது.

### அடிக்குறிப்புகள்

1. பாடநூல் - 9-ஆம் வகுப்பு சமூக அறிவியல் (2005), ப.3.
2. இணையம் - விக்கிப்பீடியா, வேளாண்மை, ப.4.
3. மு.வரதராசனார் - திருக்குறள் தெளிவுரை, ப.210.
4. ….. - கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.254.

# சங்க இலக்கியத்தில் சூழலியல்

**திருமதி. கு. சசிகலா**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*மரியா கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி*
*வள்ளியூர், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா*

***ஆய்வுச்சுருக்கம்***
*சமூகமாகக் கூடி வாழ்கின்ற நிலையில், பன்னெடுங்காலமாக மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் தொடர்ந்து பின்பற்றிய ஒழுங்குகள் அல்லது நெறிகளை விழுமியம் என வரையறுக்கலாம். தனிமனித உறவு, குடும்பம், சமூகம், சூழல் எனப் பல்வேறு நிலைகளில் காலந்தோறும் தொடர்ந்து உருவாக்கப்படும் விழுமியங்கள், பூமியில் மனிதர்கள் இயங்கிட வேண்டிய நெறிமுறைகளை வலியுறுத்துகின்றன. குறிப்பாகச் சூழல் குறித்த விழுமியங்கள், அடிப்படையில் மனிதர்கள் இயற்கையின் அங்கம் என்ற கருத்தியலை முன்வைக்கின்றன.*

## முன்னுரை

இன்றைய காலகட்டத்தில் மனிதர்களிடம் காண்கின்ற சுற்றுச்சூழல் பற்றிய சிந்தனைகள் பழந்தமிழரிடத்தும் இருந்துள்ளமைப் பற்றி இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. சங்க இலக்கியத்தில் சூழ் என்ற வினை சூழ்ந்திருத்தல், படர்தல், ஆராய்தல், கருதுதல், ஆலோசித்தல் என்று ஒரு சொல் பல பொருளாகப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மனித வாழ்வு பிறரையும், பிற பொருள்களையும் சூழ்ந்த வாழ்வாக அமைந்துள்ளது. சூழ்தல் என்பது மனிதன் சுற்றியுள்ள பகுதிகளைக் குறிப்பதாகும். பழந்தமிழர்கள் காடுகளை அழித்து நாடாக்கி வாழ்வது நாகரிகமாகக் கருதப்பட்டது. அதன் சமன் நிலையை குளம் போன்று உருவாக்கி பேணிப் பாதுகாத்துள்ளனர். ஐம்பூதங்களின் அவசியத்தை, **‘மண் திணிந்த நிலனும் நிலம் ஏந்திய விசும்பும் விசும்பு தைவரு வளியும் வளித்தலை இய தீயும் தீ முரணிய நீரும் என்றாங்கு ஐம்பெரும் பூதத்து இயற்கை போல’** என்ற புறநானூற்றுப் பாடல் மானிடத்தின் தேவைக்குப் பயன்பட வேண்டும் என்கிறது. பழந்தமிழ் இலக்கியங்களில் சூழலியல் சார்ந்த சிந்தனை இருந்தமை அறியமுடிகிறது.

## பண்டைத் தமிழரும் சுற்றுச்சூழலும்

பண்டைத் தமிழர், இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்ததை அவதானிக்க இயலும். கடவுளையும் இயற்கையாகக் கருதிய தமிழர், இயற்கையைச் சூழல் என அறிந்திருந்தனர். இயற்கையில் இருந்து பிரித்து அறிந்திட இயலாதவாறு, சங்கப் பாடல்கள், இயற்கைப் பின்புலத்தில் தோய்ந்து எழுதப்பட்டுள்ளன. சூழலைப் போற்றுவதன் மூலம் தங்களுடைய இருப்பினை அறிந்திட முயன்றது, சங்ககாலத் தமிழரின் தனித்துவம். சுற்றுச்சூழல் பற்றிய பல்வேறு விழுமியங்கள் இயற்கையை முன்வைத்துச் சங்கப் பாடல்களில் வெளிப்பட்டுள்ளன. அவை பண்டைத் தமிழர் வாழ்க்கை பற்றிய பல்வேறு போக்குகளைப் பதிவாக்கியுள்ளன. இன்று தமிழகத்து நிலவெளியானது, கார்ப்பரேட்டுகளின் வேட்டைக்களமாகியுள்ள சூழலில், நுகர்பொருள் பண்பாட்டில் எல்லாம் சந்தைக்கானதாக மாறியுள்ளது.

வளமான குறிஞ்சி நிலம் அழிக்கப்பட்டு, வணிகப் பயிர்கள் விளைகிற எஸ்டேட்களாகி விட்டன. முல்லைக் காடுகள் என எதுவும் இல்லை. வண்டல் படிந்த மருத நிலமானது, வீட்டடி மனைகளாக உருமாறிக் கொண்டிருக்கிறது. நெய்தல் நிலமானது பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கத்தில் சிக்கியுள்ளது. இத்தகைய நெருக்கடியான காலகட்டத்தில், சங்ககாலச் சூழலியல்

சார்ந்த விழுமியங்கள் பற்றியும், அவற்றின் எச்சங்கள் நவீன வாழ்வியலில் தொடர்வது பற்றியும் ஆராய்ந்திட வேண்டியுள்ளது.

**சூழல் தூய்மை**

இலக்கியப் படைப்புகளும், தொல்காப்பியமும் அடிப்படையானவை. சூழலின் பருப் பொருட்கள் அனைத்தும் ஐம்பெரும் பூதங்களால் உருவானவை என்ற கருத்தியல், சங்கத் தமிழரிடம் ஆழமாக ஊடுருவியிருந்தது. பூதவியல் என்ற சொல் உலகினை ஆராய்வதாகத் தமிழர் மரபில் இடம் பெற்றுள்ளது. சங்க இலக்கியத்திலும், தொல்காப்பி யத்திலும் உலகம் எவற்றால் உருவானது என்ற பதிவுகள் இடம் பெற்றுள்ளன.

பாரி பறம்பு மலையைச் சிறப்பிக்க வந்த கபிலர்,

**“குறத்தி மாட்டிய வறல்கடைக் கொள்ளி**
**ஆரம் ஆதலின் அம்புகை அயலது**
**சாரல் வேங்கை பூஞ்சினைத் தவழும்”**

என்று வரும் பாடலடிகளால் சந்தன மரம் எரிக்கப்பட்டமையும், அதனால் எழுந்த புகை வேங்கை மரத்தில் படிதலையும் குறிக்கின்றார். அன்றாடத் தேவைகளுக்கு அரிய வகை சந்தன மரங்கள் அழிக்கப்பட்ட நிலையினைக் குறிப்பால் உணர்கிறோம்.

**நீர்**

போர் காரணமாக எதிரி நாட்டு மன்னனின் நீர் நிலைகள் பாழ்படுத்தப்படுவது போர் நடைமுறைகளில் ஒன்றாகக் கருதப்பட்டு உள்ளது.

**“ஒளிறு மருப்பின் களிறு அலர**
**காப்புடைய கயம் படியினை”**

என்றும்,

**“கடிதுறை நீர்க் களிறு படீஇ”**

என்றும் கூறப்படுகின்றவற்றால் எதிரிகளின் நீர்நிலைகள் யானைகள் கொண்டு மாசுபடுத்தப்பட்ட செய்தி பெறப்படுகிறது.

இலக்கியங்களில் பிற உயிர்களுக்குத் தீங்கு தராத வண்ணம் குறிப்பிடப்படுகிறது. காரணமில்லாமல் எந்த உயிர்களையும் கொல்லக்கூடாது. தாவர இனங்களையும் காக்க வேண்டும். விளையாட்டிற்காகக் கூட சிறு செடியையும், தாழ்வாகக் கருதி தீங்கிழைக்கக்கூடாது.

ஆழிப்பேரலைகளைப் பற்றி சங்கப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. தன் காமநிலையை ஆழிப்பேரலையோடு ஒப்பிட்டு நற்றிணைப் பாடலில் தலைவியின் வெளிப்பாடாக அமைந்துள்ளது. ஒரு பெண் படுகின்ற துன்பம் ஆழிப்பேரலைப் போன்றது. அதனை அமைதிப்படுத்துகின்ற ஆற்றல், தலைவனுக்கு மட்டுமே உள்ளது. இதனோடு கடற்கரைச் சோலைகளில் ஆழிப் பேரலைகளைத் தடுக்கின்ற மரங்களை வளர்த்திருக்கின்றனர். இதனால் தாழை என்று அழைக்கப்படுகின்றனர். இதற்கு **‘தாழைக்குமரி’** என மரங்களை அழைத்திருக்கின்றமை காணமுடிகிறது.

செவ்வியல் இலக்கியங்களில் சூழலியல் தொடர்பான சிந்தனைகள் அமைந்து காணப்படுகின்றன. சுற்றுச்சூழல் பற்றிய பார்வை பழந்தமிழரிடையே இருந்தமை கூறப்பட்டுள்ளன. தமிழர்கள் சூழல்களோடு ஒன்றி வாழ்ந்தமையையும், இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்துள்ளனர்.

**இயற்கை**

சங்க கால மக்கள் விழிப்புணர்வு இல்லாத காலகட்டங்களில் தமிழர்களின் வாழ்க்கையில் இயற்கை பிரிக்க முடியாத முறையில் வாழ்ந்துள்ளனர்.

**“.......................நம் படைப்பைத்**
**தேன் மயங்கு பாலினும் இனிய அவர் நாட்டு**
**உவலைக் கூவற்கீழ**
**மான் உண்டு எஞ்சிய கலுழி நீரே”**

**(ஐங்குறு.203)**

சங்க கால மக்கள் இயற்கை வளமும், நீர் வளமும் நிறைந்த பகுதியாக இருந்தாலும் கலங்கிய நீரைப் பயன்படுத்தியுள்ளனர்.

**பேரிடர்**

இலக்கியத்தில் தங்களை இயற்கை சீற்றங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் முறைகளைக் கையாண்டுள்ளதை,

**“வான்கடற் பரப்பில் தூவற்கு எஞ்சிய**
**........................................**
**முடவுதிர் புன்னைத் தடவுநிலை மாச்சினை”**
**(அகம்.10)**

**“தாழை மணந்து ஞாழலொடு கெழீஇ**
**படப்பை நின்ற முடந்தாள் புன்னை”**
**(அகம்.180)**

கடல் நிலப்பரப்புகளில் ஆழிப் பேரலைகள் போன்ற சேதங்கள் ஏற்படாமலிருக்க புன்னை, தாழை ஞாழல் மரங்களைக் கொண்டு கடல்நீரைத் தடுத்துள்ளனதை அறியமுடிகிறது.

**நிலம்**

வெள்ளப்பெருக்கு ஏற்படம் போது, நிலச்சரிவுகளினால் மக்களுக்கு பாதிப்புகள் நிகழாத வண்ணம் மரங்கள் இருந்தமை,

**“வளிபொரு மின்னொடு வான்இருள் பரப்பி**
**விளிவு இன்று கிளையோடு மேல்மலை முற்றி**
**தளிபொழில் சாரல் ததர் மலர் தாஅய்**
**ஒளிதிகழ் உத்தி உருகெழு நாகம்**
**அகரு, வாழை,ஞெமை,ஆரம் இனைய**
**தகரமும்,ஞாழலும், தாரமும்,தாங்கி**
**நனிகடல் முன்னியது போலும்,தீம்நீர்**
**வளிவரல் வையை வரவு”**
**(பரி.12)**

வையையில் ஆறு கடல்போல் விரைந்து வந்தாலும் நிலச்சரிவுகள் ஏற்பட்ட செய்திகள் இல்லை. சங்க இலக்கியங்களில் ஆற்றுப் பெருக்கு ஏற்பட்டிருந்த காலங்களிலும் உயிர்ச்சேதம் நிகழவில்லை என்பதை அறியமுடிகிறது.

**காற்று**

நம் சூழல்களைச் சுற்றிலும் மாசுபாடு ஏற்படுகிறது. அதனால், பழந்தமிழரிடம் காற்று மாசுபாடு இருந்தமை பட்டினப்பாலையில்,

**“கார்க் கரும்பின் கமழ் ஆலைத்**
**தீத்தெறுவின் கவின்வாடி**
**நீர்ச் செறுவின் நீள் நெய்தல்**
**...................................**
**கோள் தெங்கின் குலைவாழைக்**
**காய்க்கமுகின் கமழ் மஞ்சள்**
**இனமாவின் இணர்ப்பெண்ணை**
**முதற்சேம்பின் இளைஇஞ்சி”**
**(பட்டினப்பாலை.9-19)**

இப்பாடலில், தென்னை, வாழை, பாக்கு, பனைமரங்கள் போன்றவைகள் மருதநிலத்தில் காணப்பட்டிருக்கும். இவை புகைகளையும், தூசுகளையும் தடுக்கின்ற வைகளாக இருந்துள்ளமையைக் காண முடிகிறது. காற்று மாசுபாட்டினைத் தடுக்க மரங்கள் பயன்பட்டிருக்கிறது. மரங்கள் காற்றில் கலந்து வருகின்ற மாசுக்களை இலைகளால் தடுப்பதற்கு பயன்பட்டுள்ளமை அறியமுடிகிறது. மரங்களையும், செடிகளையும், போற்றியுள்ளமையைக் காட்டிலும், உடன்பிறப்பாக எண்ணி வாழ்ந்துள்ளதை,

**“விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த காழ்முளை அகைய**
**நெய்பெய் தீம்பால் பெய்து இனிது வளர்ப்ப**
**நும்மினும் சிறந்தது, நுவ்வை ஆகுமென்று**
**அன்னை கூறினள் புன்னையது சிறப்பே”**
**(நற்றிணை.172)**

இவற்றில் தலைவி தான் சிறுவயதாக இருக்கும் போது புன்னைச் செடி ஒன்றினை வளர்த்து வருகிறாள். அச்செடிக்கு நெய்கலந்த பாலினை நீராக ஊற்றி வளர்க்கிறாள். அதனால் தன் தலைவனுடன் பேசி மகிழ நாணம் கொள்வதாக அமைந்துள்ளது. இயற்கையை போற்றி வாழ்ந்துள்ளமை அறியமுடிகிறது. எல்லா உயிர்களையும் தம் உயிர் போல எண்ணி வாழந்தமை அறியமுடிகிறது.

சங்க இலக்கியத்தில் மக்கள் இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்துள்ளனர். மரங்கள், நீர், நிலம், காற்று போன்ற இயற்கை சார்ந்த சூழல்களில் வாழ்க்கையை நடத்தியுள்ளமை போற்றற்குரியதாகும்.

**முடிவுரை**

**‘நீர் இன்றி அமையாது உலகம்’** எனப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் கண்டறிந்திட்ட பாரம் பரியத்தில் வந்த தமிழர்கள், இன்று கடந்த காலத்தைப் பின்னோக்கிப் பார்க்க

வேண்டியுள்ளது. பண்டைத் தமிழர் சூழலைப் போற்றி வாழ்ந்திட்ட முறையை மீண்டும் நடைமுறைப்படுத்த முயலுவது அவசியமாகும். தொழில்நுட்பரீதியில் பல்வேறு வசதிகள் வந்துவிட்டன என்றபோதிலும், இயற்கையின் சீற்றத்தை எப்படி எதிர்கொள்வது என்பது இன்று தமிழர்கள் எதிர் கொண்டிருக்கும் காத்திரமான சவால். சங்ககாலத் தமிழர்கள் தகவல்தொடர்பு, போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையிலும், தங்களைச் சுற்றிலும் காட்சி யளிக்கும் சூழலைப் புரிந்துகொள்ள முயன்றனர் சூழலுடன் ஒத்திசைந்து வாழ்வது அடிப்படையானது என்ற நிலையில் வாழ்க்கை பற்றிய விழுமியங்களை உருவாக்கினர். அறிவியல்ரீதியில் வளமாக வாழ்வதாக நம்பிக் கொண்டிருக்கும் இன்றைய தலைமுறையினர், சூழலில் இருந்து விலகுதல் துரிதமாக நடைபெறுகிறது. இந்நிலையில் இயற்கையோடு இயைந்து வளமான வாழ்க்கை வாழ்ந்திட சங்கத் தமிழர்களிடமிருந்து கற்றுக் கொள்ள விழுமியங்கள் இருப்பதுதான் உண்மை என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

## பார்வை நூல்கள்


1. நற்றிணை – புலவர் மாணிக்கனார் (உரையாசிரியர்), வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர்.காம்பளக்ஸ், 141, உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை-17.
2. பரிபாடல் – புலவர் மாணிக்கனார் (உரையாசிரியர்), வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர்.காம்பளக்ஸ், 141, உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை-17
3. அகநானூறு – புலவர் மாணிக்கனார (உரையாசிரியர்) வர்த்தமானன் பதிப்பகம் ஏ.ஆர்.ஆர்.காம்பளக்ஸ் 141, உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை-17
4. ஐங்குறுநூறு – புலவர் மாணிக்கனார் (உரையாசிரியர்), வர்த்தமானன் பதிப்பகம், ஏ.ஆர்.ஆர்.காம்பளக்ஸ், 141, உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை-17

# புறநானூறும் சூழலியலும்

**செல்வி. பா. தங்கம்**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*மரியா கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி*
*வள்ளியூர், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா*

**ஆய்வுச்சுருக்கம்**
*பண்டைத் தமிழரின் நிலம் பற்றிய பார்வை பரந்துபட்டதாக இருந்தது. முதற்பொருள், கருப்பொருள் என்று இருவகையாக நிலத்தைப் பாகுபடுத்தியுள்ளனர். நிலம் போன்று ஞாயிறு இயக்கம், கோள்களின் இயக்கம், மழை பற்றிய சிந்தனை, காற்று, அது இயங்கும் வான்வெளி குறித்த அவர்களின் பார்வைகளையும் செவ்வியல் இலக்கியங்கள் தருகின்றன. அவ்வகையில் புறநானூறு காட்டும் சூழலியல் சிந்தனைகளைக் குறித்ததாக இவ்வாய்வுப் பொருண்மை அமைகின்றது.*

## முன்னுரை

உலக மொழிகளில் தனிப்பெருஞ்சிறப்பினைப் பெற்ற தமிழ்மொழியின் தனித்துவத்திற்குச் சங்க இலக்கியங்கள் பெரிதும் துணையாகின்றன. இச்சங்க இலக்கியங்கள் பாடற் பின்னணிக்கு இயற்கை, பின்புலமாக அமைந்து காணப்படுகிறது. இயற்கை என்பது ஒரு முழுமையான நிரந்தர இயல்பாகும். மனிதன் இயற்கையைச் சார்ந்து உயிர் வாழ்கிறான். அவன் தனது வாழ்க்கைத் தேவைகள் அனைத்தையும் இயற்கையிலிருந்து எடுத்துக்கொள்கிறான். இயற்கையை மனிதனின் அங்கம் என்று அறிஞர் மார்க்ஸ் விளக்குகிறார். சங்ககாலப் புலவர்கள் மேற்கூறிய அறிஞர் கூற்றினை முழுமையாக உணர்ந்திருந்தனர் என்பதை அவர்தம் சங்கப்பாடல்கள் வாயிலாகப் அறியமுடிகிறது. சங்ககால மக்கள் இயற்கையைப் போற்றிப் பேணிப் பாதுகாத்ததோடு நில்லாமல் பேணும் முறையினை உலகிற்குக் கற்றுக் கொடுக்கும் பாங்கினையும் புறநானூறு எடுத்துரைக்கும் விதத்தினை இக்கட்டுரை வாயிலாக காண உள்ளோம்.

## இயற்கை - பொருள்

இயற்கையின் கோலம் எண்ணிலடங்கா. காண்போர் கண்ணிலும் மனதிலும் நிலைத்து பழந்தமிழ் இலக்கியங்களில் பரந்து காணக் கிடக்கின்றன. தமிழின் தொன்மை இலக்கண நூலாகியத் தொல்காப்பியம்,

**'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்' (தொல். கிளவி.நூ.எண்.19)** என்னும் நூற்பாவில் இயற்கை என்பதனை இயல்பு என்னும் பொருண்மையில் கையாளுகிறது. இந்நூற்பா உரையில் சேனாவரையர் இயற்கைப் பொருள் என்பதற்கு தன்னியல்பில் திரியாது நின்ற பொருள் என்று விளக்கந் தருவர்.

மதுரைத் தமிழ்ப் பேரகராதி **"இயற்கை என்ற சொல்லுக்கு சுபாவம், வழக்கம், இலக்கணம், நிலைமை, கொள்கை, முறைமை, ஏது, குணம், தகுதி, பாக்கியம், இயல்பு, செயற்கைக்கு எதிரானவை என்ற பல பொருள்களைத் தருகிறது."**(1)

பழந்தமிழர் வாழ்வில் இன்றியமையாக் கூறாக இயற்கை இருந்தமையை இவ்வரையறை வாயிலாக உணர்கின்றோம். இன்றைய காலகட்டத்தில் மனிதர்களிடம் காண்கின்ற சுற்றுச்சூழல் பற்றிய சிந்தனைகள் பழந்தமிழரிடத்தும் இருந்துள்ளன என்பதை அக்கால இலக்கியங்கள் பகர்கின்றன.

## உலகம் - பொருள்

உலகம் என்பது நிலம், நெருப்பு, நீர், காற்று, வானம் ஆகிய ஐந்தும் உள்ளடக்கியது மட்டுமல்லாது இஃது இயற்கையின் பாற்பட்டது என்பதைத் பழந்தமிழர் அறிந்திருந்தனர். இதனைத் தொல்காப்பியர்,

> **"நிலம்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும்**
> **கலந்த மயக்கம் உலகம் ஆதலின்"**
> **(தொல்.பொருள்.1539)**

என்னும் நூற்பாவில் இப்பூமியானது மேற்கூறப்பெற்ற ஐம்பெரும் பூதங்களையும்

உள்ளடக்கியது என்பர். இதனை அடியொற்றிச் சங்கப் புறநானூற்றுப் புலவர்,

**"இருமுந்நீர் குட்டமும்**
**வியல்ஞாலத்து அகலமும்**
**வளிவழங்கு திசையும்**
**வறிதுநிலைஇய காயமும் என்றாங்கு**
**அவை அளந்து அறியினும்"**

**(புறம்.20:1-5)**

என்னும் பாடலடிகளில் அளக்க முடியா பண்புகளுக்குக் கடல், காற்று, ஆகாயம் என்ற மூன்றினைக் குறிப்பர்.

உலகம் என்பது இவ்வைம்பெரும் பூதங்களாகியது என்பதை மற்றொரு புலவர் தெளிவுற விளக்குகின்றார்.

**"மண்டிணிந்த நிலனும்**
**நிலனேந்திய விசும்பும்**
**விசும்புதைவருஉ வளியும்**
**வளித் தலைஇய தீயும்**
**தீ முரணிய நீருமென்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை போல"**

**(புறம்.2:1-6)**

என்னும் பாடலடிகளில் மண் திணிந்திருக்கும் நிலமும் நிலம் ஏந்தியிருக்கும் ஆகாயமும், ஆகாயத்தின் வழி வரும் காற்றும், காற்றில் கலந்து வரும் தீயும், தீயின் முரணிய நீரும் கலந்தது உலகம் என்றுரைப்பர்.

## வானியலறிவு

பழந்தமிழர் இயற்கையைப் போற்றினர் என்பது, அவர்கள் பஞ்சபூதங்களை வழிபட்டமையைக் கொண்டு உணரமுடிகிறது. குறிப்பாக ஞாயிறு வழிபாடு தொன்மை வழிபாடாக இருந்து வந்துள்ளது. புறநானூற்றில் வானியல் தொடர்பான செய்திகளில் கதிரவன் தோற்றம் இயங்கும் முறை ஆகியன பற்றிய குறிப்புகளைக் காண்கிறோம்.

**"செஞ்ஞாயிற்றுச் செலவும்**
**அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்**
**பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்**
**வளிதரு திசையும்**
**வறிது நிலைஇய காயமும் என்றுஇவை**
**சென்று அளந்து அறிந்தோர் போல"**

**(புறம்.30:1-6)**

என்னும் அடிகள் சூரியன் இயக்கமும் அச்சூரியனால் சூழப்பட்ட நிலமண்டிலமும் காற்றியங்கு திசையும் பிடிப்பின்றி நிற்கின்ற ஆகாயமும் என்றிவை இயல்புகளை உணர்ந்து கூறும் அறிந்தோர் இருந்தனர் என்ற கருத்து பெறப்படுகிறது. வானியல் கல்வி உடையோர் அக்காலகட்டத்தில் வாழ்ந்தமையை இப்பாடற் கருத்து எடுத்துரைக்கிறது. இப்பாடலின் மூலம் சூரியவட்டம், அதனியக்கம், வானவெளி மண்டலம் குறித்த சுழலறிவு இருந்தமை பெறப்படுகிறது.

வெள்ளிக்கோள் மழைக்கோள் என்று கருதப்பட்டு அது செல்லும் பாதையினைக் கொண்டு வறட்சி தோன்றுவதைச் சங்க இலக்கியப் பாடல்கள் உணர்த்துகின்றன. மேலும்,

**"வெள்ளித் தென்புலத் துறைய விளைவயற்**
**பள்ளம் வாடிய பயனில் காலை"**

**(புறம்.388)**

என்ற பாடலடிகள் வெள்ளி கோளானது தென்புலத்தில் உறைந்தமையால் நீரின்றி விளைவயல்கள் வாடிக்கிடக்கின்றன என்னும் கருத்தைப் புலப்படுத்துகின்றன. வானில் நடைபெறும் நிகழ்வு ஒன்றினால் பூமியில் நடைபெறும் மாற்றத்தை உணர்த்தவல்ல வானியல் கல்வி பெற்றவராகச் சங்கத்தமிழர் இருந்தனர் என்பது புலப்படுகிறது.

மழை உருவாகும் விதம், தெளிந்த குடிநீர் ஆகியன பற்றிய தெளிவான விளக்கங்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் விரவிக் கிடக்கின்றன.

## சூழல் தூய்மை

மனிதன் தான் வாழும் இருப்பிடத்தையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாகப் பேணுகின்ற போது ஆரோக்கியமான உலகிற்கு வழிகோலுகின்றான். அவ்வகையில் தம்மையும் தாம் வாழ்ந்த சூழலையும் அக்கறையுடன் பண்டையோர் பேணியமை சங்க இலக்கியங்களில் காணப்படும் குறிப்புகளால் பெறப்படுகிறது.

உடலைப் பேணிக்காக்கும் உணவுப் பழக்கத்தினை மேற்கொண்டு இருந்தனர். அவ்வுணவைப் பாதுகாத்து உண்டனர் என்பதைச் சங்க அக இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. **“இன்றைய சூழ்நிலையில் மக்கள் சைவ அசைவ உணவாகிய இரண்டையும் சேர்த்து உண்ணுவதே எல்லா விதமான சத்துப் பொருட்களும் உடலில் சேர்வதற்குரிய நல்வழி. உணவு முறையைச் சைவம் அசைவம் எனப் பிரிப்பது அறிவியல் அடிப்படையற்ற செயல்”**(2) என்று அறிஞர் குறிப்பிடுவர். பழந்தமிழர் மேற்குறிப்பிட்டதை நன்குணர்ந்தவர்களாக விளங்கியுள்ளனர். பழந்தமிழர் உணவில் சைவ அசைவ உணவுகள் இரண்டும் கலந்து இருந்துள்ளன. குறிப்பாக, உணவினை வேக வைத்து உண்ணும் வழக்கம் இருந்தமை அறிகின்றோம்.

> **“குப்பைக் கீரை கொய்க்கண் அகைத்த**
> **முற்றா இளந்தளிர் கொய்துகொண்டு உப்பின்று**
> **நீருலை அக ஏற்றி மோரின்று**
> **மாசொடு குறைந்த உடுக்கையள்**
> **(புறம்.159:9-13)**

என்ற பாடலடிகளில் வேக வைக்கப்பட்ட கீரை உணவாக உட்கொள்ளப்பட்டமை கூறப்படுகிறது.

**உணவுப் பாதுகாப்பு**

பருவ காலத்திற்கேற்ப உணவுகளைச் சேமிக்கும் பழக்கம் நிரம்பப் பெற்றிருந்தனர். சிறிய தாழ்வாரத்தினை உடைய குடிசையில் வாழும் குறவர்கள் வளைந்த முங்கினுள் மதுவை வைத்து உண்ட செய்தியினை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்,

> **“குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள்**
> **வாங்கமைப் பழுனிய தேறன் மாந்தி”**
> **(புறம்.129:1-2)**

என்ற பாடலடிகளால் எடுத்தியம்புகிறார். இது போன்று அவ்வவ் நிலமக்கள் இத்தகைய உணவுப் பாதுகாப்பு முறையை அறிந்து இருந்தனர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம்.

**சூழல் மாசுபாடு**

> **“எப்பொருள் மாசுபாட்டிற்கு உட்படுகிறதோ அப்பொருள் மாசு எனப்படும். மனிதனுக்கும் பிற உயிரினங்களுக்கும் தீமை விளைவிக்கக் கூடிய நச்சுக்களைச் சுற்றுச்சூழல் மாசு எனப்படும்.”**(3)

சுற்றுச்சூழல் பாதிக்கப்படும் தன்மையின் அடிப்படையில் மாசு பாட்டை ஒன்பது வகையாகப் பிரிப்பர். அம்மாசு அனைத்தும் பழந்தமிழகத்தில் நிகழ்தலுக்கு வாய்ப்பில்லை எனினும் சில மாசுபாடுகள் பற்றிய குறிப்புகள் நமக்கு கிடைக்கின்றன.

**காடுகள் அழிப்பு**

பாரி பறம்பு மலையைச் சிறப்பிக்க வந்த கபிலர்,

> **“குறத்தி மாட்டிய வறல்கடைக் கொள்ளி**
> **ஆரம் ஆதலின் அம்புகை அயலது**
> **சாரல் வேங்கை பூஞ்சினைத் தவழும்”**
> **(புறம்.108:1-3)**

என்று வரும் பாடலடிகளால் சந்தன மரம் எரிக்கப்பட்டமையும் அதனால் எழுந்த புகை வேங்கை மரத்தில் படிதலையும் குறிக்கின்றார். அன்றாடத் தேவைகளுக்கு அரிய வகை சந்தன மரங்கள் அழிக்கப்பட்ட நிலையினைக் குறிப்பால் உணர்கின்றோம்.

**கால்நடைகளுக்காக மரம் அழிக்கப்படுதல்**

கால்நடைகளின் உணவுக்காக மகளிர் இலைகளைக் கொய்து தருவதனை,

> **“அருவி மாறி அஞ்சுவரக் கருகிப்**
> **பெருவறம் கூர்ந்த வேனிற் காலைப்**
> **பசித்த அயத்துப் பூவுடன் உதிரக்**
> **கொய்து கட்டு அழித்த வேங்கையின்**
> **மெல்லிய மகளிரும் இழை களைந்தனரே”**
> **(புறம், 225:12-16)**

என்ற பாடலடிகள் இயம்புகின்றன. வேனிற்காலத்தே புல்லின்றி நிலம் காணப்பட கால்நடைகளுக்கு வேங்கை மரத்தின் இலைகளைத் தழைகளாக பயன்படுத்தப்பட்ட பாங்கு கூறப்படுகிறது.

**போரும் மரங்கள் அழிக்கப்படுதலும்**

படையெடுத்துச் செல்லும் மன்னர்கள் பகைநாட்டின் காவற்காட்டினையும் காவற்மரங்களையும் வெட்டி அழித்த செய்தியினைப் புறப்பாடல்களான புறநானூறும் பதிற்றுப்பத்தும் பரக்கப் பேசுகின்றன. சோழன் பெருநற்கிள்ளி தன் பகைநாட்டு அரண்மனைகளில் வளர்க்கப்பட்ட மரங்களை விறகுகளாகப் பயன்படுத்தினான் என்பதை,

**"விளை வயல் கவர் பூட்டி**
**மனை மரம் விறகு ஆக"** (புறம்.16:4-5)

என்ற பாடலடிகளால் அறிகின்றோம். பிறிதொரு பாடல், சோழன் கிள்ளி வளவன் சேர நாட்டு படையெடுப்பின்போது காவற் மரங்களை முற்றிலும் அழித்த செய்தியினைக் கூறுகின்றது.

**விலங்கினப் பலி**

பண்டைக்காலத்தில் பாதுகாப்பு, பொழுதுபோக்கு, வழிபாடு மற்றும் வணிகக் காரணங்களுக்காக உயிர்கள் அழிக்கப்பட்டன. வழிபாட்டிற்காக விலங்கினங்கள் அழிந்த செய்தியினை,

**"வினைக்கு வேண்டி நீபூண்ட**
**புலப் புல்வாய்க் கலைப் பச்சை**
**சுவல் பூண்ஞாண் மிசைப் பொலிய**
**மறங் கடந்த அருங் கற்பின்"**

(புறம்.166:10-13)

என்ற அடிகள் மானின் தோலிற்காக உயிர்ப்பலிகள் நடந்தமையை விளக்குகிறது.

**நீர் மாசுபாடு**

போர் காரணமாக எதிரி நாட்டு மன்னனின் நீர்நிலைகள் பாழ்படுத்தப்படுவது போர் நடைமுறைகளில் ஒன்றாகக் கருதப்பட்டு உள்ளது.

**"ஒளிறு மருப்பின் களிறு அலர**
**காப்புடைய கயம் படியினை**

(புறம்.15: 9-10)

என்றும்,

**"கடிதுறைநீர்க் களிறு படீஇ"** (புறம்.76:6)

என்றும்,

**"களிறு படிந்து உண்டெனக் கலங்கிய துறையும்"**

(புறம்.23:2)

என்றும் கூறப்படுவனவற்றால் எதிரிகளின் நீர்நிலைகள் யானைகள் கொண்டு மாசுபடுத்தப்பட்ட செய்தி பெறப்படுகிறது.

**காற்று மாசுபாடு**

காற்று மாசுபாடானது, வேண்டாத வாசனைகள் காற்றில் கலத்தல், வாயுக்களின் அளவு மாறுபடுமாறு குறிப்பிட்ட சில வாயுக்கள் மட்டும் அதிகரித்தல், அணுக்கள் மற்றும் தூசுக்கள் போன்றவை கலத்தல் என்னும் மூவகையினால் ஏற்படுகிறது. புகையினால் ஏற்படும் மாசினை,

**"துகில்விரி கடுப்ப நுடங்கித் தண்ணென**
**அகிலர் நறும்புகை ஐதுசென்று அடங்கிய**
**கபில நெடுநகர்"** (புறம்.337:9-11)

என்னும் பாடலடிகளில், மக்கள் வாசனைக்காக அகில் கட்டைகளை எரித்து வீடுகளில் பரப்புவதும் தொடர்ச்சியான இச்செயலால் வீடுகள் கரி படிந்து காணப்படும் செய்தி கூறப்படுகிறது.

அகிற்புகையின் அடர்த்தி அதிகமாகும் போது அப்புகை ஒரு மலையை மறைக்கும் அளவிற்கு கரும்புகையாகக் காட்சியளித்ததை, ஆடுமழை மங்குலின் மறைக்கும் நாடு என்ற நற்றிணைப் பாடல் கூறுவது ஆராயத்தக்கது. பகை நாடுகளைத் தீயிட்டுக் கொளுத்தும் நிலையினைப் புறநானூற்று பாடல்கள் மிகுதியாகத் குறிப்பிடினும் அதனைக் கண்டிக்கும் நிலையினையும் அண்டர் நடுங்கல்லினார் பாடலில் காண்கிறோம்.

**"புகைபடு கூரெரி பரப்பிப் பகைசெய்து**
**பண்பில் ஆண்மை தருதல் ஒன்றோ"**

(புறம். 344:5)

என்ற பாடலடி புலவருக்கு இருந்த சூழலியல் குறித்த அக்கறையினைப் பதிவு செய்கிறது. இவ்வாறாக, இயற்கைச் சூழல்கள் மற்றும் மனிதர்களால் ஏற்பட்ட சூழல் மாசுபாடுகள்

பற்றிய சிந்தனையைப் புறநானூற்றுப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

**முடிவுரை**

செவ்வியல் இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் சூழலியல் தொடர்பானச் சிந்தனைகள் அமைந்து காணப்படுகின்றன. உலக இயக்கம், ஞாயிறு மண்டலம் ஆகியன பற்றி அறிந்த வானவியல் சிந்தனையாளர்கள் இருந்தனர் என்பது இந்நூல் தரும் செய்தியாகும். சுற்றுப்புறச்சூழல் தூய்மை மற்றும் உணவு பாதுகாப்புமுறை குறித்த பார்வை பழந்தமிழரிடையே இருந்தமை கூறப்பெற்றுள்ளது. போரினால் ஏற்படும் அழிவினைக் குறிப்பாகப் பகை மன்னர் நாடுகள், காவற்காடுகள், மற்றும் குளங்கள் மாசுபடுதலை விவரிக்கின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, தொகுதி-1, ப-252.
2. சி. இரா. இளங்கோவன் உணவுமுறை: தேவை ஓர் அறிவியல் முறை, இ.ப.த.ம கருத்தரங்க ஆய்வுக் கோவை, தொகுதி-1, ப. 314,
3. சுற்றுச்சூழல்கல்வி, ஈ.வெ.ரா. கல்லூரி வெளியிடு, ப-4

# இலக்கியங்கள் உரைக்கும் இயற்கை நன்னெறிகள்

**முனைவர் பி. சுமித்திரா தேவி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*மரியா கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி*
*வள்ளியூர், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா*

**ஆய்வுச்சுருக்கம்**
*இலக்கியங்கள் உரைக்கும் இயற்கை நன்னெறிகள் என்ற இக்கட்டுரையானது இச்சமூகம் மறந்து போகும் தருவாயில் இருக்கும் இயற்கை முறைகளை மீண்டும் நினைவுப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலும் இயற்கையினை மீட்டெடுத்து வளமுள்ள சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் மட்டுமே சங்க இலக்கியம் குறிப்பிடும் இயற்கை சார்ந்த நிகழ்வுகளை மீட்டுருவாக்கம் செய்ய விழைகிறது.*

## முன்னுரை

தனிமனிதனும் அவன் சார்ந்திருக்கும் சமுதாயமும் முழுநிறைவுடன் வாழத்துணை செய்வது நன்னெறிகள் ஆகும். **'அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாது இது கேள், மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும் உறையுளும் அல்லது கண்டது இல்'** என்று மணிமேகலை கூறும் அறக்கருத்தானது சூழல் நோக்கம் கொண்டது. உணவு, உடை, இருப்பிடம் என்ற தேவைகள் நமக்கு கிடைப்பது நம்மை சூழ்ந்திருக்கும் இயற்கையின் பான்மையால் தான். அத்தேவைகள் வழங்கும் தன்மை அறமென்றால் அதன் வரவு தடையில்லாமல் கிடைக்க நாம் இயற்கையின் நலத்தினை மேம்படுத்த வேண்டும். சுகாதாரமான உணவு, சுத்தமான ஆடை, ஆரோக்கியமான உறைவிடம் பெறுவது இயற்கையின் கையில் தான் உள்ளது. மனிதர்கள் இயற்கையின் இயல்பினை தரமாற்றம் செய்யும் நடைமுறைப்போக்கு இன்று அதிகரித்து வருகின்றது. உச்சகட்டத்தை அடைந்திருக்கும் உணவுக்கலப்படம், சுகாதாரமற்ற உறைவிடம் போன்றன பேரழிவையும் பேராபத்தையும் நோக்கியே உலகை இட்டுச் செல்கின்றன. அதனை தடுக்கும் வழிமுறையாக இலக்கியங்கள் பதிவு செய்துள்ள இயற்கை சார்ந்த நன்னெறிகளை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

## இயற்கை எடுத்துரைக்கும் இயல்புநெறி

மனிதன் தான் வாழும் இடத்தின் சூழலைப் பேணிப் பாதுகாப்பது கடமை. இயற்கையில் எழும் சீற்றங்கள் தன்னளவில் அதிக பாதிப்பினை ஏற்படுத்தாது. அப்படியே பாதித்தாலும் இயற்கை தானாகவே சீரமைத்துக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றுள்ளது. பஞ்சபூதங்களுக்குத் தம்மை சீரமைத்துக் கொள்ளும் தன்மை உண்டு. மனிதன் உண்டாக்கும் தொழில்நுட்பம் எனும் சதியால் தான் இயற்கைச் சீற்றம் பெருந்சேதத்தை விளைவிக்கின்றன. இயற்கையின் சீற்றத்தில் மீள இயற்கை அரண்களை நாம் அமைத்தல் அவசியம்.

இயற்கை வளம் பற்றி காந்தியடிகள் கூறுகையில், **"இந்தப் புவி உங்கள் தேவைகளை நிறைவு செய்ய போதுமான வளங்களைக் கொண்டுள்ளது. ஆனால் உங்கள் பேராசையை நிறைவு செய்ய அல்ல"1** என்கிறார். மனிதன் பேராசையால் இயற்கை அரண்களை குறிப்பாக காட்டரண்களை வெட்டிச் சாய்க்கின்றான்.

## இயற்கை அரண்

நீரால் ஏற்படும் அழிவினைத் தடுக்க மரங்கள் அவசியம் தேவை. மரங்கள் நிலச்சரிவினைத் தடுப்பது மட்டுமன்றி அடர்ந்து உயர்ந்து பருத்துத் தோப்புகளாக அமைந்திருந்தால் மழை நன்கு பொழியும் என்பதையும் நமது முன்னோர்கள் அறிந்திருந்தனர். இதனால்

தான் சங்க இலக்கியத்தில் மரங்கள் நிரம்பிய முல்லை நிலம் சுட்டப்பட்டுள்ளது. **“சுற்றுச்சூழலை மேம்படுத்த முக்கியமான வழிமுறை மரக்கன்றுகளையும், மற்ற தாவரங்களையும் நடுதல் ஆகும்”2** காட்டழிவால் காற்றில் கலந்திருக்கும் கார்பன்டை-ஆக்ஸைடு பிராணவாயுவாகத் தாவரங்களின் மூலம் மாற்றப்படும் நிகழ்வு தடைபடுகிறது. இதனால் சுவாசிக்கும் காற்றில் கார்பன்டை – ஆக்ஸைடு அதிகரித்து நோய் பரவ வழிகோலும் எனவே தான் மரங்கள் நடல் இன்றியமையாததாகிறது.

**“பத்து குளிர் சாதன கருவிகள் தொடர்ந்து ஓடுவதால் கிடைக்கும் குளிர்ச்சியானது ஒரு தனி மரத்தின் நிழல் மூலம் கிடைக்கிறது. 18 பேர்களுக்கு ஓர் ஆண்டுக்கு சுவாசிக்கத் தேவையான பிரணவாயு ஓர் ஏக்கர் நிலத்தில் வளர்ந்த மரங்கள் தருகின்றன என்கிறார் கல்கத்தார.”3** என்பவர். மரத்தினைப் பாதுகாக்கும்நெறி பண்டை காலத்தில் இருந்தமை பின்வரும் பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**“மரம் சா மருந்தும் கொள்ளார் மாந்தர்”**

**(நற்றிணை. 226)**

மருத்துவப் பொருட்கள் தயாரிப்புக்கு கூட மரத்தினை வெட்டக்கூடாது என்ற பழந்தமிழர் உணர்வு போற்றத்தக்கது.

**“மரம் கொல் தச்சன் கைவல்............”**

**(புறநானூறு.206)**

மேற்கண்ட புறநானூற்றுப்பாடல் மரத்தினை வெட்டும் தொழிலை “கொல்லும்” தொழிலுக்கு இணையாக வைத்துப் பேசியுள்ளது. **‘மரம் கொல்’** என்ற சொல்லாடலுக்கான அழுத்தம் உயர்திணைக்கு உரிய மரபினை மரங்களுக்கு அளித்துள்ளமை பற்றி விவாதிக்கின்றது.

### மரங்களை நட்டுச் செல்லுதல்

இயற்கையோடு வாழ்ந்த பழந்தமிழர் மரக்கன்றுகளை நட்டுள்ளனரா என்ற வினா எழுப்பினால் சான்றுகள் காணக் கிடைக்கின்றன. வெள்ளப் பெருக்கில் ஆற்றின் மிதவையால் தள்ளப்பட்ட காந்தள் செடியினை எடுத்து தங்கள் இல்லத்திற்கு கொணர்ந்து, அதனை நன்முறையில் நட்டு வளர்க்கும் சூழல் நன்னெறியினை காணமுடிகின்றது. குறுந்தொகைப் பாடல் இச்செய்தியை பதிவுசெய்துள்ளது.

**“மாலைப் பெய்த மணம் கமழ் உந்தியொடு**
**காலை வந்த காந்தல் முழுமுதல்**
**இல் உய்த்து நடுதலும்.........”**

**(குறுந்தொகை. 361)**

மரத்தினை தன் வீட்டின் அங்கத்தினராக கருதும் உயிரின நேயம் அளவிடற்கரியது. புன்னை மரத்தினை தனது சகோதரியாக எண்ணும் தலைவியின் மனநிலை நற்றிணைப் பாடலில் இடம்பெற்றுள்ளது.

**“விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த காழ் முளை அகைய**
**நெய்பெய் தீம்பால் நுவ்வை ஆகும் என்று**
**அன்னை கூறினள் புன்னையது நலனே”**

**(நற்றிணை. 172)**

மணலில் அழுத்தப்பட்ட விதையானது முளைவிடும் பருவம் எய்தி மரமாக உருமாறும் வளர்ச்சி வரை அம்மரத்தைப் பேணிபாதுகாத்த திறம் இப்பாடலால் அறியப்படுகின்றது. விதையின் மறு உற்பத்தி திறன் அறிந்து நிகழ்ந்த செயல்பாடாகவும் இதனை கருதலாம்.

### மரங்களின் மறுவடிவம் விதைகள்

பழந்தமிழர்கள் விதையின் மேன்னையை உணர்ந்துள்ளனர். விதைகள் தான் உற்பத்தியின் அடிநாதம் விதை என்பது அறியப்பட்டு இயற்கைவளம் பேணப்பட்டுள்ளது. விதையின் காவலராக விவசாயிகள் இல்லாது போனால் உணவு உற்பத்தியின் நிலைதான் என்ன? என்ற வருத்தம் இன்று ஓங்கி ஒலிக்கின்றது. **“விதை என்பது வெறும் விதை என்ற பொருளை மட்டும் குறிப்பதல்ல, உணவுக்கான தானியமாகவும், புதிய**

**தாவரங்களுக்கான உற்பத்தி ஆதாரமாகவும் இருப்பது இந்த விதையே ஆகும். அதாவது உற்பத்தி செய்யும் விவசாயி, உற்பத்திக்கான ஆதாரத்தை மறு உற்பத்தி செய்கிறான்."4** குறிஞ்சி நிலத்தில் சிற்சில தினை விதைகள் அதிக அளவு உற்பத்தி ஈட்டுவதைப் பின்வரும் பாடல் பதிவுசெய்துள்ளது.

**"கிழங்குகீழ் வீழ்ந்து, தேன்மேல் தூங்கி**
**சிற்சில வித்திப் பற்பல் விளைந்து"**
**(நற்றிணை.329)**

**இயற்கை தரும் பரிசு காடு**

இயற்கை சூழல் நிலைகளைச் சமாளித்து அனுசரித்து வாழ்ந்தாலே சுற்றுச்சூழல் அழிவினைத் தடுக்க முடியும். வனங்கள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களை வழங்குவதோடு, மனித உடல் நலத்தையும்,நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்படுத்துகின்றன. எனவே தான் மன்னர்கள் புலவருக்குப் பரிசாக மரங்கள் செறிந்த நாட்டினைத் தானமாக வழங்கியுள்ளனர்.

**"நல் மரம் துவன்றிய நாடு பல தரீஇ"**
**(பதிற்றுப்பத்து.85)**

பதிற்றுப்பத்தில் இடம்பெறும் "நல்ல மரங்கள்" என்ற அடைமொழி மரங்களின் சிறப்பினை உணர்த்துகின்றது.

**"................நளிசினை**
**நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்து**
**குறும்பொறை, நல்நாடு கோடியர்க்கு ஈந்த**
**காரிக் குதிரை............."**
**(சிறுபாணாற்றுப்படை 107-110)**

கடையேழு வள்ளல்களில் ஒருவரான காரி, மரங்கள் சூழப்பெற்ற நாட்டினை தானமாக வழங்குகிறான். இந்நிகழ்வால், பின்னைய தலைமுறையினருக்கு என்ற எதிர்காலவியல் விழிப்புணர்வுடன் காடு பாதுகாப்புச் சிந்தனையும் இருந்துள்ளமை தெளிவாகிறது.

**தெய்வம் குறித்த நம்பிக்கையில் மரங்கள்**

சங்க மாந்தர்கள் இறை வழிபாட்டுடன் மரவளர்ப்பினை மேற்கொண்டுள்ளனர். அதாவது தெய்வங்கள் உறையும் எந்தப் பொருளையும் மனிதன் தீங்கிழைக்கத் தயங்குவதுண்டு. எனவே தான் கடவுள் மரங்களில் வீற்றிருப்பதாக சூழலை உருவாக்கியுள்ளனர். மரங்களை மனிதர்கள் அழித்து விடக்கூடாது என்ற நோக்கில் இந்து மதத்தில் ஒவ்வொரு கடவுளுக்கும் ஒரு மரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை,

- ஆலமரம் - பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரி, கிருஷ்ணன், இலட்சுமி, குபேரன்
- துளசி - இராமன், நாராயணன்
- வில்வம் - சிவன், துர்க்கை, சூரியன்
- மா - கோவிந்தன்
- வேம்பு - காளியம்மன்
- அரசு - கிருஷ்ணன்
- வைணவ கோயில் - துளசி இலை
- சிவன் கோயில் - கொன்றை, வில்வ இலைகள்"

இது பற்றி குறிப்பினை மெய்ப்பிக்கும் சங்கப்பாக்கள் பின்வருவன,

**"கடவுள் முதுமரத்து....................."**
**(நற்றிணை. 83)**

கடவுள் உறைந்த முதிய மரம் சுட்டப்பட்டுள்ளது.

**"எரி மருள் வேங்கைக் கடவுள் காக்கும்"**
**(நற்றிணை. 216)**

**"தொன்று உறை கடவுள் சேர்ந்த பராரை"**
**(நற்றிணை. 303)**

**"நெடு வீழ் இட்ட கடவுள் ஆலத்து"**
**(நற்றிணை.343)**

வேங்கை, பராரை, ஆலமரம், வாகை, வேம்பு போன்ற மரத்தில் கடவுள் குடியிருக்கும் செய்திகள் இடம்பெற்றுள்ளது. இங்ஙனம் மரங்களைப் பாதுகாக்கும் சூழல்சார் விழிப்புணர்வு அறியமுடிகிறது.

**இயற்கை வாழ்த்து**

உலகில் அறத்தை விட இன்பம் பயப்பது வேறு எதுவுமில்லை. பண்டைய காலத்தில் எவ்வளவு வறட்சி ஏற்பட்டாலும் அறம் செய்வதில் தவறாமல் செயல்பட்டுள்ளனர். உடன் போக்கு மீளும் வேளையில் தலைவனைப் பாதுகாத்தருளிய குன்றுக்கு நன்றி தெரிவிக்கிறாள் தலைவி. வறட்சி ஏற்பட்டாலும் அறம் உண்டாகட்டும் என்ற உணர்வு பழந்தமிழரிடம் இருந்துள்ளது. இஃது இயற்கை மீதான நன்னெறிக்கு நல்ல சன்றாகும்.

**"அறஞ்சா லியரோ வறஞ்சா லியரோ**
**வறனுண் டாயினு மறஞ்சா லியரோ**
**கோள்வ லென்னையை மறைத்த குன்றே"**
**(ஐங்குறுநூறு. 312)**

இப்பாடல் அறச்செயல் புரியும் இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் வகையின.

சங்க கால மக்கள் பேதமின்றி நல்வளம் செழிக்க, உற்பத்தி நல்கும் இயற்கை அன்னையை வாழ்த்தியுள்ளனர். இச்செய்தியினை,

**"வாழி யாதன் வாழி யவினி**
**நெற்பல பொலிக பொன்பெரிது சிறக்க"**
**(ஐங்குறுநூறு.1)**

நாட்டில் மழைவளம், இயற்கை வளம், உணவுவளம் பெருகிடவும் வாழ்த்துகின்றது.

**நிறைவுரை**

இக்கட்டுரையானது சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கும் இயற்கை நன்னெறிகளை ஆழ்ந்து நோக்கியுள்ளது. மனிதன் தன்னை நோயிலிருந்து விடுவித்துக் கொள்ளவும், தன்னை பாதுகாத்துக் கொள்ளவும் இயற்கையினை நாடினான். சங்க இலக்கியங்களில் வாழ்ந்த கடையெழு வள்ளல்கள் நிலங்களை பேணியதோடு மட்டுமல்லாமல், நிலத்தை பேணிய மக்களுக்கு காடுகளை பரிசாக அளித்த தன்மையினையும் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. மேலும் இயற்கையினை பாதுகாக்கவும், மரங்களை வளர்த்தெடுக்கும் நோக்கில் ஒவ்வொரு மரங்களுக்கும் தெய்வங்களின் பெயரினை வைத்து அவற்றை வளர்த்தெடுத்ததோடு மட்டுமல்லாமல் இயற்கையை பேணிப் பாதுகாத்தான் என்பதை இக்கட்டுரை தெள்ளத் தெளிவுடன் எடுத்துரைத்துள்ளது. மேலும் இயற்கையை நேசிப்பதால் சுற்றுச்சுழலும் பாதுகாப்புடன் பயனுள்ளதாக அமைகிறது என்பதோடு பூமித்தாய்க்கு எவ்வித பாதிப்பும் இல்லாமல் பசுமையோடு இருப்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**அடிக்குறிப்புகள்**

1. முனைவர் முகிலன் சுற்றுச்சூழலும் தற்சார்பும், ப.28
2. மா.தனலெட்சுமி, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, ப.33
3. இரா.கருப்பசாமி, தமிழக சுற்றுச்சூழல் கல்வி, ப.48
4. தா.கலைச்செல்வி, வரம் தரும் இயற்கை, ப.15.
5. முனைவர் செல்வராணி, இலக்கியங்கள் போற்றும் இயற்கை, ப.32

# நாட்டுப்புற இலக்கியங்களில் வேளாண்மை

**முனைவர் மு. மணிமேகலா**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*மரியா கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி*
*வள்ளியூர், திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா*

***ஆய்வுச்சுருக்கம்***
*மனிதன் வாழத்தொடங்கிய காலம் முதல் அவன் முதலில் செய்த தொழில் விவசாயம் என்றே பெரும்பாலானோர் குறிப்பிடுகின்றனர். அது போன்றே மனிதன் பிறப்பு முதல் தொடங்கி இறப்பு வரை சமுதாயத்தின் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் பாடப்படும் பாடல்கள் நாட்டுப்புறப்பாடல்கள் ஆகும். நூட்டுப்புறப்பாடல்கள் என்பது வெறும் வார்த்தைகள் அல்ல அவை மனித வாழ்க்கையை பிரதிபலிக்கும் காலக்கண்ணாடி. முனித வாழ்க்கையோடு ஒன்றிப் போன நாட்டுப்புறப்பாடல்கள் வேளாண்மையை நிலைநிறுத்தும் பாங்கினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.*

## முன்னுரை

மனிதன் பேசத் தொடங்குவதற்கு முன் தன் எண்ணங்களைச் சைகைகளாலும், உணர்ச்சிகளை ஓசைகளாலும் வெளிப்படுத்தினான். தன் உணர்ச்சிகளை ஓசைகளின் வழி உணர்த்தியபோது சொற்கள் பிறந்தன. இச்சொற்கள் காலப்போக்கில் பேச்சுமொழியாக மலர்ந்தன. இப்பேச்சு மொழியில் சொற்களும் ஓசைகளும் கலந்து வந்தபோது பாடல்களாக எழுந்தன. இலக்கணம் தோன்றுவதற்கு முன் சொற்கள் ஒழுங்குடன் இசையுடன் இணைந்து அமைந்ததே நாட்டுப்புறப் பாடல்கள் எனலாம். நூட்டுப்புற பாடல்கள் நாட்டுப்புற இலக்கியமாக மாற்றமடைந்ததோடு மட்டுமல்லாமல் மக்களின் முதுகெலும்பான வேளாண்மையையும் வளர்த்தெடுக்கும் நோக்கில் பல்வேறு கருத்துகளை பறைசாற்றி வருகின்றன. இக்கட்டுரையானது நாட்டுப்புற இலக்கியங்களில் காணலாகும் வேளாண்மை குறித்து ஆராய்கிறது.

## நாட்டுப்புற இலக்கியம்

நாட்டுப்புற இலக்கியம் என்பது **"இலக்கணம் என்னும் சிறைக்குள் சிக்காது கட்டடற்ற காட்டாறாய் பெருகி வருவது சமுதாயத்தின் உயிர்த்துடிப்பு, உண்மையின் பிரதிபலிப்பு, உணர்ச்சி உந்தலின் அப்பட்ட வெளியீடு"**1 என்று நாட்டுப்புற பாடல்களின் பெருமையினைத் தமிழ்த்தந்தை ச.வே.சுப்ரமணியனார் குறிப்பிடுவார்.

## வேளாண்மை குறித்த செய்திகள்

மனித நாகரிகம் தொன்மைக்காலத்தில் ஆற்றங்கரைகளிலே தொடக்கம் பெற்றதாக வரலாற்று வல்லுநர்கள் வகுத்துரைக்கின்றனர். தனிமனிதன் பிறரோடு வாழத் தொடங்கிய காலமே சமுதாயம் உருவான காலமாகும். தனக்கு என்ற மனப்பான்மை விலகி நமக்கு என்ற உணர்வோடு, ஒற்றமையோடு வாழ்வின் வளத்திற்கு உழைக்க முற்பட்டான். இவ்வாழ்வின் உன்னத நிலையே வேளாண்மைத் தொழிலாக உருப்பெற்றது. தொன்மைமிகுந்த தொழிலாகக் கருதப்பெறும் வேளாண்மைத் தொழில் குறித்த செய்திகள் இலக்கியங்களில் சிறப்பாகக் காணப்படுகின்றன.

குறிப்பாகப் புறநானூற்றுப் பாடலில்,

> **"பொருடை தருஉம் கொற்றமும் உழுபடை**
> **ஊன்று சால் மருங்கின் ஈன்ற தன் பயனே"**
> **(புறம்:35 25-26)**

எனப் பகைவர்களைப் போர்களத்தில் வென்று சிறப்பிப்பதற்கும் உழுதொழிலே அடிப்படைக் காரணமாக இருந்துள்ளது என்பது புலனாகின்றது. அது மட்டுமல்லாமல் உழவர்கள் உலக மக்களின் வாழ்வு வண்டிக்கு ஆணியாகக் கருதப்பட்டமையை நம் வள்ளுவப் பெருந்தகை **'உழவு'** என்ற அதிகாரத்தின் கீழ் பட்டியலிட்டுக் காட்டுகின்றார்.

உழுதொழிலின் போது ஏற்படும் களைப்பைப் போக்கப்பாட்டுப் பாடியுள்ளனர். ஏரைப் பூட்டி

நின்றோர் பாடிய **'முகவைப் பாட்டு'** நெல்ல முகந்து அளந்து கொடுக்கும் போது பாடிய **'பொலிப்பாட்டு'** குறித்த குறிப்புகள் இலக்கியங்களில் காணப்படுகின்றன.

**பண்பாட்டுக் கூறுகள்**

வேளாண்மைப் பாடல்கள் வழி காணப்பெறும் சிறப்புப் பண்பாட்டுக் கூறுகளை மூன்று நிலையில் முறைப்படுத்திக் காணலாம். அதாவது, (1) உழும் முன் (2) உழும் போது (3) உழவு நிறைவுற்றபின். பழங்காலத்தில் நாட்டுப்புற மக்கள் ஒவ்வொரு நிலையிலும் பாடல் பாடினர். **"வேளாண்மையைப் பாடல்களின் நீட்டம் உழவன் ஏரில் காளைகளைப் பூட்டியதிலிருந்து தொடங்கி விதை விதைத்து அதனை அறுவடை செய்து, கதிரடித்துக் குவித்துக் குதிரில் போடுகின்றவரை நீடித்துச் செல்லும்"2** என்று கூறுகின்றார்.

**உழுவதற்கு முன் நிலத்தை பேணுதல்**

உழவர்களுக்கு நிலமும் நீரும் வாழ்வின் முதலீடுகளாகும். நிலத்தைத் தன் உயிரினும் மேலாகக் கருதினர். வயலை நாள்தோறும் பேணிக் காக்க தவறினால் ஏற்பட்ட இடர்பாட்டை வள்ளுவர் கூறுகையில்,

**"செல்லான் கிழவ னிருப்புனிலம் புலன்ந்**
**தில்லாளி னூடி விடும்" (குறள்: 1039)**

என்று படம்பிடித்துக் காட்டுகிறார். **"நாட்டையாளுகின்ற மன்னனும் நிலத்தைப் போற்றும் உழவனைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற குறிப்பும் மறைமுகமாக உணர்த்தப்படுவதை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம்"3.** இக்கருத்தை அரண் செய்யும் வகையில் மண்ணின் மகத்துவத்தை,

**"காணி அலங்கார மாம்**
**காணி காலு சிங்காரமாம்**
**காணி சுத்திருக்கும்**
**வரப்புகளும் ஒய்யாரமாம்"4**

என்று குளித்தலை வட்டார வழக்குப் பாடல்கள் புலப்படுகின்றன.

**மாட்டின் நலம் காக்க வேண்டுதல்**

நாட்டுப்புற மக்கள் உழவுத் தொழில் தொடங்குவதற்கு முன் தங்களின் வாழ்விற்காகத் தன்னையே அர்ப்பணிக்கும் மாடுகளின் நலத்திற்கு இறைஞ்சுகின்ற வழக்கம் காணப்படுகிறது. தங்களோடு சேர்ந்து வாழ்ந்து மரணமடையும் மாடுகளைத் தங்களின் உறவாகக் கருதி அவற்றிற்கு உழவுத்தொழில் நடைபெறும்போது துன்பம் வந்திடாதிருக்க இறைவனிடம் வேண்டுகின்றனர். **'காக்கை குருவிகள் எங்கள் சாதி'** என்று இந்நூற்றாண்டில் எண்ணுவதற்கு முன்பே நாட்டுமக்கள் மாடுகளைத் தமது உறவாகக் கொண்டு பழகியமை காணப்படுகிறது.

**"பூட்டின மாட்டுக்கு**
**பிழைமேலும் வாராமல்**
**கட்டின மாட்டுக்குக்**
**கலகம் வந்து சேராமல்**
**காரும் கணபதியே"5**

எனும் வேண்டலிலிருந்து அறிய முடிகின்றது.

**மழை வேண்டல்**

உழவர்கள் பயிர்வளர, விளைச்சல் பெருக மழையைப் பெரிதும் எதிர்நோக்குவர், நீரின்றிப் போனால் மனிதனுக்கு வாழ்வின்றிப் போகும். நாட்டில் வளம் குன்றிப்போகும். இந்த ஏக்கத்தை வெளிப்படுத்தும் வகையில்,

**"இருபதியா லெட்டால் இன்னைக்கு**
**இருட்டாதோ மானம்**
**இருட்டாதோ மானம் – அந்த**
**பிரட்டாசி மாசம்**
**பிரட்டாசி மாசம் – அங்கே**
**பேயாதோ மானம்**
**பேயாதோ மானம் – இன்னிக்கு**
**பெருகாதோ ஏரி"6**

என்ற புரட்டாசி மாதத்தில் மழை எதிர்பார்த்துத் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றனர்.

**மழை சோறு உண்ணல்**

வேளாண் தொழிலுக்கு அடிப்படையாக விளங்குவது மழை. மழையைக் குறித்துப் பலவிதமான நம்பிக்கைகள் காணப்பெறுகின்றன. கிராம மக்களிடம் மழைபொழிய மழைச்சோறு உண்ணும் பழக்கம் காணப்படுகிறது. பருவமழை பெய்யாது பொய்த்துவிட்டால் வருணபகவானிடம் வேண்டுதலும் வழிபாடும் நடத்துவர்.

மழை பொய்த்த காலத்தில் பெண்கள் வீடுவீடாகச் சென்று அரிசி, கம்பு, சோளம், கேழ்வரகு முதலியவற்றைப் பெற்று ஒன்றாகச் சேர்ததுச் சமைத்து உப்பிடாது உண்பர். இதனை மழைச்சோறு என்றும் குறிப்பிடுவர். எல்லோரும் உண்டபின் பெண்கள் தங்கள் குழந்தைகளுடன் பரதேசம் போவதாகப் பாவனை செய்வர். வயது முதிர்ந்த பெண்கள் மாரடித்துக் கெண்டு இடுகாட்டை நோக்கிப் பாடிக்கொண்டு செல்வர். இவ்வாறு செய்தால் மழை பொழியும் என்னும் நம்பிக்கை அக்கால மக்களிடம் இருந்தது என்பதை நினைவூட்டும் வகையில்,

**"வருண பகவானே**
**உரிய மழை பெய்யவேணும்**
**மழை பெய்யலையே**
**மானமே போகுதடி**
**என்சோட்டு பெண்டுகளே**
**விரதங்கொள வாருங்கடி**
**மழைச்சோறு ஆக்கி**
**மனசாரக் குடிச்ச பின்னே**
**இடுகாட்டை பார்த்து**
**மாரடிச்சுப் போவோமடி**
**மனமிரங்கி மழைமேகம்**
**மழை பெய்ய வேணுமடி"7**

என்று பெரம்பலூர் வட்டப் பாடல் அமைந்துள்ளது.

**ஏற்றம்**

உழுதொழிலின் தொடக்கமாக ஏற்றம் இறைத்தல் காணப்படுகிறது. ஏற்றம் இறைத்தலின் மூன்று வகைகளை வழக்கத்தில் கொண்டுள்ளனர். (1) கவலை ஏற்றம் (2) ஆளேறும் ஏற்றம் (3) பரி ஏற்றம். ஏற்றம் இறைக்கும்போது பாடல் பாடும் பழக்கமும் இருந்தது என்பதை,

**"ஏழை எல்லாம் கூடி**
**ஏத்திறைப்போம் வாங்க**
**பஞ்சை எல்லாம் கூடி**
**பரி இறைப்போம் வாங்க"8**

என்று பரியேற்றப்பாடல் துறையூர் வட்டத்தில் காண முடிகின்றது.

**மழைக்குரிய பயிரிடுதல்**

கிராமங்களில் வானம் வழங்கும் நீரின் அளவிற்கேற்பப் பயிரிடும் வழக்கம் இருந்து வருகிறது. மழையின் அளவைப் பொறுத்து அதற்குரிய பயிர் விளையச் செய்கின்றனர். நாள்தோறும் மழை பொழிந்தால் நெல்லைப் பயிரிடுவர். விட்டுவிட்டு மழைப் பொழிந்தால் சோளத்தை பயிர் செய்வர். கம்பி போன்று மழை பொழிந்தால் கம்பு பயிரிடுவர்.

**"நித்தம் மழை பேஞ்சா**
**நம்ம நெல்லு பயிரேறும்**
**சோனை மழை பேஞ்சா**
**நம்ம சோளம் பயிரேறும்**
**கம்பி மழை பேஞ்சா**
**அங்கே கம்பு பயிரேறும்"9**

என்று முசிறிவட்ட வழக்கு பாடல்கள் சித்திரிக்கின்றன.

**குலவைப்பாட்டு**

வயலில் இறங்கி வேலை செய்யும் போதும், நாற்று நடும் போதும், அறுவடையின் போதும் குலவைப்பாடல் பாடுவது வழக்கம். குலவ ஒலி பெண்கள் உதடுகளைக் குவித்து நாவினார் உரசி ஒருவகை ஒலியைக் குரலில் கொடுப்பர். இவ்வொலி கேட்பதற்கு மிகவும் இனிமையாக இருக்கும்.

**"எஞ்சோட்டுப் பெண்டுகளா**
**எடுத்துக் குலவ போடுங்கடி"10**

என்று இரண்டு வரிகள் பாடியதும் மற்ற பெண்கள் குலவையிடுவர்.

**உழத்தியர்களை உபசரித்தல்**

வித்துக்கள் நாற்றுகளாய் வளர்ந்த நிலையில் நாற்றுகளைப்பறித்து வரிசைப்படுத்தி நடுவர். இப்பணிக்காகப் பெண்கள் மட்டுமே வருவர். நாற்று நடலின் முதல்நாள் அனைவருக்கும்

உணவளிப்பர், பூவும், குங்குமமும் கொடுப்பார்கள். நடவுப்பணி மகிழ்வுடனும் செம்மையாகவும் நடைபெற இவ்வாறு உபசரிக்கும் வழக்கம் இன்றும் இருந்து வருகிறது.

**“ஏலேலம்மா ஏலம்**
**ஏலோலங்கிடி ஏலம்**
**ஓல்த்தூ பண்ணை**
**எங்க நல்ல பண்ணை**
**நாத்து நட போவேருக்கு**
**சோறு போடும் பண்ணை**
**பூவும் பொட்டும் பணமும்**
**அள்ளிதரும் பண்ணை”11**

உழத்தியரை உபசரிப்பதோடு பண்ணையாரையும் பாராட்டுகின்ற பண்பு கிராம மக்களிடம் இருந்தது என்பதும் புலனாகிறது.

**விலங்கினம் கொண்டு தாள் அடித்தல்**

அறுவடை செய்தலின் போரடிப்பர். போரடிப்பதற்கு மாடும், யானையும், பயன்படுத்தப்பட்ட வழக்கம் பழங்காலத்திலேயே இருந்துள்ளது. இவ்வழக்கம் இன்றும் கிராம மக்களிடம் காணப்படுகிறது.

**“மாடு கட்டி தாளடிக்க**
**மவராசன் பண்ணையிலே**
**கண்ணு கட்டி தாளடிக்க**
**காராழன் பண்ணையிலே**
**ஆனைகட்டி தாளடிக்க**
**ஆறுமாசம் செல்லும்**
**மாடுகட்டி தாளடிக்க**
**மறுவருசம் செல்லும்**
**குதிரை கட்டி தாளடிக்க**
**கோடிநாள் செல்லும்”12**

என்று நாட்டின் வளத்தை அறியும் முகமாக விலங்கினங்களைப் போரடிக்க பயன்படுத்தி வந்தமையை அறியலாம்.

**உழவு நிறைவுற்றபின்**

கிராம மக்கள் கதிரவனின் கதிர் நிலத்தில் விழும் முன் கழனிக்கு வந்து அந்திவரை அயராது உழைக்கும் பண்பாளர்கள். உழைப்பிற்கேற்ற ஊதியத்தை உடன்பெற விரும்புபவர்கள். வாங்கும் பணத்தைக் கொண்டு வயிற்றை நிரப்பும் வாழ்க்கையினர். இதனை,

**“முதலாளி வந்தவுடன்**
**முதல் பணத்தை**
**பெத்துக்குவோம்**
**சீக்கிரமாய் நட்டுவாடி**
**சின்னபுள்ளே சிங்காரி”13**

எனும் பாடலில் கிராம மக்களின் உழைப்பின் உயர்வும், ஊதியத்தை விரைவில் பெறவிரும்பும் எண்ணமும் புலப்படுகின்றன.

**முடிவுரை**

வேளாண்மைத் தொழில் நாட்டுப்புற மக்களின் உயிர்த்தொழிலாக விளங்குகிறது. உழுதொழில் தொடங்கும் முன் வயலைப் போற்றுவதும், ஏரில் பூட்டப்பட்ட மாட்டிற்கு தீங்குவராது இறைவனை வேண்டுதலும், புரட்டாசி மாதத்தில் மழை பொழியும் என்ற நம்பிக்கையும், மழை பொய்த்தபோது மழைச்சோறு உண்கின்ற பழக்கமும் காணப்படுகின்றன. உழவுத்தொழில் புரிகிறபோது வயலுக்கு ஏற்றம் இரைத்து நீர்பாய்ச்சுவதில் கவலை ஏற்றம், ஆளேறும் ஏற்றம், பரிஏற்றம் என மூன்று வகைப்பட்ட ஏற்றங்கள் காணப்பட்டமையும் அறிய முடிகின்றன. நாற்று நடும்போதும் அறுவடையின் போதும், போரடிக்கும் போதும் குலவை ஒலிஒலிக்கின்ற பழக்கம் காணப்படுகின்றனது. நாற்று நடுகின்ற நாளன்று உழத்தியர்களை உபசரிக்கும் வழக்கமும், பண்ணையாரைப் பாராட்டும் பண்புள்ளமும், போரடிப்பதற்கு யானை, மாடு, குதிரை போன்ற விலங்கினங்கள் பயன்படுத்தும் வழக்கமும் அக்காலத்திலிருந்து வந்துள்ளமையை நாட்டுபுறப்பாடல்கள் வழி அறியலாம்.

**மேற்பார்வை நூல்கள்**

1. ச.வே.சுப்பிரமணியர், நாட்டுப்புற இலக்கியங்களில் மக்கள் வாழ்வியல், இலக்கியா பதிப்பகம், தென்காசி, ப.15
2. முனைவர்.இராசமாணிக்கம், உழவுக்கு வந்தனம் செய்வோம், வத்சலா பதிப்பகம், சென்னை – 600018, ப.56

3. மேலது, ப.63
4. சு.கணபதி, வட்டதர வழக்குப் பாடல்கள், காமாட்சி பதிப்பகம், திருச்சி, ப.56
5. மேலது, ப.66
6. மேலது, ப.69
7. மேலது, ப.76
8. மேலது, ப.78
9. மேலது, ப.82
10. மேலது, ப.96
11. மேலது, ப.108
12. மேலது, ப.123
13. மேலது, ப.136

# சிலப்பதிகாரத்தில் இயற்கை வருணனை

**முனைவர் கோ. விஜயலெட்சுமி**
*உதவிப் பேராசிரியர்*
*புனித சிலுவை தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி*

**ஆய்வுச்சுருக்கம்**
*தமிழர்கள் மிகப் பழங்காலம் முதல் இயற்கையைக் கண்டு அதன் அழகில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர். இயற்கையில் காணப்படும் மரம், செடி, கொடிகளும், பல்வேறு உயிரினங்களும் அவர்களைக் கவர்த்துள்மையப் பண்டத் தமிழ் இலக்கியங்களால் உணர முடிகின்றது. பண்டை தமிழர்கள் இயற்கையைத் தெய்வ மாக வணங்கினர். தொல்காப்பியர் திணைகளைப் பிரித்துக் காட்டுவது இயற்கை அடிப்படையில் தான் என்பதை உணரலாம். சங்கப் புலவர்கள் உயிரினங்களை மிக நுட்பமாக நோக்கியுள்ளமை அவர்களின் இயற்கை ஈடுபாட்டிற்குத் தக்க சான்றாகும். சங்கப் பாடல்களுக்குப் பின் தோன்றிய காப்பியங்களிலும் புலவர்களின் இயற்கை ஈடுபாட்டினை அறியமுடிகிறது. சிலப்பதிகாரத்தை படைத்த இளங்கோவடிகளும் தம் இயற்கை ஈடுபாட்டினைத் தாம் படைத்த காப்பியத்தின் வாயிலாக வெள்ப்படுத்துகின்றார். ஐந்திணை பற்றிய வருணனையும், இரு சுடர் தோற்ற மறைவு பற்றிய வருணனையும், ஆறு, பொய்கை, அகழி போன்றவற்றின் வருணனைகளும் இயற்கை வருணனை என்ற பெயரில் இங்கு விளக்கப்படுகின்றது.*

## முன்னுரை

இயற்கை என்பது இறைவன் மனித குலத்திற்கு ஈந்தளித்த அருங்கொடை. எந்தப் புலவனும் கவிஞனும் இயற்கையைப் பாடாது இருந்ததில்லை. சங்க காலம் தொடங்கி இக்காலம் வரை எழுந்த இலக்கியங்கள் அனைத்தும் இயற்கையின் எழிலை எடுத்தியம்புகின்றன. மனித வாழ்க்கையோடு இயற்கை நீக்கமற நிறைந்திருக்கிறது. இயற்கை மனிதனுக்கு உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை அளிப்பது மட்டுமன்றி மனநலத்தை வலுவுடையதாக்குவதிலும் பங்கு வகிக்கிறது. மனிதனின் சிந்தனை இயற்கையோடு பின்னிப்பிணைந்தே இயங்குகிறது. இலக்கியம் படைக்கும் புலவனும் இயற்கையை விடுத்துத் தம் படைப்பைச் சிந்திக்க இயலாது எனலாம். இயற்கையை மட்டும் பாடும் படைப்புகளும் பல உள்ளன. இரு சுடர்கள், ஐம்பூதங்கள், மலைகள், கடல்கள், ஆறுகள், பறவைகள், விலங்குகள், ஊர்வன, மற்றும் மனிதனால் படைக்க முடியாத அனைத்து வளங்களும் நிறைந்தது. வளம் நிறைந்த இவ்வுலகம் “நிலம், தீ, நீர், வளி, விசும்போடு, ஐந்தும் கலந்த மயக்கம்” (1) என்கிறது தொல்காப்பியம் அவ்வகையில் “**சிலப்பதிகாரத்தில் இயற்கை வருணனை**: என்ற தலைப்பில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## சிலப்பதிகாரத்தில் குறிஞ்சி வருணனை

சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் மூன்று நாடுகளுள் ஒன்று மலைநாடு ஆயினும் மலை பற்றிய புனைவு விரிவாக அமைந்திடவில்லை. கோங்கு, வேங்கை, கொன்றை, சுரபுன்னை, மஞ்சாடி, சந்தன மரங்கள், மலா் விரிந்து வண்டுகள் பாடுதற்கிடனானது மலைப்பகுதி. அம்மலையிலிருந்து ஓடி வரும் பேரியாறு அப்பகுதியை வளஞ் செய்கிறது. இக்காட்சியினை,

> **“கோங்கம் வேங்கை தூங்கிணர்க் கொன்றை**
> **நாகம், திலகம், நறுங்காழ் ஆரம்**
> ------------------------------------------------
> **நெடியோன் மார்பில் ஆரம்போன்று**
> **பெருமலை விளங்கிய பேரியாற்று அடைகரை” (2)**

என இளங்கோவடிகள் வருணிக்கின்றார். பின் மலையில் கேட்கும் பல்வகையான ஓசைகளையும், குறவா்கள் பரிசாகக் கொணா்ந்த உயிரினங்களும்,

உயவுப் பொருள்களுமாகிய கருப்பொருள்களும் கூறப்படுகின்றன. இதனால் மலையிலுள்ள கருப் பொருள்களை அறியமுடிகின்றது.

**முல்லை நில வருணனை**

கவுந்தியடிகள் வாயிலாக முல்லை நில வருணனை இயம்பப் படுகின்றது. முல்லை நிலம் சோலைகள் நிறைந்தது. வள்ளிக் கிழங்கினை அகழ்ந்தெடுத்த குழிகளை உதிர்ந்த சண்பக மலர்கள் மறைந்திருக்கும். பலா மரங்களில் முற்றிய நிலையில் தொங்கிக் கொண்டிருக்கும். பலாப் பழுங்களிலிருந்து தேன் ஒழுகிக் கொண்டிருக்கும். மஞ்சள், இஞ்சி போன்றவை ஒன்றோடு ஒன்று பிணைந்து கிடைக்கும். (3) சோலைகள் நிறைந்த காட்டினை வருணிக்கும் போது சமண சமயக் கருத்துக்கள் வெளிப்படக் காணலாம்.

**மருத நில வருணனை**

காவிரி புதுநீர் மதகுவாய்த் தலைக்கன் கதவின் மேலாக எழுந்து வீழ்கின்ற ஒலியே எங்கணும் பேரொலியாகக் கேட்கும். பன்றிப் பந்தரும், பூட்டைப் பொறியும் ஒலி மிகுந்த ஏற்நமும், நீர் விழும் இறை கடையும் என்றிவை எழுப்பும் ஒலி, மதகு நீர் ஒலியில் அடங்கும். வயல்களில் செந்நெல்லும், கரும்பும் சூழ்ந்து காணப்படும். தாமரைப் பொய்கைகளில் பறவைகளின் பல்வேறு ஒலி கேட்கும். இதனை,

> **“பழனத் தாமரைப் பைம்பூங் கானத்துக்**
> **கம்புட் கோழியுங் கனைகுர னாரையுஞ்**
> ----------------------------------------------------------------
> **வெல்போர் வேந்தர் முனையிடம் போலப்**
> **பல்வேறு குழூஉக்குரல் பரந்த**
> **வோதையும்” (4)**

என்ற பாடலால் பல்வேறு ஒசைகள் கேட்பதாக வருணிக்கிறார்.

**நெய்தல் நில வருணனை**

நெய்தல் நிலத்தை வருணிக்கும் பொழுது கடலிடத்தே செல்லும் மரக்கலங்களுக்கு வழி காட்டும் கலங்கரை விளக்குகளும், மீன்களைக் குறுக்கிட்டுத் தடுத்துப் பிடிக்கம் வலையினையுடைய பரதவர் மீன்பிடி படகுகளில் வைத்திருந்த விளக்குகளும், மொழி வேறுபட்ட பிற நாட்டினர் வைத்துள்ள விடிவிளக்குகளும், மிக்க பெரும் பண்டக சாலைகளைக் காக்கும் காவலர் கொண்டிருந்த விளக்குகளும், அளவு அறியப்படாதனவாக எப்புறமும் பொருந்தி மிகுந்திருந்தன. தெள்ளாத மாவினைப் போன்ற நுண்மணலின் மீது இட்ட வெள் சிறுகடுகு போலக் காணப்படும். காட்சியை உடையதாகிய மிக்க நீர்ப் பரப்பில் மணமிகுந்த மலரையுடைய தாமரையே வேலியாக விளங்கும் நெய்தலங்கானல். இக்காட்சியினை,

> **“கழிபெரும் பண்டங் காவலர் விளக்கமும்**
> **எண்ணுவரம் பறியா இயைந்தொருங்**
> **கீண்டி**
> ----------------------------------------------------------------
> **கைதை வேலி நெய்தலங் கானற்” (5)**

என வருணிக்கின்றார்.

**பாலை நில வருணனை**

பாலை நிலத்தினை எடுத்து இயம்பும் பொழுது தலை விரிந்த வெண்கடம்பும், பட்டுப் போன ஒமையும், பொரிந்த அடியினையுடைய வாகையும், புல் காய்ந்த மூங்கிலும், புரியுடைய மரல் என்னும் கள்ளியும் கரிந்து கிடக்கும். நீரினை விரும்பி நீர் வேட்கையைத் தாங்காது மான்கள் நின்று மருண்டு கதறும். எயினர் குடியிருப்புக்கள் காணப்படும். இந்நிகழ்வினை,

> **“அலறுதலை மராமும் உலறுதலை**
> **ஓமையும்**
> **பொரியரை உழிஞ்சிலும் புள்முளி**
> **மூங்கிலும்**
> ________________________________
> **கானமும் எயினர் கடமும் கடந்தால்” (6)**

என்ற பாடலின் வாயிலாக பாலை நிலத்தின் கொடுமையினை அறியமுடிகிறது.

**நீர் நிலைகள்**

**ஆற்று வருணனை**: ஆற்றின் கரையில் மலர்களுடன் காணப்படும். குரவம், மரவம், மகிழம் போன்ற மரங்களும், குருகத்தி, செம்முல்லை முதலான செடி, கொடிகளும் பின்னிப் பிணைந்து காணப்படுவதை ஆறு என்ற பெண்ணின் மேகலையாகவும், அகன்று உயர்ந்த கரையை அப்பெண்ணின் அல்குல் தடமாகவும், ஆற்றிடைக் கரையின் அடிப்பாகம் அகன்றும் பல மலர்களால் உயர்த்தும் ஒரே அளவில் காணப்படும். இரு மணற் குன்றுகளை மார்பாகவும், உதிர்ந்து கிடக்கும் முறுக்க மலர்களைச் செவ்வாயாகவும், முல்லை மலர்களைப் பல்லாகவும், கயல் மீன்களைக் கண்களாகவும், உருவகம் செய்து வருணித்துக் காட்டுகின்றார். (7) இவ்வருணனை அவருடைய கற்பனையாற்றலை வெளிப்படுத்துகின்றது.

**பொய்கை வருணனை**

இளங்கோவடிகள் ஆற்றைப் பெண்ணாக உருவகித்துப் பாடியிருப்பதைப் போன்று பொய்கையையும் பெண்ணாக உருவகிக்கும் பொழுது,

> **"அன்ன மென்னடை நன்னீர்ப் பொய்கை**
> **ஆம்பல் நாறுந் தேம் பொதி நறுவிரைத்**
> **____________________________________**
> **கான்வரு குவளைக் கண்மலர் விழிப்பப்" (8)**

என்ற பாடல் வாயிலாக அறிய முடிகிறது.

**இரு சுடர்த் தோற்ற மறைவு வருணனை**

காப்பிய இலக்கணம் கூறும் தண்டியலங்காரம் "இருசுடாத் தோற்றமென் றினையன புனைந்து" (9) எனக் கூறுவதால் கதிரவன், திங்கள் தோற்றம், மறைவுகள் காப்பியத்திற்கு இன்றியமையாத கூறாகக்கொள்ளப்படுகின்றது. இளங்கோவடிகள் தான் படைத்த சிலப்பதிகாரத்தில் இரு சுடர்களை வருணித்துள்ளார்.

**கதிரவன்**

நிலத்தினைப் பெண்ணாக உருவகம் செய்து, அப்பெண் போர்த்தியுள்ள ஆடையைக் கதிரவன் விழுங்கியதாகக் கதிரவன் தோற்றத்தை வருணிக்கின்றார். (10)

கணவனை இழந்த கண்ணகியின் துயரைப் பொறுக்காத கதிரவன் மலையில் சென்று ஒளிந்ததாக வருணித்து (11) காப்பித்துடன் தொடர்புபடுத்துகின்றார் அடிகள்.

**திங்கள் வருணனை**

திங்களை மூவேந்தர்களுடனும் இணைத்து வருணித்துள்ளார். சோழன் வெண் கொற்றக்குடையுடன் திங்கள் தோற்றம் இயைபு படுத்தப்படுகின்றது. பாண்டியன் குல முதல்வனாகக் கொண்டு, பாண்டிய மன்னன் தீயவர்களை ஒறுப்பது போன்று திங்கள் மாலைப் பொழுதாகிய குறும்பை ஓட்டியதாக வருணித்துள்ளார். திங்களை மன்னனாகவும், வானிலுள்ள மீன்களைக் காளையாகவும் உருவகம் செய்து வருணித்துள்ளார். இக்காட்சியினை,

> **"பன்மீன் தானையொடு பார்கதிர் பரப்பித்**
> **தென்னவன் குலமுதல் செல்வன்**
> **தோன்றி" (12)**

என்ற பாடல் மூலம் திங்களைச் சேரன் முகத்துடன் ஓப்பிட்டு காட்டுவதை அறியலாம். மேலும் விண்ணிலுள்ள திங்கள் அரவுக்கு அஞ்சி நிலவுலகில் பெண்ணுருக்கொண்டு திரிவதாகவும் வருணித்துள்ளார். (13)

**முடிவுரை**

இறைவனால் படைக்கப்பட்ட இயற்கை மனிதனோடு நட்புறவு கொண்டுள்ளதை காப்பியங்கள் வெளிப்படுத்துகின்றன. பாத்திரப்படைப்புக்கும், நிகழ்வுச் சித்திரிப்பிற்கும் இயற்கைக் கூறுகள் காப்பியப் படைப்பாளர்களால் பயனபடுத்தப் பட்டுள்ளன. இளங்கோவடிகள் இயற்கையுலகில் ஈடுபட்டு இயற்கையைப் பாடியதோடு மனித வாழ்வின் இன்ப துன்பங்களை உணர்த்த உதவும் பின்னணியாகவும் இயற்கைப் புனைவைப் பயன்படுத்தியுள்ளார். இயற்கையோடு இணைந்து இயற்கையில் ஒருயிராய் வாழ்ந்து இயற்கையைப் பாதுகாப்பது நமது கடமையென உணர்ந்து செயல்படுவோம்.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியம் பொருள் மரபு 635
2. சிலப்பதிகாரம் காட்சிக்காதை 17-22
3. மேலது நாடு காண் காதை 67-75
4. மேலது " " 113-119
5. மேலது கடலாடுகாதை 145-150
6. மேலது காடு காண் காதை 75-79
7. மேலது புறஞ்சேரியிருத்த காதை 151-170
8. மேலது அந்திமாலைச் சிறப்புச்செய் காதை 72-76
9. தண்டியலங்காரம் நூர்ற்பா -8
10. சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதை 3-6
11. மேலது ஊர்சூழ்வரி 30-32
12. மேலது புறஞ்சேரியிருத்த காதை 17-18
13. மேலது இந்திரவிழவூரெடுத்த காதை 204-207

# நா.முத்துக்குமாரின் குழந்தைகள் நிறைந்த வீட்டில் இயற்கை

**திரு. ச. அருணாச்சலேஸ்வரன்**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), நஞ்சனாபுரம், ஈரோடு*

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழ் இலக்கியமானது ஒவ்வொரு நிலையிலும் இயல்பான சொற்களுடனும் இரசனை, கற்பனை, உவமை மற்றும் ஆளுமையின் வெளிப்பாடாக விளங்குகின்றது. அவ்வழியில் இக்கால இலக்கியங்கள் பல்வேறு கட்டமைப்புகளைக் கொண்டும் தனக்கென தனி இடத்தினைத்தக்க வைத்துக் கொண்டதாகவும் உள்ளன. அதில் நா.முத்துக்குமாரின் படைப்புகள் எளிமையும் ,இரசனையும், பக்குவமும் கொண்டு விளங்குகின்றன. குழந்தைகள் நிறைந்த வீடு என்னும் கவிதைத் தொகுப்பில் ஹைக்கூ கவிதைகளாக இடம் பெற்றுள்ளன. கவிதைகள் ஒவ்வொன்றிலும் தன்னுடைய அனுபவத்தின் காட்சிகளைக் கவிஞர் நா.முத்துக்குமார் வெளிப்படுத்துள்ளார். அவ்வழியே கவிஞரின் காட்சிப்பிம்பத்தின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ள இயற்கைக் கூறுகளின்சாராம்சத்தைஆராய்வதே ஆய்வுச்சுருக்கமாக அமைகின்றது.*

## முன்னுரை

இலக்கியக் கடலில் கவிதையானது தன்னகத்தே ஈர்ப்புச்சுழலினைக் கொண்டு விளங்குகின்றது. ஒவ்வொரு கவிதையும் ஓர் ஓவியத்தைப் போன்றது. கருத்துகளை ஆழ்ச்சித்திரமாகக் கொண்டுள்ளன. கவிதைகள் மனதின் ஒவ்வொரு நிலையினையும் வெளிப்படுத்துகின்றன. சூழல், மனவோட்டம், கருத்து, உணர்வுப் பரிமாற்றம் ஆகியவற்றை தன்னூடே வைத்து கவிதைப் பேழையானது திறந்து பார்க்க ஈர்க்கிறது. கவிதைகளின் போக்கானது தனிப்பட்ட அனுபவத்தைச் சார்ந்து நகர்கின்றன. ஒவ்வொரு கவிதையும் ஏதேனும் ஒரு உணர்வை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. அதன் வழியே நா.முத்துக்குமாரின் கவிதைகளில் குழந்தைகள் நிறைந்த வீடு என்னும் கவிதைத் தொகுப்பானது ஹைக்கூ கவிதைகளைக் கொண்டு நகர்ந்து ஒரு நத்தையின் நகர்வைப் போல் மெல்ல மெல்ல நம் கவனத்தை அதன் பக்கம் ஈர்க்கின்றன. இயற்கை என்பது நம்மை ஈர்த்து நம் மனநிலையைச் சமநிலைப்படுத்தும் ஆற்றல் கொண்டது. அந்த இயற்கையின் அனைத்து வாயில்களையும் நா.முத்துக்குமார் எவ்வாறு திறந்து கவிதையினை தனது பார்வையில் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை ஆய்வதே இந்த ஆய்வின் முன்னுரையாக அமைகிறது.

## ஹைக்கூக் கவிதை – இயற்கை - நா.முத்துக்குமார்

ஒரு கவிஞரின் உள்ளமானது தனித்துவம் கொண்டது. சராசரி மனிதன் காணும் காட்சியினைப் புதிய நோக்கோடு காணுவான். அதில் அர்த்தம் ஆயிரம் இருக்கும். புதிய பரிணாமம் இருக்கும். புதிய ஆளுமை இருக்கும். ஒவ்வொரு கவிஞனின் எண்ணமும் வெவ்வேறு உலகத்தினை வெளிப்படுத்தி அதனை வாசகர் படித்து வியக்கச் செய்யும். அவ்வழியில் நா.முத்துக்குமாரும் தன்னூடே சிந்தனைச் சுரங்கத்தினை வைத்துள்ளார். அவருடைய ஹைக்கூவில் எளிமையையும் , படிப்போரை வியக்கச்செய்யும் ஆற்றலையும் காணமுடிகிறது. இயற்கையைத் தன்னகத்தே காட்சிப்படுத்தி அதனைப் புதியப் பரிணாமத்திற்கு வெளிப்படுத்தி எடுத்தாளுமைப்படுத்தியுள்ளார்.

## பூக்கள்

இயற்கை வருணனையில் பூக்கள் தனித்துக் காணப்படுகின்றன. பூக்களை இரசிக்காமல் உலகில் எவரும் இல்லை. பூக்கள் பெரும்பாலும் கவிஞர்களுக்குக் கவிதையைக் கையாள ஓர் அற்புதக்கருவி. இன்பம் மற்றும் எல்லாச் சூழல்களிலும் பூக்கள் நிலைப் பெறுகின்றன.

அந்நிலையில் கவிஞர் பூக்களில் கிராம.ஃ.போன் குழல்களைக் காண்கிறார்.

**“வேலியோரத்தில்**
**கிராம.ஃ.போன் குழல்கள்**
**ஆடாதொடைப்பூக்கள்”1**

இக்கவிதை வரிகளில் கவிஞர் வேலியோரத்தில் ஆடாதொடைப் பூக்களைக் காண்கிறார். பின்பு அதன் குழல்களைக்காண்கிறார் அது பார்ப்பதற்கு கிராம.ஃ.போன் குழல்களைப்போல் வளைந்து காணப்படுவதை உணர்கிறார். இங்கு இயற்கையை ஒரு காட்சியில் இரசிக்கின்றார் மறுபுறம் கிரா.ஃ.மபோன் குழலைகளை அதனுடன் ஒப்பிட்டு வியக்கின்றார்.

வானில் நட்சத்திரங்களை அனைவரும் இரசிப்பதுண்டு. ஆனால் கவிஞர் தரையில் விழுந்த பூக்களில் நட்சத்திரத்தினைக் காண்கிறார்,

**“காற்று பறித்துப்போட்டது**
**தரையெல்லாம் நட்சத்திரங்கள்**
**வேப்பம் பூக்கள்”[2]**

மேற்கண்ட கவிதையில் காற்றினால் வேப்பமரம் அசைவதைக் காண்கிறார் அந்தக்காற்றானது மரத்தில் உள்ள வேப்பம் பூக்களைப் பறித்துச் சிதறச் செய்வதைக் காண்கிறார். சிதறிய வேப்பம் பூக்களெல்லாம் நிலத்தில் கிடப்பதைக் காண்கிறார். இக்கவிதையின் வழி கவிஞரின் இயற்கை நேசத்தைக் காண முடிகிறது.

இதே போல் ஜப்பானியக் கவிஞர் மோரிடேகேவும் மலரினைப் பயன்படுத்தி ஹைக்கூ கவிதையை எழுதியுள்ளார்,

**“உடைந்து வீழ்ந்த மலர்**
**கிளைக்குத்திரும்புகிறது**
**அடவெள்ளைப்பட்டாம்பூச்சி”[3]**

இக்கவிதையில் பூக்களற்ற மரம் தனிமையில் இருப்பதாகக் கவிஞர் உணர்கிறார். பிறகு அங்கு ஒரு வண்ணத்துப்பூச்சி வந்து அம்மரக்கிளையின் மேல் அமர்வதைக் காண்கிறார். இங்கு மலரின் இடத்தினை வண்ணத்துப்பூச்சி சமன் செய்வதாகவும், ஒன்றை இழந்தால் அதன் இடத்தினை பூர்த்தி செய்ய மற்றொன்று வரும் என்பதை இயற்கையின் பார்வையில் காணுவதை இங்கு உணரமுடிகிறது.

**மரங்கள்**

மரங்கள் இயற்கையில் ஒரு முக்கிய அங்கமாக உள்ளன. அதே மரங்களை நா.முத்துக்குமார் தனது கவிதைத்தொகுப்பில் பல்வேறு சூழல்களில் கையாள்கிறார்.

**“பரட்டைத்தலையுடன் இலந்தை மரம்**
**முடிவெட்டுகின்றன**
**ஆடுகள்”4**

இக்கவிதையில் இலந்தை மரத்தின் இலைகள் கரடு முரடான மற்றும் அழகற்ற நிலையில் உள்ளதைக் காண்கிறார். அதனை அலங்கரிக்க ஆடுகள் அதன் இலைகளை உண்கின்றன பின்னர் அதை அழகாக்குகின்றன என்று அவர் இயற்கைக் கூறாகப் பதிவு செய்வதை இங்கு உணரமுடிகிறது.

நமக்கென்று உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் கதவு எண் உண்டு. இங்கு நமக்கு மட்டுமல்ல பறவைகளுக்கும் விலாச எண் உண்டு என்பதை,

**“பறவைக்கூட்டிற்கும்**
**விலாச எண் இருக்கிறது**
**சாலையோர மரங்களில்”[5]**

என்று சாலையோர மரங்களில் அச்சிடப்பட்ட எண் பறவைகளுக்குச் சொந்தமானது என்பதை அழகாகப் பதிவு செய்து வியப்படைய வைக்கின்றார்.

**இலைகள்**

இலைகள் என்றும் ஒரு தத்துவ மொழியாகவும் இரசனை வடிவமாகவும் கவிதைகளில் சூழ்நிலைக்கேற்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றன.

**“இலையுதிர் கால இலைகள்**
**காற்றுவரும் வரை காத்திருக்கிறது**
**பறப்பதற்கு”[6]**

மேற்கண்ட கவிதையில் நா.முத்துக்குமாரின் இயற்கை எழிலும், தத்துவார்த்த மொழியும் அடங்கியுள்ளது. இலைகள் மரத்தில் ஒரு காலம் வரை

நீடித்திருக்கின்றன. இருப்பினும் காலம் வருகையில் மரத்திலிருந்து பிரிந்து அவை கீழே விழுகின்றன. காற்று அவைகளை வேறுதிசை நோக்கிப் பயணப்படச் செய்கிறது. அதனால் இலையுதிர்கால இலைகள் காற்றிற்காகப் பறப்பதற்குக் காத்திருப்பதை விளக்கியுள்ளார்.

இதே பொருத்துடன் ஜப்பானியக் கவிஞரான இஸ்ஸாவின் கவிதையும் பொருந்துவதை காண முடிகிறது, மனிதர்களும் இலைகளைப் போல் தான் பிறப்பதும்,விழுவதும், எழுவதும் என்கிறார்.

**"ஒரு சிலரே இருப்பு**
**இலைகள் கூட அப்படித்தான்**
**விழுவதவ் வப்போது"**[7]

மேற்கண்ட கவிதையில் இயற்கையோடு மனிதரின் வாழ்க்கை பிணைந்துள்ளதை உணரமுடிகிறது.

**அருவி**

பார்ப்பவரைத் தன்னகத்தே தன்னழகினால் ஈர்க்கும் வல்லமை கொண்டது அருவி. உவமைக்கேற்ப பெண்ணாக, கூந்தலாக, தொங்கிய பாலமாக அருவி கவிஞர்களின் உணர்வுப் பிரசாதமாக அமைகின்றது. நா.முத்துக்குமார் தனது ஹைக்கூவில் அருவியின் இயற்கை எழிலை,

**"வயதான மலைக்கு**
**தாடி நிறைத்திருக்கிறது**
**அருவி"**[8]

மேற்கண்ட கவிதையில் கவிஞர் அருவியையும் மலையையும் காண்கிறார். இங்கு வயதான மலை என்பது மலையின் பழைமையைக் குறிக்கிறது. அதனை ஆணாகப் பாவித்து அதன் தாடியாக அருவியைக் காண்கின்றார் .இதன் மூலம் இயற்கையை எவ்வாறெல்லாம் கற்பனை செய்ய இயலும் என்பதை இங்கு அறிய முடிகிறது.

**மழை**

மழையினை இரசிக்காதவர் எவருமில்லை . அவ்வப்போது இயற்கைச் சீற்றத்தால் மழை ஓயாமல் பெய்ய அதனைத்தூற்றுவதும் மனித மனம்தான். புகழ்ந்த அதே மனிதனின் நா தான். இங்கு கவிஞர் நா.முத்துக்குமாரும் மழையை ஆங்காங்கே இரசிக்கவும் செய்கிறார், அதே போல் தூற்றவும் செய்கின்றார்.

**"எது எடுத்தாலும் பத்து ரூபாய் கடையில்**
**எல்லாவற்றையும் தொட்டுப்பார்க்கிறது**
**மழை"**[9]

மேற்காணும் கவிதையில், சாலையோர வியாபரிகளின் நிலையினை ஒரு புறம் பதிவிடுகிறார். மறுபுறம் இயற்கையின் சாராம்சமான மழை மேலிருந்து இறங்கி மனிதர்கள் தொட்டுப்பார்ப்பதைப் போல் மழையும் தொட்டுப்பார்த்து இரசிப்பது போல் அதனை இரசித்து பதிவுசெய்வதை இங்கு உணரமுடிகிறது.

மற்றுமொரு கவிதையில் மழையினைத் திட்டியும் தனது பாசத்தினையும் கோபத்தினையும் பதிவு செய்கிறார்.

**"இரக்கமில்லாத மழை**
**ஈர விறகுகளுடன்**
**அம்மா இருமுகிறாள்"**[10]

இக்கவிதையின் வழி முதல் வரியில் இரக்கமில்லாத மழை என்று மழையை திட்டுகின்றார். எதற்கு இவ்வளவு கோபம் என்று காணும் போது அவருடைய அம்மா ஈரவிறகுகளால் அடுப்பினை பற்ற வைக்காமல் கவலை கொள்வதால் என்பதை பதிவு செய்கிறார். இயற்கை இரசிக்கவும் செய்கிறது சோதிக்கவும் செய்கிறது என்பதை மேற்காணும் இரு கவிதைகளைக் கொண்டு நாம் உணர முடிகிறது.

**பனி**

மழைக்காலங்களில் பனியின் வருகை இயல்பு. அதனை இரசிப்பது என்பது கவிஞர்களுக்கேயான தனி இயல்பு என்பதையும், இயற்கையின் ஆழம் அளவில்லாதது அதை இரசிப்பது என்பது எண்ணிலடங்காதது என்பதை இக் கவிதையில் அறியலாம்.

**"செடி கொடிகள்**
**சிகரெட் பிடிக்கின்றன**
**பனி"**[11]

செடி கொடிகளில் பனி படர்ந்துள்ளது அவை சிகரெட் பிடிக்கின்றன அதனால் வந்த புகை பனி என்கிறார். இது வியக்கத்தக்க வகையில் அமைகின்றது.

இதே போல் மற்றொரு கவிதையில் மார்கழிப்பனியினைப் பற்றி,

**“தெருவிளக்கிற்கு**
**ஒளிவட்டம் சூட்டுகிறது**
**மார்கழிப் பனி”**[12]

என்று மார்கழிப்பனி தெருவிளக்கினில் ஒளிவட்டமாய்க் காட்சியளிப்பதைப் பகிர்கின்றார்.

இவரைப் போன்றே கவிஞர் ஜனநேசன் பனியினைப் பற்றி அழகிய ஹைக்கூ தருகிறார்.

**“ஆற்றலுக்கு வயசேது?**
**சூரியனைச் சிறை பிடிக்கும்**
**சிறிய பனி”**[13]

மேற்கண்ட கவிதையில் சூரியன் எவ்வளவு பெரிய கோளாக இருந்தாலும், பனி தன் ஆற்றல் கொண்டு சூரியனையும் தன்னூடே மறைக்கிறது என்பதை அழகாகப் பதிவு செய்கின்றார்.

**காற்று**

காற்றின் வேகம் காலநிலை மாற்றத்திற் கேற்ப தென்றலாகவும், சூறாவளியாகவும் மாறுபடுகிறது. கவிஞர்கள் காற்றினையும் இயற்கையின் சூழ்நிலைக்கேற்றவாறு கவிதை இலக்கியத்தில் கையாள்கின்றனர். நா.முத்துக்குமார்

தன் கவித்திறனால் காற்றிற்கும் படிக்கும் ஆசை உண்டு என்பதை,

**“பெரிய பெரிய வாழை இலைகள்**
**படித்துக் கிழிக்கிறது**
**காற்று”**[14]

படித்துக் கிழித்தாயா? என்று பேச்சு வழக்காறு உண்டு. அதனை அப்படியே எடுத்து காற்றும் படித்து கிழிக்கின்றது என்று இயற்கை உவமைப்படுத்தியுள்ளார்.இதன் மூலம் இயற்கை எப்படியெல்லாம் கவிஞனை ஆட்டி வைக்கிறது மற்றும் சிந்திக்க வைக்கிறது என்பதை அறிய முடிகிறது.

**முடிவுரை**

- தமிழ் இலக்கியங்கள் காலத்திற்கேற்ற வகையில் தன்னை செதுக்கித் தனித்துவத்தோடு விளங்குகிறது. தற்கால இலக்கியங்களில் ஹைக்கூ கவிதைகள் மூன்றடிகளில் ஆழமான கருத்துகளை எடுத்துரைக்கின்றன.
- இயற்கை இலக்கியங்களுக்கு ஓர் உன்னதமான ஊற்று. அதைப் பயன்படுத்தும் வண்ணம் அதன் காட்சி நிலை மாறுபடுகின்றது. சூழலுக்கு ஏற்ற வகையில் இலக்கியம் இயற்கையோடு நிலைப்பெறுகிறது.
- கவிஞர். நா.முத்துக்குமார் தனது குழந்தைகள் நிறைந்த வீடு கவிதைத் தொகுப்பில் இயற்கையினை எளிமையாகவும், அதிகமாகவும் கையாண்டுள்ளது இவ்வாய்வின் முடிவில் அறியமுடிகிறது.
- கவிஞர்.நா.முத்துக்குமார் இயற்கையை நன்கு உன்னிப்பாக கவனித்து அழகிய ஹைக்கூக் கவிதைகளைத் தந்துள்ளார். இயற்கை சார் ஹைக்கூக் கவிதைகள் ஒவ்வொன்றும் வாழ்க்கையை எடுத்துரைக்கிறது. எப்படியெல்லாம் இயற்கையை நம்மால் இரசிக்க முடியும் என்பதையும் அறிய முடிகிறது.
- கவிதை என்னும் ஊற்றில் முக்காலமும் இயற்கையின் பயன் உண்டு. நா.முத்துக்குமாரின் குழந்தைகள் நிறைந்த வீடு அதில் என்றும் மறக்க முடியாத நினைவுகள், இரசனைகள் மற்றும் சிந்தனைகளைக் கொண்டு இயற்கை வெளிப்பாட்டோடு இயல்பான நிலையில் கவிதைகள் அமைந்து உள்ளன. மேலும் ஏராளமான இயற்கைக் கூறுகள் பூக்கள், மரம், இலை, பனி, காற்று போன்றவற்றைக் கொண்டு பல்வேறு கவிதைகள் அழகிய வெளிப்பாட்டோடு பொதிந்து காணப்படுகிறன என்பதே இவ்வாய்வின் முடிவுரையாக அமைகிறது.

**தொகுப்புரை**

- கவிதை உலகில் ஒவ்வொரு கவிதைகளும் தனக்கென ஒரு தனி இடத்தை தக்கவைத்து தனியே மிளிர்கிறது. அவ்வழியில் நா.முத்துக்குமாரின் குழந்தைகள் நிறைந்த வீடு என்னும் ஹைக்கூத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள இயற்கைக் கூறுகளை இவ்வாய்வு ஆராய்கின்றது.
- பூக்கள், மரம், இலை, பனி மற்றும் காற்று போன்ற இயற்கைக் கூறுகளால் அமைந்த கவிதைகளில் எவ்வாறெல்லாம் நா.முத்துக்குமார் சூழ்நிலைக்கேற்ப அதனை வெளிக்காட்டி உணர்த்துகிறார் என்பதையும் இவ்வாய்வு ஆராய்கிறது.
- மேலும் இயற்கை வெளிப்பாடானது இலக்கியங்களில் எவ்வாறெல்லாம் கவிஞர்களின் கவிதைகளில் நின்று வெளிப்படுகிறது என்பதையும் ஆய்வதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

**அடிக்குறிப்புப் பட்டியல்.**


1. நா.முத்துக்குமார் கவிதைகள்-நா. முத்துக் குமார்-பக்கம்-117-பதிப்பு நவம்பர் 2016-பட்டாம்பூச்சி பதிப்பகம், அய்யப்பா பிளாட்ஸ், 45/21, இரு சப்பா தெரு, விவேகானந்தர் இல்லம், சென்னை.
2. நா.முத்துக்குமார் கவிதைகள்-நா.முத்துக்குமார் பக்கம்-125- பதிப்பு நவம்பர் 2016-பட்டாம்பூச்சி பதிப்பகம், அய்யப்பா பிளாட்ஸ்,45/21, இரு சப்பா தெரு, விவேகானந்தர் இல்லம், சென்னை.
3. தமிழில் ஹைக்கூ-நெல்லை சு.முத்து – பக்கம் -13- டிசம்பர் 2005 - அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், 41,கல்யாண சுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை.
4. நா.முத்துக்குமார் கவிதைகள்-நா.முத்துக்குமார்- பக்கம்-118- பதிப்பு நவம்பர் 2016- பட்டாம்பூச்சி பதிப்பகம், அய்யப்பா பிளாட்ஸ், 45/21, இரு சப்பா தெரு, விவேகானந்தர் இல்லம், சென்னை.
5. நா.முத்துக்குமார் கவிதைகள்-நா.முத்துக்குமார்- பக்கம்-123- பதிப்பு நவம்பர் 2016- பட்டாம்பூச்சி பதிப்பகம், அய்யப்பா பிளாட்ஸ், 45/21, இரு சப்பா தெரு, விவேகானந்தர் இல்லம், சென்னை.
6. நா.முத்துக்குமார் கவிதைகள்-நா.முத்துக்குமார்- பக்கம்-167- பதிப்பு நவம்பர் 2016- பட்டாம்பூச்சி பதிப்பகம், அய்யப்பா பிளாட்ஸ்,45/21, இரு சப்பா தெரு, விவேகானந்தர் இல்லம் ,சென்னை.
7. ஜப்பானிய ஹைக்கூ 400 – நால்வர் நானூறு, கவிஞர் அமரன் – இஸ்ஸா-227, முதல் பதிப்பு-2004. காவியா வெளியீடு, சென்னை.
8. நா.முத்துக்குமார் கவிதைகள்-நா.முத்துக்குமார்- பக்கம்-152- பதிப்பு நவம்பர் 2016-பட்டாம்பூச்சி பதிப்பகம், அய்யப்பா பிளாட்ஸ்,45/21, இரு சப்பா தெரு, விவேகானந்தர் இல்லம், சென்னை.
9. நா.முத்துக்குமார் கவிதைகள்-நா.முத்துக்குமார் பக்கம்-135- பதிப்பு நவம்பர் 2016 பட்டாம்பூச்சி பதிப்பகம், அய்யப்பா பிளாட்ஸ், 45/21, இரு சப்பா தெரு, விவேகானந்தர் இல்லம், சென்னை.
10. நா.முத்துக்குமார் கவிதைகள்-நா.முத்துக்குமார்- பக்கம்-169- பதிப்பு நவம்பர் 2016-பட்டாம்பூச்சி பதிப்பகம், அய்யப்பா பிளாட்ஸ்,45/21, இரு சப்பா தெரு, விவேகானந்தர் இல்லம், சென்னை.
11. நா.முத்துக்குமார் கவிதைகள்-நா.முத்துக்குமார்- பக்கம்-154- பதிப்பு நவம்பர் 2016-பட்டாம்பூச்சி பதிப்பகம், அய்யப்பா பிளாட்ஸ்,45/21, இரு சப்பா தெரு, விவேகானந்தர் இல்லம், சென்னை.
12. நா.முத்துக்குமார் கவிதைகள்-நா.முத்துக்குமார்- பக்கம்-155- பதிப்பு நவம்பர் 2016-பட்டாம்பூச்சி பதிப்பகம், அய்யப்பா பிளாட்ஸ், 45/21, இரு சப்பா தெரு, விவேகானந்தர் இல்லம், சென்னை.
13. தமிழ்ஹைக்கூ ஆயிரம், இரா.மோகன் – ஜனநேசன்–பக்கம்.75 - பதிப்பு-2017 சாகித்ய அகாதெமி- இரவீந்திர பவன், 35 பெரோஸ்ஷா சாலை, புது தில்.
14. நா.முத்துக்குமார் கவிதைகள்-நா.முத்துக்குமார்- பக்கம்-147- பதிப்பு நவம்பர் 2016-பட்டாம்பூச்சி பதிப்பகம், அய்யப்பா பிளாட்ஸ்,45/21, இரு சப்பா தெரு, விவேகானந்தர் இல்லம், சென்னை.

# நெய்தல் திணைப் பாடல்களில் பயிரினம்

**முனைவர் கு. மேனகா**
*தமிழ் உதவிப் பேராசிரியர்*
*சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி), திருநெல்வேலி*

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க கால புலவர்களுக்கு இயற்கையின் மேல் இருந்த ஈடுபாடும், இயற்கையைச் செய்யுளக்குப் பின்னணியாக அமைக்கும் முறையும் வியப்பைத் தருகின்றன. மானிட உணர்வுகளோடு இயற்கையின் எழிலை இயைபுறச் செய்வது பண்டைத் தமிழிலக்கிய மரபாகும். அத்தகைய இயற்கையினை பேணி காப்பது இன்றைய சமூகத்தின் கடமை. இயற்கையோடு இணைந்த வாழ்க்கை வாழ வேண்டுவது எல்லோரது அவசியமாகும். நெய்தல் நிலம் கடற்கரைப் பின்புலத்தை வருணிக்கும்போது நெய்தல், புன்னை, தாழை, ஆம்பல், ஞாழல், ஆகிய மலர்களும், பெண்ணைமரம். அடும்பன் கொடி, கண்டல் ஆகியவைகளும் வருணிக்கப்படுகின்றன.இப்பயிரினச் செய்திகளை விளக்கும் தன்மையில் இக்கட்டுரை அமைகிறது.*

**முன்னுரை**

சங்க இலக்கியத்தில் இயற்கை தனிப்பெரும் ஆட்சி வகித்தது. இயற்கை பற்றிய செய்திகள் சங்கப் பாடல்கள் எங்கெங்கிலும் இடம் பெற்றிருக்கின்றன. மரமும் செடி கொடிகளும் வயலின் வனப்பும் தினைப் புனத்தின் விரட்சியும் சுற்றுச்சூழலாய் அமைந்த எழிலான பாடல்கள் இலக்கியங்களில் ஏராளமான இடம் பெற்றிருகின்றன. மலை முதல் கடல் ஈறாகவும் மண் தொட்டு விண் ஈறாகவும் இயற்கை விரிந்து கிடக்கின்றது. பல்வேறு நிலங்களின் மரம்,செடி,கொடி, புதர்கள் யாவும் தத்தம் பெயரோடு தனித் தனியே குறிக்கப்படுகின்றன. சுவை நலம் பெருகும் ஈடுபாட்டோடு புலவர்கள் பயிரினங்களைப் பற்றிப் பேசுகின்றனர். நெய்தல் திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ள பயிரினம் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**இயற்கை விளக்கம்**

இயற்கை என்பது இயல்பானது; மனித சக்கதியில்லாமல் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும். இதனைத் தொல்காப்பியம்,

> **“நிலம்நீர் தீவளி விசும்பொடு ஐந்தும்**
> **குலந்த மயக்கம் உலகம்”**[1]

இவ்வைந்தும் இணைந்தது உலகம் என்று கூறுகிறது. இயற்கை என்ற சொல்லிற்கு “இலக்கணம், பான்மை, சுபாவம், வழக்கம், நிலைமை, கொள்கை”2 என்று பல பொருள்களைக் கழக அகராதியில் கூறப்பட்டுள்ளது. கௌரா தமிழ் அகராதி,“ இயல்பு, ஏது, குணம், தகுதி, திராணி, முறைமை என்று பல பொருள்களைக் கூறுகிறது”3. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி,“மனிதனால் உண்டாக்கப்படாமல் தானாகவே காணப்படும் (மலைநீர்) போன்ற பொருள் அல்லது (மழைநீர், இடி, காற்று) போன்ற சக்தி என்று பொருள் தருகிறது.”4 இவ்வாறான பல விளக்கங்களின் அடிப்படையில் “இயற்கை” என்ற சொல் நம்மைச் சுற்றியிருக்கின்ற மனிதனால் உண்டாக்கப்படாத நிலம், நீர், காற்று, வானம், தீ ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது.

**நெய்தல் திணைப் பாடல்களில் பயிரினம்**

கடற்கரைப் பின்புலத்தை வருணிக்கும்போது நெய்தல், புன்னை, தாழை, ஆம்பல், ஞாழல் ஆகிய மலர்களும், பெண்ணைமரம், அடும்பங் கொடி, கண்டல் ஆகியவைகளும் வருணிக்கப்படுகின்றன. பெரும்பாலும் சங்கப்புலவர்களுக்கு இயற்கையே

எண்ணற்ற உவமைகளை வழங்கும் சுரங்களாக அமைகின்றன.

## நெய்தல்

நெய்தல் என்பது ஒரு நீர்ப் பூங்கொடியாகும். சங்க இலக்கியத்தில் நெய்தல் என்னும் சொல் எழுபத்தினான்கு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் ஐந்து இடங்களில் நெய்தல் நிலம் என்றும், அறுபத்தொன்பது இடங்களில் பூ என்றும் வழங்கப்பட்டுள்ளது.நெய்தல் என்ற சொல் கடல் சார்ந்த இடம் என்ற பொருளைக் குறிப்பதாக ஆளப்பட்டுள்ளதை,

**"நெய்தல் இருங்கழி நெய்தல் நீக்கி"**
**(ஐங் 184: 1)**

**"பாடல் சான்ற நெய்தல் நெடுவது"**
**(சிறுபாண் 157)**

**"நெய்தல் சான்ற வளம் பல பயின்று"**
**(மதுரைக் 325)**

இவ்வடிகள் மூலம் அறியலாம்.ஏனைய இடங்களிலெல்லாம் நெய்தல் என்ற சொல் நெய்தற் கொடியையோ, மலரையோ மட்டும் குறிப்பதாகவே கையாளப்பட்டுள்ளது.

நெய்தல் கொடியானது திரண்ட தாளையும், பசிய இலையையும், நறுமணமுள்ள பூவையும் உடையதை,

**"............கழனிமா நீர்ப்**
**பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல்"**
**(அகம் 70:10-11)**

**"பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்"**
**(குறு 9:4)**

**"சிறுபாசடை நெய்தல்" (நற் 27:10-11)**

இப்பாடலடிகள் விளக்குகிறது.

**"...............நெய்தல்**
**புல்லிதழ் பொதிந்த பூத்தப மிதிக்கும்"**
**(நற் 239:6-7)**

**"நெய்தல் மாமலர்ப் பெய்தல் போல"**
**(குறு 397:2)**

**"மணிப்பூ நெய்தல் மாக்கழி நிவப்ப"**
**(அகம் 240:3)**

என்ற பாடலடிகள் நெய்தல் மலரை இவ்வாறு வருணிக்கிறது.

**"செந்நெல் அரிநர் அரியக்**
**கதிரொடும் மயங்கிக் கிடந்த நெய்தல்**
**தன்னுறு விழுமம் அறியாது மென்மெலப்**
**பசுவாய் திறக்கும்" (நற் 275:1-3)**

என்று உள்ளுறைப் பொருளுடன் விளக்கமாகப் பாடப்பட்டுள்ளது.

**பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்**
**இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்**
**கு4யம்மூழ்கு மகளிர் கண்ணின் மானும்"**
**(குறு 9:4-6)**

என்று நெய்தல் மலர் மகளிர் கண்ணோடு உவமிக்கப்படுகிறது. அவ்வாறே நெய்தல் கண்போல் பூத்தமையை,

**"கண்போல் பூத்தமை கண்டு நுண்பல**
**சிறுபாசடைய நெய்தல்" (நற் 27 : 10)**

**"இருங்கழி மலர்ந்த கண்போல் நெய்தல்"**
**(அகம் 170 : 4)**

பல பாடலில் குறிக்கப்படும்.

**"ஒண்ணுதல் மகளிர் ஓங்குகழியில்**
**கொய்த கண்நேர்ஒப்பின கமழ்நறு நெய்தலைச்**
**சிறுமனை அணியும்" (நற் 283:1-3)**

என்று ஒரு பாடலில் வருணிக்கப்படுகிறது. தலைவன் தேர்ச் சக்கரம் நெய்தலைச் சிதைத்த செய்தியை,

**"வாள்முகந் துமிப்ப வள்ளிதழ் குறைந்த**
**கூழை நெய்தலு முடைத்திவண்"**
**(குறு 227 : 2-3)**

**"நுதிமுகம் குறைந்த பொதிமுகிழ் நெய்தல்"**
**(அகம் 160 : 13)**

இப்பாடலடிகள் மூலம் அறியலாம். மேலும் இதன் இலை யானைக் கன்றின் காதிற்கும், இதன் முகிழ் மாணாக்கர் குடுமிக்கும் உவமையாகக் கூறுவதை,

**"....... இரும்பிடி**
**நெய்தல் அம்பாசடை புரையும் அஞ்செவிப்**
**பைதலங் குழவி தழீஇ"**
**(நற் 47 : 1-3)**

**"நெய்தல் முகிழ்ந்துணை யாங்குடுமி மாணாக்கர்" (சிறு 30:1-3)**

இவ்வடிகள் கூறுகிறது. நெய்தல் பூ விடியர்காலையில் மலரும்; மாலையில் குவியும்.

**"வைகறை மலரும் நெய்தல் போல" (ஐங் 188:3)**

**"வள்ளிதழ் நெய்தல் கூம்பப் புள்ளுடன்**
**……………………………………….**
**புலம்பொடு வந்த புண்கண் மாலை" (நற் 117:3-7)**

என்ற அடிகள் நெய்தல் மலர் பூக்கும் காலத்தைப் புலப்படுத்துகிறது. நெய்தல் நில மகளிர் இம்மலரைத் தழையுடையாகவும், மாலையாகவும் செய்து அணிவித்ததை,

**"கொடுங்கழி நிவந்த நெடுங்கால் நெய்தல்**
**அம்பகை நெறித்தழை அணிபெறத் தைஇ" (நற் 96 : 7-8)**

**"நெய்தல் அம்பகைத் தழைப் பாவை புனையாா**
**ஊடலகம் கொள்வோர் இன்மையின்**
**தொடலைக்கு உற்ற சில பூவினரே" (ஐங் 187:3-5)**

**"பாசலிடைக் கலித்த கணைக்கால் நெய்தல்**
**விழவணி மகளிர் தழையணிக் கூட்டும்" (அகம் 70:11-12)**

இவ்வடிகள் மூலம் அறியலாம். "இம்மலரில் கருநிறமுடைய சாதி கருநெய்தலென்றும், வெண்ணிறமுடைய சாதி வெண்ணெய்த லென்றும் வழங்கப்படுகிறது."5 என்கிறார் முத்துக் கண்ணப்பன். கருநெய்தற் பூவுக்கு நீலமணியும், அதனிதழுக்கு மகளிர் கண்ணும் உவமையாக வருகின்றதை,

**"ஒள்நுதல் மகளிர்…….**
**கண்நேர் ஒப்பின் கமழ் நறு நெய்தல்" (நற் 283:1-2)**

**"…………….நெய்தல்**
**கூம்புவிடு நீகர் மலர் அன்ன**
**ஏந்தெழின் மழைக்கண் எம்காதலி" (அகம் 83:13-14)**

இவ்வடிகளில் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் நீலமலரும், கருநெய்தலும் ஒன்றாக இருக்கலாமோ என எண்ணம் தோன்றினாலும்,

**"கட்கமழு நறுநெய்தல்**
**வள்ளிதழ் நிலம்" (மதுரைக் 250,251)**

**"பல்லிதழ்**
**நிலமொடு நெய்தல் நிகர்க்கும்" (ஐங் 2-4)**

இவ்வடியின் மூலம் நீலமும், நெய்தலும் வெவ்வேறானவை என்பது உறுதியாகின்றது. நெய்தல் மலர் நீலநிறமானது; மணி போன்ற நிறத்தையுடையது; மையுண்ட கண் போன்றது என்று பல பாடல்கள் குறிப்பிடுகின்றன.

**புன்னை**

மரங்கள் மனித வாழ்வாதாரத்தின் உயிர் நாடியாக விளங்குகின்றன. சங்க காலப் புலவர்கள் போற்றிப் பாடிய மரங்களில் புன்னைமரம் இயல்பாய் வாழுமிடம், புன்னையின் கிளைகள், இலைகள், மொக்குகள், பூக்கள். மகரந்தத் தாது, காய்கள் ஆகியவற்றைக் கண்டுணர்ந்து சங்கப் புலவர்கள் பாடியுள்ளனர்.

"கடற்கரையோரத்தில் ஒரு சில மரங்களே வளரக்கூடியவை. கடற்கரைக்குச் சிறிது தள்ளிக் காணப்படும் கானலில் (Littoral wood land) வளரும் மரங்களில் மிகவும் எளிதாகவும், பொதுவாகவும் காணப்படுவது புன்னை மரமென்று செடி நூலார் கருதுகின்றனர்."[6]

புன்னையைத் தன் தங்கை எனக் கருதி அதன் நிழலில் தலைவனைச் சந்திக்கத் தலைவி நாணும் நிலையை நற் 172 பாடலில் காணலாம். புன்னை மரத்தின் அழகினைக் கூறும்பொழுது புன்னை மரம் இரும்பைப் போன்ற நிறமுடைய கரிய கிளைகளை உடையது. நீலம் போன்ற பசிய இலைகளை உடையது. அவ்விலைகளில் வெள்ளி போன்ற மலர்ந்து விளங்கும் பூங்கொத்துகளின் நடுவிலிருந்து பொன்துகளை ஒத்துத் தோன்றும் மணமுடைய மகரந்தம் உதிரும். புலியினது மேற்புறம் போன்று புள்ளியைக் கொண்டும் நல்ல நிறம் கொண்டு பூக்களின்

மணத்தைப் பெற்றும் அமைந்த மேற்பரப்பையுடைய, வரியையுடைய வண்டுகள் அவை புன்னை மலர்களில் வந்து தேன் பருகும். அங்ஙனம் நுகர்ந்த போது எழுந்த வண்டின் இசையைப் புலியின் ஓசையோ எனத் தேரில் பூட்டப்பெற்ற குதிரைகள் அஞ்சும் பல முறை இழுத்து நிறுத்தவும் நில்லாததாய் விரைவாக இயங்கும் குதிரையின் கால்கள் பந்தினைப் போலத் தாவின. இத்தகைய வளமுடைய சேரியில் கல்லென்றும் ஓசையுடன் தோன்றியது என்பதை,

**“இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை**
**நீலத்து அன்ன பாசிலை அகம் தொறும்**
**வெள்ளி அன்ன விளங்கு இணர் நாப்பன்**
**பொன்னின் அன்ன நறுந் தாத உதிர”**

**(நற் 249:1-4)**

என்ற பாடலின் மூலம் நெய்தல் நிலத்தின் இயற்கை வளத்தினை அறியமுடிகிறது.

மரல்மொக்குளைப் போன்ற புன்னையின் அரும்புகள் வாய் அவிழ பொன் போன்ற தாதுபடுபல்மலர் சூடுவோர் பறித்த மலர்போக எஞ்சியவை பசுங்காயாகக் காய்த்துத் தொங்கும் என்பதை,

**“படுகால் நாறிய பராஅரைப் புன்னை**
**அடுமரல் மொக்குளின் அரும்புவாய் அவிழப்**
**பொன்னின் அன்ன தாதுபடு பன்மலர்**
**சூடுநர் தொடுத்த மிச்சில் கோடுதொறு**
**நெய்கனி பசுங்காய் தூங்கும்”**

**(நற் 278:1-5)**

நற்றினை 278 ம் பாடல் வருணிக்கிறது.

**“மண்ணாமுத்தம் அரும்பிய புன்னை”**

**(அகம் 30:13)**

என்று புன்னை அரும்புக்கு முத்து உவமை கூறப்படுகிறது.

### தாழை

நெய்தல் நில வருணனையில் தாழை சிறப்பிடம் பெற்றுள்ளது. நெய்தல் நிலத்தின் புன்புலால் நாற்றத்தை மாற்றி நறுமணம் கமழ்ந்து, நலம் பயந்து நிற்பது தாழை. “கண்டல், கைதை என்னும் பெயர்களாலும் தாழை வழங்கப்படுகிறது.”[7] என்கிறார் உ.வே. சாமிநாதையர். தாழைமலர் குருகிற்கு உவமையாகப் பல இடங்களில் பேசப்படுகிறதை,

**“வீழ்தாழ் தாழை ஊழுறு கொழுமுகை**
**குருகுளர் இறகின் விரிபுதோடு அவிழும்”**

**(குறு 228:1-2)**

**“………………அல்கலும்**
**தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்**
**குருகென மலரும்”** **(குறு 226:4-5)**

இப்பாடலடிகள் மூலம் அறியலாம். தாழை வேலியாக இருப்பதை,

**“வாள்போல் வாய கொழு மடல் தாழை”**

**(குறு 245:3)**

**“அரவுவாள் வாய முள்ளிலைத் தாழை”**

**(நற் 235:2)**

இவ்வடிகள் விளக்குகிறது. சுறாவின் கோடு போன்ற முள்ளிலையுடைய தாழை பெருங்களிற்று மருப்புப் போல் அரும்பு முதிர்ந்து மானின் உளை போல வேறுபடத்தோன்றி மணம் பரப்புவதாக,

**“சுறவுக்கோட்டு அன்ன முள்ளிலைத் தாழை”**

**(நற் 19:2)**

நக்கண்ணையர் பாடுகிறார். தாழையின் முள்ளிலை சுறா, யானை மருப்புக்கு உவமிக்கப்படுவதை,

**“திரைமுதிர் அரைய தடந்தாள் தாழைச்**
**சுறவுமருப்பு அன்ன முள்தோடு”**

**(நற் 131:4-5)**

**“உருகெழு யானை உடைகோடு அன்ன**
**ததர்பிணி அவிழ்த்த தாழை”**

**(நற் 299:1-2)**

என்ற அடிகள் மூலம் அறியலாம்.

### அடும்பு

இது கடற்கரை மணற்பரப்பில் பரந்து கிடக்கும் கொடியாகும். இது அடம் என்றும், அடம்பங்கொடியென்றும் வழங்கப்பெறும். இதன் இலை பிளவுப்பட்டிருக்கும். இதன் கொடி சற்று செந்நிறமாக இருக்கும். சிறிது மங்கிய கருநிறமுடைய கொடி வகையடும்பும் உண்டு. இதன் பூ வெண்ணிறமாகவும், மங்கிய செந்நிறமாகவும், மணி போன்ற வடிவினையுடையதாயும் இருக்கும். “கடற்கரைப்

பகுதியில் வளரும் ஒரு வகைக்கொடி. இதனை அடம்பங்கொடி, அடப்பங்கொடி என்றும் கூறுவர். இதன் பூ வெண்ணிறம் பெற்றுக் காண்பதற்கு அழகாய் இருக்கும். இலைகள் கவரப்பட்டு மான் குளம்பு போலக் காட்சி தருகின்றன. இதன்கொடி சிவந்திருக்கும்''8 என்று ஔவைத் துரைச்சாமிப்பிள்ளை கூறுகிறார்.

அடும்பு மலரை மகளிர் கூந்தலில் அணிந்துக் கொள்வதையும், நெய்தல் மலரோடு கலந்து சூடுவதையும்,

**"அடும்பின் ஆய்மலர் வரைஇ நெய்தல்**
**நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்**
**மகளிர்" (குறு 401:1-3)**

இப்பாடலடி விளக்குகிறது. மேலும் மானினது அடிபோல பிளவுப்பட்ட இலையினையும், குதிரைக் கழுத்திலணியும் மணி போன்ற வடிவமைந்த மலரினையும் உடையது.

**"மான் அடி யன்ன கவட்டிலை அடும்பின்**
**தார் மணி யன்ன ஒண் பூ"**
**(குறு 243:1-2)**

இவ்வடிகளில் அடும்பின் இலையையும், மலரினையும் வருணிக்கிறார் நம்பிகுட்டுவன் எனும் புலவர்.

**ஞாழல்**

நெய்தலுக்குரிய மற்றொரு சிறந்த மரம் ஞாழல். ஞுழல் என்பது புலிநகக்கொன்றை என்றே பெரிதும் வழங்கப்படுகிறது.அதன் நுனியிலே சற்று வளைந்து புலிநகம் பொல இருப்பதால் இது புலிநகக்கொன்றை என்று அழைக்கப்படுகிறது. இது கொன்றை வகையைச் சார்ந்ததாகும். கடற்கரையிலே ஞாழல் மலரும், புன்னை மலரும் மிகுதியாக உதிர்ந்து பரந்து நிறைந்து கிடக்கும் நிலையானது வெறியாடல் நிகழும் களத்தை ஒத்துக் காட்சியளிக்கும் என்பதனை,

**"இலங்கு நீர்ப்பரப்பின்**
**நறுவீ ஞாழலொடு புன்னைதா அய்**
**வெறியர் களத்தினின் தோன்றும்"**
**(குறு 318: 1-3)**

என்ற குறுந்தொகைப் பாடலடிகள் விளக்குகிறது.

**கண்டல்**

கண்டல் என்று வழங்கப்பெறுவது தாழையே. இக்கருத்தைப் பின்வரும் அடிகள் உறுதிப்படுத்துகின்றன.

**"கண்டல் வேலி நும் துறை" (நற் 54:11)**
**"கண்டல் வேலிக் காமர் சிறுகுடி"**
**(நற் 191:5)**
**"கண்டல்வேலிக் கழி நல்லூரே"**
**(நற் 372:13)**

கண்டல் பெரும்பாலும் வேலியாகவே பயன்படுத்தப்பட்ட செய்தியினையும் இவ்வடிகள் கூறுகின்றன. மேலும அலை மோதும் அடியினையுடைய கண்டல் மரத்து வேரின் கீழ் ஆணும் பெண்ணுமாக இரண்டு செந்நண்டுகள் இருந்ததைத் தலைவியும், தோழியும் கண்டு களித்த செய்தியும் சுவை பயப்பதாக உள்ளது.

**முடிவுரை**

தொன்மை தமிழிலக்கியங்களாகிய சங்கப் பாடல்களில் இயற்கை பல கோணங்களிற் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது. இயற்கை தன் ஆற்றலால் மனித வாழ்க்கையைக் கவரவும் மாற்றவும் வல்லது என்ற உண்மை புறப்பாடல்களை விட அகப்பொருட் பாடல்களில் தான் மிகத் தெளிவாகப் புலப்படுகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்.மரபு – 91,ப.453, தொல்காப்பியம், பாரி நிலையம், சென்னை –1961.
2. கழக அகராதி, ப.114, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 1964.
3. கௌரா தமிழ் அகராதி, ப.118, கௌரா பதிப்பகம், 2017.
4. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப, 268, ராயப்பேட்டை மெயின் ரோடு, சென்னை - 1992
5. தி.முத்துக்கண்ணப்பன், சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம், ப.22, அதிபக்தர் பதிப்பகம், சென்னை – 1978.

6. பி.எல்.சாமி,சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம். ப.122, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை –1967.
7. உ.வே.சாமிநாதையர், குறுந்தொகை மூலமும் உரையும் ஆராய்ச்சி, ப.41, கேசரி அச்சுக் கூடம், சென்னை - 1937
8. ஔவைத் துரைச்சாமிப்பிள்ளை, ஐங்குறுநூறு மூலமும் விளக்கமும், ப.302, அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, தொகுதி -1, சென்னை – 1957.

# கயமனார் பாக்களில் – திணையும் துறையும்

**முனைவர் சா. கணேசன்**

*உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்*

*செந்தமிழ்க்கல்லூரி, மதுரை*

## ஆய்வு அறிமுகம்

சங்க அகஇலக்கியத்தில் பாலைப் பாடல்களை மிகவும் சிறப்பாகப் பாடியவர் கயமனார் ஆவார். சங்கப் புலவர்களுள் உவமையால் பெயர் பெற்ற புலவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கயமனார். அவர்தம் இருபத்து மூன்று பாடல்களுள் புலம்பல் ஒன்றையே மையப் பொருளாகக் கொண்டு பாடியுள்ளார். இவ்வாறு அமைந்த பாடல்கள் அனைத்தும் பாலைத் திணையிலேயே அமைந்துள்ளன.

## கயமனார் பெயர்க் காரணம்

ஆங்கில இலக்கியத்தில் பாடலடிகள், தொடர்கள், உவமைகள், அரிய சொல்லாட்சிகளால் புலவர்கள் பெயர்களைப் பெற்றுள்ளனர். இந்த இலக்கிய மரபினை டி.எஸ்.எலியட் தனது 'தேர்வு செய்யப்பட்ட கட்டுரைகள்' (T.S.Eliot, Selected Essays P.17)[1] என்ற நூலில் சுட்டிக் காட்டியுள்ளார்.

கயமனார் என்னும் பெயர் அவருடைய பாடலின் உவமை ஒன்றால் பெறப்பட்டதாகும். 'கயமூழ்கு மகளீர் கண்ணின் மானும்' என்பது அவ்வடியாகும். மரபின்படி இப்பெயர் 'கயமூழ்கு கண்ணியார்' என்றோ, 'கயமூழ்கு மகளீரார்' என்றோ இருத்தல் வேண்டும். ஒருவேளை காலச் செலவில் இப்பெயர் அளவிற் சுருங்கிக் "கயமனார்" என்றாகி இருக்கக்கூடும். இதனால் அப்பெயரின் பழைமை தற்செயலாக வெளிப்படுகின்றது.

'கயம்' என்பது குளத்தினைக் குறிக்கும் ஒரு சொல். இது புலவரின் இயற்பெயராய் இருக்காது என்றும், குறுந்தொகைப் பாடலில் (9) வரும் ஒரு காட்சியே புலவருக்கு இப்பெயரை அளித்திருக்க வேண்டும் என்றும் உய்த்துணர இடமுள்ளது. உப்பங்கழியில் நெய்தல் மலர்கள் பூத்துள்ளன. அம்மலர்களின் காம்பு இலைகளுக்கு மேல் உயர்ந்து தோன்றுகின்றது. அலை பெருகி வந்து வெள்ளம் மிகும் போதெல்லாம் நெய்தல் மலர்கள் மறைந்து தோன்றுகின்றன. குளத்திலே பலகால் மூழ்கி மூழ்கி எழும் மகளிரின் கண்களைப் போல் காட்சி அளிக்கின்றனவாம்; கழியில் மறைந்து மறைந்து தோன்றும் நெய்தல் மலர்கள்,

> ***"பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்***
> ***இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்***
> ***கயமூழ்கு மகளீர் கண்ணின் மானும்"***
>
> (*குறுந்*.9)

இக்காட்சியைச் சொல்லோவியத்தில் காண்போர் தம் மனக்கண்ணில் 'கயம்' சிறப்பானதோர் இடத்தைப் பெறுகின்றது. இச்சிறப்பினால் பாடலைப் பாடிய புலவர் 'குளம் பாடிய புலவர்' என அழைக்கப்படும் வகையில் கயமனார் ஆனார்.

"கயமனார் என்னும் பெயர் 'கய' என்னும் உரிச் சொல்லடியாகப் பிறந்த சொல், பெரியவர் என்பது இதன் பொருள் (மொ.அ.துரை, அரங்குசாமி, சங்ககாலச் சிறப்புப் பெயர்கள்: பக்:20-21) [2] என்பது ஔவை சு.துரைசாமிப் பிள்ளையின் விளக்கம் ஆகும்.

சங்ககாலச் சிறப்புப் பெயர்களை ஆராய்ந்துள்ள மொ.அ.துரை அரங்கசாமி 'கயமனார்' என்னும் பெயர் பற்றிக்கூறும் கருத்துக்கள் இங்கே சிறப்பாகக் குறிக்கத் தக்கவையாகும். "கயமனார் என்ற பெயர் பிற இலக்கியச் சிறப்புப் பெயர்களைப் போல் அன்றித் தனி வகையாக அமைந்துள்ளது. சிறப்புப் பெயர் 'கயமூழ்கு மகளீரார்' என்று

அமைவதுதான் இயல்பு அல்லது மூழகு என்பதை விடுத்து, 'கயமகளீரார்' என்றோ 'கய மகளார்' என்றோ வழங்கலாம். குளத்தின் சிறப்பை மட்டும் வலியுறுத்த வேண்டுமெனின் 'கயத்தார்' என்றே வழங்கலாம். 'கயமகளார்' என்ற சொல்லில் உள்ள 'ளா' என்ற எழுத்து 'னா்' எனத் தவறாக ஒலிக்கப்பட்டுக் 'கயமகளார்' என்பது கயமகனார் என மாறி இருக்கலாம். பழங்காலத்தில் இந்த இரண்டெழுத்துகளும் நெடில் என அறிவித்தற்கு இவற்றுக்குப் பக்கத்தில் ஒரு சிறிய செங்குத்தான கோடே (ள/ன/) இடப்பட்டது. எனவே அவ்வகையில் 'ளா' என்பது 'னா' வாகத் தவறான முறையில் கருதப்படுவதற்கு இடமுண்டு. இவ்வாறாயின் கயமனார் என்பதன் இடையில் உள்ள ககரம் படி எடுப்போரால் விடப்பட்டதெனக் கொள்ளல் வேண்டும். கயமனார் என்பதை விடக் கயமகனார் என்பதே பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

தொல்காப்பியர் காலம் முதல் வழங்கி வரும் விதிப்படி **கயம்** என்ற மகரவீற்றுச் சொல் விகுதிகளோடு சேரும்போது, ஈற்று மகரங்கெட்டு அத்துச்சாரியை பெறும். கயமனார் என்ற சொல் வடிவம் தொல்காப்பியர் காலத்திற்கு முந்தியதாகவும் இருக்கலாம். தெலுங்கில் வழங்குவது போலும் ஒரு மரபை உடைய தமிழ்ப் பேச்சு மொழியொன்றனைச் சேர்ந்ததாகவும் இருக்கலாம். தெலுங்கு மொழியில் மகரவீற்றுச் சொற்கள் 'ஆர்' விகுதியோடு சேரும் போது, மகரம் கெடாது நின்று 'அன்' என்ற சாரியை பெற்றபின் ஆர் விகுதியோடு சேரும். இன்று நமக்குக் கிடைத்துள்ள தமிழ் இலக்கண விதிகளைப் பயின்றவர்க்குக் கயமனார் என்ற சொல்லுக்கு முடிவு கூறுவது கடினமேயாகும் என்று ஒப்புக் கொள்ளவே வேண்டியிருக்கிறது" என்று விரிவாகக் கூறுகின்றார்.

## இலக்கியத்தில் கயமனார் பாக்கள்

கயமனார் இருபத்து மூன்று பாடல்களின் ஆசிரியர். அவர் எட்டுத்தொகை நூல்களுள் குறுந்தொகையில் நான்கு பாடல்களும் (9, 356, 378, 396), நற்றிணையில் ஆறு பாடல்களும் (12, 198, 279, 293, 305, 324), அகநானூற்றில் பன்னிரண்டு பாடல்களும் (7, 17, 145, 189, 195, 219, 221, 259, 275, 321, 383, 397), புறநானூற்றில் ஒரு பாடலும் (254) பாடியுள்ளார்.

## திணை - விளக்கம்

பாடுபொருள் தளத்தின் முதல் உறுப்பாகத் தரப்படுவது திணை. இதன் பொருள்நிலம், குடி, ஒழுக்கம் என்பதாகும். தொல்காப்பியர் இவற்றின் பெரும் பிரிவு மற்றும் அவற்றின் உட்பிரிவுகளைக் குறிக்க இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

திணை என்னும் பெயர் முதலில் நிலத்தைக் குறிக்கப் பயன்பட்டிருக்கக் கூடும். பிறகு அதன் பொருள் குடி, ஒழுக்கம் என்பதற்கும் ஆகியிருக்கக்கூடும். இருப்பினும் இச்சொல் நிலத்தையே பெரிதும் இடமாகக் கொண்டு செய்யுள்களில் குறிக்கப்பட்டமையான், தொல்காப்பியரும் நிலத்திற்கும் அந்நில மக்களின் வாழ்வியல்சார் ஒழுகலாறுகளுக்கும் இச்சொல்லினைப் பயன்படுத்தியிருக்கக்கூடும். மலைபடுகடாம் என்னும் நெடும்பாடலில் 'தொல்திணை மூதூர்' (மலைபடுகடாம் : 4-1) [3] என்றும் மதுரைக் காஞ்சியில் ஐந்து நிலங்களைக் குறித்த வருணனை முடிவில் 'ஐம்பால் திணையும்' (மதுரைக்காஞ்சி, 326) [4] என்றும் குறிக்கப் பெற்றுள்ளன.

செய்யுளுறுப்புகளைத் தொகுத்துக் கூறும் தொல்காப்பியம், திணையை அவற்றுள் ஒன்றாகச் சுட்டும் (நக்கீரர் உரை, இறையனார் அகப்பொருள்)[5]. பின் வந்த இறையனார் களவியல் உரை,

> ***"ஒழுக்கத்தினைத் திணை என்பாரும் நிலத்தினைத்***
> ***திணை என்பாரும் என இரு பகுதியர் ஆசிரியர்***
> ***அது பொருந்தாது ஒழுக்கமே திணை எனப்படும்***

*குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமும்*
*குறிஞ்சி எனப்பட்டது. எண்ணெய் விளக்காகிய*
*சுடர் இருந்த இடனும் விளக்கு எனப்பட்டது போல"*

**(நக்கீரர் உரை, இறையனார் அகப்பொருள்)**

என விளக்கி, ஒழுக்கத்தைத் திணை என்கின்றது. நிலத்தைத் திணை எனக் கொண்டால் கைக்கிளை, பெருந்திணை ஆகியன விடுபட்டு போகின்றன. எனவே நக்கீரர் உரைவழி, ஒழுக்கத்தைத் திணை எனக் கொள்வது பொருத்தமாக உள்ளது.

இருப்பினும் ஒழுக்கமே திணை எனக் கொண்டதால் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் எனப் பெயரிட்டு இருக்கலாமே ஏன் குறிஞ்சித்திணை, முல்லைத் திணை எனப் பெயரிட வேண்டும் என எண்ணத் தோன்றுகின்றது. இதற்கு இளம்பூரணரது உரை தீர்வு காண்கிறது. "நடுவண் ஐந்திணை என்பவை யாவை எனில் முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்பனவாம். அகமும் புறமுமாகிய உரிப்பொருள் கூறுகின்றாராதலான் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என அமையுமே எனின், புறப்பொருட்கண் நிரைகோடலை வெட்சி எனக் குறியிட்டு ஆளுமாகலான் ஈண்டு இப்பொருளையும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என ஆளும் என்க" (இளம்: தொல் பொருள்.2)[6] என்ற தொல்காப்பியரது இலக்கியக் கோட்பாட்டைத் தெளிவுபடுத்தி அகப்பொருளில் அக்குறியீட்டின் பயனைக் கீழ்க்காணுமாறு விளக்குவர்.

*"இதனாற் பயன் என்னையெனின் உரிப்பொருளே*
*திணையென உணர்த்துவராயின் முதற்பொருளும்*
*கருப்பொருளும் திணையாதல் தோன்றாதாம்*
*அவையெல்லாம் அடங்குதற்பொருட்டு முல்லை*
*குறிஞ்சி பாலை மருதம் நெய்தல் என்றார்"*

***(தொல். பொருள். 310)***

எனவே தொல்காப்பியர் 'திணை' என்ற சொல்லை அகத்திற்கும், புறத்திற்கும் பொதுவானதாகவும், அகத்தோடு புறத்தைச் சார்த்திக் கூறும் தனது இலக்கணக் கோட்பாட்டைத் தெளிவுபடுத்தவும், அன்பின் ஐந்திணையுள் காணப்படும் முதல் கரு உரி ஆகிய மூன்றையும் உள்ளடக்கிக் காட்டும் வகையிலும் பயன்படுத்தியுள்ளார் என்பது புலனாகும்.

ஒழுக்கத்திணைக் கூறுவது திணையாகும். ஐந்து திணைகளிலும் வரையறுக்கப்பட்ட ஒழுக்கத்தில் பாலையானது இங்கு பேசப்பட்டுள்ளது. பாலையானது நடுவணது என்றும் நடுவுநிலைத்திணை என்றும் தொல்காப்பியரால் கூறப்பெறும். இவ்விரண்டு சொற்றொடர்களும் 'பொதுத்திணை' என்ற பொருளுடையன. தொல்காப்பியர் ஏனைய நான்கு திணைகளுக்கும் நிலம் குறிக்கப்பட்டு உள்ளமையைக் கூறுவதால், பாலைத்திணை அவற்றுக்குப் பொது என்பது குறிப்பான் உணர்த்தப் பெறுகின்றது.

இவ்வாறு அமைந்துள்ள பாலைப் பாடல்கள் இருவகைப் பாடுபொருளைக் கொண்டு அமைந்துள்ளன. முதலாவது தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள் சேர்க்கச் செல்வதற்கான பிரிவைக் கூறுவது. இப்பொருளுடையனவாக 422 பாக்கள் உள்ளன. இரண்டாவது தலைவி தலைவனோடு சேர்ந்து தன் பெற்றோரை நீங்கித் தலைவன் ஊர்க்குச் சென்று அவனை மணத்தலைக் கூறும் உடன்போக்கு குறித்து 108 பாடல்கள் உள்ளன. பாலைத் திணையில் 'பொருள்வயிற் பிரிதலே' முதன்மையாகக் கூறப்படுகின்றது.

1859 என்ற எண்ணிக்கையில் வரையறுக்கப் பட்டுள்ள அகப் பாடல்களில் 530 பாடல்கள் பாலைக்கு உரியவை ஆகும். தனிப்பாடல்கள் தொகைநூலாக அமைந்தவற்றுள் பாலைப் பாடல்கள் குறுந்தொகை, நற்றிணை,

அகநானூற்றில் முறையே 90, 104, 200 பாடல்கள் உள்ளன. தொகையாகத் தொகுக்கப்பட்டவற்றுள் ஐங்குறுநூற்றிலும் கலித்தொகையிலும் முறையே 100, 35 பாடல்கள் உள்ளன. பத்துப் பாட்டுள் 'பட்டினப்பாலை' என்ற நெடும்பாடல் உள்ளது. இவ்வாறு பாலைத்திணைப் பாடல் இருக்கின்ற நிலையில் அவற்றினைப் பல்வேறு புலவர்கள் தனித்த நிலையிலும், ஒருசில பாடல்களும் பாடியுள்ளனர். தனித்த நிலையில் 23 பாடல்களைப் பாடிய கயமனாரின் பாடல்கள் இங்கு ஆய்வுக்குக் களமாக அமைந்துள்ளன.

**துறை - விளக்கம்**

பாடும்பொருளின் கட்டமைப்பு உறுப்புகளிலும் 'துறை' என்ற ஒன்றைத் தொல்காப்பியர் தருகின்றார் (செ.ஜீன்லாரன்ஸ், கு.பகவதி: தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் (க.க), ப.47)[7]. இச்சொல்லையும் புறத்திணையியல் தரும் துறை என்ற சொல்லையும் ஒரு பொருளினவாகக் கொண்டு இதனைத் திணை என்ற உறுப்பிற்கு அடுத்ததாக இடம் பெயர்த்துத் திணை என்பதைப் பாடல் சூழலமைதி என்றும், துறை என்பதைப் பொருட்கூறு என்றும் அறிஞர் கைலாசபதி கூறுவதாக இந்திரா மனுவேல் (செ.ஜீன்லாரன்ஸ், கு.பகவதி: தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் (க.க), ப.59)[8] எடுத்துக்காட்டுகின்றார். ஆயின் செய்யுளியல் தரும் துறை பேராசிரியர் குறிப்பிடுவது போல் கருப்பொருள் தேர்வில் புலவனுக்குக் கூடுதல் உரிமை நல்கும் ஒரு கூறு எனக் கொள்வதே பொருந்தும்.

தொல்காப்பியர் செய்யுளுறுப்புக்களுள் ஒன்றாகத் துறையைச் சுட்டுவார். அத்துறை அகம், புறம் ஆகிய இரண்டுக்குமுரியது. சங்க இலக்கியம் அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். காலப்போக்கில் அகத்தில் உள்ள துறைகள் தமிழ் இலக்கிய உலகில் செல்வாக்குப் பெற்று வளர்ச்சியடையத் தொடங்கின. அகத்துறைகளை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றது இவ்விலக்கியமாகும்.

சங்க இலக்கியத்தில் காட்சி, ஐயம், தெளிவு, குறிப்பறிதல், நாணிக்கண் புதைத்தல், பாங்கற்கூட்டம், கையுறை, குறியிடங்கூறல், இற்செறித்தல், வெறிவிலக்கல், அறத்தொடு நிற்றல், உடன்போக்கு, ஏறு தழுவுதல், காமம் மிக்க கழிபடர் கிளவி, தூது, மாலை வேண்டல், கூடலிழைத்தல், மடல், பரத்தையற்பிரிவு ஆகிய துறைகள் காணப் படுகின்றன. இவ்வாறு சொல்லப்பட்ட துறைகளில் கயமனாரின் பாலைத்திணைப் பாடல்களில் இடம் பெற்றுள்ள உடன்போக்குத் துறை பற்றி இங்கு ஆராயப்படவுள்ளன.

பாலைத்திணையின் ஒரு பிரிவான உடன்போக்குத் துறையானது களவின் ஒரு பகுதியெனக் கருத முடிகின்றது. களவென்பது குறிஞ்சி, நெய்தல் நிலங்களில் உள்ள மக்களுக்குப் பொதுவாக உரியதாகலின் உடன்போக்கும் அவர்களுக்கே உரிய சிறப்புப் பண்பாகும். பிரிவுக்குரிய பாலைத் திணைக்குரியதாக உடன்போக்குக் கூறப்பட்ட கருத்துக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும். தலைவன், தலைவி இருவரும் உடன்போக்கிற் செல்வது பிரிவாகாது. எனினும் தலைவி தன் பெற்றோரையும் தோழியரையும், ஊரையும் விட்டுப் பிரிகிறாள். எனவே அவள் உள்ளத்தில் ஒரு பிரிவு உணர்வு உள்ளது. மேலும் பல பாடல்களில் தாயாரின் (நற்றாய், செவிலி) அன்பு நேயமும் கொண்ட மகளின் திடீர்ப்பிரிவு குறித்துச் சொல்லப்படாத துயரங்கள் ஆகியன இத்துறையின்கண் கூறப்பெறும்.

**உடன்போக்கு கூற்றில் மாந்தர்கள்**

பாலைத்திணையின் ஒரு பிரிவான உடன்போக்கில் ஐந்து உறுப்பினர் பங்கு பெறுவர். இவற்றுள் தலைவன் கூற்றாக 14 பாடல்களும், தலைவி கூற்றாக 7 பாடல்களும்,

தோழி கூற்றாக 14 பாடல்களும், காண்போர் கூற்றாக 2 பாடல்களும், தாயார் கூற்றாக 59 பாடல்களும் உள்ளன. மகளின் உடன்போக்கால் ஆழ்ந்து துயருற்றுக் கூறுவதால் தாய்க்குப் பேரிடம் அளிக்கப் பெற்றுள்ளது.

கயமனாரின் பாடல்களில் இருபது பாடல்கள் உடன்போக்கு பற்றிக் கூறுகின்றது. இவற்றுள் 17 பாடல்கள் செவிலி மற்றும் நற்றாய் கூற்றாவனவாக உள்ளது.

**கயமனார் பாடல்களில் கூற்று**

கயமனார் பாடியுள்ள 22 அகப்பாடல்களுள் செவிலி அல்லது நற்றாய் கூற்றாவன பதினேழு. தோழி கூற்றாவன நான்கு. இடைச்சுரத்துக் கண்டோர் அல்லது தலைமகன் கூற்றாவது ஒன்று. கயமனாரின் அகப்பாடல்களில் தலைவி கூற்று இடம் பெறவில்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

**குறுந்தொகையில் கூற்றுகளின் எண்ணிக்கை**

- பா.எண்.9 - தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது
- பா.எண்.356 - மகட்போக்கிய செவிலித்தாய் உரைத்தது.
- பா.எண்.378 - மகட்போக்கிய செவிலி தெய்வத்திற்குப் பராயது
- பா.எண்.396 - மகட்போக்கிய தாய் உரைத்தது.

**நற்றிணையில் கூற்றுகளின் எண்ணிக்கை**

- பா.எண்.12 - தோழி உடன்போக்கு அஞ்சுவித்தது.
- பா.எண்.198 - பின் சென்ற செவிலி இடைச் சுரத்துக் கண்டார்க்குச் சொல்லியது.
- பா.எண்.279 - மகட்போக்கிய தாய் சொல்லியது
- பா.எண்.293 - தாய் மனை மருண்டு சொல்லியது. வரிடந்தாரைக் கண்டு சொல்லியதூஉம் ஆகும்.
- பா.எண்.305 - நற்றாய் தோழிக்குச் சொல்லியது
- பா.எண்.324 - தலைமகன் பாங்கற்குச் சொல்லியது. இடைச் சுரத்துக் கண்டோர் சொல்லியதூஉம் ஆகும்.

**அகநானூற்றில் கூற்றுகளின் எண்ணிக்கை**

- பா.எண். 7 - மகட்போக்கிய செவிலித்தாய் சுரத்திடைப் பின் சென்று நவ்விப் பிணாக் கண்டு சொல்லியது.
- பா.எண்.17 - மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.
- பா.எண்.145 - மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.
- பா.எண்.189 - மகட்போகிய நற்றாய் சொல்லியது.
- பா.எண்.195 - மகட்போக்கிய நற்றாய் சொல்லியது.
- பா.எண்.219 - மகட்போக்கிய தாய் சொல்லியது.
- பா.எண்.221 - தலைமகற்குப் போக்கு உடன்பட்ட தோழி தலை மகட்குப் போக்கு உடன்படச் சொல்லியது.
- பா.எண்.259 - உடன்போக்கு நேர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.
- பா.எண்.275 - மகட்போக்கிய தாய் சொல்லியது.
- பா.எண்.321- மகட்போக்கிய செவிலி சொல்லியது.
- பா.எண்.383 - மகட்போக்கிய தாய் சொல்லியது.
- பா.எண்.397 - மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது.

புறநானூறானது மார்பில் புண்பட்டுக் கிடந்த தன் கணவனின் உடலைக் கண்டு மனைவி கூறியதாக அமைந்துள்ள (254)வது பாடல், முதுபாலைத் துறையைச் சார்ந்த மனைவியின் புலம்பல் நிலையினதாகும்.

**கயமனார் பாடல்களில் உடன்போக்குப் பாத்திரங்களும் செயல்பாடும்**

தலைவி காதலிக்கும் போது தலைவனை மணக்க முடியாத நிலை ஏற்படின் அல்லது அவளை அவளுடைய பெற்றோர் யாருக்காவது மணம் முடிக்கத் முற்படுவார்களாயின் அல்லது தலைவனைச் சந்திக்க முடியாதவாறு தாயாரால் இற்செறிக்கப்படுவாளாயின் அவள் தோழியின் உதவியோடு தலைவனின் ஊருக்குச் செல்வாள். அங்கு அவளுக்குத் திருமணத்திற்கு முற்பட்ட 'சிலம்பு கழி நோன்பினை'யும் வதுவை மணத்தையும் நிகழ்த்துவர். இவ்வாறு அவள் தலைவனுக்கு முறையாக மணம் செய்து வைக்கப் பெறுவாள். இதனை,

*"அதர் உழந்து அசையின கொல்லோ - ததர்வாய்ச்*
*சிலம்பு கழி இய செல்வம்*
*பிறகுழைக் கழிந்த என் ஆயிழை"*

*(நற்-279)*

எனும் நற்றிணைப் பாடல் எடுத்துக் கூறுகின்றது.

தோழியே உடன்போக்கிற்குரிய கருத்தை அறிவுறுத்துபவள் ஆவாள். சுரவழியில் யாதொரு துன்பமும் ஏற்படாதவாறு பாதுகாத்தும், வழிநடை வருத்தம் தோன்றாதவாறு அன்பு பாராட்டி அரவணைத்தும் தலைவன் உன்னை அழைத்துச் செல்வான் என்று தோழி குறிப்பாகப் புலப்படுத்துகின்றாள்.

*"கயிற்று இரை பிழைத்தலின் கயவாய் வேங்கை*
*காய்சினம் சிந்து குழுமலின் வெரீஇ*
*இரும்பிடி இரியும் சோலை*
*அருஞ்சுரம் சேரல் அயர்ந்ததனன் யானே"*

*(நற்:221)*

என தோழியின் வழி உடன்போக்கானது நிகழ்கின்றது.

ஆனால் தன் மகளின் உடன்போக்குக் குறித்துக் கூறும் அவள் தாய் பாலை வழி குறித்தும், கடுங்கோடை குறித்தும் மெல்லடியை உடைய தன் மகளின் அழகு குறித்தும் கவலை கொள்கிறாள். அவள் 'கடுங் கோடைப் பருவத்தே தலைவன் கொடும்பாலை வழியே கூட்டிச் சென்றான். மெல்லியளாகிய என் மகள் எவ்வளவு துன்பங் கொள்வாளோ' என்று கூறுகிறாள்.

*"அருஞ்சுரம் இறந்தனள் என்ப"*

*(அகம் : 145)*

என்று தலைவி சென்ற பாதையைச் சுட்டிக் காட்டுகிறார் கயமனார்.

மற்றொரு காட்சியில் தலைவியின் தாய் தன் மகளின் உடன்போக்குக் குறித்து வருந்துகையில் கடுங்கோடைப் பருவம் ஏற்ற பின்னணியாகக் காட்டப் பெறுகின்றது.

*"வேர் முழுது உலறி நின்ற புழங்கால்*
*தேர்மணி இசையின் பின்வீடு ஆர்க்கும்*
*வற்றல் மரத்த பொன்தலை ஓதி*
*பெயறகவின் இழந்த வைப்பின் பையுள் கொள*
*நுண்ணிதின் நிவக்கும் வெண் நென வியன்காட்டு*
*ஆள் இல் அத்தத்து அளியள் அவனொடு"*

*(அகம்:145)*

உயர்ந்து வற்றி நின்ற வற்றல் மரத்தினைப் பற்றிக் கொண்டு ஓந்தியானது சில்வண்டு ஒலிக்கத் துன்பமுற்று மெல்ல மெல்ல மரத்தின் மீது ஏறினாற் போல, வலிய வில்லை உடைய இளையர் நீங்கத் தனித்து வந்த தலைமகனைப் பற்றிக் கொண்டு தலைமகள் தோழியர் கூட்டமும் அயலாரும் அழுது புலம்ப, வருத்தமுற்று மெல்ல மெல்லச் சுரம் கடந்தார் என்று கூறப்படுகின்றது. இவ்வாறாக இளவேனிலும் கோடையுமாகிய பருவங்கள் உடன்போக்காகிய ஒரே நிகழ்வுக்குப் பொருந்துவனவற்றைப் பின்னணிகளாகச் சித்திரிக்கின்றார்.

தலைவியின் தாய் தன்னைவிட்டுத் தன்மகளைப் பறித்துச்சென்ற தலைவனின் தாய் மீது மிக்கச் சினமும் பழிவாங்கும் இயல்பும் கொண்டவளாய் அவளைச் சாபமிடுகிறாள் என்று கயமனார் பாடல் எடுத்துரைக்கின்றது (நற்.293).

தாய் தன் மகள் மீது எல்லையற்ற அன்புடையவளாக இருக்கிறாள். மிக்க சினத்திற்கும் துயரத்திற்கும் இடையிலும் அவள் அக்கறையுடையவளாய் "தன் காதலனோடு என் மகள் செல்லும் பாலை வழியில் மழையும் மழைத்தூற்றலும் இருத்தல் வேண்டும்" எனவும், "அவ்வழி உதவி செய்வோர் உடையதாகுக" எனவும் வேண்டுவதாகக் கூறப்படுகின்றது.

***"ஞாயிறு காணாத மாண் நிழற் படீஅய***
***மலைமுதல் சிறுநெறி மணல்மிகத் தாஅய***
***தண் மழை தலைய வாகுக - நம் நீத்திச்***
***சுடர்வாய் நெடுவேற் காளையோடு***
***மடமா அரிவை போகிய சுரனே"***

***(குறு:378)***

செவிலித்தாய், பாலை நிலம் நிழலும் நீரும் தந்து இக்காதலர்களின் பயணத்திற்குத் துணை புரிய வேண்டும் எனத் தெய்வங்களை வழிபடுகின்றாள்.

**முடிவுரை**

சங்க அகப்பாடல் புலவர்களுள் உவமையால் பெயர் பெற்ற புலவர் கயமனார். இவரது பாடல்கள் உடன் போக்குத் துறையினை மையமாகக் கொண்டுள்ளது அவை யாவும் பாலைத்திணைப் பாடல்கள் ஆகும். குறுந்தொகையில் ஒன்பதாவது பாடலின் கருத்தினைக் கொண்டு 'கயமனார்' என்று பெயர் பெற்ற நிலையினைச் சான்று கொண்டு அறிய முடிகின்றது. தொகை நூல்களுள், குறுந்தொகை, அகநானூறு, நற்றிணை, புறநானூறு ஆகியவற்றினுள் கயமனார் பாடிய பாடல்களின் எண்ணிக்கை பகுத்துக் காட்டப்பட்டுள்ளன. மேலும் திணை, துறை விளக்கங்களும் அதனுள் கயமனார் பாடல்கள் பெறுகின்ற தன்மையினையும் சான்றுகள் வாயிலாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. கயமனார் பாடல்களில் கூற்றுகளின் எண்ணிக்கையும், பாடலடிகளும் பேசப் பட்டுள்ளன. கயமனார் பாடல்களில் பெரும்பாலும் உடன்போக்கு பற்றிப் பேசப்படுவதால், யார் யார் முன்னிலையில் கூற்றுகள் நிகழ்கின்றன என்பது பற்றியும், அவர்களின் செயல்பாடுகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

**துணைநூற் பட்டியல்**


1. இளம்பூரணர், (உ.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி, 1953.
2. மாணிக்கம், வ.சுப., தமிழ்க்காதல், பாரி நிலையம், சென்னை, 1962.
3. நக்கீரனார், இறையனார் அகப்பொருள், கழக வெளியீடு, 1958.
4. நச்சினார்க்கினியர், (உ.ஆ.), தொல்காப்பியம் பொருளதிகாரம், திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1984.
5. வரதராசன், மு., நெடுந்தொகைச் செல்வம், பாரிநிலையம், சென்னை, 1954.
6. வரதராசன், மு., பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, பாரி நிலையம், சென்னை, 1964.
7. செ.ஜீன்லாரான்ஸ், கு.பகவதி (பதி.ஆ.), தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், (கருத்தரங்கக் கோட்பாடுகள்), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.
8. Cuddon, J.A., Dictionary of Literary Terms, Andue Deutsch Limited, London, 1977.

# ஜெயமோகனின் யானை டாக்டர் சிறுகதையில் இயற்கைப் பதிவு

**முனைவர் பா. நேருஜி**
*உதவிப் பேராசிரியர், செந்தமிழ்க்கல்லூரி*
*தமிழ் உயராய்வுமையம், மதுரை*

சிறுகதையின் வாயிலாகப் படைப்பாளன் தன் எண்ணத்தின் கருத்துக்களை அனுபவங்களை எதிர்பார்ப்புக்களை எழுத்துக்களின் வாயிலாகப் பதிவுசெய்து சமுதாயத்தின் கால ஓட்டத்தில் தன் சமுதாயக் கடமையை நிறைவேற்றுகின்றான். அவ்வக்காலத்திய நடைமுறைகளை அறிய பின்னவர்களுக்கு அது சிறந்த பாடமாக அமைகிறது. சமுதாயத்தில் ஒருமாற்றம் புரட்சி என்பதான கருத்து உருவாக மனிதனின் தவறுகள் திருத்தப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. ஜெயமோகனின் யானை டாக்டர் சிறுகதையில் காட்டில் வாழும் விலங்குகளுக்கு மனிதர்களால் ஏற்படும் தீங்குகள் பற்றிய பதிவு அவை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஆதங்கம் இடம் பெற்றுள்ளது. மேலும் காட்டில் வாழும் உயிரினங்களான கருங்குரங்கு, ஓநாய், மான், கரடி மற்றும் பிற உயிரினங்கள் புழு பூச்சி போன்ற அனைத்தும் பேசப்பட்டுள்ளது. காட்டில் இறந்த விலங்குகளின் உடற்கூறு பரிசோதனை செய்யப்படும் பொழுது அவற்றின் இறப்பு இயற்கையானதா? பிற விலங்குகளால் தாக்கப்பட்டு இறந்ததா? நோய்த்தொற்றால் இறந்ததா? மனிதர்களால் வேட்டையாடப்பட்டு இறந்ததா? என்பதை அறியமுடியும் என்று கூறப்பட்டுள்ளது. அதில் பெரும்பாலும் அவற்றிற்கு மனிதர்களால் இறப்பு நிகழ்வதும் மற்றும் அவை துன்பத்திற்குள்ளாவதும் போன்ற செயல்பாடுகள் மிக சாதரணமாக நடைபெறுகிறது என்ற உள்ளத்தைச் சுடும் உண்மை பதிவு செய்யபட்டுள்ளது.

## மனிதனின் கீழ்மைத் தன்மைகள்

டாக்டர் கே குறிப்பிடும் பொழுது மனிதனின் கீழ்மைகளை ஒவ்வொரு நாளும் முகத்திலறைந்தது போலப் பார்க்க வேண்டும் என்றால் நீங்கள் காட்டில் இருக்கவேண்டும். அனேகமாக இங்கே சுற்றுப்பயணம் வருபவர்கள் படித்தவர்கள், பதவிகளில் இருப்பவர்கள். ஊரில் இருந்தேவறுத்த, பொரித்த உணவுகளுடனும் மதுக்குப்பிகளுடனும் தான் வருவார்கள். வரும் வழிதோறும் குடித்துக் கொண்டும், தின்றுகொண்டும் இருப்பார்கள். வாந்தி எடுப்பார்கள். மலைச்சரிவுகளின் மௌனவெளியைக் காரின் ஆரனை அடித்துக் கிழிப்பார்கள். முடிந்தவரை உச்சமாககார் ஸ்டீரியோவை அலறவிட்டுக் குதித்து நடனமிடுவார்கள். ஓங்கிய மலைச்சரிவுகளை நோக்கிக் கெட்ட வார்த்தைகளைக் கூவுவார்கள்.

ஒவ்வொரு காட்டுயிரையும் அவர்கள் அவமதிப்பார்கள். சாலை ஓரத்துக் குரங்குகளுக்குக் கொய்யாப் பழத்தைப் பிளந்து உள்ளே மிளகாய்ப்பொடியை நிரப்பிக் கொடுப்பார்கள். மான்களை நோக்கிக் கற்களை விட்டெறிவார்கள். யானை குறுக்கேவந்தால் காரின் ஆரனை உரக்க அடித்து அதை அச்சுறுத்துவார்கள். என்னால் எத்தனை யோசித்தாலும் புரிந்துகொள்ள முடியாத விஷயம் காலிமதுக்குப்பிகளை ஏன் அத்தனை வெறியுடன் காட்டுக்குள் வீசிஎறிகிறார்கள் என்பது. வண்டிகளை நிறுத்திச் சோதனையிட்டு மதுக்குப்பியுடன் இருப்பவர்களை இறக்கி பெல்டைக் கழற்றி வெறியுடன் ரத்தம் சிதற அடித்திருக்கிறேன். ஜட்டியுடன் கடும்குளிரில் அலுவலகம் முன்னால் அமரச் செய்திருக்கிறேன். ஆனாலும் காட்டுச்சாலையின் இருபக்கமும் குப்பிச் சில்லுகள் குவிவதைத் தடுக்கவே முடிவதில்லை என்றுதன் ஆதங்கத்தை வெளிப்படுத்துவார்.

**குப்பி உடைசலால் யானைக்கு ஏற்படும் அபாயம்**

டாக்டர் கே எதைப் பற்றிய பேச்சைத் தொடங்கினாலும் அதற்குள் யானை பற்றிய கருத்துக்கள் சிறிது நேரத்தில் வந்துவிடும். மற்ற எந்த மிருகத்தை விடவும் யானைக்கு மிக அபாயகரமானது அந்தக் குப்பி உடைசல். யானையின் அடிக்கால் ஒருமணல் மூட்டை போன்றது. குப்பிகள் அனேகமாக மரத்தில் மோதி உடைந்து மரத்தடியிலேயே கிடக்கும். யானை அதன் மகத்தான எடையுடன் அதன்மேல் காலை வைத்தால் குப்பிநேராக அதன் பாதங்களுக்குள் முழுக்கப் புகுந்துவிடும். இருமுறை அதுகாலைத் தூக்கிவைத்தால் நன்றாக உள்ளே செல்லும். அதன் பின்னால் யானை நடக்கமுடியாது. இரண்டே நாட்களில் காயம் சீல் வைக்கும். புழுக்கள் உள்ளே நுழையும். புழுக்கள் சதையைத் துளைத்து, சீலை உள்ளே கொண்டு செல்லும். முக்கியமான குருதிப் பாதைகளையோ எலும்பையோ அவை தொட்டுவிட்டதென்றால் அதன்பின் யானை உயிருடன் எஞ்சாது.

வீங்கிப்பெருத்துச் சீழ் வழியும் கால்களுடன் பலநாட்கள் யானைகாட்டில் அலையும். ஒரு கட்டத்தில் நடமாடமுடியாமலாகும் போது ஏதாவதுமரத்தில் சாய்ந்து நின்றுவிடும். ஒரு நாளில் முப்பதுலிட்டர் தண்ணீர் குடித்து இருநூறு கிலோ உணவு உண்டு ஐம்பது கிலோமீட்டர் நடந்து வாழவேண்டிய உயிர் அப்படி ஐந்து நாட்கள் நின்றால் மெலிந்து உருக்குலைந்துவிடும். முதுகு எலும்பு மேலே துருத்தும். கன்ன எலும்புகள் புடைத்தெழும். காது அசைவது குறையும். மந்தகம் தாழ்ந்து தாழ்ந்து வரும். மெல்ல துதிக்கையைத் தரையில் ஊன்றும். அடுத்த நாள் பக்கவாட்டில் சரிந்து வயிறு பாறைபோல மறுபுறம் எழுந்து நிற்க விழுந்து கிடக்கும். வாலும் துதிக்கையும் மட்டும் சுழல, கண்களை மூடித் திறந்தபடி நடுங்கிக் கொண்டிருக்கும். பிற யானைகள் அதைச் சூழ்ந்து நின்று தலையாட்டிப் பிளிறிக் கொண்டிருக்கும். அதன்பின் யானைசாகும்.

**காட்டின் பேரரசன் யானை**

சாகும் யானையின் கடைசித் துதிக்கை அசைவும் நின்ற பின்னரும் கூடப் பலநாள் யானைக் கூட்டம் சுற்றி நின்று கதறிக் கொண்டிருக்கும். பின்னர் அவை அதைஅப்படியே கைவிட்டுப் பல கிலோமீட்டர் தள்ளி முற்றிலும் புதிய இன்னொரு இடம் நோக்கிச் சென்றுவிடும். யானையின் தோலின் கனம் காரணமாகச் சடலம் அழுகாமல் இந்தக் காட்டில் எந்தமிருகமும் அதைச் சாப்பிட முடியாது. அழுகியயானையைச் செந்நாய்கள் முதலில் தேடிவந்து வாயையும் குதத்தையும் மட்டும் கிழித்து உண்ணும். பின்னர் கழுகுகள் இறங்கி அமரும். கழுதைப் புலிகள் கூட்டம் கூட்டமாக வெகுதொலைவிலிருந்து தேடிவரும். மனிதனை விட நூற்றி எழுபதுமடங்கு அதிக நியூரான்கள் கொண்ட மூளை உடையகாட்டின் பேரரசன் வெறும் வெள்ளெலும்புகளாக மண்ணில் எஞ்சுவான்.

**யானைக்கு மருத்துவ சிகிச்சையளிக்கச் செல்லல்**

காட்டின் அதிகாரி கூறும்பொழுது, ஒருமுறை முதுமலையில் ஒருயானைக்குக் கால்வீங்கி அதுகாட்டில் அலைவதாகத் தகவல் வந்தபோது டாக்டர். கேயுடன் நானும் சென்றேன். காட்டுக்குள் அந்த யானை இருக்குமிடத்தை குறும்பர்கள் ஏற்கனவே கண்டு வைத்திருந்தார்கள். அவர்களை ஏற்றிக்கொண்டு ஒரு ஜீப்பில் காட்டுக்குள் நுழைந்தோம். அதுவும் பழங்காலக் குதிரைப்பாதை தான். நெடுந்தூரம் சென்றபின் ஜீப்பை நிறுத்திவிட்டு நானும் டாக்டரும் காட்டுக்குள் சரிவிறங்கிச் சென்றோம். துப்பாக்கியுடன் இரு வனக்காவலர்களும் மற்ற பொருட்களுடன் இரு குறும்பர்களும் கூட வந்தார்கள்.

**யானையின் காயத்துக்குக் காரணம் மனுஷங்கதான்**

டாக்டர். கே தன் கருவிகளை எடுத்திப் பொருத்திக் கொண்டார். சிறிய ஏர்கன் போன்றஒன்று. அதில் மாத்திரையே குண்டாக இருக்கும். யானையைக் கூர்ந்து தொலைநோக்கியால் கவனித்தார். அதன்

எடையை அவதானிக்கிறார் என்று தெரிந்தது. எடைக்கு ஏற்பத்தான் அந்த யானைக்கான மயக்க மருந்து அளவைத் தீர்மானிக்கமுடியும். டாக்டர். கே முழுமையாகத் தனக்குள் மூழ்கிவேலை செய்ய ஆரம்பித்தார். கருவிகளைப் பொருத்திக் கையில் எடுத்துக் கொண்டதும் 'நீங்க இங்க இருங்க… நான் போய்ப் பாக்கறேன்' என்றார். 'யானை பெரியமரத்தடி பக்கத்திலே நின்னிட்டிருக்கு. கீழே விழுந்தா அடிபட்டிரும். அதக் கொஞ்சம் சதுப்புக்குக் கொண்டு வரணும். மத்த யானைகளுக்கு நான் என்ன செய்யப்போறேன்னு தெரியாது. அதனால அதுங்க ரெஸிஸ்ட் பண்ணும்' என்றார். 'யானைகளுக்குத் தெரியுமா, இந்தக் காயத்துக்குக் காரணம் மனுஷங்க தான்னு' கண்டிப்பா… ரொம்ப நன்னா தெரியும்' 'அப்போ என்ன பண்றது?' என்றேன் 'பாப்போம்' என்றார்.

**யானை தலையைக் குலுக்கி எச்சரித்தல்**

டாக்டர். கே மெதுவாகக் கீழே இறங்கி ஓடையைக் கடந்து சேற்றுப் பரப்பில் இறங்கினார். யானைகள் அழுந்த நடந்து உருவான குழிகள் கால் உள்ளே போகுமளவுக்கு ஆழமாக, நெருக்கமாகப் படிந்திருந்தன. அவற்றின் விளிம்புகளில் கால் வைத்து மெதுவாக அவற்றை நெருங்கினார். யானைகளின் நடுவே நின்ற பெரிய பிடியானை உரக்க உறுமியது. அதைக்கேட்டு மற்றயானைகளும் பிளிறின. ஒரு யானை டாக்டர். கேயை நோக்கித் திரும்பியது. அதன் காதுகள் வேகமாக அசைந்தன. தலையை வேகமாகக் குலுக்கிய படி மேலும் தலையைக் குலுக்கி எச்சரிக்கை விடுப்பதுபோல உறுமிக் கொண்டு இன்னும் இரண்டடி முன்னால் வந்தது.

**மத்தகத்தைத் தாழ்த்தி எச்சரித்தல்**

யானை தலையைக் குலுக்கினால் அது எச்சரிக்கிறது, தாக்குவேன் என்கிறது என்று தான் அர்த்தம். டாக்டர். கே அசையாமல் சில நிமிடங்கள் நின்றார். யானையும் அசையாமல் நின்றது. பிறயானைகள் மொத்தமும் உடலால் அவரைக் கவனிக்கின்றன என்று தோன்றியது. டாக்டர். கே மேலும் முன்னே சென்றார். இப்போது அந்த யானை நெருங்கி வந்தது. ஆனால் தலையைக் குலுக்கவில்லை. மத்தகத்தை நன்றாகத் தாழ்த்தியது. அதுவும் எச்சரிக்கை அடையாளம் தான். டாக்டர். கே சீராக அதைநோக்கிச் சென்று அதன் முன் நின்றார். அது பேசாமல் நின்றது. நெடுநேரம் ஆகிவிட்டதென்று தோன்றியது. என்ன நடந்தது என்றே தெரியவில்லை. அந்த யானை பின் வாங்கியது. பெரிய பிடியானை திரும்பி டாக்டா. கே-யைப் பார்த்து உறுமிய பின் வாலைச் சுழற்றி வைத்துக் கொண்டது. பின்பு ஒவ்வொரு யானையாக மேலே ஏறி மறுபக்க மலைச்சரிவில் மூங்கில் கூட்டங்களுக்குள் சென்றன. கடைசியானையின் வால்சுழற்சியும் பச்சை இலைகளுக்குள் மறைவதுவரை நம்பமுடியாமல் பார்த்துக் கொண்டு நின்றேன். டாக்டர் கையைத் தூக்கி எங்களிடம் வரும் படி சைகை காட்டினார். நானும் பிறரும் ஓடைக்குள் இறங்கிச் சென்றோம்.

**யானையை மயக்கமுறச் செய்தல்**

வனக்காவல் அதிகாரியின் கூற்று, காயம் பட்ட யானை எங்களைக் கண்டதும் கோபத்துடன் தலையைக் குலுக்கி முன்னால் வரமுயன்றது. பின்புமெல்லப் பிளிறிவிட்டு அங்கேயே நின்றது. டாக்டர் எங்களை மேலும் அருகே வரச்சொன்னார். வனக்காவலர்கள் நின்று விட்டார்கள். நானும் குறும்பர்களும் மட்டும் முன்னால் சென்றோம். யானை சட்டென்று சாய்ந்திருந்த மரம் அதிர நிமிர்ந்து எங்களை நோக்கி வந்தது. அதன் பின்னங்கால் வீங்கி மற்றகால்களை விட இருமடங்காக இருந்தது. அதைக் கிட்டத்தட்ட இழுத்துத்தான் அது முன்னகர முடிந்தது.

யானை நாலடி முன்னால் வந்ததும் டாக்டர் அதைச் சுட்டார். மாத்திரை அதன் தோளுக்கு மேல் பதமான சதையில் புதைந்ததும் யானை உடல் அதிர்ந்து அப்படியே நின்றது. காதுகளை அசைப்பது

நின்றது. பின்பு வேகமாக அசைக்க ஆரம்பித்தது. அந்த அசைவு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. முன்காலைக் கொஞ்சம் வளைத்து ஆடியது, சட்டென்று பக்கவாட்டில் விழுந்து சேற்றை அறைந்து புல்மேல் சாய்ந்தது. துதிக்கை புல்மேல் ஒரு தனிவிலங்கு போலப் புரண்டது. துதிக்கையின் நுனிமட்டும் தூக்கி சிறிய நாசிக்குமிழ் அசைய எங்களை வாசம் பிடித்த பின் யானை அசைவிழந்தது.

**யானைக்கு மருத்துவ சிகிச்சை**

டாக்டர். கே யானையின் அருகே அமர்ந்து சுறுசுறுப்பாக வேலையைத் தொடங்கினார். நான் அவருக்கு உதவினேன். எங்களைச் சுற்றிசுற்றி மூங்கில் காடுகளுக்குள் யானைகள் எங்களையே கூர்ந்து நோக்கிக்கொண்டு நிற்பதை உணர்ந்தேன். என் முதுகுமேல் குளிர்ந்த பனிக்காற்று போல அவற்றின் பார்வையை அறிந்தேன். ஏதாவது ஒரு கணத்தில் அந்த யானைகளுக்கு நாங்கள் தவறாக ஏதோசெய்கிறோம் என்று தோன்றினால் என்ன ஆகும்?.

யானையின் காலில் பாதிபீர்புட்டி ஒன்று முழுமையாக உள்ளே ஏறியிருந்தது. அதை சுற்றிசீழ் கட்டி. சீழில் புழு வைத்து சிறுதேன்கூடு போலப் பெருக்கோடியிருந்தது. கத்தியால் டாக்டர் அந்தப் பெருக்கை வெட்டியதும் பெரிய தயிர்க்கலயம் உடைந்தது போலச் சீழ் வெளியே கொட்டியது. தேன்கூடு போலச் சிறிய துளையறைகளுக்குள் வெண்புழுக்கள் நெளிந்தன. டாக்டா அந்தச் சீழ்பட்ட சதையை முழுமையாகச் சிறிய கோடாலி போன்ற கருவியால் வெட்டிஎடுத்தார். மொத்தசீழையும் வெட்டிவீசியபின் பீர்க்குப்பி ஆழப்பதிந்திருந்த சதையைக் கத்தியால் அறுத்து எடுத்துவீசிக் காயத்தை நன்றாக விரித்துப் புட்டியை உருவி எடுத்தார். ஆச்சரியமாக இருந்தது. கிட்டத்தட்ட என் கையளவு பெரியபுட்டிஎன்று வன அதிகாரி குறிப்பிடுவதாக அமைந்துள்ளது.

**அடையாயசிக்னல் கம்மல் குத்துஅணிவித்தல்**

'ஒருவாரம் கூட ஆகலை, பொழைச்சுது' என்றார் டாக்டர் கே. புட்டியை உருவியதும் மேலும் சீழ் கொட்ட ஆரம்பித்தது. அந்தப் பகுதிச் சதையை முழுக்கவெட்டி, சீவி எடுத்து வெளியே கொட்டினார். சீழ் வாடை குறைந்து குருதிவாடை எழஆரம்பித்தது. குருதி ஊறி சிவப்பாகப் புண்ணை நனைத்து வழிந்து பின் குமிழியிட ஆரம்பித்ததும் தலையணை அளவுக்கு பஞ்சை எடுத்து அதில் மருந்தை நனைத்து உள்ளே திணித்து இறுக்கி வைத்துப் பெரிய பேண்டேஜ் நாடாவால் சுற்றிக்கட்டினார். அதன் பசை இறுக்கமாக ஒட்டிக்கொண்டது. அதன் காலின் கூடாரத் துணிபோன்ற தோலின் மீது சிறிய எவர்சில்வர் கிளிப்புகளைக் குத்தி இறுக்கிமுடிந்தார். அதன் மேல் கீழே கிடந்த கரியசேற்றை அள்ளிநன்றாகப் பூசி மூடினார்.

யானையின் காதில் அதைத் திரும்பவும் கண்டுபிடிப்பதற்கான சிக்னல் கம்மலைக் குத்தி அணிவித்துவிட்டு எழுந்தோம். எங்கள் உடைகளும் கைகளும் முழுக்கரத்தமும், சீழுமாக இருந்தது. புழுக்களை உதறிவிட்டுப் பொருட்களைச் சேகரித்துக்கொண்டு கிளம்பினோம். திரும்பவந்து ஓடையில் கைகளைக் கழுவிக் கொண்டிருந்தபோது பிளிறல் ஒலியுடன் யானைகள் ஒவ்வொன்றாக இறங்கிவந்து அந்த யானையைச் சூழ்ந்து கொண்டன. அந்த யானைப்பாட்டி கீழே கிடந்த யானையின் காலில் பெரிதாகத் தெரிந்த பாண்டேஜைத் துதிக்கையால் தடவிப் பரிசோதனை செய்துமெல்லப் பிளிற மற்றயானைகளும் பிளிறின. சில யானைகள் அப்பகுதியில் பரவிக்கிடந்த குருதியைத் துதிக்கையால் மோப்பம் பிடித்தன. ஒரு யானை அங்கேநின்று காதுகளைமுன்னால் தள்ளி எங்களைப் பார்த்தது.

**யானைக்குப் பொதுவா வெள்ளைநிறம் புடிக்காது**

'பேண்டேஜை அவுத்திராதில்ல?' என்றேன். 'அதுக்குத் தெரியும்' என்றார். 'ஆனா

யானைக்குப் பொதுவா வெள்ளைநிறம் புடிக்காது. சேறுபூசலைன்னா நிம்மதியில்லாம காலைநோண்டிண்டே இருக்கும்.' 'குணமாயிடுமா?' என்றேன். 'அனேகமா பதினஞ்சு நாளிலே பழையபடி ஆயிடும். யானையோட ரெஸிஸ்டென்ஸ் பயங்கரம். சாதாரண ஆண்டிபயாட்டிக் கூட அபாரமாவேலை செய்யும்' என்றார். முதுமலையில் இருந்து மீண்டும் டாப்ஸ்லிப்புக்குக் காரில் திரும்பும் போது டாக்டர். கே சொன்னார் 'என்ன ஒருடிவைன் பீலிங். என்னிக்காவது தமிழ்நாட்டிலேயானை இல்லாமப் போனா அப்றம் நம்ம பண்பாட்டுக்கே என்ன அர்த்தம்? மொத்தசங்க இலக்கியத்தையும் தூக்கிப் போட்டுக் கொளுத்திர வேண்டியது தான்.

**யானை மீன்படுசுடர் ஒளிவெரூஉம்**

சங்க இலக்கியங்களிலே பொதுவா நேச்சர் பத்தின டிஸ்கிரிப்ஷன்ஸ் சரியாத் தான் இருக்கும்… ஆனா கபிலர் கொஞ்சம் மேலே போவார். பாத்தியா, 'சிறுதினை காக்கும் சேணோன் ஞெகிழியின் பெயர்ந்தநெடுநல் யானைமீன்படுசுடர் ஒளிவெரூஉம்' 'தினைப்புனம் காக்கக்கூடிய குறவனோட பந்தத்திலே இருந்து விழுந்த தீப்பொறியப் பாத்துப் பயந்த யானை நட்சத்திரங்களைப் பாத்தும் பயந்துக்குமாம்' 'யானைக்குமட்டுமில்லை, அத்தனை மிருகங்களுக்கும் அந்தமாதிரி விஷயங்களிலே தெளிவு உண்டு. ஒருபொம்மைத் துப்பாக்கிய ரெண்டாவது வாட்டிகொண்டுபோனா குரங்கு கண்டுபிடிச்சிரும். டேப் ரிகார்டரிலே இன்னொரு யானையோட குரலை ரெக்கார்ட் பண்ணிப் போட்டா யானை முதல்ல கேக்கிறச்சயே கண்டுபிடிச்சிரும் என்று டாக்டர். கே குறிப்பிடுகிறார்.

**காட்டைப் புரிந்துகொள்ளுதல் வேண்டின்**

டாக்டர். கே வன அதிகாரியிடம் கூறும் பொழுது 'இந்தக் காட்ட நீ புரிஞ்சிட்டாத் தான் இங்க எதையாவது செய்ய முடியும். காட்டப் புரிஞ்சுக்கணும்னா காட்டிலே வாழணும். இங்க வாழணும்னா முதல் விஷயம் உன்னோட அந்த உலகத்திலே இருக்கிறபணம், புகழ், அதிகாரம், லொட்டு, லொசுக்கு எல்லாத்தையும் உதறிண்டு நீயும் இந்தக் குரங்களை மாதிரி, இந்த யானை மாதிரி இங்க இருக்கிறது தான். உனக்கு இவங்களை விட்டாவேற சொந்தம் இருக்கக் கூடாது.

**டாக்டர் கே-யின் கருத்துருக்கள்**

டாக்டர். கே எழுதப் போகும் ஆய்வுக் கட்டுரை ஒன்றைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார். மனித வாழ்க்கையின் ஒருகட்டத்தில் வளர்ப்பு மிருகமாக யானை தேவைப்பட்டது. பெரும் சுமைகள் தூக்க அது இல்லாமல் முடியாது. யானை இல்லாமல் தஞ்சாவூரின் பெரியகோயில்கள் இல்லை. ஆனால் இன்று மனிதனுக்கு யானையின் உதவி தேவை இல்லை. யானையை விட பலமடங்கு ஆற்றல் வாய்ந்தகிரேன்களின் காலகட்டம். இன்று யானைவெறும் அலங்காரத்திற்காகவும் மதச்சடங்குகளுக்காகவும் வளர்க்கப்படுகிறது. மிருகக்காட்சி சாலைகளில் வேடிக்கைக்காகப் போடப்பட்டிருக்கிறது.

கோயிலிலே யானைய வளக்கிறதத் தடைபண்ணியாகணும். கோயில்கள் யானை வாழறதுக்குண்டான எடமேகெடையாது. யானையோட கண்ணுக்குப் பச்சைத்தழையும் மரங்களும் தான் பட்டுண்டே இருக்கணும். அந்தக் காலத்திலே யானையப் பட்டத்து யானையா வச்சிருந்தாங்க. இன்னைக்கு உண்டக்கட்டி குடுத்து யானைய வளக்கலாம்னு நெனைக்கறானுங்க. பத்துப் பைசாவ யானை கையிலேகுடுக்கறானுங்க அற்பபதர்கள். நான்சென்ஸ். நீயாருன்னு உனக்குத் தெரிஞ்சா நீ வச்சிருக்கற அந்த உலோகத் துண்ட அதுக்குப் பிச்சையாபோட உனக்குக் கை கூசாதா? கோயில் யானைகளை மாதிரி இழிவுபட்டு, அவமானப்பட்டு, பட்டினிகிடக்குற ஜீவன் வேற இல்லை… கண்டிப்பா தடைசெஞ்சாகணும்.

மதச்சடங்குன்னு சொல்லிச் சில பேர் அதை எதிர்ப்பாங்க. ஆனா நூறுவருஷம் முன்னாடி பொட்டுக்கட்டுறதையும் அப்டிச் சொல்லித்தான் எதிர்த்தாங்க. யானையச் சுதந்திரமாவிட்டுரணும். அவன் காட்டோட அரசன். அவனை ஊரிலே போர்ட்டராகவும் பிச்சைக்காரனாகவும் வச்சிருக்கிறது மனுஷ குலத்துக்கே அவமானம். நம்மாளுகிட்டசொன்னா அவனுக்கு அதெல்லாம் புரியாது. அவனுக்கு எங்க காடுதெரியும்? தண்ணியடிக்கவோ, விபச்சாரம் செய்யவோதானே இவன் காட்டுக்குள்ளவர்ரான்? யூரோபியன் இதழ்களிலே இதைப்பத்திப் பேசணும். அவன் சொன்னா இவன் கேப்பான். இப்பவும் அவந்தான் இவனோட மாஸ்டர்.

இந்தியக் கோயில்களில் உள்ள இருநூறு யானைகளின் தரவுகளைத் திரட்டி அவற்றின் உடல்நலக் குறைவுகளையும் மனச்சோர்வையும் பட்டியலிட்டிருந்தார். அவற்றைப் பராமரிப்பதில் உள்ள ஊழலே முக்கியமான பிரச்சினையாக இருந்தது. தேவைக்கும் மிகக் குறைவான உணவே அவற்றுக்கு வழங்கப்பட்டது. பெரும்பாலும் பக்தர்களின் பிச்சையையே அவை உண்டன. சிலபெரும் கோயில்களில் பக்தர்கள் வீசிக் குவிக்கும் எச்சில் இலைகளையும் எச்சில் சோற்றையும் தான் யானைகள் உணவாகக் கொண்டிருந்தன.

இப்ப உடனே கோயில் யானைகளைத் தடைபண்ணிடுவாங்கன்னு நான் நம்பலை. இது ஜனநாயகநாடு. 'அதுவரை இன்னொரு பிளான் வச்சிருக்கேன்…' என்றார் டாக்டர். கே. 'வருஷத்துக்கு ஒருமுறை கோயில் யானைகளைப் பக்கத்துல இருக்கிற காடுகளுக்குக் கொண்டுபோயி ஒருமாசம் வச்சிருக்கிறது. ஒருமாசம் காட்டுக்குள்ளவிட்டாலே போதும். யானை பயங்கரமாரிக்கவர் ஆயிடும். அது வன மிருகம். காட்டுக்காக அது உள்ளுக்குள்ள ஏங்கிண்டிருக்கு. மரங்களையும் செடிகளையும் தண்ணியையும் பாத்தாலே அது உற்சாகமாயிடும். கோயில் யானைகள் எப்பவுமே டென்ஷனா இருக்கு. பெரும்பாலான கோயில் யானைகளுக்குக் கடுமையான டயபடிஸ் இருக்கு. அதுகளோட காலிலே புண்ணுவந்தா ஆறுறதே இல்லை.

### டாக்டர் வி.கிருஷ்ணமூர்த்தி (யானை டாக்டர்) பற்றி… (பக்.388-389)

அறம் சிறுகதைகள் (உண்மைமனிதர்களின் கதைகள்) ஜெயமோகன் 2012 வம்சி புக்ஸ், திருவண்ணாமலை. அறம் சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள 12 கதைகளில் குறிப்பிடப்படும் உண்மை ஆளுமைகளாக டாக்டர் வி.கிருஷ்ணமூர்த்தி (யானைடாக்டர்) பற்றி…

யானை டாக்டர் என்று அழைக்கப்பட்ட டாக்டர் வி.கிருஷ்ணமூர்த்தி (1923-2002) தமிழகத்தின் முக்கியமான காட்டியல் நிபுணர்களில் ஒருவர். யானைகளுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டவர். அவரது நினைவாக அவரைப் பற்றிய புகைப்படக் கண்காட்சி ஒன்று டாப்ஸ்லிப்பில் அவர் இருந்த இல்லத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

கிருஷ்ணமூர்த்தி தமிழக வனத்துறையில் பணியாற்றிய விலங்கியல் மருத்துவர். அவரது மேலாண்மையில் முதுமலை தெப்பக்காடு யானை முகாம் உலகப் புகழ் பெற்றது. தமிழகத்தில் உள்ள எல்லா யானைக் காப்பகங்களுக்கும் அவர் மருத்துவக் கண்காணிப்பாளராக இருந்தார். முகாம்களில் வாழ்ந்த அனைத்து யானைகளும் அவரை நன்கறிந்திருந்தன.

டாக்டர் கே என்று உலகெங்கும் அழைக்கப்பட்ட வி. கிருஷ்ணமூர்த்தி உலகப் புகழ்பெற்ற அறிவியலிதழ்களில் ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார். அவரது கடைசிக் கட்டுரை பிரிட்டிஷ் ஆய்விதழான நேச்சரில் 2000 ஆம் ஆண்டில் வெளிவந்தது. International Union for the Conservation of Natural Resources, Asian Elephant Specialist Group போன்ற முக்கியமான பல சர்வதேச ஆய்வுக் குழுக்களில் அவர் உறுப்பினராக இருந்தார். 2000 ஆம் ஆண்டில் வனப் பேணுநர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான

வேணுமேனன் ஏலீஸ் விருது அவருக்கு வழங்கப்பட்டது.

“வன விலங்குகளின் சடலங்கள் அனைத்தும் சவப் பரிசோதனை செய்யப்பட்டாக வேண்டும்” என்பதைத் தொடர்ந்து வலியுறுத்துபவராக இருந்தார் கிருஷ்ணமூர்த்தி. உலகிலேயே அதிக யானைகளுக்குப் பிரசவம் பார்த்தவரும் அவரே. யானைகளுக்கு மயக்க ஊசிபோட்டு விழச்செய்து அவற்றைச் சிகிச்சைக்கு உள்ளாக்குவதில் நிபுணர். பலநூறு அறுவைச் சிகிச்சைகள் செய்திருக்கிறார். வளர்ப்பு யானைகளின் பராமரிப்பு குறித்த அவரது கையேட உலகமெங்கும் பயன்படுத்தப்படுகிறது. ‘கிட்டத்தட்ட அதே குறிப்புகளின் இன்னொரு வடிவமே காசிரங்கா காண்டாமிருகங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது என்றார்கள்’, ‘யானைகளின் உடலுக்குள் உலோக எலும்புகளைப் பொருத்துவதைப் பத்துமுறைக்கு மேல் வெற்றிகராமாகச் செய்திருக்கிறார்’, உலகப்புகழ் பெற்ற வன ஆவண நிபுணரான ஹாரிமார்ஷல் அவரைப் பற்றி ‘டாக்டர் கே’ என்ற பேரில் பிபிஸிக்காக ஆவணப்படம் ஒன்றை எடுத்திருக்கிறார்’ ப.84. யானைகளின் எடை குறிப்பிட்ட காலஅளவில் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திவந்தார்.

தமிழக கோயில் யானைகளுக்கு வனப்புத்துணர்ச்சித் திட்டம் அவர் முன்வைத்து முன்னின்று நடத்தியதேயாகும். பொதுவாக யானையைப் பயன்மிருகமாக வளர்ப்பதையும் கோயில்களில் அலங்காரமாக வளர்ப்பதையும் நிறுத்தவேண்டும் என்று கோரிவந்தார். இலக்கிய ஆர்வம் கொண்டவர் டாக்டர். கே. அவருக்குலார்ட் பைரனின் கவிதைகளிலும் சங்க இலக்கியத்திலும் ஆர்வம் உண்டு. மிகச்சிறந்த உரையாடல்காரர் என்று இந்து நாளிதழில் அருண் வெங்கட்ராமன் குறிப்பிட்டுள்ளார். கிருஷ்ணமூர்த்தி 2002 டிசம்பர் 9 ஆம் தேதிதன் 73 ஆவது வயதில் மரணமடைந்தார்.

## தொகுப்புரை

யானை டாக்டர் சிறுகதையில் டாக்டர் கே அவர்களுக்கு பத்மஸ்ரீ விருது கிடைக்கவேண்டும் அதன் மூலம் அவரது ஐடியலிஸத்துக்கும் இன்னும் நம்ம சமூகத்திலே எடமிருக்குன்னு சொல்ல வேண்டும். மேலும் இன்னும் இங்க காந்திவாழறதுக்கு ஒரு காலடி மண்ணிருக்குன்னு சொல்லவேண்டும். ஒரு பத்துப்பேரு கவனிச்சாக்கூட போதும் சுற்றுச்சுழல் பாதுகாக்கப்படும். இந்த நிலையில் காட்டில் வந்து குடிச்சு வாந்தி பண்ணி பீர்பாட்டிலை உடைச்சுயானை காலுக்கு போட்டுட்டு போறானே அவனும் நம்ம சமூகத்தில் தான் வளர்ந்து வர்ரான். அவன் தான் ஐடி கம்பெனிலேயும் மல்ட்டி நேஷனல் கம்பெனிகளிலேயும் வேலபாக்கறான். மாசம் லட்சரூபா சம்பளம் வாங்கறான். கொழகொழன்னு இங்க்லீஷ் பேசறான். ஆதனால, தான் பெரிய பிறவிமேதைன்னு நினைச்சுக்கறான். தெரிஞ்சோ தெரியாமலோ அவன் கைலதான இந்தநாடும் இந்தக் காடும் இருக்கு. காடு என்பது அதிகாரிகளின் அதிகாரத்துக்குக் கீழே இருக்குங்கிறது ஒரு அசட்டு பேப்பரிலே தான். நெஜத்திலே காட்டோட அதிகாரத்திலே தான் அதிகாரிங்க இருக்கிறீங்க. அந்தா வெளியே நின்னுட்டிருக்கானே மலை மாதிரி செல்வா (யானை), அவன் உங்க அதிகாரத்திலயா இருக்கான்? இந்தக் காட்டிலே அவன் தான் ராஜா. அவனோட முகத்திலே இருக்கே அந்த ஆறடி நீளவெள்ளைத் தந்தம் தான் அவனோட செங்கோல். அவன் மனுஷனுக்கு இணக்கமா இருக்கான்னா அந்த ராஜாவுக்கு மனுஷங்க மேலே கருணையும் நல்ல அபிப்பிராயமும் இருக்குன்னு அர்த்தம் என்பதை தெளிவாக விளக்கியிருக்கும் தன்மை பாராட்டிப் போற்றுதலுக்குரியதாகும்.

# கலித்தொகையில் இயற்கை வளம்

**முனைவர் ம. ஜெப மேரி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*சாராள்தக்கர் கல்லூரி, பெருமாள்புரம்*

**ஆய்வுச்சுருக்கம்**
*எட்டுத்தொகை நூல்கள் தமிழரின் பண்பாட்டுக் களஞ்சியமாகத் திகழ்கின்றன. தமிழர்களுக்கு இயற்கை மீது இருந்த காதலும், இயற்கையை செய்யுள்களுக்குப் பின்புலமாக சித்தரிக்கும் முறையும் இயற்கையாகவே இருந்துள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை. அன்றாட வாழ்க்கையில் இயற்கை வளங்களையும், வர்ணனைகளையும் பல்வேறு காட்சிகளாகப் பதிவு செய்துள்ளனர். இந்த இயற்கை வளங்களையும் வர்ணனைகளையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*
***கலைச்சொற்கள்:*** *இயற்கை - சுபாவம் வர்ணனை - புனைவுரை*

## முன்னுரை

சங்ககாலப் புலவர்களின் வர்ணனைகள் நமக்கு அந்த நிகழ்வுகளை நேரில் சென்று பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்துவனவாக அமைந்துள்ளன. அவர்களின் கற்பனைத்திறன் பாராட்டுதலுக்குரியதாக அமைந்துள்ளது. இவ்வாறாக, இயற்கையோடு மனிதன் கொண்ட பண்பாட்டு பிணைப்புகளையும், வாழ்வியல் முறைகளையும் இக்கட்டுரையின் வழி காண்போம்.

## திருமணம்

பழங்காலத்தில திருமணம் செய்யவிரும்பும் பெண்கள் இளவட்டக்கல் தூக்கல், ஏறு தழுவுதல் என்ற வகையில் வீரமுள்ள ஆண்களையே விரும்பியுள்ளளர்கள். தமிழர் பண்பாட்டில் வீரம் முக்கிய இடம்வகிக்கிறது காளையை அடக்கும் வீரமில்லா ஆண்களை பெண்கள் விரும்புவதில்லை என்பதை,

**“கொல் ஏற்றுக்கோடு அஞ்சுவானை மறுமையும்**
**புல்லாளே ஆயமகள்”**

**(கலித்தொகை. முல்லைக்கலி பா. 3 வரி 63 – 64) ல்**

கொல்ல வரும் ஏற்றின் கொம்புக்கு அஞ்சுகிறவனை ஆயமகள் மறுபிறப்பிலும் தழுவமாட்டாள் என்று கூறுகிறதன் வழி இயற்கையாகவே பெண்கள் வீரமுள்ள ஆண்களை விரும்புவதை அறியலாம்.

## இல்லற அன்பு

கலித்தொகை பாலைக்கலிப் பாடலில் அடர்ந்த காட்டுப்பகுதியில் நெருப்பைக் காட்டிலும் அதிகமான வெப்பம் நிலவுகிறது. ஒரு சொட்டு நீராவது கிடைத்தால் நலமாயிருக்குமே என்ற ஏக்கம் ஒரு பக்கம். இந்நிலையில் காட்டில் வாழும் ஒரு குடும்பம் அதாவது யானை தன் குட்டிகள் கலக்கிய சிறிய நீரைக் கூட தன் பெண் யானை பருகிய பிறகு தான் பருகும் என்ற வாழ்வியல் நெறியான அன்பினை இயற்கையான நிகழ்வில் இணைத்து வர்ணித்துள்ளார் என்பதை,

**“அடிதாங்கு மளவின்றி யழவன்ன வெம்மையாற்**
**கடியவே கனங்குழாஅய் காடென்றார் அக்காட்டுக்குள்**
**துடியடிக் கயந்தலைக் கலக்கிய சின்னிரைப்**
**பிடியூட்டி பின்னுண்ணுங் களிறெனவு முறைத்தனரே”**

**(கலித்தொகை. பாலைக்கலி 10 வரி 6–9)**

என்ற பாடல் வழி நம்மால் அறியமுடிகிறது.

## பிரிவை தடுக்கும் சுனை

பொருள் தேடிப் பிரிய விரும்பும் தலைவனிடம் தலைவி பிரிவை தாங்கமாட்டாள் என்று கூறுகிறாள் தோழி. நீ போகும் வழியில் நீர் வற்றிய சுனையில் பற்றிப்படர்ந்த மரம் வாட, கீழே விழுந்து கிடக்கும் பூங்கொடிகள்

உன்னைப் போகாமல் தடுக்கும் என்ற கருத்தை,

**"செல்லுநீள் ஆற்றிடை, சேர்ந்து எழுந்த மரம் வாட**
**புல்லு விட்டு இறைஞ்சிய பூங்கொடி, - தகைப்பன"**

**(கலித்தொகை. பாலைக்கலி. பா 2 வரி 12 – 13) ல்**

இயற்கையை முன்னிறுத்தி பொருள் தேடிச் செல்ல விரும்பும் தலைவனைத் தடுக்கும் வழியைப் புலப்படுத்தியுள்ளார்.

**பனைகுடை**

தண்ணீர் குடிக்க வீடுகளில் பனை ஓலையால் செய்த (பட்டை) பனைகுடைகள் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதை,

**"வேள்நீர் உண்ட குடை ஓரன்னர்"**

**(கலித்தொகை. பாலைக்கலி. பா 22 வரி 9)**

என்ற வரிகள் வழி அறியமுடிகிறது. மேலும், காட்டுக்குள் காணப்படும் தேனடையை எடுத்தும், கிழங்குகளை பெட்டி எடுத்தும், பலாக் கனிகள் போன்ற இயற்கையாகக் கிடைக்கும் பழங்களையும் உணவுக்காகப் பயன்படுத்தி ஆரோக்கியமாக வாழ்ந்து வந்ததை,

**"தேனின் இறால், என, ஏணி இழைத்திருக்கும்**
**கான் அகல் நாடன் மகன்**
**சிறு குடியீரே! சிறு குடியீரே!**
**வள்ளிகீழ் வீழா: வரைமிசைத் தேன்தொடா,**
**கொல்லை குரல் வாங்கி ஈனா – மலை வாழ்நர்"**

**(கலித்தொகை. குறிஞ்சிக்கலி பா 3 வரி 9-13)**

**"பல்கோட் பலவின் பயிர்ப்பு உறுதீம்கனி**
**அல்கறைக் கொண்டு ஊண் அமலைச் சிறுகுடி"**

**(கலித்தொகை. குறிஞ்சிக்கலி பா 14 வரி 12- 13**

என்ற செய்தி பண்பாட்டுக் கூறுகளில் ஒன்றான உணவுமுறை என்பது இயற்கையைச் சாந்திருந்ததை அறிய முடிகிறது.

**திணைப்புனங் காத்தல்**

பெரிய திணைக்கதிர்கள் திணைத்தாள் களுக்கிடையே காணப்படும். அந்த திணைக்கதிர்களை உண்பதற்காக கிளிகள், யானைகள் போன்ற உயிரினங்கள் விரும்பி வரும். அவற்றை விரட்டி திணக்கதிர்களைக் காத்து வருவர். இதனை,

**"படிகிளி பாயும் பசுங்குரல் ஏனல்**
**கடிதல் மறப்பபித் தாய்ஆயின், இனி நீ"**

**(கலித்தொகை. குறிஞ்சிக்கலி பா 14 வரி 9 – 10)**

என்கிறது கலித்தொகை.

இயற்கை பொருள்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பச்சைக் கதிரில் பாயும் கிளியை விரட்ட இரவில் ஆண்களும் பகலில் பெண்களும் காவல் செய்துள்ளனர். காரணம் இயற்கைப் பொருள்களைப் பாதுகாத்து அதனைத் தம் தேவைக்காகப் பயன்படுத்தியுள்ளார்கள் என்ற செய்தி இப்பாடல்வரிகள் வழி அறியமுடிகிறது.

**விளையாட்டு**

வீடுகளில் சிறுவர்கள் பொம்மை, பந்து பானைகள் கொண்டு விளயாடுவார்கள். கிராமங்களின் தெருக்களில் மணல் வீடு கட்டி விளையாடுவது வழக்கம். வேலைப்பாடுகளுடன் கூடிய மரத்தால் ஆன சிறிய பானையும், பொம்மையும் கொண்டு வீடுகட்டி சிறுவர்கள் விளையாடியதை,

**"சுடர்விரி வினைவாய்ந்த தூதையும் பாவையும்**
**விளையாட, அரிப்பெய்த அழகு அமைபுனை விணை"**

**(கலித்தொகை. குறிஞ்சிக்கலி. பா. 23 வரி 5 – 6 )**

மேலும், பந்து கொண்டு விளையாடியதையும் மணல் வீடு கட்டியதையும்

**“மணற் சிற்றில் காலிற் சிதையா, அடைச்சிய**
**கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டோடி”**
**(கலித்தொகை. குறிஞ்சிக்கலி.பா 15வரி 2- 3)**

சிறுமிகள் ஊஞ்சல் ஆடுவதற்கு சுறா மீனின் கொம்பை கோர்த்து பலகை செய்ததாகவும், நெய்தல் பூ நாரில் கயிறு திரித்து, தாழை மரங்களிடையே புன்னை மரத்தில் தொங்கும் ஊஞ்சல் கட்டியதை,

**“இனமீன் இகன்மாற வென்ற சினமீன்**
**எறிசுறா வான்மருப்புக் கோத்து, நெறிசெய்த**
**நெய்தல் நெடுநார்ப் பிணித்து யாத்துக், கையுள்ர்வின்**
**யாழிசை கொண்ட இனவண்டு இமிர்ந்து ஆர்ப்பத்,**
**தாழாது உறைக்கும் தடமலர்த் தண்தாழை**
**வீழ்ஊசல் தூங்கப்பெறின்”**
**(கலித்தொகை. நெய்தற்கலி .பா 14 வரி 6 – 11) ல்**

என்று தமிழிலக்கியப் பாடல்களில் இயற்கைப் பல கோணங்களில் படம் பிடித்துக்காட்டப்பட்டுள்ளது.

## முடிவுரை

மனித உணர்வுகளை இயற்கையின் எழிலோடு இணைப்பது பண்டையத் தமிழ் இலக்கிய மரபு. அந்த இயற்கையை பேணிக்காப்பதுடன் அதனோடு இயைந்த வாழ்க்கை வாழ வேண்டுவது இன்றைய சமூகத்தின் கடமையும் ஆகும். இயற்கையின் பல்வேறு வடிவங்களை சங்ககாலப் புலவர்கள் நுண்ணுணர்வோடு கண்டுபிடித்த அனுபவத்தின் வெளிப்பாடுகள் தான் கலித்தொகை என்பதை அறியமுடிகிறது. இக்கட்டுரையில் கலித்தொகையில் உள்ள இயற்கைநெறிகள் மனித வாழ்வோடு இரண்டறக் கலந்துள்ளது என்பது எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## பார்வை நூல்கள்


1. கலித்தொகை என்னும் காதல் தொகை - இரா.சரவணமுத்து, சாரதா பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை - 5
2. கலித்தொகை - புலியூர்க்கேசிகன் தெளிவுரை, பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை, ஏழாம் பதிப்பு 2005
3. எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் - புலியூர்க்கேசிகன் (14 நூல்கள் கொண்ட தொகுப்பு), செண்பகா பதிப்பகம், முதற்பதிப்பு 2020

# “திருக்குறளில் வளி”

**முனைவர் அ. பாரதிராணி**
*உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்*
*அழகப்பா அரசு கலைகல்லூரி, காரைக்குடி, (அழகப்பா பல்கலைகழக இணைவு பெற்றது)*

**ஆய்வுச்சுருக்கம்**
*காற்றால் பொதிந்த பாண்டமாகச் சித்தரிக்கப்படும் உடல் காற்றின்றி இயங்காது. இந்த உலகம் முழுவதும் காற்றால் நிறைந்துள்ளது. நிலம், நீர், காற்று, வானம், நெருப்பு ஐம்பெரும் பூதங்களின் முழுமையாக இயங்குவது உலகு. பஞ்சப்பூதங்களின் பயன்பாட்டினைப் பனுவல்கள் பல பகிர்ந்துள்ளன. இவற்றுள் காற்று பெறும் இடத்தையும், காற்று என்ற சொல் பயன்படும் சூழலையும் வள்ளுவர் வழி நின்று விளங்குவதே இக்கட்டுரையாம். காற்றினை வள்ளுவப் பெருந்தகை எவ்வாறு பயன்படுத்தி பொருண்மைகளை விளக்கியுள்ளார் என்பதை இக்கட்டுரை நிரல்படுத்துகின்றது.*
***திறவுச் சொற்கள்:*** *வளி, காற்று, புயல், மழை, பனுவல், இயற்கை.*

## முன்னுரை

தமிழ் மறை என்று போற்றப்படும் திருக்குறள் உலக மக்களின் விடியல் கீதம். அறம், பொருள், இன்பம் என்ற முப்பெரும் பிரிவுகளின் கீழ் உலகியலை ஒழுங்கு பட அமைத்த நூல் திருக்குறளாகும். வான்புகழ் கண்ட வள்ளுவரின் சொற்சித்திரம் பல்வேறு பொருண்மைகளை முன் மொழிந்துள்ளது. அவற்றுள் இயற்கைக் கூறுகளும் ஒன்று. தெய்வப்புலவர் என்று போற்றப்படும் வள்ளுவர் சமைத்துள்ள இயற்கைக் கூறுகளின் ஒன்றான காற்று பற்றி எடுத்தரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இயற்கை

மானிடர்களின் முயற்சியின்றி தானே புவியியல் அமையும் வெளிப்பாடே இயற்கையாகும். இயற்கையின் வாயிலாகப் புலவோர் பலரும் வாழ்வியலின் பாடுபொருள்களை எடுத்தாண்டுள்ளனர்.

> **“முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
> **சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே”[1]**
> **(தொல்.நூ. 5)**

என்று தொல்காப்பியர் நான்கு வகையான நிலங்களை முன்மொழிகின்றார். இயற்கைத் தோற்றத்திற்கானத் தோற்றுவாய் நிலங்களே. நிலங்களின் வளமையே இயற்கையைச் செழிக்கச் செய்கின்றது. மனிதர்களின் வாழ்வியலுக்கு அடித்தளம் அமைப்பது இயற்கையே, ஆகவே இயற்கையோடு இலக்கியங்கள் இணைந்து ஓர் உறவினைக் கொண்டிருப்பதைப் புலவர்கள், படைப்பாளர்கள் தங்களின் எழுத்துகளின் வழி வெளிப்படுத்தி நிற்கின்றனர்.

இயற்கை என்பது அறம் சார்ந்த ஒன்று. அறம் கையறம், கருமம், நீர்மை, நூற்பயன், நான்கினென்றும், பெரியோர் இயல்பினென்று என்று கதிரைவேற்பிள்ளை தமிழ் மொழி அகராதி விளக்கம் தருகின்றது. நம்மைச் சுற்றி இருக்கும் இயற்கைச் சூழலே நமது வாழ்வினை வழிநடத்தும் நெறியாளராம். மனிதர்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, நீர், இருப்பிடம் ஆகியவைகள் இயற்கையின் வழியே கிடைக்கின்றன. மனித வாழ்க்கைக்கு காற்று மிகவும் முக்கியமான ஒன்றாக அமைந்துள்ளது. வளிமண்டிலமே பல இயற்கைத் துளிர்த்தலுக்கு முதன்மையாகிறது. அவ்வகையில் வள்ளுவரின் வாய்மொழியில் மலர்ந்துள்ள “காற்று” குறித்தப் பதிவுகளையே இவ்வாய்வு முன்னிறுத்துகின்றுது.

> **“செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து**
> **இயற்கை அறிந்து செயல்”[2]**
> **(குறள். எண். 637)**

தன் அறிவுத்திறத்தால் செயல்படும் முறையை அற்த்திருப்பினும் ஒரு மனிதன் உலகத்தின் இயற்கையை அறிந்து செயல்படுதலே பொருத்தமான ஒன்று என்று வள்ளுவர் இயற்கையைப் போற்றிப்பாடுகின்றார்.

**காற்று**

உலகம் ஐம்பூதங்களால் இணைந்தது. இதனைத் தொல்காப்பியர்

**"நிலம் நிர்வளி விசும்பொடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் இவ்வுலகில்"[3]**

**(தொல்- நூ 635)**

என்கின்றார். "கால்" என்ற வேர்ச் சொல்லிலிருந்து பிறந்ததே காற்று. காற்று, வளி, தென்றல், புயல், சூறாவளி, வாடை, கொண்டல், பனி எனப் பல்வேறு பெயர்களுடன் அழைக்கப்படுகிறது. காற்றின் அடர்த்தி, அழுத்தம் இவற்றின் அடிப்படையிலும், வீசும் திசைகளின் அடிப்படையிலும் காற்று பாகுபடுத்தப்பட்டுள்ளது. உடலை இயக்குவதே உயிர் எனும் காற்றுதான். அதனால்தான்

**"காயமே இது பொய்யடா வெறும்**
**காற்றடைத்த பையடா"**

என்று சித்தர் இதனை வழிமொழிந்து நிற்கின்றார்.

**வளியும் உழவும்**

நீர்வளம் பெருகினால் தான் வளம் செழிக்கும். நீர் பெருக மழை பொழிய வேண்டும். மழை பொழி அதிகரிக்க மண்ணில் புயல் நிலைபெற வேண்டும். அப்பொழுது தான் வேளாண் தொழில் செழிப்புறும்.

**"ஏரின் உழாஅர் புயல் என்னும்**
**வாரி வளம் குன்றிக் கால்" (கு.எ.14)**

மழைவளம் சுரந்தால் உழவரின் உற்பத்தி பெருகும். இல்லையேல் உழுதலைச் செய்யார் உழவர் என்கிறது குறள். இக்குறளில் "புயல்" என்ற சொல் மழையைக் குறிக்கின்றது. புயல் (Cyclone) என்னும் சொல் பொதுப் பொருளில் கையாளப்பட்டுள்ளது. புயல் வாரி வளம் செய்யாத காலத்து உழவுத் தொழில் குன்றிவிடும். ஆகவே இயற்கையாய் உணவு உருவாக்க புயல் முக்கியமானது என்பதையே வள்ளுவர் வாய்மொழிகின்றார்.

**வளியும் - அருளும்**

அருளறம் என்பது வீடு பேற்றிற்கு இன்றியமையாத ஒன்றாகும். "அறுவகைப்பட்ட எல்லா உயிர்களிடத்தும் ஒப்பங்கொள்ளும் இரக்கம் அருளுடைமையே"[4] என்கிறார் தேவ நேயப்பாவாணர். இவ்வுலகில் அருளுடைமை அழகு சேர்க்கும் அணியாகின்றது. இம்மண்ணுலகில் அருள் பூண்டவர்க்கு என்றுமே துன்பம் இல்லை. இதற்கு வளிமிகுந்த இவ்வுலகோரே சான்றாவார் என்பதை

**"அல்லல் அருளிள்வார்க்கு இல்லை வளிவழங்கும்**
**மல்லல்மோ ஞாலம் கரி" (கு.எ.245)**

என்று மொழிகின்றது குறள். 'வளிவழங்கும் மல்லல்மா' என்ற தொடர் உலகம் முழுதும் காற்றால் நிறைந்துள்ளது என்பதையும் காற்றின்றி இவ்வுலகம் இயங்காது என்பதையும் குறிப்பாக உணர்த்துகின்றது.

"வளி என்பது கனோகத, கனவாத, தனுவாத என்னும் மூன்று மகா காற்றுகளால் சூழப்பெற்று வலிமிகுந்து வழங்கும் பெரிய உலகம் எப்போதும் துன்பமின்றி இருப்பது போல அருளுடையோரும் துன்பமின்றி வாழ்வார்"[5] என்கிறார் அனந்தநாத நயினார். வளிமிகின் வலியுமில்லை (புறம் 15) என்ற புறப்பாடலும் இங்கு ஒப்புநோக்கற்பாலது.

**வளியும் மருந்தும்**

வேர்பார், தழைபார், மெல்லமெல்லச் செந்தூர நீர் பார் என்பது தமிழ் மருத்துவப் பழமொழியாம். அறம், பொருள், இன்ப நிலைப்பாட்டிற்கு எதிரானது நோய். இப்பிணிநீங்க மருந்து உதவுகின்றது. "மருத்துவ வேருந்தழையும் அவற்றால் செய்யப்பட்ட கலவைகளும், பொதுவாகச் சிறப்பான நறுமணம் உடையமையால் மருந்து எனப் பெயர் பெற்றன"[6]. இத்தகு மருத்துவத்தில் வளி பெறும் இடத்தை,

**"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று"**

**(கு.எ.44)**

என்கிறார் வள்ளுவர். உடம்பில் வாதம், பித்தம், கவம் இவை மூன்றும் ஏற்ற அளவில் இல்லாமல் அதிகமாகும் காலத்தும்,

குறையும் காலத்தும் நோய்வாய்பட நேரிடும். உணவுச்செயல்களின் ஒவ்வாமையாலும், இயற்கை வேறுபாட்டாலும் மிகுதலும் குறைதலும் நேருங்காலத்து நோயுண்டாகும். ஊதையின் தொழில்கள் ஒழுங்கமைவுடன் நடக்கும் காலத்து நோயற்று வாழலாம்.

இக்குறளில் 'வளிமுதலா' எண்ணிய மூன்று என்று குறிப்பிடும் காலத்து மூன்றில் முதன்மையான வாதம் என்பது வளிமுதலா என்ற சொற்கூட்டுக்குள் நிலைநிறுத்தப்படுகின்றது. வாதம் என்பது காற்றின் வழியது என்று கூறப்படுவதால் இயற்கைக் கூறுகளில் ஒன்றான காற்றுடன் மனித உடலுக்கு நெருங்கிய தொடர்பு உள்ளது என்ற கருத்தே வலியுறுத்தப்படுகின்றது.

**வளியும் - புணர்ச்சியும்**

தலைவன் தலைவியின் குறிப்பறிந்து புணர்ச்சி மகிழும் காலத்து கழிபெரு மகிழ்ச்சி எய்யும் நிலைப்பாட்டினை புணர்ச்சி மகிழ்தல் எடுத்துரைக்கின்றது.

ஒத்த அன்புடைத் தலைவனும் தலைவியும் காற்று இடையில் ஊடுருவ இயலாத வகையில் இறுகத் தழுவி இன்பம் பயப்பதே இனிமைபயக்கும் என்றுணர்வார் என்ற கூற்றினை,

**"வீழும் இருவர்க்கு இனிதே வளியிடை**
**போழப் படாஅ முயக்கு"** **(கு.எ.1108)**

என்கிறது குறள். காற்று உணரக்கூடிய தன்மையுடையது. மெல்லிய இயல்புடைத்து. சிறுவழியிலும் ஊடுபுகும் திறனுடைத்து. இத்தன்மையுடைய வளி இடையில் புக இயலாத அளவிற்குத் தலைவன் தலைவியின் அணைப்பு இருக்கும் நிலையால் அவர்களின் ஒத்த அன்பு புலப்படுத்தப்படுகிறது. இங்கு காற்று இடையீடு செய்ய இயலா அன்புடை நெஞ்சத்தை எடுத்துக்காட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**வளியும் - உறுப்பு நலனழிதுலும்**

தலைவன் பிரிந்திருக்கும் காலத்து தலைவியின் உறுப்புகள் நலனழிந்து நிற்கின்றன. அவையங்களின் அழகிழத்தலுக்கு பிரிவு ஒரு காரணமாகின்றது. தலைவனும் தலைவியும் கூடியிருக்கும் காலத்து குளிர்ந்த காற்று இடைப்பட்டாலே தலைமகளின் குளிர்ந்த கண்கள் பசலை கொள்ளும். அந்த சிறு இடைவெளிகூட அவளின் நெஞ்சிற்குத் துன்பம் தந்து அவளது கண்களைப் பசப்புறச் செய்தது. அப்படியிருக்க வினையின் பொருட்டுச் சென்ற இப்பெரும் பிரிவினை எங்ஙனம் தாங்கினாளோ என்று தலைவன் வினை முடித்து மீளும் காலத்து தலைவியை எண்ணி வருந்தும் சூழலை

**"முயங்கிடைத் தண்ணி போழப் பசப்புற்ற**
**பேதை பெருமழைக் கண்"**

**(கு.எ.1239)**

என்று எடுத்து மொழிகின்றார் வள்ளுவப் பெருந்தகை.

தென்றல் காற்று இன்பம் தரும் அமைப்புடைத்து. ஆயின், தலைவன் தலைவிக்கு இடையில் புகும் காலத்து அல்லலைத் தோற்றுவித்து அவையத்தில் மாற்றம் தருகிறது. தண்வளி வலிமிகுந்த வளியாய் மாறுகிறது. அன்புடையோர்க்கு வளி என்பது இன்பத்தையும் வலியையும் கொடுத்த களனாக மாறுவதை வள்ளுவர் எடுத்துக் காட்டுகின்றனர்.

**தொகுப்புரை**

1. திருக்குறளில் பஞ்ச பூதங்கள் குறித்த செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன.
2. 1330 குறட்பாக்களில் காற்று மட்டும் குறித்த பதிவுகள் குறள் எண் (14, 245, 941, 1108, 1239) ஐந்து குறட்பாக்களில் பயின்றுவந்துள்ளன.
3. குறள் எண்.14-ல் புயல் என்ற சொல் மழையைக் குறிக்கும் பொருட்டு கையாளப்பட்டுள்ளது.
4. உயிர்களின், உலகின் இயக்கத்திற்கு காற்று முதன்மையானதாக இருந்த போதும், அது உழவு, அருளுடைமை, மருந்து, புணர்ச்சி, உறுப்பு நலன் மாற்றம் என்ற கோணங்களில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

5. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மக்களின் சொல்லாடல்களில் இயற்கை இயற்கையாகவே இணைந்து செயல்பட்டுள்ளது என்ற கருத்திற்கு வலுச்சேர்க்கிறது காற்று தொடர்பான திருக்குறள்கள்.
6. காற்று மானிடச் சமூகத்தின் மகத்தான கூறு என்பதை வள்ளுவர் வெளிப்படுத்தியுள்ளார்.
7. வாழ்வியலோடு தொடர்புடைய கருத்தாங்களின் குறியீடாகவும், உயிர்ப்பாகவும், இடையீடாகவும் காற்று பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் வழி நெறிப்படுத்தப்பட்டுள்ளது.

### அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம் - இளம்பூரணார் உரை - ப.173, மு.ப.2005 - சாரதா பதிப்பகம் சென்னை 14.
2. திருக்குறள் தமிழ்உரை தேவநேயப்பாவாணர்- பக. 347, மு.ப. 2000 பறீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை-35
3. தொல்காப்பியம் பொருள் இளம்பூரணார் பக்.530 சாரதா பதிப்பகம் மு.ப.2005
4. திருக்குறள் மரபுரை – தேவ நேயப்பாவாணர் பக்.158 மு.ப 2000 பறி இந்து பப்ளிகேஷன்ஸ் - சென்னை-35
5. திருக்குறள் மரபுரை – தேவ நேயப்பாவாணர் - பக்.158 - மு.ப 2000 பறி இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை
6. திருக்குறள் மரபுரை – தேவ நேயப்பாவாணர் - பக்.158, மு.ப 2000 பறி இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை.

# புறநானூற்றில் இயற்கை

**முனைவர் செ. ரேணுகா**

*உதவிப் பேராசிரியர், மனோன்மணியம் சுந்தரனார்*

*பல்கலைகழகக் கல்லூரி, பணகுடி*

**ஆய்வு சுருக்கம்**

சங்க இலக்கியப் பாடல்கள் மக்களின் வாழ்வியல் விழுமியங்களை எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளன. சங்க கால மக்கள் இயற்கையைப் போற்றிப் பாதுகாத்து வந்தனர் என்பதை சங்க இலக்கியப் பாடல்களின் மூலம் நாம் அறிந்து கொள்ளமுடிகிறது. பண்டைத் தமிழ்ர்களின் வாழ்வை எடுத்துரைக்கும் புறநானூற்றில் இயற்கை பற்றி ஆய்வுசெய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

சங்கநூல்கள் மக்களின் வாழ்வியலைத் தன்னகத்தே கொண்டுள்ளன. தற்காலத்தில் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் உலகம் மாசுபட்டு வருகின்றது. இந்த சூழ்நிலை வரும் தலைமுறையினருக்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்தும் என்ற விழிப்புணர்வை மக்களுக்கு உணர்த்துவது அவசியமானதாகின்றது. அந்தவகையில் இயற்கையைப் போற்றிப் பாதுகாக்கவேண்டியது நம் கடமையாகும். அதற்கு நம் சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் இயற்கையை எவ்வாறு போற்றிப்பாடியுள்ளனர் என்பதை இக்கட்டுரையின் கீழ்காண்போம்.

**இயற்கை - விளக்கம்**

'இயற்கை' என்பது வெறும் வாய் வார்த்தைகளால் அடக்கி விடமுடியாத ஒன்று ஆகும். காண்போர் கண்ணிலும் மனதிலும் நிலைத்து பழந்தமிழர் இலக்கியங்களிலும் பரந்து காணப்படுகின்றது. தமிழரின் பழமையான இலக்கண நூலான தொல்காப்பியம்

**' இயற்கைப் பொருளை இற்றெனக்கிளத்தல்'**

**(தொல்.கிளவி.நூற்.19)**

என்னும் நூற்பாவில் இயற்கை என்பதனை இயல்பு என்னும் பொருளில் விளக்குகிறது. கழகத் தமிழ் அகராதி.

'மனிதனால் உண்டாக்கப்படாமல் தானாகவே காணப்படும் மலை, நீர், காற்று, போன்ற சக்தி' இயற்கை என்கின்றது. (க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி-ப.எண்: 101) நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் உள்ளடக்கியது மட்டுமல்லாது உலகம் என்பது இயற்கையின் வழி அமைந்தது என்பதையும் பழந்தமிழர்கள் அறிந்திருந்தனர். இதனைத் தொல்காப்பியர்

**'நிலம் தீ வளி விசும்போடு ஐந்தும்**
**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்'**

**(தொல்.பொருள்.நூற்.1539)**

என்னும் நூற்பாவில் இப்பூமியானது ஐம்பெரும்பூதங்களையும் உள்ளடக்கியது என்கிறார். இதேபோன்று புறநானூற்றிலும்

**'இருமுந்நீர்க் குட்டமும்**
**வியன்ஞாலத்து அகலமும்**
**வளிவழங்கு திசையும்**
**வறிதுநிலை இயகாயமும் என்றாங்கு'**

**(புறம்-20)**

உயர்ந்த பண்புகளுக்கு இணையானது எனக் கடல், காற்று, ஆகாயம் மூன்றையும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும்

**‘ மண்திணிந்த நிலனும்**
**நிலம் ஏந்திய விசும்பும்**
**விசும்புதை வருவளியும்**
**வளித்தலை இயதீயும்**
**தீமுரணியநீரும் என்றாங்கு’ (புறம்-2)**

என மண்நிறைந்த நிலம், நிலத்தை ஏந்தியவான், ஆகாயத்தின் வழிவரும் காற்று, காற்றில் கலந்து வரும் தீ, தீயில் உள்ள நீரும் கலந்தது உலகம் என்பதோடு ஐம்பூதங்களாகிய இயற்கையால் படைக்கப்பட்டது உலகம் என்பதயும், இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை சங்ககால மக்கள் வாழ்ந்தனர் என்பதையும் அறியலாம்.

**வானியல் அறிவு**

பழந்தமிழர்கள் இயற்கையினைக் கடவுளாக எண்ணிவழிபட்டனர். அவற்றுள்ளும் குறிப்பாக ஞாயிறு வழிபாடு, தொன்மை வழிபாடாக இருந்து வந்துள்ளது. புறநானூற்றில் ஞாயிற்றின் தோற்றம், ஞாயிறு இயங்கும்முறை ஆகியன பற்றிய குறிப்பைக் காண்கிறோம்.

**‘ஞாயிற்றுச் செலவும்**
**அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்**
**பரிப்புச்சேர்ந்த மண்டிலமும்**
**வளிதிரி தருதிசையும்**
**வறிதுநிலை இயகாயமும்’ (புறம்-30)**

இப்பாடல் வழி சூரியவட்டம், சூரியனின் இயக்கம், வான்வளி மண்டலம் குறித்த அறிவு அன்றே நம் பழந்தமிழரிடையே இருந்தமையை அறியலாம். பண்டைத் தமிழர்கள் பல துறைகளிலும் வல்லவர்களாக இருந்துள்ளனர். வானிலிருந்து விண்மீன் விழுந்தவுடன் ஏழாம்நாளில் சேரமன்னன் இறந்துபட்டான் என்பதை

**பங்குனி உயர்அழுவத்து**
**தலைநாள் மீன்நிலை திரிய**
**நிலைநாள்மீன்அதன்எதிர்ஏர்தா’ (புறம்-229)**

என கூடலூர்கிழார் பாடியுள்ளார். வானில் விண்மீனின் நகர்வும், விண்மீன் வீழ்வதையும், வீழ்ந்தால் நடைபெறும் துன்பத்தையும் பற்றிய அறிவையும் பெற்றிருந்தனர், சங்ககால மக்கள்.

**நிலனும் நீரும்**

**நிலம் என்பது உடம்பு, நீர் என்பது உயிர்.**
**‘உடம்பால் அழியின் உயிரால் அழிவர்’**

என்பது திருமூலர் கூற்று. நிலம் எனப்படும் உடம்பு அழியாமல் காக்கப்பட வேண்டுமாயின் நீர்நிலைகளாக உயிரைப் பேண வேண்டும் என்று பழந்தமிழர் உணர்ந்திருந்தனர். இதனைப் புறநானூறு,

**‘நீர்இன்று அமையாயாக்கைக்கெல்லாம் உண்டி**
**கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே’**
**(புறம்-18)**

மெய்ப்பிக்கின்றது. ‘மழைத்துளியின்றி பசும்புல்லும் தலைகாட்டாது’ என்பார் வள்ளுவர்.’ நீரான் வீறு எய்தும் விளைநிலம்’ என நீர்நிறைந்த நிலத்தின் சிறப்பை நான்மணிக்கடிகை விளக்குகிறது. அதே போன்று பழந்தமிழர் குளம்தொட்டு வளம்பெருக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளனர். என்பதனை,

**‘நிலன் நெளிமருங்கில் நீர்நிலை**
**பெருகத்தடடோர் அம்மஇவண்தட்டாரே’**
**(புறம்-18)**

என்ற பாடல் மூலம் அறியலாம். மேலும்

**‘அறையும் பொறையும் மணந்தலைய**
**எண்நாள் திங்கள் அனையகொடுங்கரை**
**தெண்ணீர்ச் சிறுகுளம்’ (புறம்-118)**

என்னும் பாடலில் எட்டாம்நாளில் தோன்றும் பிறை போன்ற வளைந்த தோற்றமுடைய கரையைக் கொண்டு குளம் கட்டப்பட்டு வேளாண்மைக்குப் பயன்படுத்தினர் என்பதை அறியலாம்.

**காற்று**

காற்றை கடவுளின் குழந்தையாக கருதுவர். பழந்தமிழர்கள் காற்றின் பல்வேறு தன்மைகளை அறிந்திருந்தனர்.

**'காற்றோடு எய்நிகழ்ந்தன்ன செலவின்'**

**(புறம்-41)**

எனக் காற்று கலந்தால் தீ விரைவாக எரியும் என்ற அறிவியல் உண்மையை உவமையாகக் கோவூர்கிழார் குறிப்பிட்டுள்ளார். புலவர் குறுங்கோழியூர் கிழார்

**'வளிவழங்கு திசை' (புறம்-20)**

எனக் காற்று வழங்கும் திசை பற்றிக் குறிப்பிடுகின்றார். அதே போன்று புலவர் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் 'வளிதிரிதருதிசை' (புறம்-30) என்றும் 'வளிப்புடைத்த கலம் போல' (புறம்-26) என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**நெருப்பு**

சங்கப் புலவர்கள் மன்னனது குணங்களை ஐம்பெரும்பூதங்களின் ஆற்றலோடு ஒப்பிட்டு பாடுவது மரபு. தீ போல எதிரிகளை அழிப்பவன் காற்று போன்ற வேகம் உடையவன் ஆகாயம் போன்ற சர்வ வல்லமை உடையவன் பூமி போன்று பொறுமையும் உறுதியும் உடையவன் என்று போற்றிப் பாடியுள்ளனர். புற நானூற்றுப் புலவர்களும் பஞ்சபூதங்களைப் போற்றியுள்ளனர்.

**விசும்புதை வருவளியும்**
**வளிதலை இயதீயும் (புறம்-2)**

என்னும் பாடலில் புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர் விண்ணில் உழலும் காற்றையும் தீயைப் பற்றி பரவச்செய்யும் அதன் ஆற்றலைப் பாடியுள்ளதைக் காணலாம். புலவர் கோவூர்கிழார் காற்று நெருப்புடன் இணைந்து எரிக்கும் ஆற்றலைக்' காற்றோடு எரி நிகழ்ந்தன்ன செலவின்' (புறம்-41) எனக் காற்றுக் கலந்தால் தீ விரைவாக எரியும் என்ற அறிவியல் உண்மையை உவமையாகக் கூறுகிறார் கோவூர்கிழார்.

**முடிவுரை**

பழந்தமிழ் இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் பஞ்சபூதங்களின் ஆற்றல் தொடர்பான கருத்துக்கள் மிகுந்து காணப்படுகின்றன. இன்றைய சூழலில் பருவம் மாறி மழைபெய்வது இயல்பாய் உள்ளது. ஆதலால் அடுத்த தலைமுறையினருக்கு இயற்கையின் அழகை, ஆற்றலை நம் பழந்தமிழ் இலக்கியமான புறநானூறு வழியாக உணர்த்துவதோடு நாமும் இயற்கையோடு இயந்த வாழ்க்கையை வாழ்வோமாக.

**அடிக்குறிப்புகள்**

1. கழகத்தமிழ் அகராதி – (ப.எண்:431) கழக வெளியீடு 1998, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
2. க்ரியாவின் தற்கால தமிழ் அகராதி – 1992 (ப.எண்:408) க்ரியாவின் வெளியீடு சென்னை
3. தொல்காப்பியம், பொருளதிகாரம்-1995- பொருளதிகாரம், முல்லை நிலையம், சென்னை
4. புறநானூறு, கழகவெளியீடு, 1968, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

# சங்க இலக்கியத்தில் அன்பின் வெளிப்பாடுகள் (பெற்றோர்-மக்கள்)

**க. கவிதா**
*தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்*
*சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்*

***ஆய்வுச்சுருக்கம்***
*மனித வாழ்வினை மாண்புடையாக்குவது அன்பு. உயிர்களின் தோற்றத்திலிருந்து வளர்ச்சிவரை தொடர்ந்து கொண்டிருப்பது உறவுநிலை. பிறப்புத் தொடங்கி இறப்புவரை உறவுகள் இல்லாத வாழ்வினை இல்லை. உறவுகளின் உயிரோட்டத்தாலே மனிதன் மனநிறைவுடன் வாழ்கின்றான். சமுதாயத்தின் அடிப்படை நாதம் குடும்பம் ஆகும். மனிதர்களின் வாழ்வில் குடும்பம் முதலிடம் பெற்று திகழ்கின்றது. உறவுமுறைகள் குடும்பம் அழமப்பில் இருந்து தான் உருபெறுகின்றது. குடும்பத்திலுள்ள உறவினர்கள் தான் இரத்த உறவாகவும், மணவுறவாகவும் திகழ்கின்றன. தாய், தந்தை, மகன், மகள் உறவு சிறப்படம் பெறுகின்றது.*

**முன்னுரை**

மனிதன் நாடோடி வாழ்க்கை வாழ்ந்தவன். நாடோடி வாழ்விலிருந்து நாகரீக வாழ்விற்கு ஆட்பட்ட மனிதன், ஒழுக்கமாக வாழ உறவுமுறைகளைப் பகுத்துக் கொண்டான். உறவு ஒரு மனிதனைப் பண்படுத்துவதோடு, சமுதாயத்தையும் கட்டுப்பாடாக இயங்கச் செய்கின்றது. உறவு என்பது தொடர்பு, பந்தம் என்பதாகும். தமிழ் இலக்கியங்களில் உறவுகள் பற்றிய சிந்தனைகள் சிதறிக் கிடக்கின்றன. ஏனெனில் நமது சமூக கட்டமைப்பு முறையே, குடும்ப உறவுகளின் கட்டமைப்பாக, உணர்ச்சிப் பிளம்புகளின் வெளிப்பாடாகவே அமைகின்றன. இந்த உறவு மேம்பாட்டால் குடும்ப வாழ்க்கையில் மனநெருக்கம், பரஸ்பர உணர்வு, ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் மனபக்குவம் ஆகிய பண்புநலன்கள் வளர்கின்றன. சங்க இலக்கியத்தில் பெற்றோர் மக்களுக்கான அன்பைப் பற்றிக் அக்கட்டுரையில் காண்போம்.

**சங்க இலக்கியத்தில் உறவுமுறைகள்**

அகநூல்களும், புறநூல்களும் மக்களின் அக வாழ்க்கையும் புறவாழ்க்கையையும் படம்பிடித்துக் காட்டும் பாங்கில் அமைந்துள்ளன. அகநூல்கள் யாவும் இல்லற வாழ்வின் முன்பின் நிகழ்வுகளைச் சுவைபட எடுத்துரைக்கின்றன. தலைவன், தலைவி, தோழி, செவிலித்தாய், நற்றாய், பாங்கன், பாங்கி ஆகியோரின் உறவுநிலைகளை விளக்குவதாக அமைந்துள்ளன. இவை அகவாழ்வு உறவின் வெளிப்பாடாகும். இவற்றிலிருந்து புறவாழ்விற்குரிய உறவுகளை வெளிப்படுத்துவதற்காகப் புறநூல்கள் அமைந்துள்ளன. பல்வேறு நிலைகளில் மக்கள் மக்களோடு உறவு கொண்டு வாழும் நிலையை அவை எடுத்துரைக்கின்றன. மனித உறவுகளைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் பல இடங்களில் எடுத்துரைத்துள்ளன.

சங்க இலக்கியங்களை இரண்டு நிலைகளில் வாழ்வியலோடு பொருத்திப் பார்க்கலாம். அவை, அக இலக்கியங்கள் அகவாழ்வின் உறவுகளையும் புற இலக்கியங்கள் புற வாழ்வின் உறவுகளையும் அடிப்படையாகக் கொண்டு உருவானவையே ஆகும். புற இலக்கியங்கள் அரசன் முதல் ஆண்டி வரையிலும் உள்ள எல்லா மனிதர்களையும் பற்றியதாக அமைந்துள்ளன. புறநானூற்றின் பல பாடல்களில் மனித உறவுகள் பற்றியும் மனித வாழ்க்கை என்பது என்னவென்று பற்றியும் விளக்கப்பட்டுள்ளன.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர் தர வாரா"**[1]

**(புறம்.19:1-2)**

என்று தொடங்கும் பாடல் அர்த்தமானது. வாழ்க்கை என்பது தாம் செய்கின்ற செயல் வழியே அமைகிறது. அதனால் பெரியோரைப் புகழ்தலும் சிறியோரை இகழ்தலும் செய்தல் கூடாது என்பதை விளக்குகின்றது. உலக

அரங்கில் மனித உறவுகளை எடுத்துரைக்கும் பாடல் வரிகள் இதைவிட வேறெதுவும் இல்லை என்றே கூறலாம். இந்த உலக வாழ்க்கை இளமையில் தொடங்கி முதுமையில் முடிந்து போவது உறுதி. அப்படி இருக்கும் போது ஒருவருக்கு மற்றொருவர் நல்லுறவுக் கொள்ளாமல் பகைமைக் கொண்டு தீமை செய்து கொள்வது சரியல்ல என்பதைக் கீழ்வரும் பாடலடிகள் சுட்டுகின்றன.

**“நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்**
**எல்லாரும் உவப்பது அன்றியும்**
**நல் ஆற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே”[2]**

**(புறம்.195:6-9)**

ஒருவர் மற்றவர்களிடம் இரக்கம் கொண்டு அந்த இரக்கத்தை அன்பின் வெளிப்பாடாக நினைத்து அதனைச் செயல்வழிக் காட்டி, வாழப் பழகிக் கொண்டால் மனித உறவுகள் வளரும். அத்துடன் தவறு செய்வோர்க்கு அறிவுரை கூறுவதும், துன்பமுற்றப்போது உடனிருந்து ஆறுதல் தருவதும் மனித உறவின் வலிமை பேசப்பட்டுள்ளது. மனித உறவின் வெளிப்பாடாகும். எனவே புறநானூற்றுப் பாடல்கள் வழி மனித உறவுகளை வளர்த்துக்கொள்வதே மனித வாழ்விற்கு உகந்தது என்பதை இதன் வழி அறியலாம். சங்க இலக்கியத்தில் நகரச் சிறப்பைக் கூறும்போது இம்மை வாழ்விற்கு ஏதுவாகிய புகழ் எங்கும் பரவி விளங்க காவிரிப் பூம்பட்டினத்தில் அகன்ற உணவுச் சாலைகள் இருந்தன என்பதை கூறுகின்றது.

**“தாயோ டறுசுவைபோம் தந்தையொடு கல்விபோம்**
**சேயோடு தான் பெற்ற செல்வம் மாயவாழ்வு**
**உற்றாருடன் போம் உடன் பிறப்பால் தோள் வலிபோம்**
**பொற்றாலியோடு எவையும் போம்”[3]**

**(ஔவையார் தனிப்பாடல்)**

உறவுகளின் மேம்பாட்டை ஔவையார் பாடல் உணர்த்துகின்றது. மேலும்,

**“புகழ் நிலைஇய மொழி வளர**
**அறம் நிலைஇய அகன் அட்டில்”[4]**

**(பட்டின.42-43)**

என்ற பட்டினப்பாலை அடிகள் விளக்குகிறது. இவ்வரிகளில் மனம் விரும்பி உண்டு மகிழும் தன்மையில் நேரிய வழியில் அமைக்கப் பெற்ற உணவுச் சாலைகள் மனித உறவுகளின் சிறப்பினைச் சுட்டுகின்றன. தம்மை நாடி வருவோர்க்கு உணவளிக்கும் அறச் சாலைகள் மனித உறவுகளை இணைக்கும் பாலமாகத் திகழக்கூடியது என்பதைச் சங்க இலக்கியம் வலியுறுத்துகிறது.

**பெற்றோர் மக்களுக்கான உறவு**

தம் இனத்தைத் தொடர்ந்து வாழச் செய்யும் விழைவும் அதற்கான முயற்சியும் எல்லாவுயிர்களிடத்தும் காணப்படுவனவாகும். சங்க இலக்கியங்கள் மகன், மகள் உறவு வாழ்வில் இனிமைச் சேர்ப்பதாகவும் கணவன் - மனைவி உறவிற்கு உதவும் ஒன்றாகவும் காட்டுகின்றன. கணவன் - மனைவியர் வாழ்க்கையில் உறவை வளர்த்து இன்பமூட்டிச் சிறப்பளிக்கும் வாயிலாகக் குழந்தைகள் விளங்குவதாகத் தலைச்சங்கச் சான்றோர் நன்கு விளக்கியுள்ளனர். மனம் வேறுபட்ட கணவன் மனைவரிடையே உடன்பாட்டை உண்டாக்கிக் குடும்ப வாழ்க்கையை ஒட்டிக் காக்கும் இணைப்புப்பாலமாகக் குழந்தை விளங்குகின்றது. ”குடும்பத்தில் மக்கள் பிறக்கும் போது ஒரு புது வகையான உறவு தோன்றுகிறது. பெற்றோர்க்கு மக்களும், அம்மக்களுக்கு மக்களும் தோன்றும்போது இவ்வனைத்து உறுப்பினர்களும் குடும்பம் என்னும் அமைப்பில் இரத்த உறவால் பிணைக்கப்பட்டவர்களாகின்றனர்.

இவ்வகையில் அமையும் உறவு இரத்த உறவு”[5] என பக்தவத்சலபாரதி கூறுகிறார். பெற்றோர் தம் மழலைச் செல்வங்களுடன் மகிழ்ந்திருக்கும் இன்பக் காட்சிகள் பலவற்றைச் சங்க இலக்கியங்களில் காணலாம். தலைவன் தேரில் வரும்போது குதிரையில் கட்டப்பட்ட மணி ஒலியைக்

கேட்டுப் புதல்வன் வீட்டின் வாயிலைக் கடந்து ஓடிவந்தான். பூப்போன்ற கண்களை உடைய சிறுவனைத் தலைவன் கண்டான். தலைவன் பாகனிடம் தேரை நிறுத்த சொல்லி தேரிலிருந்து இறங்கினான். சிறுவனைத் தலைவன் மார்போடு அணைத்துப் பாகனிடம் தேரை ஓட்டிச் செல்லக் கூறினான். சிறுவனைத் தலைவன் வீட்டில் விட்டுச் செல்வதால் அவன் அழுது கொண்டிருந்தான். தந்தை மணம் கலங்குமாறு இடையூறு செய்ததால் கோபமடைந்த தலைவி தன் மகனை வாயிலுக்குப் போகவிட்டு பார்த்துக் கொண்டு இருப்பாள் என்று பலரும் கூறுவர். அதற்காக தலைவி சிறுவனை அடிப்பதற்கு குச்சியெடுத்து அருகில் சென்றால் அச்சிறுவனை அடிப்பதற்குள் தலைவன் மகனைத் தூக்கி அணைத்துக் கொண்டான் என்பதை,

**“கலக்கினன் போலும் இக் கொடியோன் எனச்சென்று**
**அலைக்கும் கோலொடு குறுக தலைக்கொண்**
**இமிழ் கண் முழவின் இன் சீர் அவர் மனைப்**
**பயிர்வன போல வந்து இசைப்பவும் தவிரான்”[5]**

**(அகம்.66:20-23)**

என்ற இப்பாடல் தந்தை மகன் மேல் வைத்திருக்கும் அன்பான உறவை எடுத்துக்காட்டுகிறது. மேலும்,

**“மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்**
**சொற்கேட்டல் இன்பம் செவிக்கு”[6]**

**(குறள்.65)**

என்கிறது. வள்ளுவரின் வழி குழந்தைச் செல்வத்தின் சிறப்பை நம் கண்முன்னே காட்டுகின்றது. பெற்றோர் தம் மக்களிடம் அன்புடையவராய் அவர்களைப் பேணிக் காப்பது இயல்பு. அதனால் பிள்ளைகள் மகிழ்ச்சியடைகின்றனர். மேலும்,

**“நாண்கொள் நுண்கோலின் மீன்கொள் பாண்மகள்**
**தான்புனல் அடைகரைப் படுத்த வராஅல்**
**நார்அரி நறவுஉண்டு இருந்த தந்தைக்கு**
**வஞ்சி விறகின் சுட்டு வாய் உறுக்கும்”[7]**

**(அகம்.216:1-4)**

அகநானூறு பாடல் குறிப்பிடுகின்றது. தூண்டிலால் மீனைப் பிடித்து விற்கும் பாணர் இனத்துப் பெண் ஒரு நாள் தனது தூண்டிலில் அகப்பட்ட விரால் மீனை வஞ்சி மரத்து விறகுத் தீயில் சுட்டுக் கள் குடித்து மயங்கிக் கிடக்கும் தன் தந்தைக்கு ஊட்டுவாள். இவ்வாறு தந்தை மகள் உறவு அன்பால் பிணைக்கப்பட்டுள்ளது. மேலும் மீன்பிடித்து வரும் தந்தை தான் கொண்டு வந்த செல்வங்களைத் தன் மகனுக்கு காட்ட எண்ணியதை,

**“திரைச்சுரம் உழந்த திண்திமில் விளக்கில்**
**பல்மீன் கூட்டம் என்னையர்க் காட்டிய**
**எந்தையும் செல்லுமார் இரவே அந்தில்**
**அணங்குடைப் பனித்துறை கைதொழுது ஏத்தி**
**யாயும் ஆயமோடு அயரும்”[8]**

**(அகம்.240:5-9)**

என்ற பாடல் உணர்த்துகிறது. இப்பாடலில் தந்தை மகன் அன்பு மட்டுமல்லாது தாய் தன் மகளுக்கு காட்டும் அன்பும் வெளிப்பட்டுள்ளமை அறியமுடிகிறது. தாய் தன் கணவர் கொண்டு வந்த மீன்களைத் தன் மகளுக்குக் காட்ட விருப்பப்படுகிறாள். அதுசமயம் மகள் கடல் தெய்வமான வருணனை வழிபட தோழிகளுடன் கடற்கரைக்குச் சென்றுள்ள குறிப்பும் கிடைக்கப்பெறுகிறது. அதேபோல் பாலை நிலத் தந்தை தன் மகள் விளையாடிக் கொண்டிருக்கும் அழகினைக் கண்டு ரசித்தவாறே,

**“மழைபெயல் மறந்த கழைதிரங்கு இயவில்**
**செல்சாத்து எறியும் பண்புஇல் வாழ்க்கை**
**வல்வில் இளையர் தலைவர் எல்உற**
**வரிகிளர் பணைத்தோள் வயிறுஅணி திதலை**
**அரிய லாட்டியர் அல்குமனை வரைப்பில்**
**மகிழ்நொடை பெறஅ ராகி நனைகவுள்**
**கான யானை வெண்கோடு சுட்டி**
**மன்றுஓடு புதல்வன் புன்தலை நீவும்**
**அருமனைப் பாக்கத்து அல்கு வைகுற”[9]**

**(அகம்.245:5-13)**

என்ற பாலைநிலப் பாடலில் மூங்கில்கள் வற்றி நிற்கும் வழி செல்லும் வணிகக் கூட்டத்தை எதிர்த்துகொள்ளும் அன்பில்லாதவராகிய மறவர்கள் அங்கு வாழ்வர். அவர்களின் தலைவர் தனது சிற்றூரில் வாழ்கின்ற பெண் ஒருத்தியின் கள் வாங்க கடைக்குச் செல்லும்போது மாற்றாகப் பொருள் கொடுக்க இல்லாமல் கையைப் பிசைவர். ஏனெனில் வழிபறி செய்து பொருள் எடுக்க வணிகக்கூட்டம் கிடைக்கவில்லை. ஆகவே அங்கு மன்றத்தில் விளையாடும் தன் மகளை அழைத்துக் கொஞ்சலாக அவள் தலையைத் தடவிக் கொடுத்து தன் வீட்டில் அழகிற்காக வைத்திருக்கும் யானைக் கொம்பை எடுத்து வருமாறு ஏவுவர். இந்நிகழ்வானது தன் தேவையைப் பூர்த்திச் செய்து கொள்ளும் பொருட்டுத் தன் மகளை வாஞ்சையுடன் ஏவல் செய்யுமாறு பணித்திருப்பதில் தந்தை - மகள் இருவருக்கிடையேயான அன்பின் வெளிப்பாடு வெளிப்படுகின்றது. மேலும் குறிஞ்சி நிலத்தில் தன் மகளைத் தலைவனோடு சேர்த்து வைத்துப் பழிக்கூறிக்கொண்டிருந்த செயலுக்கு பெற்றோர் வருத்தம் அடைகின்றார். அதே நேரத்தில் மகளின் மனம் அறிந்து அவளின் விருப்பத்திற்கு ஏற்ப தலைவனுடன் மணம்புரிந்து வைக்க யோசித்துகொண்டிருக்க அவ்வேளையில் தலைவன் மலைக்குச் சென்று பொன், கண்கவரும் ரத்தினங்கள், யானை தந்தம், முத்துக்கள் ஆகியவற்றை மூட்டையாகக் கட்டி ஒரு சந்தன மரத்தின் கொம்பை அதில் கட்டிக்கொண்டு மலையிலிருந்து இறங்கியதைக் கேள்வியுற்று தலைவியின் தந்தை அவனுக்கே மணமுடிக்க இசைவு தெரிவித்தார் என்பதனை,

**"பெருமலைச் சிலம்பின் வேட்டம் போகிய**
**செறிமடை அம்பின் வல்வில் கானவன்**
----------------------------
**இன்தீம் பலவின் ஏர்கெழு செல்வத்து**
**எந்தையும் எதிர்ந்தனன் கொடையே அலர்வாய்**
**அம்பல் ஊரும் அவனொடு மொழியும்**
---------------------------
**நல்இறை மெல்விரல் கூப்பி**
**இல்உறை கடவுட்கு ஆக்குதும் பலியே"**[10]
**(அகம்.282:1-19)**

என்று அகநானூறு பாடல் விளக்குகிறது. இப்பாடலில் தன் மகளின் திருமணத்திற்குப் பிறகான வாழ்க்கை நிலை குறித்த தந்தையின் விழிப்புணர்வு பார்வை அறியமுடிகிறது. மேலும், தாய் தந்தை பண்டமாற்றுச் செய்வதற்காகப் படும் துயரத்தை மகள் சொல்லும் விதமாக,

**"சேயாறு சென்று துனைபரி அசாவாது**
**உசாவுநர்ப் பெறினே நன்றுமன் தில்ல**
**வயச்சுறா எறிந்த புண்தணிந்து எந்தையும்**
**நீல்நிறப் பெருங்கடல் புக்கனன் யாயும்**
**உப்பை மாறி வெண்ணெல் தரீஇய**
**உப்புவிளை கழனிச் சென்றனள் அதனால்**
**பனி இரும் பரப்பின் சேர்ப்பற்கு**
**இனிவரின் எளியள் என்னும் தூதே"**[11]
**(குறுந்.269:1-8)**

என்ற குறுந்தொகைப் பாடலில் தனது தந்தை வலிய சுறா மீன் தாக்கியதால் ஏற்பட்ட புண் ஆறி நீல நிறப் பெருங்கடலில் மீன் பிடிக்கச் சென்றுள்ளான். என் தாயும் உப்பை விற்று வெண்ணெல்லை அதற்குப் பண்டமாற்றாக பொருளைப் பெற்றுவறுருவதற்காகச் சென்றுள்ளாள் எனக் கூறுவதிலிருந்து உடல் நலிவுற்ற போதிலும் குடும்பத்திற்காகத் தந்தையும் தாயும் சேர்ந்து உழைத்த உன்னத நிகழ்வு அறியப்பெறுகிறது.

## தொகுப்புரை

மக்களின் அக வாழ்க்கையும் புற வாழ்க்கையையும் படம்பிடித்துக் காட்டும் பாங்கில் சங்க இலக்கியங்கள் அமைந்துள்ளன. அகநூல்கள் யாவும் இல்லற வாழ்வின் முன்பின் நிகழ்வுகளைச் சுவைபட எடுத்துரைக்கின்றன. தலைவன், தலைவி, தோழி, செவிலித்தாய், நற்றாய், பாங்கன், பாங்கி ஆகியோரின் உறவுநிலைகளை விளக்குவதாக அமைந்துள்ளன. இவை அகவாழ்வு உறவின் வெளிப்பாடாகும். உறவுமுறை என்பது அன்பு, பாசம், கடமை, உரிமை ஆகியவற்றின் வெளிப்பாடு ஆகும்.

குழந்தை குடும்ப விளக்காக கருதப்பட்டது. பெற்றோர் தம் மழலைச் செல்வத்துடன் மகிழ்ந்து வாழ்ந்துள்ளனர் என்பதை சங்க இலக்கியப்பாடல் சுட்டிக்காட்டுகின்றது. தாய், தந்தையருக்கு இடையில் இணைப்பு பாலமாக மகன் திகழ்ந்த விதத்தையும், தந்தைக்கு அயிரை மீனுடன் உப்புக்கு மாற்றாக பெற்ற நெல்லரிசி சோறு சமைத்து கொடுத்து மகிழ்ந்துள்ளாள் என்பதை அறியமுடிகின்றது.

### துணைநின்ற நூல்கள்


1. நாகராசன்.வி (உ.ஆ) சங்க இலக்கியம் குறுந்தொகை (தொகுதி1,2), நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2004
2. செயபால். இரா (உ.ஆ) சங்க இலக்கியம் அகநானூறு (தொகுதி1,2), நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2004
3. கு.வெ. பாலசுப்பிரமணியம் (உ.ஆ), சங்க இலக்கியம், புறநானூறு (தொகுதி1,2), நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2004
4. மோகன்.இரா (உ.ஆ), சங்க இலக்கியம் பத்துப்பாட்டு (தொகுதி 1,2), நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2004
5. கௌமாரீஸ்வரி. எஸ். (ப.ஆ) திருக்குறள், பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை. 2004
6. புலியுர்க்கேசிகன் (உரை), ஔவையார் தனிப்பாடல், மங்கை வெளியீடு, சென்னை. 2010
7. சீ. பக்தவத்சலபாரதி, பணபாட்டு மானிடவியல், ப.337, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. 1990

# பாரதியார் கவிதைகளில் இயற்கை

**முனைவர் இல. பூர்ணிமா ஜோதி**
*தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்*
*சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்*

***ஆய்வுச்சுருக்கம்***
*இயற்கை என்பது இயல்பாக இருக்கும் தோற்றத்தினைக் குறிப்பதாகும். மனித வாழ்வில் ஒருங்கிணைந்து காணப்படுவதே இயற்கையாகும்.தமிழ் இலக்கியங்களில் இயற்கையை பாடாத கவிஞர்கள் இல்லை. பாரதியார் பாடல்கள் பலதிறப்பட்டவை. மொழி இனம் காதல் இயற்கை பகுத்தறிவு பெண்ணுரிமை என்ற பொருண்மையில் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவருடைய கவிதைகளில் இயற்கை ஈடுபாடும் மக்கள் பற்றும் தமிழ் பற்றும் மிகுதியாகக் காணப்படுகின்றது. இயற்கை என்பது மரம் செடி கொடி மழை இடி மின்னல் புயல் சூரியன்சந்திரன்என அண்டத்தில் உள்ள பலவற்றையும் உள்ளடக்கிய மாபெரும் சக்தியாகும். இயற்கையினால் இன்பத்தையும் மனஅமைதியையும் அடைய முடிகின்றது. மனிதர்களின் உடல் அமைப்பு இயற்கையால் படைக்கப்பட்டதாக இருந்தாலும் மனிதர்கள் இயற்கையில் இருந்து மாறுபட்டு வாழ்ந்து வருகின்றனர். பச்சைப் பட்டாடை உடுத்திய பூமியையும் நீலமேகங்கள் சூழ்ந்த வானத்தையும் பார்த்தால் மனம் உற்சாகம் அடைகின்றது. நிலம் நீர் தீ காற்று வானம் ஆகிய ஐம்பூதங்களினால் ஆனகலவையே இயற்கையாகும். மனிதர்கள் வாழ்வதற்கு நிலம் நீர் ஞாயிறு (சூரியன்) காற்று (வளி) தேவைப்படுகிறது. காலைப்பொழுது மாலைப்பொழுது அந்திப்பொழுது ஆகியவற்றின் முக்கியத்துவத்தினையும் மாலைப்பொழுதில் வெண்ணிலாவின் சிறப்பினையும் மின்னல் மற்றும் மழையின் சிறப்பினையும் விளக்கிக் காட்டப்பட்டுள்ளது.*

**முன்னுரை**

இயற்கை என்பது இயல்பாக இருக்கும் தோற்றத்தின் வெளிப்பாடாகத் திகழ்கின்றது. இயல்பாகத் தோன்றி மறையும் பொருட்கள் மற்றும் இயங்கும் இடம் இயங்கும் காலம் ஆகியவற்றினை இணைத்து உருவாக்கப்பட்டதே இயற்கையாகும். உயிரினம் மற்றும் உயிரின அறிவு இவை இரண்டுமே இயற்கையில் அடங்குகின்றது. இயற்கையினைப் போற்றி வணங்காத புலவர்கள் எவருமில்லை. அதன் சிறப்பினைப் பாடுவர். மற்றொன்று புகழ்ந்து பாடுவார்கள். இயற்கையை அழைத்துப் பாடுவார்கள். அவ்வகையில் மகாகவி பாரதியார் அவர்கள் இயற்கை சார்ந்த படைப்புகளைப் படைத்துள்ளார். நிலம் கடல் (நீர்) ஞாயிறு (சூரியன்) காற்று (வளி) காலைப்பொழுது மாலைப்பொழுது அந்திப்பொழுது வெண்ணிலா மின்னல் மழை ஆகிய அனைத்தும் இயற்கைக் காட்சிகள் மனத்திலிருந்து நீங்காத காட்சிகளாகும். இவையனைத்தும் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகத் திகழ்கின்றது.

**இயற்கை விளக்கம்**

இயற்கை என்பது இயல்பான ஒன்று.மனித சக்தி இல்லாமல் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கையாகும். மனிதனால் உருவாக்கப்படாத உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்கள் யாவும் இயற்கையாகும். பஞ்சபூதங்களில் இயற்கையும் ஒன்றாகும்.

> **“நிலம் நீர் தீ வளி விசும்பொடும் ஐந்தும்**
> **கலந்த மயக்கம் உலகம் ஆதலின்”**[1]

என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

“இயற்கை என்பதற்கு இலக்கணம் சுபாவம் நிலைமை கொள்கை”[2] என்று தமிழ் அகராதி பொருள் கூறுகிறது.

“இயற்கைக்கு அறிமுகம் தேவை இல்லை. இயற்கை ஐம்பெரும் பூதங்களால் ஆனது. நமது உடலும் ஐம்பெரும் பூதங்களால் ஆனது. ஏதோ மனிதனின் சிந்தனைக்கும் எட்டாத நியதிப்படி நாம் இயற்கையொட்டிப் பிறந்து அதன் மடியிலே வளர்ந்து இறுதியில் அதனோடு கலந்து

விடுகின்றோம். அறிவும் உணர்வும் கலந்த வாழ்வில் இயற்கையை அறிந்து சொன்னவன் அறிஞர். உணர்ந்து கொள்பவன் கவிஞன். சங்க இலக்கியத்தில் அச்சமூட்டும் பெருமிதமான இயற்கைக் காட்சிகளும் உண்டு. அமைதி தவழும் மென்மையான இயற்கைக் காட்சிகளும் உண்டு. அந்த இலக்கியத்தின் மையம் மானிடவாழ்வு இயற்கை அதற்கு உறுதுணையாய் இரண்டாம் இடமே பெறுகின்றது"[3] என்று மு.வரதராசன் கூறியுள்ளார்.

**"மண் திணிந்த நிலனும்**
**நிலனேந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித் தலைஇய தீயும்**
**தீ முரணிய நீரும் என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை"**[4]

என்று புறநானூறு விளக்குகிறது.

**"பூதத்து முதலும்நீ"**[5] என்று பரிபாடல் விளக்குகிறது. இதன் மூலம் ஐம்பூதங்களில் முதற்பொருளாக இறைவன் நிறைந்துள்ளான் என்பதனை அறியமுடிகின்றது.

**நிலம்**

ஐம்பெருங்பூதங்களில் முதலாவது இடம்பெற்றுத் திகழ்வது நிலமேயாகும். நிலத்திற்கு பூமி மண் என்ற பெயர்களும் இடம்பெறுவதுண்டு. நிலத்தில் தான் உணவு, தண்ணீர் மரம் செடி கொடிகள் ஆகியன செழித்து வளர்ந்து வருகின்றன.

**"வரையே சுரமே புறவே பழனந் திரையே"**[6] என்று நம்பியகப்பொருள் விளக்குகிறது.

**"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை"**[7]

என்று நிலத்தின் பெருமையினைத் திருவள்ளுவர் கூறியுள்ளார். இதன்மூலம் நிலமானது அனைவரையும் பொறுத்துக் கொள்ளும் இயல்புடையது என்கிறார்.

**"காணிநிலம் வேண்டும் - பராசக்திர் நிலையாகும்.**
**காணிநிலம் வேண்டும் -அங்கு**
**தூணில் அழகியதாய் -நன்மாடங்கள்**
**துய்ய நிறத்தினதாய் -அந்தக்**
**காணி நிலத்திடையே ஓர் மாளிகை**
**கட்டித் தர வேண்டும்"**[8]

என்ற பாடலின் மூலம் நிலம் கேட்பதாகவும் அந்த நிலத்தில் மாளிகைகளும் மாடங்களும் கட்டித் தர வேண்டும் என்று பாரதியார் இறைவனான பராசக்நியிடம் கேட்கும் விதமாக அமைந்துள்ள பாடலாகும். இதன்மூலம் மனிதன் வாழ்வதற்கு நிலம் உறைவிடமாகத் திகழ்கின்றது என்பதனை உணரமுடிகின்றது.

**கடல்(நீர்)**

ஐம்பெருங்பூதங்களில் நீர் இரண்டாவதாக முதன்மைப் பெறுகின்றது. கடல் என்பது உப்பு நீர் கொண்ட நீர் கொண்ட நீர் நிலையாகும். பயிர்த்தொழிலுக்கு நிலத்திற்கு அடுத்து நீர் வளம் இன்றிமையாதது. ஒரு நாட்டின் வளமும் நலமும் நீர் வளத்தைக் கொண்டு அமைகின்றது.

**"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்**
**வானின் றமையா தொழுக்கு"**[9]

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். இதன் மூலம் நீரின் சிறப்பு கூறப்பட்டுள்ளது. தண்ணீர் இல்லாமல் உலகம் இயங்காது என்பதனை அறிய முடிகின்றது.

**"வெள்ளைத் திரையாய் வெருவுதரு தோற்றத்தாய்**
**கொள்ளை யொலிக்கடலே நல்லறநீ கூறுதி காண்**
**விரிந்த பெரும்புறங்கள் மேலேறிந்துன் பேயலைகள்**
**பொருந்து மிடையே புதைந்த பிளவுகள் தாம்"**[10]

என்று கடல் என்ற தலைப்பில் நீர் முதன்மையிடம் பெற்றுத் திகழ்கின்றது. இதன்மூலம் வெள்ளைத் திரைகள் மற்றும் பிளவுகள் அமைந்தத பாங்கினைக் காணமுடிகின்றது.

**"கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்**
**நாவாயும் ஓடா நிலத்து"**[11]

என்று கடலின் சிறப்பினைத் திருவள்ளுவர் கூறியுள்ளார்.கடலில் தேர்கள் செல்லாது.

நாவாய் மட்டுமே செல்லலாம் என்பதனைக் காணமுடிகின்றது.

**ஞாயிறு(சூரியன்)**

ஞாயிறு என்பது சூரியனைக் குறிக்கிறது. சூரியனை இயற்கைக் கடவுளாக மக்கள் வணங்கி வருகின்றனர். மனிதர்கள் அனைவரும் பொங்கல் திருநாளில் சூரியக்கடவுளை முழுமுதற் கடவுளாக வழிபட்டு வந்துள்ளமை இலக்கியங்களின் வாயிலாக அறியமுடிகின்றது.

**"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**காவிரிநாடன் திகிரிபோல் பொற்கோட்டு**
**மேருவலந் திரிதலான்"**[12]

என்று சிலப்பதிகாரத்தில் ஞாயிறு வழிபாட்டினை இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

**"நீ ஒளி நீ சுடர் நீ விளக்கம் நீ காட்சி**
**மின்னல் இரத்தினம் கனல் தீக்கொழுந்து**
**இவையெல்லாம் நினது நிகழ்ச்சி**
**கண் நினது வீடு**
**புகழ் வீரம் இவை நினது லீலை**
**அறிவு நின் குறி அறிவின் குறி நீ**
**நீ சுடுகின்றாய் வாழ்க நீ காட்டுகின்றாய் வாழ்க**
**உயிர் தருகின்றாய் உடல் தருகின்றாய்**
**வளர்க்கின்றாய் மாய்க்கின்றாய்**
**நீர் தருகின்றாய் காற்றை வீசுகின்றாய் வாழ்க"**[13]

என்று பாரதியார் கூறியுள்ளார்.

இதன்மூலம் ஞாயிறானது ஒளி, சுடர், விளக்கம், காட்சி, மின்னல் ஆகியவற்றிற்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். உயிரையும் உடலையும் தருவது ஞாயிற்றினை வாழ்க என்று வாழ்த்திச் செல்கின்றார்.

**'நின்று தன்னகத் தொவ்வொர் அணுவும்**
**நின்றன் ஜோதி நிறைந்தது வாகி**
**நன்று வாழ்ந்திடச் செய்குவையா**
**ஞாயிற் நின்கண் ஒளிதருந் தேவா!"**[14]

என்ற கவிதையானது ஞாயிறு என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ளது. இதன்மூலம் ஞாயிறு ஒளி தருவனவாகவும் ஜோதி நிறைந்தனவாகவும் திகழ்கின்றது என்பதனை உணரமுடிகின்றது

**"வான நடுவிலே மாட்சியுற ஞாயிறுதான்**
**மோனவெளி சூழ்ந்திடவும் மொய்ம்பிற் கொலுவிருந்தாள்"**[15]

இருளும் ஒளியும் என்ற தலைப்பில் அமைந்துள்ள கவிதையாகும். இதன்மூலம் வானத்தின் நடுவில் ஞாயிறு ஒளி வீசித் திகழ்ந்து கொண்டு இருப்பதனை அறிய முடிகின்றது.

**"ஒளியே நீ யார்?**
**ஞாயிற்றின் மகளா?**
**அன்று நீ ஞாயிற்றின் உயிர், அதன் தெய்வம்**
**ஞாயிற்றிடைத்தே நின்னைத்தான் புகழ்கின்றோம்"**[16]

என்ற கவிதை வரிகளின் மூலம் ஞாயிறு உயிர் என்றும், தெய்வம் என்றும் அதனால் தான் புகழ்கின்றோம் என்பதனை காண முடிகின்றது. நிலவுலகின் புற இருளைப் போக்கப் பயன்படுபவள் ஞாயிறு என்பதனைத் தெள்ளத் தெளிவாகஅறிய முடிகின்றது.

**காற்று (வளி)**

மனித நாகரிக வரலாற்றில் காற்று முதன்மை இடம் பெற்றுத் திகழ்கின்றது. மனிதன் உயிர் வாழ்வதற்கு காற்று அவசியமானது. காற்று இல்லையென்றால் மனிதனின் வாழ்வு நிலையில்லாதது. காற்று என்பது வளிமண்டலத்தில் வலிமங்கள் பெருமளவில் நகரும்போது காற்று ஏற்படுகிறது. இந்த காற்றானது இயற்கையின் நிகழ்வாகும். பஞ்சபூதங்களில் காற்று ஒன்றாகும்.

**"வெந்திறல் கடுவளி பொங்கர்ப் போந்தென**
**நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்**
**மலையுடை அருஞ்சுரம் என்பநம்**
**முலையிடை முனிநர் சென்ற ஆறே"**[17]

என்ற குறுந்தொகைப் பாடலின் மூலம் காற்றிற்கு வளி என்ற பெயர் இருப்பதனை அறிய முடிகின்றது.

**"அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கும்**
**மல்லல்மா ஞாலம் கரி"**[18]

இதன்மூலம் காற்று இயங்குகின்ற இடத்தில் மனிதர்கள் உயிர் வாழ்ந்து வருகின்றனர் என்பது புலப்படுகிறது.

**“காற்றே வா**
**மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு**
**மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன்வா**
**இலைகளின் மீதும் நீரலைகளின் மீதும்**
**உராய்ந்து மிகுந்த ப்ராண**
**ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு”**[19]

என்ற கவிதையானது காற்றின் இயல்பு நிலையினை எடுத்துரைக்கின்றது.

**ஏதெது கொண்டு வருகுது காற்றிவை**
**எண்ணி லகப்படுமோ”**[20]

என்ற கவிதையின் மூலம் காற்றானது எண்ணிலடங்காதவை என்பதனை உணர முடிகின்றது.

### காலைப்பொழுது

மனிதர்களுக்கு காலைப்பொழுது மனதிற்கு இதமளிப்பவையாகும்.இயற்கையின் உன்னத படைப்பு காலைப் பொழுதாகும்.சூரியன் உதித்தவுடன் மிக அழகான காலைப்பொழுது உருவாக்கம்பெறுகின்றது.

**“காலைப் பொழுதினிலே கண்விழித்து மேனிலைமேல்**
**மேலைச் சுடர்வானை நோக்கின்றோம் விண்ணகத்தே”**[21]

வானத்தில் சுடர்வானைப் போல் விளங்குவது காலைப் பொழுதாகும் என்பதனை அறிய முடிகின்றது.

### மாலைப் பொழுது

சூரியன் மறைவை வெளிக்காட்டுவன. வானத்தில் ஒளிந்திருக்கும் நிலவினை வரவேற்கும் விதமாக மாலைப்பொழுது அமைந்துள்ளது. பறவைகளின் வருகைக்காகக் காத்திருப்பது மாலைப்பொழுதாகும். மாலை நேரம் என்பதற்கு சாயங்காலம் மற்றும் அந்திக்காலம் என்று குறிப்பிடுவதுண்டு.

**“மாலைப் போதாதலுமே மன்னன் சேனை**
**வழியிடை ஓர் பூம்பொழிலின் அமர்ந்த காலை”**[22]

மாலை வருணனை என்ற கவிதைத் தொகுப்பில் மாலைப் பொழுது பற்றி சித்தரித்துக் கூறப்பட்டுள்ளது.

### அந்திப்பொழுது

அந்திப்பொழுது என்பது பகலில் இருந்து இரவுக்கு மாறுவதைக் குறிக்கிறது.சூரியன் மறைவிற்குப் பிறகு வானத்தில் தோன்றும் மாற்றமேயாகும்.

**“காவென்று கத்திடும் காக்கை என்றன்**
**கண்ணுக் கினிய கருநிற காக்கை**
**மேவிப் பலகிளை மீதில் - இங்கு**
**விண்ணிடை அந்திப் பொழுதினைக் கண்டே**
**கூவித் திரியும் சிலவே”**[23]

இதன்மூலம் கருமைநிறமுடைய காக்கையானது அந்திப்பொழுதில் கத்தும், கிளைகளில் அமரும், கூவித் திரியும் என்பதனை அறிய முடிகின்றது.

### வெண்ணிலா

வானத்தில் அழகுடன் மிளிரக்கூடியது. இயற்கைச் செல்வத்தில் ஒரு உன்னதமான படைப்பு நிலாவாகும். நிலவைக் கண்டால் துன்பங்கள் மறைந்து இன்பம் அளிக்கக் கூடியது. மாலை முழுவதும் நிலவின் **குளிர்ச்சியால் வானம் மெய்ம்மறந்து திகழ்கின்றது.**

**“நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து**
**நிலா என்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை**
**கோல முழுதும் காட்டிவிட்டால் காதல்**
**கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ”**[24]

என்று பாரதிதாசன் நிலவின் அழகை வருணித்துப் பாடியுள்ளார்.

**“மாதர் முகத்தை நினக்கினை -கூறுவர்**
**வெண்ணிலாவே! அ.ஃ.து**
**வயதிற் கவலையின் நோவிற் கெடுவது**
**வெண்ணிலாவே”**[25]

இதன்மூலம் வெண்ணிலாவினை மாநர் முகத்திற்கு ஒப்பிட்டுக்கூறியுள்ளார் மகாகவி பாரதியார்.

**மின்னல்**

வானத்திலிருந்து மழை பெய்வதற்கு முன்னால் ஒரு வெளிச்சம் போல் தோன்றுவது மின்னலாகும். மின்னல் என்பது இரண்டு மேகங்கள் மோதும் போது ஏற்படும் நிகழ்வாகும்.

**"மழை பெய்கிறது. காற்றடிக்கின்றது.**
**இடி குமுறுகிறது**
**மின்னல் வெட்டுகின்றது**
**புலவர்களே மின்லைப் பாடுவோம் வாருங்கள்**
**மின்னல் ஒளித்தெய்வத்தின் ஒரு லீலை**
**ஒளித்தெய்வத்தின்தோற்றம்**
**அதனை யவனர் வணங்கி ஒளி பெற்றனர்**
**மின்னலைத் தொழுகின்றோம்"[26]**

என்று மின்னல் பற்றிய கவிதை இடம்பெற்றுள்ளது. இதன்மூலம் மழை பெய்வதற்கு மின்னல் உறுதுணையாக இருக்கின்றது. யவனர்கள் மின்னலைத் தொழுது வணங்குகின்றனர் என்பதனை அறியமுடிகின்றது.

**மழை**

உலகத்தில் உயிர்கள் வாழ்வதற்கு காரணமானது மழையாகும். மழை என்பது எல்லாக் காலங்களிலும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. மழை உருவாக்கத்திற்கு நீரில் பெரும்பகுதி விரிந்த கடலிலிருந்தே பெறப்படுகின்றது.

**"மாரியு முண்டு ஈங்கு உலகு**
**புரப்பதுவே"[26]**

என்ற பாடலில் கொடை வள்ளலில் சிறந்தவரான பாரியை மழைக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளார். இதன்மூலம் மழையின் சிறப்பு உணரப்படுகின்றது.

**"விசும்பின் துளிவீழின் அல்லால்**
**மற்றாங்கே**
**பசும்புல் தலைகாண்ப தரிது"[27]**

என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். இதன்மூலம் இந்த நிலவுலகத்தில் புல் வாழ்வதற்கு மழை இன்றிமையாதது என்பதனை உணரமுடிகின்றது.

**"கேழ்கிளர் உத்தி அரவு தலைகுனிப்ப**
**படுமழை உருமின் உரற்றுகுரல்**
**நடுநாள் யாமத்தும்"[28]**

என்ற நற்றிணை பாடலில் மழை என்ற சொல் இடம்பெற்றுள்ளது.

**"தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்**
**எட்டுத் திசையும் இடிய- மழை**
**எங்ஙனம் வந்ததடா,தம்பி வீரா!"[29]**

இந்த கவிதையின் மூலம் வானத்திவிருந்து தாளங்கள் இசைத்து, எட்டுத் திசைகளுடன் இடியுடன் மழை பெய்கின்றது என்ற பாரதியாரின் கவிதையின் மூலம்அறியமுடிகின்றது.

**முடிவுரை**

இயற்கை என்பது மனிதனுடன் இரண்டறக் கலந்தவை. இன்றைய காலத்தில் நாகரிக வளர்ச்சியினால் மரங்கள் அழிக்கப்பட்டு நகரமயமாக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் கனிம வளங்கள் பெருகி வருகின்றன. ஆதலால் இயற்கையின் செயல்களில் புயல், வெள்ளம், வறட்சி போன்ற மாற்றங்களைக் காணமுடிகின்றது.

**தொகுப்புரை**

இயற்கை என்பது இயல்பான ஒன்று. மனித சக்தியில்லாமல் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கையேயாகும். நிலம் நீர்தீ காற்று வானம் ஆகிய ஐந்தின் அமைப்பு முறையே ஐம்பூதங்களாகக் கருதப்படுகின்றது. இவ்வாறாக நிலம் நீர் ஞாயிறு காற்று காலைப்பொழுது மாலைப்பொழுது அந்திப்பொழுது வெண்ணிலா மின்னல் மழை ஆகிய தலைப்புகளில் இயற்கை சார்ந்த கருத்துக்கள் இடம்பெற்றுள்ளமைச் சிறப்பிற்குரியதாகும்.

**துணை நின்ற நூல்கள்**

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், ஞா. மாணிக்கவாசகனார், ப.595, உமா பதிப்பகம், சென்னை, 2002.
2. தமிழ் இலக்கிய அகராதி, ர.பாலு, ப.கண்ணப்ப முதலியார், ப.39, ரவி பதிப்பகம், சென்னை, 2009.
3. பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, மு.வரதராசன், ப.46, பாரி நிலையம், சென்னை, 2009.

4. புறநானூறு, கு.வெ. பாலசுப்பிரமணியன், ப.3, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2017
5. பரிபாடல், பெ. சுப்பிரமணியன், ப.64, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 2017
6. நம்பியகப் பொருள், சு. திருஞானசம்பந்தம், ப.51, கதிர் பதிப்பகம், திருவையாறு, 2011.
7. திருக்குறள், பெரியண்ணன், ப.42, பாண்டி பஜார், தி.நகர், சென்னை, 2021.
8. பாரதியார் கவிதைகள், இ.சுந்தரமூர்த்தி, ப.119, பாவை பிரிண்டர்ஸ், சென்னை, 2012.
9. திருக்குறள், பெரியண்ணன், ப.15, பாண்டி பஜார், தி.நகர், சென்னை, 2021.
10. பாரதியார் கவிதைகள், இ. சுந்தர மூர்த்தி, ப.524, பாவை பிரிண்டர்ஸ், சென்னை, 2012.
11. திருக்குறள், பெரியண்ணன், ப.111, பாண்டி பஜார், தி.நகர், சென்னை, 2021.
12. சிலப்பதிகாரம், ஜெ.ஸ்ரீ. சந்திரன், ப.40, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2000.
13. பாரதியார் கவிதைகள், இ.சுந்தரமூர்த்தி, ப.465, பாவை பிரிண்டர்ஸ், சென்னை, 2012.
14. மேலது, பக்.164-165.
15. மேலது, ப.387.
16. மேலது, ப.468.
17. குறுந்தொகை, வி. நாகராசன், ப.107, நியூசெஞ்சுரிபுக் ஹவுஸ், சென்னை, 2017
18. திருக்குறள், பெரியண்ணன், ப.60, பாண்டி பஜார், தி.நகர், சென்னை, 2021.
19. பாரதியார் கவிதைகள், இ. சுந்தரமூர்த்தி, ப.490, பாவை பிரிண்டர்ஸ், சென்னை, 2012.
20. மேலது, ப.520.
21. மேலது, ப.520.
22. மேலது, ப.442.
23. மேலது, ப.318.
24. பாரதிதாசன் கவிதைகள், தொ. பரமசிவன், ப.19, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2005.
25. பாரதியார் கவிதைகள், இ. சுந்தரமூர்த்தி, ப.516, பாவை பிரிண்டர்ஸ், சென்னை, 2012.
26. மேலது, ப.474.
27. புறநானூறு, கு.வெ. பாலசுப்பிரமணியன், ப.254, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2017
28. திருக்குறள், பெரியண்ணன், ப.15, பாண்டி பஜார், தி.நகர், சென்னை, 2021.
29. நற்றிணை, கு.வெ. பாலசுப்பிரமணியன், ப.236, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 2017
30. பாரதியார் கவிதைகள், இ.சுந்தரமூர்த்தி, ப.527, பாவை பிரிண்டர்ஸ், சென்னை, 2012.

# ஒப்பியல் நோக்கில் இயற்கை

**முனைவர் பா. சிங்காரவேலன்**
*இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்த்துறை*
*அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருமங்கலம்*

***ஆய்வுச் சுருக்கம்***

*இயற்கை என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் (Nature) எனும் சொல் பயன்படுத்தப்படுகிறது. இயல்பாக இருக்கும் தோற்றப்பாடுஎன்னும் பொருள் கொண்டது. இயல்பாகத் தோன்றி மறையும் பொருட்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் ஆகிய அனைத்தையும் இணைத்து இயற்கை என்கின்றோம். உயிரினம் மற்றும் உயிரின அறிவு போன்றவையும் இயற்கையில் அடங்கும். பொதுவாக இயற்கையை ஆய்வுசெய்வதென்பது அறிவியலின் மிகப்பெரிய ஒரு பகுதியாகும் என்கிறது விக்கிபீடியா. இத்தகைய இயற்கையின் மீது படைப்பாளரின் பன்முகசிந்தனை ஆற்றலைக் காண்பது ஆய்வின் நோக்கமாகும்.*

***திறவுச்சொல்***: *இயற்கை, மரபு, பூ, பயன்பாடுகள், படைப்பாளரின் கற்பனை நயம்*

## முன்னுரை

இயற்கையைப் பாடாத கவிஞர்கள் இல்லை. மேற்கத்தியர்கள் 1) இயற்கையைப் பாடுவது 2) அரண்மனை வாசிகளைப் பாடுவது என்ற வழக்குகள் மட்டுமே உள்ளன. ஆங்கிலக் கவிஞன் வில்லியம் வேட்ஸ்வொர்த் இயற்கையின் அழகினைப் பாடினான். ஷேக்ஸ்பியர் மன்னரின் அந்தப்புரங்களைப் பாடினார் என்பது சமூகவியலாளர்களின் கூற்றாகும். ஆனால் தன்னிகரில்லாத் தமிழில் சங்க காலத்தில் தொடங்கி சமகால வரை உள்ள பாடுபொருட்கள் ஏராளம். அனைத்து இலக்கிய வடிவங்களிலும் இயற்கையைப் பற்றிப் பாடுகின்ற மரபினைத் தமிழ்மொழி இலக்கியங்களில் காணலாம். தாவரங்கள், விலங்குகள், மனிதர்கள் வாழும் பொது உலகத்தை இயற்கை என்றசொல் குறிப்பாகக் கருதலாம்.

## தமிழ் இலக்கியங்களில் இயற்கை

தமிழ் மொழிக்கு இலக்கணம் இயற்றிய தொல்காப்பியர் நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை என்ற ஐந்தாகப் பகுப்பர். ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய முதற்பொருள் (நிலம், பொழுது), கருப்பொருள் (தெய்வம், உணவு, விலங்கு, மரம், புள், பறை, தொழில்) ஆகியவற்றையும் ஒருங்கே பெற்று வாழக்கூடிய வாழ்வியல் முறைகளைப் பதிவு செய்துள்ளார்.

**“நிலம் தீநீர் வளி விசும்பொடு ஐந்தும்**
**கலந்தமயக்கம் உலகம்**
**(தொல் - பொருள் - மரபியல் - 635)** –

என்றும்,

**மண் திணிந்தநிலனும்**
**நிலம் ஏந்தியவிசும்பும்**
**விசும்புதைவருவளியும்**
**வளித்தலைஇயதீயும்**
**தீமுரணியநீரும் என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கை (புறம்:2(1-6)**

என்று பஞ்சபூதங்களே பிரபஞ்ச இயக்கத்தின் வித்து என்பதைச் சங்கப்புலவர்கள் பதிவுசெய்துள்ளனர்.

- காப்பியத்திற்கு இலக்கணம் வகுத்த தண்டியலங்கார ஆசிரியர் பெருங்காப்பியம் என்பதில் மலை, கடல், நாடு, நகர், ஆறுபருவம், கதிரவன் தோற்றம், சந்திரனின் தோற்றம் என்பன இடம்பெறும் என்கிறார். இலக்கியத்தை நயம்பட வாசிப்பதற்குக் கற்பனைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.
- சங்கப் புலவர் கபிலர் குறிஞ்சி நிலத்தில் காணலாகும் 99 வகையான பூக்களை நிரல்படுத்துகிறார். இதன் மூலம் ஆசிரியரின் இயற்கைசார் அறிவினைக் காணமுடிகிறது.
- சிலப்பதிகாரக் காப்பியத்தைத் தொடங்கும் இளங்கோவடிகள் ஞாயிறுபோற்றுதும்,

திங்களைப் போற்றுதும், மாமழை போற்றுதும் என்று சமயச்சார்பின்றி இயற்கையை முன்னிலைப்படுத்துகிறார்.

- கவிச்சக்கரவர்த்தி கம்பன் கோசல நாட்டின் இயற்கை வளத்தைப் பின்வருமாறு புகழ்ந்துரைக்கின்றார்.

**தண்டலை மயில்கள் ஆட**
**தாமரைவிளக்கம் தாங்க**
**கொண்டல்கள் முழவின் ஏங்க**
**குவளை கண் விழித்துநோக்க**
**தேன்திரைஎழினிகாட்டதேம்**
**பிழிமகரயாழின்**
**வண்டுகள் இனிதுபாட**
**மருதம் வீற்றிருக்கும் மாதோ**
**(பா.எ.35)**

- தமிழகத்தில் பக்தி இயக்கம் தழைத்தோங்க நாயன்மார்களும் ஆழ்வார்களும் பண்ணோடு கலந்த பாடல்களைப் பாடிபக்திப் பயிரை வளர்த்தனர். அப்பாடல்களிலும் இயற்கைக்கு ஒரு முக்கிய இடமிருந்ததைக் காணமுடிகிறது.

**வலம் வந்தமடவார்கள் நடமாட**
**முழவதிரமழைஎன்றுஅஞ்சி**
**சிலமந்திஅலமந்துமரமேறிமுகில்**
**பார்க்கும் திருவையாறே**
**(திருஞானசம்பந்தர்-திருவையாறு,**
**திருமுறைப்பதிகம் - 01)**

சிவபெருமான் வீற்றிருக்கும் திருவையாறு தளத்தில் பெண்கள் நடனம் ஆட கூத்தொலிகளை எழுப்பும் முழவுகள் அதிர, அவற்றைக் கண்டு அஞ்சிய சிலமந்திகள் வானத்தில் கேட்கும் இடியோசை எனக் கருதி, மனம் சுழன்று மரங்களில் ஏறிமேகங்களைப் பார்க்கும் நிகழ்வைப் பாடியுள்ளார் திருஞானசம்பந்தர். இந்த திருத்தளத்தில் நுழைந்த போது திருநாவுக்கரசர் கண்டகாட்சியை

**“காதல் மடப்பிடியோடு களிறு வருவன**
**கண்டேன் கண்டேன் அவர் திருப்பாதம்**
**கண்டறியாதன கண்டேன்”**
**(நான்காம் திருமுறை)**

என்கிறார்.

ஆண்டாள் நாச்சியார் திருப்பாவைப் பாசுரத்தில்

**“ஆழி மழைக்கண்ணாஒன்றுநீகைகரவேல்**
**ஆழி உள்புக்குமுகந்துகொடுஆர்த்துஏற்**
**ஊழி முதல்வன் உருவம் போல்**
**மெய் கறுத்துப்**
**பாழியம் தோளுடைப் பற்பனாபன் கையில்**
**ஆழிபோல் மின்னிவலம்புரிபோல் நின்று அதிர்ந்து**
**தாழாதே சார்ங்கமுதைத்த சரமழைபோல**
**வாழஉலகினில் பெய்திடாய் நாங்களும்**
**மார்கழிநீராடமகிழ்ந்தேலோர் எம்பாவாய்”**

கடல் நீர் ஆவியாகி, மேகமாகி பெருமழையாய் பொழிவதைத் திருமாலின் உருவத்தோடு உவமித்துள்ளார் ஆண்டாள். இப்படிபக்தி இலக்கியமும், பின்னே தோன்றிய சிற்றிலக்கியங்களில் இயற்கை சார்ந்த கற்பனை வளம் மிகுந்துள்ளன.

தற்கால இலக்கியமான புதுக்கவிதை, உரைநடை, சிறுகதை, புதினம் ஆகியவற்றிலும் படைப்பாளர்கள் இயற்கைதரும் இன்பத்தை வெளிப்படுத்துகின்றனர். படைப்பாளர்களின் கருத்துக்கள் ஒரேநேர்கோட்டில் நின்று, வாசகனுக்குவாசிக்கும் திறனை மிகுவிப்பதை ஒப்பியல் நோக்கில் அணுகுவதாக இக்கட்டுரை அமைகிறது.

### மரம்

இன்றைக்குச் சூழலியல் சிந்தனையாளர்கள் காற்றில் ஏற்படும் மாசினை அகற்றமரங்கள் முக்கிய பங்குவகிப்பதை ஊடகங்கள் வாயிலாக எடுத்து இயம்புகின்றனர். விரைவான போக்குவரத்து வசதிக்காக அமைக்கப்படும் சாலைகளால் மரங்கள் அகற்றப்பட்டு அரளிச் செடிகளை நடுகின்றனர். இதனால் புவிவெப்ப மண்டலமாய் மாறிவருகிறது. சமூக ஆர்வலர்கள் மரம் நடுதலை, வளர்ப்பதைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். இத்தகைய சூழலில் படைப்பாளர்கள் இருவரின் மரம் குறித்த கருத்துக்களைக் காண்போம்.

### ஒருபுளியமரத்தின் கதை

சுந்தர ராமசாமியின் ஒரு புளியமரத்தின் கதை என்னும் புதினம் 1966 வெளியானது.

மலையாளம், இந்தி, எபிரேயம், ஆங்கிலம் போன்ற மொழிகளிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. விடுதலைப் பெற்ற இந்தியாவிற்கு முன்னரும் பின்னரும் நகரும் ஒரு புளியமரத்தின் கதையாகும். அம்மரம் நீங்கும் பொழுதுமனம் அழுதது. மனிதன் தனக்கும், தன்னைச் சுற்றியுள்ள உயிர்களுக்கும் துயரைக் கொடுக்கிறான். ஆனால் இயற்கையோ, தம் இயல்பிலிருந்து வேறுபடுவது இல்லை. வெவ்வெறு காலகட்டத்தில், பலரும் அம்மரத்தால் அடைந்த நன்மைகள் அழுகுற விளக்கப்படுகின்றன.

**மரம் என்பது உயர்திணை**

சாலையில் நடக்கிறேன். இருபுறமும் மரங்கள், மலா் சொரிந்துஎன் பயணத்தை ஆசீா்வதிக்கும் மரங்கள் வெயிலுக்கு குடைபிடிக்கும் மரங்கள். நான்களைப் படையும் போதெல்லாம் தாய்ப்பாசத்தோடு தங்கள் மடியில் என்னை ஆசுவாசப்படுத்தும் மரங்கள்.

நன்றி என் கண்களில் சுரக்கிறது. மனிதனின் வாழ்க்கைப் பாதையைப் பார்க்கிறேன். அங்கும் வரிசையாக மரங்கள். அவன் குழந்தைப் பருவத்தில் தொட்டிலாகி, நடைபழகும் பருவத்தில் நடைவண்டியாகி, பள்ளிபருவத்தில் ஏடுகளாகி, மணப்பருவத்தில் கட்டிலாகி, கிழப் பருவத்தில் ஊன்றுகோலாகி, இறந்த பிறகு பாடையாகி, சிதையிலும் உடன்கட்டை ஏறிஅவன் சாம்பலோடு சாம்பலாகிக் கலந்து மனிதனுக்காகவே தங்களை முற்றிலும் அா்ப்பணம் செய்யும் மரங்கள்.

மனிதனின் தாகத்திற்குபானம் தந்து, பசிக்கு உணவூட்டி உடுத்த உடையாகி, வசிக்க வீடாகி, நோய்க்கு மருந்தாகி அவன் பணத்திற்கு சக்கரங்களாகி, அவன் வேலைகளில் கைகளுக்குள் கைகளாகி, அவன் சுவாசத்திற்காகக் காற்றைச் சலித்துக் கொடுத்து, அவனுக்காக மேகங்களைக் கெஞ்சிப் பிச்சை கேட்டுமரங்கள் மட்டும் இல்லையென்றால் மனிதன் வாழ்ந்திருப்பானா? (அப்துல் ரகுமான், சொந்தச் சிறைகள், பக். 14-15) மனிதன் மரமாக முடியுமா? மனிதனுக்கும் மரத்துக்கும் எவ்வளவு வேறுபாடுகள்!

மண் மனிதனுக்குப் புதை குழி! மரத்துக்கோ கருவறை! மரங்கள் சாய்ந்தால் காட்டிலிருந்து வீட்டுக்கு வரும் மனிதன் சாய்ந்தால் வீட்டிலிருந்து காட்டுக்குப் போகிறான்.

**மரம்**

கொடுப்பதற்காக வேகைகளை நீட்டுகிறது. மனிதன் வாங்குவதற்காகக் கைகளை நீட்டுகிறான். மரங்கள் வானத்தை நோக்கியே வளர்கிறது. மனிதன் புழுதியிலேயே புரளுகிறான். (ப.17)

மனிதன் படைத்த மரங்கள் தூக்கு மரங்கள், சிலுவை மரங்கள், கழுமரங்கள், கொடிமரங்கள், அத்தனையும் மாமிசமரங்கள், மலர்களைத் தின்றுமுட்களை உற்பத்தி செய்யும் மரங்கள், வெயிலை விநியோகிக்கும் மரங்கள் இந்த அழகில் மனிதன் உயா்திணையாம், மரம் அஃறிணையாம், சரிதானா? என்று வாசகரிடையே வினாவை எழுப்புகிறார் அப்துல்ரகுமான்.

**எண்ணமும் எழுத்தும் March 20-2017 வைரமுத்து மரங்களைப் பாடுவேன்** என்னும் கவிதையில் மரங்களின் பயன்பாட்டைப் பதிவுசெய்கிறார்.

- மரங்களைப் பாடுவேன்
  வாரும் வள்ளுவரே
  மக்கட்பண்பில்லாதவரைஎன்னசொன்னீா்
  மரம் என்று
  மரமென்றால் அவ்வளவுமட்டமா!
- வணக்கம் ஒளவையே
  நீட்டோலைவாசியான் யாரென்றீா்
  மரமென்று
  மரமென்றால் அத்தனை இழிவா!
- பக்கத்தில்யாரவா் பாரதிதானே
  பாஞ்சாலியைமீட்காதபாமரரைஎன்வென்றீா்
  நெட்டைமரங்கள் என்றீா்
- மரம்
  சிருஷ்டியில் ஒருசித்திரம்
  பூமியின் ஆச்சரியகுறி
  நினைக்கநினைக்கநெஞ்சூறும் அனுபவம்

- மரம்
இருக்கும் வரை பூ பூக்கும்
இறக்கும் வரைகாய் காய்க்கும்
- வெட்டிநட்டால்
கிளைமரமாகும்
வெட்டிநட்டால்
கரம் (கை) உடம்பாகுமா?
- மரங்கள் இல்லையேல்
காற்றைஎங்குபோய்ச் சலவைசெய்வது
மரங்கள் இல்லையேல்
மழைக்காகஎங்குபோய் மனுச்செய்வது
மரங்கள் இல்லையேல்
மண்ணில் மடிக்குள் ஏதப்பாஏரி..
- உண்ணக்கனி
ஒதுங்கநிழல்
உடலுக்குமருந்து
அடையக் குடில்
அடைக்ககதவு
அழகுவேலி
ஆடத் தாழி
தடவத் தைலம்
தாளிக்கஎண்ணெய்
எழுதக் காகிதம்
எரிக்கவிறகு
- மரம் தான் மரம் தான்
எல்லாம் மரம் தான்
மறந்தான் மறந்தான்
மனிதன் மறந்தான்
- பிறந்தோம் தொட்டில்
மரத்தின் உபயம்
நடந்தோம் நடைவண்டி
மரத்தின் உபயம்
எழுதினோம் பென்சில் பலகை
மரத்தின் உபயம்
மணந்தோம் மாலைசந்தனம்
மரத்தின் உபயம்
- துயின்றோம் தலையாணைபஞ்சு
மரத்தின் உபயம்
நடந்தோம் பாதகைரப்பர்
மரத்தின் உபயம்
இறந்தோம் சவப்பெட்டியை
மரத்தின் உபயம்
எரிந்தோம் சுடலைவிறகு
மரத்தின் உபயம்
- மனிதா
மனிதனாக வேண்டுமா
மரத்திடம் வா
ஒவ்வொருமரமும் போதிமரம்...

**கவிப்பேரரசு வைரமுத்து**

அப்துல் ரகுமான், வைரமுத்து ஆகிய இருவரின் கவிதைகள் மரத்தின் பல்வேறு பரிமாணங்களையும், பயன்பாட்டையும் ஒருமித்த கருத்துடன் கவிதை வழி வெளிப்படுத்தியுள்ளனர். கவிப்பேரரசு வைரமுத்து தோழிமார், கதை எனும் கவிதையில் தோழிமார் இருவர் மரத்தின் கீழ் விளையாடிய அனுபவத்தைப் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

- ஆத்தோரம் பூத்தமரம் ஆனைகட்டும்
புங்கமரம்
புங்கமரத்தடியில் பூவிழுந்த
மணல் வெளியில்
பேன் பார்த்தசிறுவயசுபெண்ணே
நெனவிருக்கா!
என்றுகடந்தகாலநிகழ்வைக்
கற்பனைநயத்துடன்
கவிப்பேரரசுவைரமுத்துகவிதையாகப்
பதிவுசெய்துள்ளார்.
- லாரிநிறையமரம்
இரையுடன் கூட்டைத்தேடும்
தாய்க்குருவி
கணேஷ் சுப்ரமணி, மதுரை

என்ற கவிதை மரங்கள் வெட்டப்படுவதால் ஏற்படும் இழப்புகளை எளிமை வடிவில் பதிவிட்டுள்ளார்.

**பூ யாருக்காக**

படைப்பாளர்கள் மரங்களைப் போலவே, மலர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். மலர்கள் மீதான தனிமனிதர்களின் கண்ணோட்டத்தைக் கவிக்கோகவிதையாக்கி இருப்பது, அவருடைய படைப்பாளுமைக்குச் சான்றாகிறது.

ரோஜாவில் முள் இருக்கிறதே என்று ஒருவன் வருந்தினான். முள்ளில் ரோஜா

இருக்கிறதே என்று ஒருவன் மகிழ்ந்தான். நானோ (கவிஞன்) ரோஜாவும் முள்ளும் சகோதரர்களாக இருக்கிறார்களே என்று வியந்தேன்.

**செடியின் கோபம் முள்ளானது..**
**மன்னிப்புமலரானது**
**முள் ஆண், மலர் பெண்**
**(அப்துல் ரகுமான், சொந்தச் சிறைகள், பக்.23,24)**

- பாதையோரம் ஒருமல்லிகைப் பூந்தோட்டம் ஊதாரித்தனமாகப் பூத்துக்கிடந்தன மலர்கள்.
  ஒருபக்தன் பூசைக்குப் பயன்படும் என்றான்.
  ஒரு வியாபாரியின் பார்வையில் பூக்கள் நாணங்களாகத் தெரிந்தன
  ஒருகாதலன் காதலிக்குப் பூச்சூட்டி மகிழ்ந்தான்.
  ஒருவிஞ்ஞானி பூக்களை இதழ் இதழாகப் பிய்த்து ஆராய்ச்சி செய்தான்.
  ஒரு கவிஞன் மலர்களின் மொழியை நாசியால் கேட்டான்.
  ஒருவிதவை கண்ணீர் சொரிந்து பூக்களை நனைத்தாள்
  ஒருசீடன் மலர்களின் அழகினைப் பார்த்து வியந்தான்.
  குருவோ மலரினை மதியை மயக்கும் மாயை என்றார்.
- ஒருபைத்தியக்காரன் பூ அருகே வாயை வைத்து ‘ஹலோ’ என்றான்.

ஏதாவது இருக்கிறதா? எனத் தோட்டக்காரரிடம் வினவினார்.

ஒரு ஆசிரியர் ஒருபூவின் மீது நூற்றுக்கு நாற்பது என்றார்.

ஒரு அரசியல் வாதி இவ்வளவு பூக்களா! அதும் எளிதில் பறிக்கும் படி..

இவ்வளவும் ஓட்டுக்களா இருந்தால் ? பூக்களால் என்ன பயன் பூந்தோட்டத்தை அழித்து நெல்பயிரிட வேண்டும் என்றார்.

ஓர் அறிவு ஜீவி மலர்களின் நறுமணத்திற்கு முகம் சுழித்தான். சிகரெட்டால் பூவைச் சுட்டான்.

ஒரு சித்தர் மலர்களைக் கும்பிட்டார்.

- ஒருவிமர்சகர் பூக்களை இவை வெள்ளையாக இருக்கின்றன. வெள்ளை என்பது நிறம் அல்ல. நிறம் இன்மை. ஒரு நிறத்தோடு இவற்றிற்க்கு ‘கமிட்மெண்ட்’ இல்லை என்றார்.

ஒரு அவசரக் காரனுக்கு மலர்கள் அவன் பார்வையில் படவில்லை

ஒருவண்டு இதழ் நோகாமல் பூவின் மீது அமர்ந்தது. அமைதியாக ஆழ்ந்துலயித்துத் தேன் அருந்தியது.

மலர் சிலிர்த்தது

ஆமாம் பூ யாருக்காக! (அப்துல் ரகுமான், **சொந்தச் சிறைகள்,** பக். 51-53)

## எச்சில் வீடு

என் அறையின் மூலையில் சிலந்திவலை. வீட்டுக்குள் வீடுகட்டும் அந்த அதிசயப் பிராணியைப் பார்க்கிறேன். அதற்குத் தான் எவ்வளவு தன்மானம்! அந்நியப் பொருள்களால் வீடுகட்டாமல் தன் சொந்தஎச்சிலால் அல்லவா கட்டிக் கொள்கிறது! (ப.54) இப்படி இயற்கை நிகழ்வுகளைக் கவிக்கோ பதிவு செய்துள்ளார்.

## நிறைவாக

இயற்கையைக் காண்பதும், இயற்கையோடு இயைந்து வாழ்வதும், அழகில் நம்மை மறப்பதும் சுகானுபவம் தான். பெருநகரங்களில் வாழ்ந்துவரும் பலர், விடுமுறை நாட்களில் இயற்கையோடு குளுமையும் நிறைந்த பகுதிக்குச் சென்றுதம்மைப் புதுப்பித்துக் கொள்வதைக் காணலாம். படைப்பாளர்கள் தங்களின் உற்றுநோக்கலின் வழி மரம், பூ குறித்தபன்முகச் சிந்தனைகளைப் பதிவிட்டிருப்பது, படைப்பாளுமைக்கு நற்சான்றாகும். மரத்தின் பயன்களைப் போல்வாழும் நாட்களில் மனிதர்களும் பயன்தரக் கூடியவர்களாகத் திகழவேண்டும். உயர்திணை மாந்தர்களைக் காட்டிலும், அஃறிணையான மரங்கள் உன்னதமானவை என்றபடைப்பாளர்களின் கூற்றின் வழி அறியமுடிகிறது. இனிவரும் நாட்களில் இயற்கையை நேசிக்கப் பழகுவோம்.

## துணைநூற்பட்டியல்

1. அப்துல் ரகுமான், சொந்தச் சிறைகள், நேஷனல் பப்ளிஷர்ஸ், தியாகராயர் நகர், சென்னை (2018)

# காப்பியம் இலக்கியம் இயற்கை

**பா. நந்திதா**
*பி.ஏ.தமிழ் மூன்றாம் ஆண்டு, தென்காசி*
*வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி*

## முன்னுரை

காப்பியம் என்பது இலக்கிய வடிவங்களில் ஒன்று. இதனைப் பெருங்காப்பியம் என்றும் சிறுங்காப்பியம் என்றும் பகுத்துக் காட்டினர்.

அறம், பொருள், இன்பம், வீடு என்பனவற்றோடு ஒரு ஒப்பிலாத் தலைவனையும் தலைவியையும் கொண்டு இயற்றப்படுவது பெருங்காப்பியமாகும். வாய்மொழி இலக்கியம், தன்னுணர்ச்சிப் பாடல்கள், கதை பொதி பாடல்கள் என்று இது விரிந்து வளர்கிறது.

## காப்பியம் சொல் விளக்கம்

காப்பு + இயம் = காப்பியம் ஆகியது. பழமரபுகளைக் குறிப்பாக இலக்கண மரபுகளைக் காத்து நிற்பது காப்பியம் என்ற பொருளில் தமிழில் இச்சொல் முதலில் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'இயல்பு' என்பது 'சொல்' எனப் பொருள்படும் ஒரு வினைச் சொல். இசைக் கருவிகளை இயம் என்பது பண்டைய வழக்கு. பல இசைக்கருவிகளைப் பல்லியம் என்பர். சிறிய இசைக்கருவிகளை இயக்கிக் கொண்டு குன்றுதோறாடும் முருகன் 'குறும்பல்லியத்தன்' எனப் போற்றப்படுகின்றன. தொல்காப்பியம் என்னும் நூலின் பெயரில் 'காப்பியம்' எனும் சொல் உள்ளது. தொல்+ காப்பு+இயம் என்பது தொல்காப்பியம். இது தமிழில் இருக்கும் மொழியியல் வாழ்வியல் தன்மையை இயம்பும் நூல். 'காப்பியம்' என்பது தூய தமிழ் சொல் என்பது பெறப்படும்.

## காப்பியத் தோற்றம்

எம்மொழியிலும், தொடக்கத்தில் காப்பிய இலக்கியம் தோன்றுவதற்கான அடிப்படைகளும், வளர்ச்சிப் படிநிலைகளும் அமைந்திருக்கும் திடீரென ஒரு பேரிலக்கியப் படைப்பு ஒரு மொழியில் முகிழ்த்து எழுதல் என்பது இயலாத ஒன்று. முதலில் தனிப்பாடல்களாகவும், செய்யுள் தொகுப்புகளாகவும் இருந்த தொல் பழங்கால (ரீசைஅவைளைந) இலக்கியப் படைப்பு மெல்ல மெல்ல வளர்ச்சி பெற்றது. கதையைத் தொகுத்துக் கூறும் பாடல்கள் பிறந்தன. கற்பனை வளம் விரிவடைந்து காப்பியப் படைப்புகள் உருவாயின. தனிமனிதனின் வீரதீரச் செயல், அவன் பிறப்பு, வளர்ப்பு, அவன் சார்ந்த மரபு முதலான வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள், விழாக்களிலும், வழிபாடுகளிலும் பல பொருளாயின. அவனது புகழ் உன்னத நிலைக்கு உயர்த்தப்பட்டது.

## காப்பிய இலக்கணம்

தண்டியலங்காரம் வடமொழியில் தண்டி இயற்றிய காவ்யாதர்சம் என்னும் நூலைத் தமிழ்படுத்தி அவரால் இயற்றப்பட்டது. காப்பிய இலக்கணத்தைத் தண்டியலங்காரம் விரிவாக எடுத்துரைக்கின்றது. காப்பியத்தைப் பெருங்காப்பியம், காப்பியம் என்று இரு வகைப்படுத்தி, அவற்றின் இலக்கணத்தைத் தனித்தனியே எடுத்துச் சொல்கிறது. இந்தப் பாகுபாடு தோன்றிய காலம் கருத்தில் கொள்ளத்தக்கது. தமிழ் இலக்கிய வரலாற்றில் வீரயுகத்தை அடுத்துத்தான் காப்பியக் காலம் தொடங்குகிறது. இக்காப்பியம் எழுச்சிக்கு வித்திட்டவர் இளங்கோ அடிகள் ஆவார். இவர் எழுதிய காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். சிலப்பதிகாரத்திற்கு முன் பல காப்பியங்கள் எழுந்திருக்க வேண்டும் என அறிஞர்கள் கருத்துத் தெரிவித்தாலும் அவை அனைத்தும் யுகங்கள். தமிழில் தோன்றிய முதல் காப்பியமே சிலப்பதிகாரம் தான். இதனை அடியொற்றியே தமிழில் பல காப்பியங்கள் எழுதப்பட்டுள்ளன. "ஐம்பெருங்காப்பியம்" என்னும் தொடரை

14 ம் நூற்றாண்டைச் சேர்ந்த மயிலைநாதர் குறிப்பிடுகிறார்.

**பெருங்காப்பியம்**

1. பெருங்காப்பியமாவது வாழ்த்துதல், தெய்வத்தை வணங்குதல், வருபொருள் உரைத்தல் என்ற மூன்றில் ஒன்றினைத் தொடக்கத்தில் பெற்று வரும். அவற்றுள் இரண்டோ மூன்றுமோ பெற்றும் காப்பியம் தொடங்கலாம்.
2. அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற்பொருளைப் பயனாகத் தருவதாக அமையும்.
3. தன்னிகர் இல்லாத தன்மை உடையவனைக் காப்பியத் தலைவனாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. மலை, கடல், நாடு, நகர், ஆறு பருவங்கள், கதிரவன் தோற்றம், சந்திரனின் தோற்றம் ஆகியற்றைப் பற்றிய வருணனைகளைக் கொண்டிருக்க வேண்டும்.
5. திருமணம் புரிதல், முடிசூடல், சோலையில் இன்புறுதல், நீர் விளையாடல், மதுவுண்டு களித்தல், மக்களைப் பெற்றெடுத்தல், ஊடல் கொள்ளுதல், புணர்ச்சியில் மகிழ்தல் முதலிய நிகழ்வுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**"பெருங்காப்பிய நிலை பேசுங்காலை**
**வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றினொன்று**
**ஏற்புடைத் தாகி முன்வர வியன்று**
**கற்றோர் புனையும் பெற்றிய தென்ப".**
**(தண்டியலங்காரம்,நூற்பா-8)**

**சிறுகாப்பியம்**

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கனுள் ஒன்றேனும், இரண்டேனும், குறைந்து வருவது காப்பியமாகும். தண்டியலங்காரம் கூறும் காப்பியம் என்பது சிறுகாப்பியத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

**"அறமுதல் நான்கினும் குறைபாடுடையது**
**காப்பியம் என்று கருதப் படுமே".**
**(தண்டியலங்காரம்,நூற்பா - 10)**

மேற்கூறிய பெருங்காப்பியமும், காப்பியமும் ஒரு வகைச் செய்யுளாலும், பலவகைச் செய்யுள்களாலும், உரைநடை கலந்தும் பிறமொழி கலந்தும் வரலாம் தண்டியலங்காரம் காப்பிய இலக்கணத்தைத் தெரிவிக்கின்றது.

**பாவிகம்**

காப்பியத்தினுடைய பண்பாகப் பாவிகம் அந்நூல் குறிக்கின்றது.

**"பாவிகம் என்பது காப்பியப் பண்பே".**
**(தண்டியலங்காரம், நூற்பா - 09)**

**காப்பிய வகை**

காப்பியம் என்பது தமிழர்களுக்குச் சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலான ஐம்பெருங்காப்பியங்களும், ஐஞ்சிறுகாப்பியங்களுமே நினைவுக்கு வரும். தொடர்ந்து பெரியபுராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலான நம் நினைவுக்கு வருவதுண்டு. 20ம் நூற்றாண்டில் பாரதியின் பாஞ்சாலி சபதம், பாரதிதாசனின் பாண்டியன் பரிசு, புலவர் குழந்தையின் இராவண காவியம், கண்ணதாசனின் ஏசு காவியம் போன்றனவும் காப்பியங்களாகவே எண்ணப்படுகின்றன.

**தமிழில் பெருங்காப்பியங்கள்**

தமிழில் பெருங்காப்பியங்களை ஐம்பெருங் காப்பியங்கள் என்றும் சொல்வதுண்டு. அவை சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவை. இவற்றுள் சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டையும் இரட்டைக் காப்பியங்கள் என்பர். இங்கே குறிக்கப்பட்டுள்ள ஐம்பெருங்காப்பியங்கள் வரிசையில் குண்டலகேசியும், வளையாபதியும் கிடைக்கப்பெறவில்லை. அவை எப்படி இருந்தன. அவை பெருங்காப்பிய மரபில் பாடப்பட்டவையாகும்? என்பது யாருக்கும் தெரியாது. நன்னூல் மயிலை நாதர் உரையில் (நூற் - 387) 'ஐம்பெருங்காப்பியம்' என்ற பெயர் காணப்படுகிறது. பின்னர் தோன்றிய தமிழ்விடுதூது 'கற்றார் வழங்கு பஞ்ச காப்பியம்' என்றும் குறிப்பிடுகின்றனர்.

இந்த இரு நூல்களிலும் 'பஞ்ச காப்பியம்' என்பது குறிக்கப்படவில்லை. கந்தப்ப தேசிகர் ஐம்பெருங்காப்பியங்களை எண்ணிச் சொல்கிறார்.

**"சிந்தாமணியாம் சிலப்பதிகாரம் படைத்தான்
நந்தா மணிமேகலை புனைந்தான் - நந்தா
வளையாபதி தருவான் வாசகனுக்கு ஈந்தான்
திளையாத குண்டகேசிக்கும்".**

**சிறு காப்பியங்கள்**

தமிழில் சிறுகாப்பியங்களை ஐஞ்சிறு காப்பியங்கள் என்று வகை செய்வர். இந்த வகைபாடும் கூடக் கருத்து வேறுபாடுகளுக்கு உரியதாக உள்ளது. யசோதா காவியம், நீலகேசி, உதயணகுமார காவியம், நாககுமார காவியம், சூளாமணி ஆகியவற்றை ஐங்சிறு காப்பியங்களாகத் தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர்.

**சிலப்பதிகாரம்**

தமிழ் மொழி தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரம். இந்நூலின் ஆசிரியர் இளங்கோவடிகள் ஆவார். இக்காப்பியம் சங்க காலத்திற்கும் தேவாரக் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்தது. காவிரிப்பட்டினத்தில் வணிகர் குலத்தில் பிறந்து குலவழக்கப்படி திருமணம் செய்து, இல்லறம் நடத்திய கோவலன் கண்ணகி வாழ்க்கை வரலாற்றை விளக்குவது இந்நூல். இவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை மூன்று காண்டங்களில் முப்பது காதைகளில் விரிவாக ஆசிரியர் விளக்கியுள்ளார்.

சிலப்பதிகாரக் காப்பியம் நிகழ்ச்சிகள் முறையே சேர, சோழ, பாண்டிய நாடு என்னும் மூன்று நாடுகளில் மூவேந்தரின் தலைநகரங்களிலும் நடந்த நிகழ்ச்சிகளாகும். எனவே இக்காப்பியம் புகார் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சி காண்டம் என்று மூன்று காண்டங்களாக வகுத்துக் கூறப்பட்டுள்ளது. இந்தக் காப்பியத்தின் கதை சிலம்பினைக் காரணமாகக் கொண்டு அமைந்ததால் சிலப்பதிகாரம் எனப் பெயரிடப்பட்டது. காப்பியத்தில் அறம், பொருள், இன்பம், மூன்றும் இடம் பெறுகின்றன. ஒருவரது வாழ்க்கையை முழுமையாகப் பார்த்து, உயர்ந்த உண்மைகளைக் காட்டி, மனித சமுதாயத்தை வழி நடத்திச் செல்லும் முதல் இலக்கிய முயற்சியாக, பெருங்காப்பியமாக அமைந்தது சிலப்பதிகாரம் ஆகும். இளங்கோவடிகள் இக்காப்பியத்தில் இயல், இசை, நாடகம் என்ற மூன்று தமிழையும் பயன்படுத்தியுள்ளார். அதனால் சிலப்பதிகாரம் முத்தமிழ் காப்பியம் எனப் போற்றப்படுகிறது.

சிலப்பதிகாரம் இவ்வுலக மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் மூன்று உண்மைகளைக் கருப்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளது.

**"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்.
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதாகும்".**

இவை சிலப்பதிகார நூல் முழுமையும் பரவி வந்துள்ளதைக் காணலாம். சிலப்பதிகாரக் காப்பியத்தின் பெருமையைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் **"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்"** எனப் பாராட்டியுள்ளார்.

**மணிமேகலை**

சிலப்பதிகாரம், மணிமேகலை இவை இரண்டையும் இரட்டைக் காப்பியங்கள் என்று குறிப்பிடுவார்கள். இவ்விரண்டும் கதை நிகழ்ச்சியில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. மேலும் சமய காலத்தில் தோன்றியவை. சிலப்பதிகாரம் இளங்கோவடிகளாலும், மணிமேகலை சீத்தலை சாத்தனாராலும் பாடப்பட்டவை. சமண சமயச் செய்திகளை சிலப்பதிகாரமும், பௌத்த சமயக் கொள்கைகளை மணிமேகலையும் கூறுகின்றன.

1. கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகளாகிய மணிமேகலையின் வரலாற்றைக் கூறுகின்றது.
2. இக்காப்பியத்திற்கு மணிமேகலை துறவு எனச் சாத்தனார் பெயரிட்டு வழங்கினார்.

3. நூல் முழுவதும் நிலை மண்டில ஆசிரியப்பா யாப்பினால் பாடப்பட்டது. முப்பது காதைகளிலும் மணிமேகலையின் வாழ்க்கை வரலாறு விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

மணிமேகலை, சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சி என்பது போலவே தொடர்ந்து வளர்ந்து முடிகிறது. மணிமேகலையின் பிறப்பையும், கோவலன் இறந்த நிலையில் அவள் இளநங்கையாய் இருத்தலையும் சிலப்பதிகாரம் சுட்டிச் சொல்கிறது. அந்த இளநங்கையைக் காப்பியத் தலைவியாகக் கொண்டு மணிமேகலை காப்பியம் பாடப்படுகிறது.

## மூன்று கருத்துகள்

இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை என்னும் மூன்று கருத்துகளையும் இக்காப்பியம் அழுத்தமாகக் கூறுகின்றது.

## மணிமேகலை கதை

மணிமேகலைக் காப்பிய கதை ஒரு புரட்சிக் கதை. வணிகரில் சிறந்த கோவலனுக்கும் கணிகையரில் சிறந்த மாதவிக்கும் பிறந்த மகள் மணிமேகலை. கோவலன் மறைந்ததும் மாதவி உலக வாழ்வை வெறுத்து அறவண அடிகளை அணுகித் துறவறம் பூண்டாள். மகள் மணிமேகலையைப் பரத்தை வாழ்வில் ஈடுபடுத்த பாட்டி சித்திராபதி முயன்றாள். மாதவி அதனை வெறுத்து, "மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை. அவள் தவநெறி மேற்கொள்ள மாட்டாள்" எனக் கூறி மகளின் கூந்தலைக் களைந்து அவளையும் தூய துறவு வாழ்வு மேற்கொள்ளச் செய்கிறாள். ஒரு பரத்தை, அதுவும் மங்கை பருவத்துப் பேரழகி துறவியாவது சான்றோரையும் கண்கலங்கச் செய்யும் நிகழ்ச்சி. மேலும் இடையே நாட்டின் இளவரசன் உதயகுமாரன் அவளைக் காதலிக்கிறான். மணிமேகலை மணிபல்லவம் அடைந்து பழம் பிறப்பு உணர்ந்து அமுதசுரபி பெற்று மீள்கிறாள். நாடெங்கும் திரிந்து பசியும் பிணியும் போக்குகிறாள். உதயகுமாரன் கொலையுண்ணச் சிறை புகுந்து மணிமேகலை சிறைச்சாலையை அறச்சாலையாக்கி மகனை இழந்த மாதரசிக்கு அறம் உரைக்கிறாள். ஊர் பல சென்று அறங்கள் உரைத்துப் பௌத்த நெறியின் படி முக்தியடைகிறாள். மணிமேகலையின் கதையோடு, இந்நூலில் வரும் ஆதிரை வரலாறு ஆபுத்திரன் வரலாறு ஆகியவை காப்பியத்துக்குச் சுவை சேர்க்கின்றன.

## முடிவுரை

தமிழின் பழைய இலக்கியங்கள் தனிப்பாடல் திரட்டுக்களாகவே உள்ளன. தமிழ்மொழியில் 3 அடி முதல் 782 அடியுள்ள நீண்ட பாட்டு வரையில் உள்ள தனிப்பாட்டுகளே சங்க இலக்கியமாக உள்ளன. தொடக்கத்தில் நாட்டுப் பாடல்களின் ஓசையமைப்பையும் பொருள் வகையையும் ஒட்டி வளர்க்கப்பட்ட தனிப்பாடல்களே தமிழ் இலக்கியத்தின் தோற்றமாகும்.

## பார்வை நூல்கள்


1. 12 ஆம் நூற்றாண்டு நூல் தண்டியலங்காரம்.
2. ஐம்பெருங்காப்பியம் ஜெகாதா - 2006 - சென்னை.
3. சங்க இலக்கியம் சிலப்பதிகாரம் அங்கமுத்து முதலியார் 2013 சென்னை.

# ஐந்திணை நிலங்களின் உணவு முறையில் இயற்கை

**சு. பிரியா**
*முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத் துறை*
*பெரியார் கலைக்கல்லூரி*

## முன்னுரை

தமிழ் மக்களுக்கு இயற்கையில் இருந்த ஈடுபாட்டை சங்க இலக்கியம் மற்றும் தொல்காப்பியப் பொருளதிகாரம் அழகாக அமைத்து இருக்கிறது. உணவு மனிதனுக்கு அவசியமானது. உடல் வலிமைப் பெறுவதற்கும், வளர்ச்சியடைவதற்கும் இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது. ஐந்திணை மக்கள் உணவினை தன் விருப்பத்திற்கேற்ப கொண்டிருந்தனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து நிலப்பிரிவுகள் இருப்பினும் எல்லோரும் ஒரே வகையான உணவினைப் பயன்படுத்தவில்லை. அந்தந்த நிலத்திற்கேற்ப உணவு வகைகள் வேறுபட்டு இருந்தன. இவர்கள் உணவே மருந்து என்ற ஒப்பற்ற கொள்கையில் வாழ்ந்து வந்தனர். ஐந்திணைக்கு பண்டையத் தமிழர்கள் கொடுத்த பெயர்கள் மூலம் அவர்கள் இயற்கையோடு கலந்த உணவினை மேற்கொண்டு வாழ்ந்து வந்தனர் என்பதை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமையப்பெறுகின்றன.

## குறிஞ்சி நிலமக்களின் உணவு முறைகள்

குறிஞ்சி நில மக்கள் மலையும் மலைச் சார்ந்த பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இங்கு இயற்கையாக கிடைத்த பழங்களையும், தேனையும், கிழங்குகளையும் உணவாக உண்டனர்.

தனக்கு கிடைத்த உணவை தான் மட்டும் உண்ணாமல், தன் சுற்றத்தை கூவி அழைக்கும் காக்கையைப் போலவே குறிஞ்சி நில மக்களும், தன் இனமக்களுக்கும், பிற நிலமக்களுக்கும் தனக்கு கிடைத்த உணவினை கொடுத்து மகிழ்ந்தார்கள். இந்நிலத்து மக்கள் பண்டமாற்றுமுறைப்படி தனக்கு கிடைத்தப் பொருட்களை பிற நிலத்தாரிடம் கொடுத்து அவர்களிடமிருந்து மீன், நெய் ஆகியவற்றை வாங்கிச் சென்றனர். மலைப் பகுதியில் கிடைத்த இயற்கை உணவை உண்பது மட்டுமல்லாமல் மலையில் வாழும் பன்றி, முயல், மான் முதலிய இறைச்சிகளையே வேட்டையாடி உண்டனர். இதனை மலைபடுகடாமில் நன்னன் என்னும் குறுநில மன்னனுடைய சவ்வாது மலையின் அடிவாரத்தில் இருந்த சிற்றூர் மக்கள் நெய்யில் வெந்த இறைச்சியுடன் திணைச் சோறு உண்டதாகக் குறிப்பு கிடக்கிறது. திணைச் சோற்றையும், திணை மாவையும் தேனில் கலந்து உண்டுவந்தனர். மூங்கில் அரிசியை களியாக்கி இயற்கையான உணவையே உண்டு வாழ்ந்து வந்தனர். இவையே குறிஞ்சி நில மக்களின் உணவுகளாகவே கருதப்படுகின்றன.

## முல்லை நில மக்களின் உணவு முறைகள்

முல்லை நில மக்கள் காடும், காடு சார்ந்த பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பாலுடன் திணை அரிசிச்சோற்றையும், அவரை விதையும் பருப்பையும், வரகரிசிச் சோற்றையும் கலந்து உண்டனர். இதனை,

> **"இடுங்கினை ஞெண்டின் சிறுபார்ப்பன்ன**
> **பசுந்திணை முசல் பாலொடும் பெறுகுவீர்"**
>
> **(பெரும்பாணாற்றுப்படை : 167-168)**

முல்லை நிலமக்கள் காடுகளில் கிடைக்கும் பொருட்களை உண்டு வாழ்ந்து வந்தனர். மலைபடுகடாமில் முல்லை நிலத்தில் பாலும், பால்சோறும் மிகுதியாக கிடைக்கின்றன என்றும், அவரை விதையும், மூங்கில் அரிசியும், புளியுடன் கலந்து கூழாகச் சமைக்கப்பட்டன என்றும், இறைச்சி கலந்த நெய் சோற்றையும் முல்லை நிலமக்கள் உண்டனர் என்பதை விளக்கும் வகையில், இப்பாடல் வரிகள் அமையப்பெறுகின்றன.

**"பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவீர்"**

**(மலைபடுகடாம் - 417)**

நெய், பால், தயிர், மோர், வெண்ணெய் போன்றவற்றையும் முல்லை நிலமக்கள் உணவுப் பொருளாக உட்கொண்டு வருகின்றனர்.

## மருத நிலமக்களின் உணவு முறைகள்

மருத நிலமக்கள் வயலும் வயல் சார்ந்த பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். மருதம் முதன்மையான சமவெளி மக்களாக இருந்ததால் மருத நிலத்தில் காய்கறிகள் அதிக அளவில் ஆதிக்கம் செலுத்தியது. இருப்பினும் அவர்கள் இறைச்சி, வெள்ளை அரிசி, கீரை, பருப்பு வகைகள், தானியங்கள் மற்றும் ஊறுகாய்களையும் அதிகம் உட்கொண்டு வாழ்ந்தனர். இவற்றில் நெல்லரிசி, காய்கறிகள், கீரை வகைகள் ஆகியவை மருத நிலமக்களுக்கு மிகுதியாகக் கிடைக்கப்பெறும். இவற்றையே அதிக அளவில் அவர்கள் உட்கொண்டனர்.

மருத நில மக்கள் வயல் சார்ந்த பகுதிகளில் வாழ்வதால் நீர் நிலைப்பகுதிகள் அதிகம் காணப்படுகின்றன. அந்நீர்நிலைகளில் நண்டு, மீன் போன்ற நீர்வாழ் உயிரினங்களையும் அம்மக்கள் உணவாக உட்கொள்கின்றனர்.

சிறுபாணாற்றுப்படையில் மருதநிலப் பெண்கள் அரிசியில் ஆக்கியச் சோற்றை நண்டு, பீர்க்கங்காய் கலந்த கறியுடன் பாணர்க்கு வழங்கினாள் என்பதை,

**"விழுங்கா முலக்கை யிரும்புமுகந் தேய்த்த**
**வளையப்புமா ணரிசி யமலைவெண்சோறு**
**சுவைதாட்ளலவன் கவலையொடு பெறுகுவீர்**

**(சிறுபாணாற்றுப்படை : 193-195)**

என்ற பாடல் வரிகள் விளக்குகிறது.

முல்லை நில மக்கள் பருப்பு, கீரை வகைகளை உண்பதோடு மட்டுமல்லாமல், நெய் சோற்றுடன் பெட்டைக் கோழியின் பொரியலும் உண்டனர் என்பதை விளக்கும் வகையில் பெரும்பாணாற்றுப்படையில் கீழ்க்காணும் வரிகள் விளக்குகிறது.

**"வினைஞர் தந்த வெண்ணெய் வல்சி**
**மனைவாழ ளகின் வாட்டொடும் பெறுகுவீர்"**

**(பெரும்பாணாற்றுப்படை : 255-256)**

இதே போன்று மருத நிலத்தில் வாழும் அந்தணர்கள் இல்லத்தில் சென்றால் அவர்கள் உண்ணும் உணவு வகைகள் கிடைக்கும் என்பதை,

**"சேதா நறு மோர் வெண்ணெயின் மாதுளத்**
**திருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து**
**கஞ்சக நறு முறியளைஇப் பைந்துணர்**
**நெடுமரக் கொக்கினறுவடி விதிர்த்த**
**தகைமான் காடியின் வகைப்பட பெறுகுவீர்"**

**(பெரும்பாணாற்றுப்படை : 306-310)**

என்ற வரிகள் நெல் அரிசி சோற்றுடன் மாதுளங்காயை சிறுசிறு துண்டுகளாக வெட்டி வெண்ணெயில் பொரியல் செய்து, அதனுடன் மாவடு ஊறுகாயும் சேர்த்து உணவாகத் தருவார்கள் என்றும் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. இவ்வகையான உணவினை மருத நிலமக்கள் உண்டு வாழ்கின்றனர். இவையே மருத நிலமக்களின் உணவாக அமையப்பெறுகின்றன.

## நெய்தல் நிலமக்களின் உணவு முறைகள்

நெய்தல் நிலமக்கள் கடலும், கடல் சார்ந்த பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இப்பகுதியில் கிடைக்கும் பொருட்களை விற்று அதில் கிடைக்கும் பொருட்களை உணவாகப் பயன்படுத்துகின்றனர். புறநானூற்றில் அவிழ் நெல்லின் அரியல் என்னும் 395 ஆவது பாடலில் வாளை மீனைச் சமைத்து அவியல் என்னும் தொடுகறி செய்ததையும், சோற்றுடன் அதை சேர்த்து உண்டதையும் கூறுகின்றது.

சிறுபாணாற்றுப்படையில் பரதவர்கள் அகிற்கட்டைகளை அடுப்பில் விறகாக வைத்து, நுளைச்சியர் சமைத்த மதுவுடன் குழல் மீனை சுட்டுத்தின்றனர், என்பதை குறிப்பிடுகின்றது.

நெல்லரிசி, மாவு ஊட்டி வளர்த்த பன்றியின் மாமிசத்துடன் கள்ளும் சேர்த்து உண்டனர் என்றும், நெய்தல் நில மக்கள் கள்ளடன் இறால் மீனம், வயல் ஆமையின் இறைச்சி ஆகியவற்றை உண்டனர், என்பதை பட்டினப்பாலையில்,

**“கருந் தொழிற்கலிமக்கள்**
**குடவிறலின் சூடுகின்றும்**
**வயலாமைப் புழுக்குண்டும்”**
**(பட்டினப்பாலை : 62-64)**

என்னும் பாடல் வரிகள் விளக்குகின்றன.

**பாலை நிலமக்களின் உணவு முறைகள்**

பாலை நிலமக்கள் மணலும், மணல் சார்ந்த பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் வெயிலில் வறுத்த, பொரித்த உணவுகளை அதிகம் உண்பர். டெல்டா பகுதிகளில் நெல் அறுவடையின் போது விளாங்கு, பொதி, தேளி மற்றும் வாழை போன்ற மீன்கள் இப்பகுதியில் அதிகம் காணப்படுகின்றன.

பாலை நிலமக்கள் புளியங்கறிவிடப்பட்ட சோற்றினையும் காட்டுப்பசுவின் குட்டி இறைச்சியையும் உண்டனர், என்றும் சிறுபாணாற்றுப்படைக் குறிப்பிடுகிறது. இப்பகுதியில் வாழும் மக்கள், கடப்பாறைக் கொண்டு எறும்புகள் புற்றினைத் தோண்டி அதில் அவைகள் சேர்த்து வைத்திருக்கும் அரிசியை எடுத்து அதை சோறாக்கி உண்டார்கள். அவ்வாறு உண்ணும் போது, அதில் உப்பிட்டு உலர்த்தி வைக்கப்பட்டுள்ள மாமிசத்தையும் உண்டார்கள். இவற்றைப் போலவே இப்பகுதியில் கிடைக்கும் இறைச்சியும் பொரியல் செய்து உண்டனர். இதனை விளக்கும் வகையில், பெரும்பாணாற்றுப்படையில் கீழ்க்காணும் பாடல் வரிகள் விளக்குகிறது.

**“களர் வளர்ந்தின் காழ் கண்டன்ன**
**சுவல் விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி**
**ஞமலி தந்த மனவுச் சூலுடும்பின்**
**வறைகால் யாத்து வயின்றொறும் பெறுகுவீர்”**
**(பெரும்பாணாற்றுப்படை : 130-133)**

இவ்வாறு பாலை நிலமக்கள் பல்வேறு வகையான உணவினை மேற்கொண்டு வாழ்கின்றனர்.

**முடிவுரை**

தமிழர்கள் தன் விருப்பத்திற்கேற்ப உணவு வகையினை அமைத்திருந்தனர். தனக்கு கிடைத்த உணவினை தான் மட்டும் உண்ணாமல் தன்னை நம்பி வந்தவர்களுக்கும் உணவினை அளித்தனர். இதனை “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” என்று மணிமேகலைக் காப்பியம் கூறுகின்றது.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைத் திணைகளும் வெவ்வேறாக அமைவதுப் போல, அந்தந்த மக்களின் உணவு முறைகளும் வெவ்வேறு வகைகளில் அமையப்பெறுகின்றன. ஐவகை நிலங்களில் கிடைத்த இயற்கையான உணவினை உண்டு, உடலுக்கு கெடுதல் இல்லாத வாழ்வினை வாழ்ந்தனர் என்பதை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

**பார்வை நூல்கள்**

1. இரா.மோகன், சங்க இலக்கியம், பத்துப்பாட்டு மூலமும் உரையும், நியூசெஞ்சரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை.
2. இரா. ருக்மணி, பட்டினப்பாலை, முதல் பதிப்பு ஏப்ரல் 2004, காவ்யா பதிப்பகம், கோடம்பாக்கம், சென்னை.

# சிறுவர் இலக்கியத்தில் இயற்கை

**முனைவர் கீ.வே.சுபாஷிணி**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*தருமமூர்த்தி இராவ் பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக்கல்லூரி*
*பட்டாபிராம், சென்னை*

**ஆய்வுச்சுருக்கம்**
தமிழில் சிறுவர் இலக்கியச் சிந்தனை சங்க காலம் தொட்டு இருந்து வந்திருக்கிறது. நீண்டகாலத் தமிழ் இலக்கியப் பரப்பில் சிறுவர் குறித்தான செய்திகளும், செயல்களும்இயல்புகளும், சிறப்புகளும் கூறப்பட்டுள்ளன. 16, 17 நூற்றாண்டுகளில் அறம் கூறும் நிலையில் ஔவை, அதிவீரராமபாண்டியர் உலகநாதர் போன்றோரும் கவிமணி, பாரதியார், பாரதிதாசன் போன்றோரும் சிறுவர்களுக்கான கவிதை எழுதியுள்ளனர்.

சிறுவர் கவிதை இலக்கியம் என்பது காலப்பழைய உடையது. இலக்கியத்தின் சிறுவர் பற்றிய சிந்தனைகள் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியம் அகநானூற்றிலும் காணக் கிடைக்கின்றன. சங்க காலத்துக்கு முற்பட்டும் சங்க காலத்திலும் பக்தி இலக்கிய காலத்திற்குப் பின்னும், சிறுவர் இலக்கியம் பற்றிச் சிந்தித்த கவிஞர்கள் பலரை தெரியமுடிகிறது. அத்தகைய சிறுவர் இலக்கியங்களில் இடம்பெறும் இயற்க்கையைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

தமிழில் சிறுவர் இலக்கியம் என்பது சிறுகதைக்கு ‘மணிக்கொடிக் காலம்’ போல புதுக்கவிதைக்கு வானம்பாடி போல், சிறுவர் இலக்கியத்திற்கு 1950க்குப் பின்னர் பலர் வித்திட்டுள்ளனர். சிறுவர் இலக்கியதின பிரதிமகனாக மதிக்கப்படுகின்ற குழந்தை கவிஞர் அழ. வள்ளியப்ப ‘குழந்தை எழுத்தாளர் சங்கம்’ தோற்றுவிக்கப்பட்டபின் குழந்தை இலக்கியம் சிறுவர் இலக்கியமாக நிலைத்து வந்துள்ளது.

பெரியவருக்கான இலக்கியங்கள் போன்று சிறுவருக்கான கதை, கவிதை, இலக்கியங்களும் சிறுவார்களைப் பற்றிய சிந்தனைகளும் காலப்பழமையுடையன. தொல்காப்பியம் ‘பிசி’ என்னும் இலக்கிய வகையைப் பற்றிக் கூறுகையில்,

**“ஒப்பொடு புணர்ந்த உவமத் தானும்**
**தோன்றுவது கிளந்த துணிவி னானும்**
**என்றிரு வகைத்தே பிசிவகை நிலையே”**[1]

எனும் நூற்பாவின் மூலம் அறியலாம். சிறுவர் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள இயற்க்கையைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இயற்கை**

**“இயற்கையே மனிதகுலத்தின்பாடசாலை”**

இயற்கையைப் பார்த்து அதன் இயக்கங்களை உற்று கவனித்து மனிதன் தன் வாழ்வியலை கட்டமைத்துக் கொண்டான் என்பதை மனிதர் தன் பழைய வரலாறு உணர்த்துகிறது.

இயற்கைப் படைப்புகள் அத்துணையும் குழந்தை புலன்களை ஈர்ப்பனவாக உள்ளன. மலரின் மணம்,வெண்ணிலவின் தண்ணோளி, கடலின் தோற்றம், அலைகளின் ஆட்டம், தென்றலின் இனிமை, மலையின் தாளம், மேகங்களின் கோலம், முகில்களின் ஆர்ப்பாட்டம், வானவில்லின் வண்ணம் ,அருவியின் தோற்றம் ஆகியவை குழந்தைப் பாடல்களில் பாடுப்பொருளாக அமைத்துள்ளன.

இயற்கையைக் பிறதுறைக் கவிஞர்கள் பாடியது ஒரு புறம் இருக்க, குழந்தைக் கவிஞர்கள் பாடுவது, குழந்தைகளைப் போல எளிமையாகவும், மென்மையாகவும், உயிரோட்டம் உள்ளதாகவும் அமையும், பறவை, விலங்கைப் போல இயற்கைப் பொருள்களையும் குழந்தை தன்னைப் போலவே கருதி உறவாடும் .

**வானம்**

வானத்தை மையமாக வைத்துச் சூரியன், நிலவு மழை, மேகம், காற்று, இடி, மின்னல் போன்ற இயற்கைப் பொருட்கள் இயங்குகின்றன. இவற்றைப் பற்றிய அறிவையும் அழகையும் சூரியன் காலையில் உதிப்பதையும், அதற்கு முன் வைகறைப் பொழுதில் நடக்கும் செயல்களையும், கவிஞர்சிறுவர்களுக்கு அறிவுறுத்துகிறார்.

காலையில் உதிக்கும் சூரியன் கனல் வடிவில் பந்து போல் தோன்றுவதையும், கிழக்குத் திசையில் உதிப்பதையும் கூட்டில் இருக்கும் குஞ்சிற்கு இரை தேடத் தாய் அதிகாலைப் பொழுதில் கிளம்பிச் செல்வதையும் , கூரையில் மேலே இருந்து சேவல் கூவி எழுப்புவதையும், ஏரை எடுத்துக்கொண்டு உழவன் வயலுக்குச் செல்வதையும் காலைச் காட்சியாகச் சிறுவர்க்கு எடுத்துக் குறி, ஒவ்வொரு செயலையும், காரணத்தையும், பயனையும் விளக்கிச் சொல்கிறார். இது கண்களுக்கு காலையில்தென்படும் காட்சி இன்பம் என்கிறார்.

**"நோக்கும் கண்களுக்கு இன்பம்**
**சேர்க்கும் காலை எழிற்காட்சி**
**தூக்கம் விட்டெழுந்து நாளும்**
**தோன்றும் கதிரவனைக் காண்பாய்"[2]**

எனும் வரிகளின் மூலம் அறியமுடிகிறது.

**சூரியன்**

சூரிய உதயமே உலகில் பகல் இரவை உண்டாக்குகிறது. திசைகளைச் சூரியன் உதிக்கும் திசையில் இருந்தே கணக்கிட்டுள்ளனர். இக்கருத்தைச் சிறுவர்களுக்குக் கவிஞர் அழகாக விளக்குகிறார்.

**"கால நேரம் எல்லாமே**
**காட்டிக் சுற்றி வருகிறாய்**
**மாலை நேரம் என மயக்கி**
**மலையில் மறைந்து போகிறாய்"[3]**

என்கிறார். சூரியன் மறைவிற்குப் பின் ஏற்படுகின்ற இரவுக் காட்சியையும், சிறுவர்களுக்கு படம் பிடித்துக் காட்டுகிறார் கவிஞர் குகானந்தம்.

**"வானத்தின் வரையோடாம் நிலவு**
**வறுபட்ட பொரிச்சிதறல் மீன்கள்**
**தானுண்ண விழைகின்ற குழந்தை**
**தவழ்ந்தோடிவருகின்ற மேகம்"[4]**

எனும் வரிகளின் வழி குழந்தைகள் பார்த்து அறிந்த வரையோட்டை நிலவுக்கும் பொறிச் சிதறலை விண்மீன்களுக்கும், உவமை கூறியுள்ளார். உண்பதற்காக விரைந்து வருகின்ற குழந்தையைப் போல விண்ணிலே மேகம் வனதில் தவழ்ந்தோ வருகின்றது என்று பாடப்பட்டுள்ளது. உலக இயக்கத்திற்கும் உயிர்களின் இயக்கத்திற்கும் ஞாயிற்றின்கதிர் இன்றியமையாதது என்பதைச் சிறுவர்களுக்கு அவர்களின் மொழியிலேயே புலப்படுத்துகிறார் கவிஞர் அழகு பழனிசாமி ,

**"உலகம் நிலைத்து வாழ்ந்திடவும்**
**நலமாய் உதிக்கும் சூரியனை**
**நாளும் போற்றி வாழ்ந்திடுவோம்"[5]**

எனும் வரிகளின் மூலம் தெரியவருகிறது.

**நிலவு**

சின்ன குழந்தை நிலவைத் தன் நண்பன் போல கொள்கிறது. அதோடு பேசி மகிழ்கிறது அதோடு தானும் வானத்தில் நடந்து செல்ல ஆசை கொள்கிறது. இது குழந்தைக்கு இருக்கிற இயல்பு கவிஞர் பாரதிமோகன் குழந்தையை நிலவோடு பேசவைத்து, நடக்க வைக்கிறார். நிலவு மட்டுமல்ல, மேகமும் நண்பனாகிறது. வானத்திற்குச் செல்ல ஏணியாகிறது. குழந்தையின் தாகம் தீர்க்கும் நண்பனாகிறது. இயற்கையோடு குழந்தை கொஞ்சி விளையாடும் அழகைக் கவிதையில் காட்டுகிறார் . இதனை,

**"தனியாய்ப் போய்கிற நிலவே**
**நானும் வருவேன் உன்கூடே**
**இனிதாய்ச் சொல்வேன் கதைகள் தான்**
**இன்றே கேட்பாய் என்னிடந்தான்**
**மேக நண்பனும் வரட்டுமே**
**ஏணிபோலே உதவிடுமே**
**தாகம் வந்தால் நமக்குந் தான்**
**தண்ணீர் மோந்து தந்திடுமே**
**மேனியில் என்ன கறைதானோ**
**மேகம் அதனைத் தந்ததுவோ**
**நகர்ந்து செல்லும் நிலாவே**

**நானும் வருவேன் உனபின்னே”[6]**

என்று கூறுவதிலிருந்து அறியமுடிகிறது.

வானத்தில் தண்ணொளி விசுவதையும், தனியே ஊர்ந்து செல்வதையும் கூறித் தரையில் இறங்கி வந்தால் ஒன்றாய்க் கூடி விளையாடலாம் உண்பதற்குப் பழமும் பாலும் தருகின்றோம், அல்லியம்மாள் கூடஉன் வரவு கண்டு ஆனந்தம் அடைகிறாள். பலமுறை அழைக்கின்றோம். ஒரு முறையாவது வாயேன். உன் தண்ணொளியையும் அழகும் கண்டு உலகே வியந்து போகிறது உயிர்கள் பூரிப்படைகின்றன. நீ ஒரு முறையாவது எங்களோடு வா எனக் குழந்தை அழைப்பதை.

**“மேலோரை வேண்டினால் வெண்ணிலாவே -அவர்**
**கீழோர்க் கிரங்குவரேவெண்ணிலாவே**
**மேலோர் வரிசையினில் வெண்ணிலாவே**
**மேவியவன் அல்லவோ வெண்ணிலாவே”[7]**

எனும் வரிகளில் கீழோர் இறைஞ்சினால் மேலோர் இரங்குவர் இது உலக இயற்கை. எங்களுக்காக இரங்க வேண்டும் என நிலவிடம் குழந்தை இறைஞ்சுவதாகக் கவிஞர் கூறுவதை காணமுடிகிறது.

## தொகுப்புரை

இவ்வாறு, சிறுவர் கவிதை இலக்கியத்தில் இயற்கையைப் பாடுவதிலும் சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்துவதிலும் சிறுவர் இலக்கிய கவிஞர்கள் சொல் எளிமையையும் கருத்து எளிமையையும் கையாண்டுள்ளனர். பெரியவர்களுக்கு பாடும் கவிஞர்களைப் போன்று அலங்காரங்கள் இல்லை, கடினமான உவமைகள் இல்லை, எளிமையும் இனிமையும் நிறைந்ததாகச் சிறுவர் கவிதை இலக்கியம் இருப்பதை காணமுடிகிறது.

## முடிவுரை

சிறுவர்கள் பார்த்தும், பழகியும் ஒட்டி உறவாடும் விதமாக இவர்கள் இயற்கையைப் பாடுவது வித்தியாசம் நிறைந்ததாக உள்ளது. இயற்கையே மனித குலத்தின் ஆசானாக விளங்கியதை குழந்தைகளுக்கு மிக அழகாக அறிமுகம் செய்துள்ளனர். சிறுவர் இலக்கியத்தில் இன்னும் அழகாகத் தெரிகிறது.

## அடிக்குறிப்புப் பட்டியல்


1. தொல்காப்பியம், பொருள்: இளம்பூரணர்; நூற்பா எண்: 169 ப.488 வர்த்தமானன் பதிப்பகம், சென்னை 2009
2. சிறுவர் பூங்கா, க.குகானந்தம், ப. 9; வானதி பதிப்பகம், சென்னை 2017
3. தேன் பூக்கள்; துரை. மாலிறையன்; ப. 60 சுரதா பதிப்பகம், சென்னை 2019
4. சிறுவர் பூங்கா, க.குகானந்தம், ப. 15; வானதி பதிப்பகம், சென்னை 2017
5. மணக்கும் மலர்கள்; அழகு.பழனிச்சாமி; ப. 33 பாரிநிலையம் சென்னை 2011
6. புதுமலர்கள்; பாரதிமோகன், ப.37; சுரதா பதிப்பகம், சென்னை 2018
7. குழந்தைப் பாடல்கள், ம.இராசமாணிக்கனார், ப. 27 சாந்திநூலகம், சென்னை 2009’

# சங்க இலக்கியத்தில் மலர்கள்

**ந. ஹெவான்சி**
*முதுகலைத் தமிழ் முதலாமாண்டு*
*சாராள் தக்கர் கல்லூரி, திருநெல்வேலி*

## முன்னுரை

இறைவன் உலகிற்கு அளித்த வரம் இயற்கை. அந்த இயற்கைக்கு பொலிவை தருவது பூக்களே, இந்த பூக்களே மனிதனின் வாழ்வில் உடலிலும் உயிரிலும் கலந்து நிற்பது இயற்கையே அந்த இயற்கையை அழகுப்படுத்துவது மலர்களே. இயற்கை அனைத்து வளங்களையும் பெற்றுதான் மலர்கள் வளம் பெறுகிறது.

**"மலர்கள் அழகின் அடையாளம்**
**இயற்கையின் பொக்கிஷம்**
**நிறங்கள் வாசனைகள் வடிவங்கள்**
**ஆனந்தம் தரும் ஓவியங்கள்**
**மண்ணில் பிறந்த காற்றில் ஆடும்**
**சூரியனை நோக்கி மலரும்**
**கண்ணை கவரும் கலைநயம்**
**மனதை வருடும் இனிமை**
**மலர்கள் நம் வாழ்வின் அங்கம்**
**மகிழ்ச்சிக்கு வண்ணம்**
**மலர்கள் இயற்கையின் பாடல்**
**அன்பின் மொழி !**

இந்த கவிதை மலரின் சிறப்பினை புலப்படுத்துகின்றது. ஒரு மரத்தின் இலையோ, கிளையோ, காயோ, விழுதோ, மாந்தரின் மனதை கவர்வதில்லை. பூக்கள் மட்டுமே மனதை கவர்கின்றது. அப்படிப்பட்ட கண்ணை கவரும் பூக்கள் பற்றி சங்க இலக்கியங்களில் ஒன்றான குறிஞ்சிப்பாட்டில் 99 வகை பூக்கள் மகளிர் குவித்து விளையாடிய பூக்களாக கூறப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்ட பூக்களை பற்றியும் அவற்றின் தன்மை பற்றியும், சங்க காலத்தில் அந்த மலரின் பயன்கள் பற்றி இக்கட்டுரையில் விரிவாக காண்போம்.

## சங்க இலக்கியத்தில் மலர்களின் பயன்பாடு

சங்ககால மக்கள் இயற்கையை உற்று நோக்குவதில் வல்லவர்கள். மனிதர்களுக்கு அடிப்படை தேவைகளில் ஒன்றான உணவு தேவையை நிறைவேற்றுவதில் மரம் முக்கியமான இடத்தை பெறுகிறது. அம்மரங்களின் பெருக்கத்திற்கு துணை செய்வது மலர்கள், சங்க காலத்தில் ஆடவர், பெண்டிர் இருவரும் மலர்களை மாலையாக அணிந்துள்ளனர். தலைவன் தலைவிக்கு கையுறையாக மலர்கள் வழங்குவது உண்டு, இன்றும் மலர் கொத்துக்களை பரிசளிப்பதை காண முடிகிறது. சங்ககால மகளிர் திருமணத்திற்கு முன் தங்கள் கூந்தலில் மலர் சூடுவது இல்லை என்பதை சில சான்றுகளால் அறிய முடிகிறது. தலைவன் அளித்த மலரை தலைவி கூந்தலில் சூடுகிறாள். அதனை மறந்து தாயின் முன்னர் கூந்தலுக்கு எண்ணெய் தடவ அமர்கிறாள். தலைமயிரின் உள்ளிருந்த மலர் கீழே விழுகிறது நெருப்பை தொட்டது போல அன்னை விதிவிதிர்த்து அவ்விடம் விட்டு செல்கிறாள்.

**"புல்லினத்து ஆயர் மகன் சூடி வந்ததோர்**
**முல்லை ஒருகாழும் கண்ணியும் மெல்லியால்**
**கூந்தலுள் பெய்து முடித்தேன்மன் தோழியாய்**
**வெண்ணெய் உரைஇ விரித்த கதுப்போடே**
**அன்னையும் அத்தனும் இல்லரா யாய்நாண**
**அன்னைமுன் விழுந்தன்று அப்பூ"**

(கலித்தொகை 115)

## காந்தள் எனப்படும் கண்வலிப்பூ

'ஒண்செங்காந்தள்' என்றும் 'சுடாப் பூந்தோண்றி' என்றும் 'கோடல்' என்றும் சங்க இலக்கியங்களில் சிறப்பித்து கூறும் காந்தள் ஒரு சிறு ஏறுகொடி ஆகும்.

**"நெடுங்பெருங் குன்றத்த மன்ற காந்தள்"**
**(அகநானூறு 15)**

இந்த பாடலில் கூறப்பட்டுள்ளது போல பெருகுன்று பகுதியில் தான் இந்த காந்தள் பூ வளரும் என்பதை அன்றே புலவர்கள் கூறியுள்ளனர். இந்த காந்தள் பூ இப்பொழுது "தமிழ்நாட்டின் மலர்" என்று அழைக்கப்படுகிறது. சங்க இலக்கியங்களில் 64 தடவை இந்த மலர் கூறப்பட்டுள்ளது. இந்த மலரை உற்றுபார்த்தால் கண்வலி வரும் என்று சிலர் நம்புகின்றனர். இதனை கண்வலிப்பூ என்றும் கூறுவர். இந்த மலர் ஆஸ்துமா நோய்க்கு மருந்தாக பயன்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் இதன் கிழங்கு ஆயுர்வேதம், யுனானி மருந்துகளில் பயன்படுவதாக கூறுகின்றனர்.

தோழி தலைவனிடம் கையுறை ஏற்க மறுக்கும் நிகழ்வில் காந்தள் பூ பற்றி குறுந்தொகையில் திப்புத்தோளார் தனது பாடல் ஒன்றில் கூறுகின்றார்.

**"செங்களம் படக்கொன்று அவுணர்ந் தேய்த்த**
**செங்கோல் அம்பிற் செங்கோட்டு யானைக்**
**கழல்தொடிச் சேஎய் குன்றம்"**

**(குறுந்தொகை 1)**

தலைவனே ! போர்க்களம் குருதியால் சிவக்கும் படி பகைவர்களை கொன்று அழித்தவன், இரத்தக் கறைபடிந்த அம்பினை உடையவன், குருதி படிந்த தந்தங்களையுடைய யானை உடையவன் , சிவந்த நிறமுடைய அவனே குறிஞ்சி நில கடவுள் முருகன். ஆவன் குடிகொண்டிருக்கும் இந்த மலையிலே எங்கள் காந்தள் பூ மலர்ந்து காணப்படும். காந்தள் பூ மிகுதியாக உடையதால் யாம் நின் கையுறையை ஏற்பதில்லை என்று தோழி மறுக்கிறாள். கையுறையாக அன்றைய காலத்தில் காந்தள் பூவை பயன்படுத்தினர் என்பதை குறுந்தொகை பாடல் மூலம் அறிந்தோம்.

### குவளை எனப்படும் வெள்ளை அல்லி பூ

குவளை 'வெள்ளை அல்லி' எனப்படும் ஒரு நீர்த்தாவரம். குவளை மலர் குளத்தில் பூக்கும் இதில் செங்குவளை, கருங்குவளை, வெண்குவளை என்று வகைகள் உண்டு. இந்த பூவை மலை பகுதி மகளிர் பறித்து விளையாடிய செய்தியை சங்கநூல் குறிப்பிடுகிறது. இந்த மலர் மணம் உள்ள மலர் குவளை பூவிற்கு பறியாக் குவளை என்ற சிறப்பு பெயர் உண்டு இதனை,

**"கடவுள் கற்சுளை அடையிறந் தவிழ்ந்த**
**பறியாக் குவளை மலரொடு"**

**(நற்றினை 34)**

முருகன் உறையும் குன்றுகள் உள்ள சுனையை கடவுள் சுனை என்பர். அச்சுனையில் பூக்கும் பூக்களை மாந்தர் சூடுவதற்கு பறிக்காது விடுவர். அவற்றை மகளிர் கொய்து மாலையாக தொடுத்து முருகனுக்கு பிடித்த பூ ஆதலால் முருகனுக்கு அணிவிப்பர். அதனை அறியாது தொட்டால் நெடுந்துயர் உண்டாகும் அதனால் அதனை பறியாக் குவளை என்பர், குவளை மலர் பற்றி மதுரை காஞ்சியில் கூறப்பட்டுள்து.

**"நீர் திரண்டன்ன கோதை பிறக்கு இட்டு**
**ஆய்கோல் அவிர் தொடிவிளங்க வீசி**
**போது அவிழ்புது மலர்தெரு உடன்கமழ**
**மேகுதகு தகைய மிகுநலம் எய்தி**
**பெரும் பல்குவளைச் சிறந்துகமழ் நாற்றத்து**
**கொண்டல் மலர்ப் புதல்மானப்பூ வேய்ந்து**
**நுண்பூண் ஆகம் வடுக்கொள மயங்கி**
**மாயப்பொய் பலகூட்டி கலவுக் கரந்து"**

**(மதுரைக்காஞ்சி 562-570)**

அகன்ற வானில் மணக்கும்படி நீர் திரண்டாற்போல வெள்ளை மலர்களால் புனைந்த மாலைகளை கூந்தலில் இட்டு, அழகிய திரட்சியை உடைய வளையல்கள் சத்தம் கேட்கும்படி கைவீசி நடந்து, அரும்பு அவிழ்ந்த மலர்களின் மணம் தெருவெங்கும் கமழ, மிகுந்த நன்மை உண்டாக ஒப்பனை செய்து, பெரிய பல குவளை மலர் கூட்டம் வண்டுகள் மொய்க்கும் போது தானே வாய்திறந்து மோந்து பார்ப்பவர்களுக்கு மணம் வீசுவது போல் அவர்களின் மேனி மணம் வீசும் என்று மகளிரின் மேனிக்கு ஒப்பாக குவளை மலர் மணம் கூறப்பட்டுள்ளது. இதன் மொட்டு மகளிரின் கண்களுக்கு உவமையாகவும் கூறப்பட்டுள்ளது என்பதை குறுந்தொகை 13 வது பாடல் மூலம் அறியலாம்.

**குறிஞ்சி எனப்படும் அதிசெய மலர்**

இயற்கை தந்த அதிசெயங்களில் ஒன்று குறிஞ்சி மலர். இந்தியாவின் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் குறிஞ்சி செடிகள் காணப்படுகிறது. குறிஞ்சி நீல நிறத்தில் பூத்து குலுங்கும். இந்த பூ அதிகளவில் நீலகிரி என்ற இடத்தில் தான் பூக்கும். 200 வகையான குறிஞ்சி செடிகள் உள்ளதாக கூறுகின்றனர். தமிழர்களின் நிலப்பகுப்பில் மலையும் மலைசார்ந்த நிலத்துக்கு குறிஞ்சி திணை என அன்றே சொல்லப்பட்டுள்ளது. அதனால் குறிஞ்சி பூ மலைசார்ந்த இடத்தில் பூக்கிறது என்று என்றே அறியலாம். இந்த பூ 12 வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே பூக்கிறது. ஜீலை முதல் செப்டம்பர் மாதத்தில் தான் பூக்க தொடங்குகிறது. இந்த மலரில் உள்ள தேனானது மிகவும் சுவை கொண்டதாக இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். பறவைகள் அதிகமாக குறிஞ்சி பூவின் தேனையே விரும்புகின்றன. இந்த மலரை பல ஆயுர்வேத மருத்துவர்கள் மருத்துவ பயன்பாட்டிற்கு உதவுவதாக கூறுகின்றனர். குறிஞ்சி பூ பற்றி காமகண்ணியார் பாடிய பாடல் ஒன்றில்

> **“சூருடை நனந் தலைச் சுனைநீர் மல்க**
> **மால் பெயல் தலைஇய மன்நெடுங் குன்றத்து**
> **கருங்காற் குறிஞ்சி மதன்இல் வான்பூ**
> **ஓவுக் கண்டன்ன இல்வரை இழைத்த**
> **நாறுகொள் பிரசம் ஊறு நாடற்குச்”**
>
> **(நற்றினை 268)**

உயர்ந்த முகடுகள் கொண்ட மலைப் பரப்பில் அச்சம் தரும் சுனையில் நீர் பெருகும் படி பெருமழை பொழிந்து குன்றமே குறிஞ்சிப்பூ பூத்து கிடக்கிறது. கருமையான கோல்களில் மென்மையான வான்போல் பூக்கும் பூ குறிஞ்சி இல்லத்தில் ஓவியம் வரைந்தது போல மலையில் தேன் ஊறும் படி குறிஞ்சி பூத்து கிடக்கும் நாட்டை உடையவன் அவன் மீது காதல் கொண்டிருக்கிறேன் என்று தலைவனின் நாடு பற்றி தலைவி அழகாக கூறியுள்ளாள். குறிஞ்சி பூ பூத்து குலுங்கும் அழகினை நற்றினை பாடல் மூலம் அறிந்தோம்.

**ஆம்பல் எனப்படும் அல்லி**

ஆம்பல் என்பது அல்லி, குமுதம் எனவும் வழங்கப்பெறும் ஆம்பல் தமிழ்நாட்டில் வெண்ணிறமாகவும். வெள்ளாம்பலாகவும், நீலநிறமாகவும், செந்நிறமாகவும் ஆம்பல் மலர் காணப்படுகிறது. குறிஞ்சிப்பாட்டில் கபிலர் கூறும் 99 வகையான மலர்களும் ஆம்பலும் ஒன்று அதனை:

> **“உள்ளகம் சிவந்த கண்ணேம் வள்இதழ்**
> **ஓண்செங் காந்தள் ஆம்பல் அனிச்சம்**
> **......... (குறிஞ்சிபாட்டு 196)**

ஆம்பல் பூ இரவில் மலர்ந்து காலையில் சூம்பிவிடும், இந்த பூ மணமற்றதாக காணப்படும். இந்த பூ இருதய நோய்க்கு சிறந்ததொரு மருந்தாக இன்றளவும் காணப்படுகிறது. மாமிலாடன் என்பவர் குறுந்தொகையின் பாடல் ஒன்றில் ஆம்பல் பூ இடம்பெற்றுள்ளது இதனை,

> **“ஆம்பற் பூவின் சாம்பல் அன்ன**
> **கூம்பிய சிறகர் மனைஉறை குர்இ**
> **முன்றில் உணங்கல் மாந்தி மன்றத்து**
> **எருவின் நுண்தாது குடைவன ஆடி**
> **இல்இறை புள்ளிதம் பிள்ளையொரு வதியும்**
> **புன்கன் மாலையும் புலம்பும்**
> **இன்றுகொல் தோழி அவர்சென்ற நாடே”**
>
> **(குறுந்தொகை 46)**

ஆம்பல் பூவின் இதழ் போன்று கூம்பிய சிறகையுடைய வீட்டில் வாழும் குருவிகள் முற்றத்தில் காயும் தானியங்களை வயிறார உண்ணுகின்றன . வீட்டு கூரையில் தன் குஞ்சுகளுடன் தங்கி இனிதாக இருக்கின்றன. காலத்தாலும் இடத்தாலும் ஏற்படும் பிரிவு குருவிகளுக்கு இல்லாமையை உணர்ந்து தலைவன் தன்னை காண வருவான் என்று நம்புகிறாள் தலைவி. ஆதனால் புல்லிய மாலை நேரமும் தனிமையும் தலைவன் சென்ற இடத்திலும் இருக்குமல்லவோ தோழி என்று தன் ஆற்றாமையை கூறுகிறாள் தலைவி, இப்படி தலைவி தோழியிடம் கூறும்

செயதி ஆம்பல் பூ இதழ் குருவிக்கு ஒப்பாக கூறப்பட்டுள்ளது.

**வெட்சி எனப்படும் இட்டிலிப்பூ**

வெட்சி என்பது ஒருவகை காட்டுப்பூ இதனை இட்டிலிப் பூ என்றும் இன்றைய கால மக்கள் அழைப்பர். இந்த பூ இக்காலத்தில் அழகுக்காக வீடுகளில் வளர்க்கப்படுகிறது. இந்த வெட்சிப் பூ பற்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கிய நூலான திருமுருகாற்றுப்படை என்ற நூலில் முருக கடவுள் தன் தலையிலே சூடும் கண்ணி மாலைகளில் இந்த வெட்சிப்பூ ஒன்று என கூறப்பட்டுள்ளது. குல்லை, விரிச்சி, செச்சை, செங்கொடுவேரி, சேதாரம் என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது, இதனை

**“செய்யன், சிவந்த ஆடையன் செவ்வரைச்**
**செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்**
**கச்சினன், கழலினன், செச்சை, கண்ணியன்”**
**(திருமுருகாற்றுப்படை 206-208)**

இந்த வெட்சி பூ உடல்சோர்வு, தோல்நோய், காய்ச்சல் போன்ற நோய்களை நீக்கும் மருந்தாக உள்ளது. வெட்சிப்பூ பற்றி அகம் புறம் சார்ந்த நூலான பரிபாடலில்,

**“ஈர்அமை வெட்சி இதழ்புனை கோதையர்”**
**(பரிபாடல் 22)**

வையையில் நீரிடச் சென்ற மகளிர் வெட்சிப் பூவை தலையில் அணிந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

**“புல்லிலை வெட்சி” (கலித்தொகை 103)**

ஏறுதழுவச் சென்ற போது இடையர்குலக் காளையர் சூடியிருந்த பண்மலர் கண்ணியில்

வெட்சிப்பூ அதன் இலைகளுடன் சேர்ந்து தொடுக்கப்பட்டிருந்தது என்று கலித் தொகை பாடல் கூறுகிறது.

**கருவிளம் எனப்படும் சங்குப்பூ**

கருவிளம் பூவை இக்காலத்தில் சங்குப்பூ என்றும் அழைப்பர். இந்த மலர் தோற்றத்தில் சங்கின் விரிவாய் போல தோற்றம் பெறும். இந்த மலர் நீல நிறத்தை உடையது. மேலும் கருநீலம், ஊதா, வெண்மை நிறங்களிலும் காணப்படுகிறது. இந்த பூவை பர்மாவில் தோசை மாவில் கலந்து தோசை சுடுவர், கோவில்களில் மாலையாக பயன்படுத்துகின்றனர். இந்த பூ பண்டைய காலத்தில் கானாரியா என்ற நோய்க்கு மருந்தாக பயன்படுத்தியுள்ளனர்.

**“எருவை, செருவிளை, மணிப்பூங்**
**கருவிளை” (குறிஞ்சிப்பாட்டு 68)**

கபிலர் தனது பாடலில் கருவிளை வகை கூறியுள்ளார்.

கருநீல பூ “கருவிளை” எனவும், வெண்ணிற பூ “செருவிளை” எனவும் வழங்கப்பட்டது. கருவிளை பூ காதலர் பிரிந்த பின் மகளிரின் கண்ணீர் பெருகும் கண்களுக்கு உவமையாக கூறப்பட்டுள்ளது.

**“காதலர் பிரிந்த கையறு மகளிர்**
**நீர்வார் கண்ணின் கருவிளை மலர்”**
**(அகநானூறு 294)**

கருவிளை பற்றிய செய்திகள் அதிகம் இடம்பெற்றுள்ளது. செருவிளை பற்றி குறிஞ்சிப் பாட்டில் மட்டுமே காணமுடிகிறது. பெருந்தலைச் சாத்தனார் என்பவர் கருவிளை பூ பற்ற நற்றினை பாடல் ஒன்றில் கூறுகிறார்.

**“தண்புனக் கருவிளைக் கண்போன் மாமலர்**
**ஆடுமயில் பீலியின் வாடையொடு**
**துயல்வர” (நற்றினை 262)**

கருவிளை என்னுங் கொடி தண்ணிய புதல் தொறும் மலர்ந்து அழகு செய்யும் என்பதையும் கண் போன்ற கரிய மலர்களை உடைய கருவிளை கொடி வாடைகாற்று வீசும்போது ஆடுகின்ற மயிலின் பீலியை போல ஆடாது நிற்காது என்று கருவிளை பூவை பற்றி கூறப்படுவதை அறியலாம்.

**பீரம் எனப்படும் பீர்க்கம் பூ**

பீரம் பூ என்பது 99 மலர்களில் ஒன்று. இது புதரில் ஏறி மலரும், பந்தல் அமைத்தும் இந்த கொடியை வளர்ப்பர். பீரம் என்பது பீர்க்கம் பூ இந்த பூவை குறிஞ்சி நிலக் கோதையர் குவித்து விளையாடினர். இந்த மலரை பீர், பீரம், பீரை என்ற வேறு பெயரால்

வழங்கியுள்ளதை இலக்கியங்கள் கூறுகின்றன. பீர்க்கம் பூ மாலை நேரத்தில் பூக்கக் கூடியது. பூக்க தொடங்குவது கார்காலத்தில் இந்த பூவில் தேன் மிகுதியாக இருப்பதால் இப்பூக்களை சுற்றி வண்டுகள் மொய்க்கும். இதனை,

**"நுண்முள் வேலித் தாதொடு பொதுளி**
**தாறுபடு பீர பீரம்" (நற்றினை 277)**

என்னும் பாடலில் கூறப்பட்டது போல இந்த கொடி வேலியோரங்களில் மலரும் என்பதை காட்டுகிறது. துலைவன் தான் வருவதாக குறித்த பருவம் வந்தும் தலைவன் வராததால் தலைவி தோழியிடம் தன் வருத்தத்தை கூறுகிறாள்.

**"இன்னள் ஆயினள் நன்னுதல் என்றிவர்த்**
**துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே**
**நன்றுமன் வாழி தோழி"**
**(குறுந்தொகை 98)**

தோழி நீ வாழ்க ! நம் தோட்டத்திலுள்ள நீர ஒழுகுகின்ற பசுமையான தோட்டத்தின் புதரில் மழைக்காலத்தில் மலரும் பீர்க்கம் பூவில் சிலவற்றை எடுத்துகொண்டு தலைவரை அணுகி சென்று நல்ல நெற்றியையுடைய தலைவி இப்பூவை போன்ற பசலை நோயை அடைந்தாள், அன்று தலைவனிடம் போய் சொல்ல உதவியாக ஒருவா் இருந்தால் நலமாக இருக்கும் என்று தலைவி விரும்புகின்றாள். பீர்க்கம் பூ நிறத்தை பசலை நோய்க்கு உவமையாக கூறப்பட்டுள்ளது.

இந்த பூவின் காய் உணவுக்கு உதவும், முற்றிய பின் உடம்பில் தேய்த்து குளிக்கவும் பயன்படும்.

**முடிவுரை**

**"பொன் வைக்கும் இடத்தில் பூவை வை**
**மனத்திற்கு பூ மயக்கத்திற்கும் பூ**
**வாழ்விற்கும் பூ சாவிற்கும் பூ"**

இப்படி பிறப்பு முதல் இறப்பு வரை பூவின் தேவை நமக்கு இன்றியமையாததாக உள்ளது. சங்க காலத்தில் 99 வகை மலா்களை குவித்து மகளிர் விளையாடினா் என்று குறிஞ்சிப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. இதில் சில பூக்களை பற்றி அறிந்து கொண்டோம் . பூக்களே இயற்கைக்கு அழகினை தருகிறது என்பதை "சங்க இலக்கியத்தில் மலா்கள்" என்ற கட்டுரையின்மூலம் அறிந்து கொண்டோம்.

**துணை நூற்ப்பட்டியல்**

**காந்தள்**

நூற்பெயர் : குறுந்தொகை
ஆசிரியர் : புலியூர் கேசிகன்
ஆண்டு : 2021
பக்கம் : 17

**ஆம்பல், குவளை, கருவிளை**

நூற்பெயர் : சங்கஇலக்கியத் தாவரங்கள்
ஆசிரியர் : டாக்டர் கு.சீநிவாசன்
ஆண்டு : 1986
பக்கம் : 13 ஆம்பல்
: 32 குவளை
: 210 கருவிளை

Bodhi International Journal is assigned by ISSN National Centre, India National Science Library, New Delhi

Journal Indexed and Impact Factor by International Institute of Organized Research (I2OR)

## Information of Bodhi Journal

## Subjects for Papers

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, entrepreneurship, bioscience, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

### Hosted by

**TIRUNELVELI DAKSHINA MARA NADAR SANGAM COLLEGE**

**T.Kallikulam**

(Accredited by NAAC with 'A' Grade)

(Affiliated to Manomaniam Sundaranar University)

(Co-Educational Institution)



Impact Factor 4.650

Articles should be mailed to bodhijournal@gmail.com

**BODHI**

**International Journal of Research in Humanities, Arts and Science**

www.bodhijournals.com

Powered & Published by

**Center for Resource, Research and Publication Services (CRRPS) India.**

www.crrps.in